விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

# தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

பக்கங்கள்: 32

* விளம்பரங்கள்
* வாழ்த்துகள்

மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:

Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 34 ஞாயிற்றுக்கிழமை 21.07.2019 Sunday 21st July 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com



# அரசுக்கு முண்டு கொடுத்து கூட்டமைப்பு சாதித்தது என்ன?

**முன்னாள் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் குற்றச்சாட்டு**

தற்பொழுது கிழக்கு மாகாணம் முழுவதும் பறிபோய்விட்டது. இது கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த சம்பந்தன் ஐயாவுக்கு தெரிந்திருக்க வேண்டும்.

இதில் மௌனத்தை கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றார். ஏனெனில் நீ பிடிப்பதை பிடி, எடுப்பதை எடு நாங்கள் வசதிகளோடு இருக்கின்றோம் என்ற எண்ணப்பாடாக இருக்கின்றது.

இவ்வாறு முன்னாள் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தொல்லியல் திணைக்களத்தின் ஆதரவோடு எங்களின் வரலாற்று ரீதியான இடங்கள் யாவும் திரிபுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பேச வேண்டிய நேரத்தில் பேசவேண்டும். இப்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கிடையே குழப்பம் வந்துள்ளது.

**பேசவேண்டியதை பேசமால் இருந்து தமிழ் மக்களுக்கு துரோகம் செய்துள்ளது**

அடுத்த தேர்லுக்கு மக்கள் முன் நிற்பார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியும் எல்லாம் பறிபோய்க்கொண்டிருக்கின்றது என்று. குறிப்பாக கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் ஆலய விவகாரம் தொடர்பில் கூட்டமைப்பு ஒரு கருத்தையும் சொல்லவில்லை.

இன்றைக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நீக்கப்படும் நிலையில், பிரதமருக்கு அதிகாரம் கூட இருக்கின்றது. பிரதமரைக் கொண்டு தங்களின் தனிப்பட்ட விடயங்கள் அனைத்தையும் செய்கின்றார்கள். தங்களின் வாக்கு வங்கிக்கான சகல வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்கின்றார்கள்.

கம்பரெலியா திட்டத்தைக் கூட தங்களின் வசதிக்கேற்பவே கொண்டு செல்கின்றார்கள். அப்படியிருக்கும் பொழுது பிரதமரிடம் பேசி, அழுத்தத்தைக் கொடுத்து கன்னியா விவகாரத்தை சுமுகமாக கையாண்டிருக்கலாம். ஆனால் அது ஏன் முடியாமல் போனது.

ஆனால் கூட்டமைப்பைப் பொறுத்தவரை எதிர்பார்க்கின்றார்கள் சில பிரச்சினைகள் அப்படியே இருக்க வேண்டுமென்று.

02 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென வலியுறுத்தி கவனயீர்ப்பு ஆட்பாட்டம் ஒன்று சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் இடம்பெற்றது.

முற்போக்கு தமிழர் அமைப்பின் ஏற்பாட்டின் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நடைபெற்ற கவயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்

02 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்கும் முயற்சியில் கூட்டமைப்பு



**தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆதங்கம்**

தமிழ் மக்களிடமிருந்து தமிழ் தேசிய வாதத்தை நீக்கவேண்டுமென்பது கூட்டமைப்பின் பிரதானமான நிகழ்ச்சி நிரல். 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதிக்கு பின்பு இந்திய கூட்டமைப்புக்குக் கூறியிருந்தது 13 ஆம் திருத்தச் சட்டம்தான் தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வென்று. அதை சம்பந்தன் ஏற்றுக் கொண்டு அன்றிலிருந்து செயற்படத் தொடங்கினார். 13ஆம் திருத்தச் சட்டம் என்பது ஒற்றையாட்சி அரசியலுக்கு உட்பட்டது.

02 ஆம் பக்கம் பார்க்க

## மலையகத்தில் அடைமழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு



**க.கிஷாந்தன்**

மலையகத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக தலவாக்கலை பேர்ஹாம் தோட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 09 குடும்பத்தைச் சேர்ந்த 44 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை பேர்ஹாம் தோட்டத்தில் 19.07.2019 அன்று வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அத்தோடு 20.07.2019 அன்றும் மரம் முறிந்து விழுந்து வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். எனினும் உயிராபத்துகள் எதுவும் இல்லையெனவும், சில பொருட்கள் மட்டும் சேதமாகியுள்ளதாக பாதிக்கப்பட்ட

02 ஆம் பக்கம் பார்க்க

## அலுக்கோசு பதவிக்கு நியமிக்கப்பட்ட இருவருக்கு பொலிஸ் பாதுகாப்பு

மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை தூக்கிலிடுவதற்கு அலுக்கோசு பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள இருவர் விசேட பொலிஸ் பாதுகாப்பு அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துவரப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த இருவருக்கும் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சிறைச்சாலை விசேட பாதுகாப்பு பிரிவில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட விடுதியில் தனியான இடம் வழங்கப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

02 ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூபிற்கு எதிர்ப்பு

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூபிற்கும் இடையில் ஒலுவில் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூபிற்கு, அம்பாறை ஒலுவில் பகுதியில் மக்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

கலந்துரையாடல் ஆரம்பமாவதற்கு முன்னரே அங்கு சென்ற சிலர், பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இவருக்கிட்ட நாங்கள் எத்தனையோ முறைப்பாடுகள் செய்தும், அது சம்பந்தமாக எந்த முடிவும்

02 ஆம் பக்கம் பார்க்க

## பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு பிரதமருடன் கலந்துரையாடல்



நாட்டில் இருக்கும் 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் தொழில் வாய்ப்பை வழங்குவதற்கு அனைத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கிரிவுள்ள என்ற இடத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு

02 ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் அரங்கிலிருந்து கூட்டமைப்பை தமிழர்கள் ஒதுக்கும் நேரம் வந்துவிட்டது!



எங்களது சுழற்சி முறை உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்ந்தும் பல அச்சுறுத்தல்களுக்கும் இடையூறுகளுக்கும் இடையில் நடைபெற்று வருகின்றது. இதை நாங்கள் எதிர்கொண்டு எங்களுக்கு நீதியான தீர்வு கிடைக்கும் வரை போராடுவோம்.

இவ்வாறு வவுனியா காணாமல் போனோர் சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்;

எங்களது போராட்டம் சமகாலத்தில் தமிழர்களுக்கு ஏற்படும் அனைத்து அச்சுறுத்தல்களுக்கும் சேர்த்து குரல் கொடுக்கும்படியாக இருக்கின்றது. எங்களது போராட்டங்கள் சர்வதேச ஆங்கில ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்று பிரசுரமாகியுள்ளது.

எங்களுக்கு சில கடமைகளும் பொறுப்புகளும் இருப்பதாக உணர்கின்றோம். அப்படியாக அரசியல் கைதிகளுக்கும் ஆதரவாக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றோம். சிறையில்

02 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு மாகாணத்தில் 300 தமிழ்கிராமங்கள் முஸ்லிம் கிராமங்களாக மாறிவிட்டன



இதுவரை காலமும் முஸ்லீம்கள் எங்களின் காணிகளை கொள்வனவு செய்தார்கள் . அல்லது கபளீகரம் செய்தார்கள். அந்த இரண்டையும் இனி நாங்கள்விட்டுக் கொடுக்கமுடியாது. எங்களுடைய தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டிய தருணம் ஏற்பட்டுள்ளது. இதை இப்படியே செய்து கொண்டிருந்தால் நாங்கள் கிழக்கு மாகாணத்தில் இல்லாது போய்விடுவோம்.

முஸ்லீம் காங்கிரஸின் தலைவர் கூறுகின்றார். வட கிழக்கு இணைப்பு ஏற்பட்டால் முஸ்லீம் மக்களுக்கு ஒரு மாகாணம் ஒன்று தரப்படவேண்டும் என்று. நாங்கள் எப்போதும் கூறியிருக்கின்றோம் முஸ்லீம் மக்களுக்கு ஒரு அலகு கொடுக்க வேண்டும் என்பது எங்களுடையகட்சி ஆரம்பத்திலிருந்து ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் முஸ்லீம் மக்கள் இதுவரை காலமும் வடக்கும், கிழக்கும் இணைப்பதற்கு எப்போதும் இடம்கொடுக்கமாட்டோம் என்று கூறிவந்தார்கள்.

02 ஆம் பக்கம் பார்க்க

## புதிய மெகசின் சிறைச்சாலைக்குள் தமிழ் அரசியல் கைதி தொடர்ந்தும் உண்ணாவிரதம்

தமிழ் அரசியல் கைதியான கணகசபை தேவதாசன் கடந்த 6 தினங்களாக புதிய மெகசின் சிறைச்சாலைக்குள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதியின் உடல்நிலை குறித்து மருத்துவ அறிக்கை கோரப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் D.M.J.W. தென்னக்கோன் தெரிவித்தார்.

அவர் நீரை மாத்திரம் அருந்தி வருவதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் கூறினார்.

தனக்கு பிணை வழங்குமாறு கோரி தமிழ் அரசியல் கைதியான கணகசபை தேவதாசன் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார். இவர் திரைப்பட கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளராக சேவையாற்றியுள்ளார். இரண்டு வழக்குகளில்

02 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார்–மதவாச்சி வீதியில் 20 மில்லியன் ரூபா பெறுமதியான கஞ்சா மீட்பு



**வவுனியா நிருபர்**

மன்னாரிலிருந்து கொழும்பிற்கு பாரஊர்தி ஒன்றில் நெல் மூட்டைகளுடன் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான 203கிலோ கேரளா கஞ்சாவினை பறயனாலங்குளம் பொலிசார் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

மன்னாரிலிருந்து 194 நெல் மூட்டைகளை ஏற்றிய பாரஊர்தி ஒன்றிற்குள் மறைத்து 5 மூட்டைகளில் பொதி செய்யப்பட்ட கேரளா கஞ்சா சூட்சுமமான முறையில் கொண்டு செல்லப்பட்டபோது பறயனாலங்குளம் சந்தியில் பொலிசார்

02 ஆம் பக்கம் பார்க்க

# நியூசிலாந்தில் சாதனைகள் படைத்த வர்ணகுலசிங்கம்



செந்திறச் செல்வர் தில்லையர் வர்ணகுலசிங்கம் தனது எண்பதாவது வயதிலும் பல துறைகளில் சாதனைகள் படைத்துள்ளார்.

றோயல் சொசைட்டி ஒவ் பப்ளிக் ஹெல்த் (லண்டன்) இவருக்கு சமீபத்தில் பெல்லோஷிப் அங்கத்துவம் வழங்கியது.

நியூசிலண்டர் ஒவ் தி இயர் அவார்ட்ஸ் இந்த வருடம் நடத்திய மூன்று பிரிவுகளில் பங்குபற்றி சிறப்புச் சான்றிதழ் பெற்றார்.

நியூசிலாந்தில் இவர் ஒருவர் தான் மூன்று பிரிவுகளில் பங்கு பெற்றவர் ஆவார்.

இந்தியன் நியூஸ்லிங் சமீபத்தில் நடத்திய மாபெரும் விழாவில் பல சமூகங்களுக்குச் செய்த் சேவைகளைப் பாராட்டி இவருக்கு மிக உயர்ந்த விருது வழங்கப்பட்டது.

எந்த வயதிலும் கற்கலாம் என்ற உண்மையை உணர்த்தியவரும், மாணவர்களுக்கு முன் உதாரணமாக இருப்பவரும் செந்திறச்செல்வர் தில்லையர் வர்ணகுலசிங்கம் எனப் பாரடி இவரை ஆக்லாந்து தமிழ் அஸோஸியேஷன் கௌரவித்தது.

பத்து மாதங்களுக்கு முன் இவரை ஆக்லாந்து தமிழர்கள் பாராடிக் கௌரவித்தார்கள்.

# மட்டக்களப்பில் காணியற்றவர்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை - நே.விமல்ராஜ்

இலங்கையில் காணியற்ற அனைவருக்கும் காணிகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நே.விமல்ராஜ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் காணியற்ற மக்களின் காணிப்பிரச்சினையை தீக்கும் வகையிலான இரண்டு நாள் காணி கச்சேரியொன்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் விமல்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள காணி அற்றவர்களுக்கு காணிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்கள் நடைபெற்ற மேற்படி காணி கச்சேரியானது 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் காலை முதல் மாலை வரை மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை



மாவட்டங்களில் காணியற்றவர்களுகான காணிகளை காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் மூலம் வழங்கும் வகையில் இந்த காணிகச்சேரி நடாத்தப்பட்டது.

மட்டக்களப்பு -திருகோணமலை மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆணையாளர் நே.விமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை காணி சீர் திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் பத்மஸ்ரீ லியனகே,காணிபிரிவிற்கான பணிப்பாளர் என்.வன்னியாராட்சி,மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார்,மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன்,மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வாசுதேவன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது 500க்கும் மேற்பட்டவர்களுக்கு காணி கச்சேரிகள் நடாத்தப்பட்டதாகவும் தெரிவுசெய்யப்பட்டவர்களில் குறிப்பிட்ட சிலருக்கு வீடமைப்பு அமைச்சர் சஜீத் பிரேமதாசவினால் வீடுகளும் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு -திருகோணமலை மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆணையாளர் நே.விமல்ராஜ் தெரிவித்தார்.

இதில் வசதியற்ற குறைந்த வருமானம் பெறும் பொதுமக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டதுடன், இத்திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இந்துக் குருமாரின் வேண்டுகேளிற்கு இனங்க அவர்களது வீட்டு திட்டத்திற்கான காணிகளை வழங்குவதற்காகவும், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அவர்களது வீட்டுத் திட்டத்திற்கான காணிகளை வழங்குவதற்காகவும் மாவட்ட அரசாங்க அதிபரின் அனுமதியுடன் அவர்களுக்கான காணிக்கச்சேரியும் நடைபெற்றது.

## மன்னார்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது அவை கண்டு பிடிக்கப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்ட கேரளா கஞ்சா 20 மில்லியன் ரூபாய் மெறுமதியுடைய 203கிலோ கஞ்சாவாகும்.

இது தொடர்பில் பாரஊர்தி சாரதியான கந்தையப்பிள்ளை தேவராஜ் என்ற 63வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## பாராளுமன்ற...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

செய்யல்ல. ஆனால் மேல் மட்டத்தில் நான்தான் செய்தேன் நான்தான் செய்தேன் என்று அவர அவரே விமர்சிச்சிட்டு இருக்கிறார். இந்த யுனிவர்சிட்டிய அவர் தான் செய்து தந்த என்று சொல்றாரு. இந்த ஹாபரையும் அவர்தான் செய்து தந்த என்று சொல்றாரு. எங்களுக்கு எதையும் செய்து தரல்ல. தோண்டப்பட்ட இந்த மண்ணைக்கூட விலைபேசி விற்கிறதுக்கு விலை பேசிட்டு வந்த மினிஸ்டர் மஹ்ரூப் இவர்தான்.

பாராளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப் என்று சொன்னால் மக்களுக்கு விளங்காது. லாம்பெண்ணெய் மஹ்ரூப் என்றால்தான் எல்லோருக்கும் தெரியும். துறைமுக மினிஸ்டராக இருந்து இவர் எங்கட ஊருக்கு செய்தது எதுவும் இல்ல. எங்கட வளத்தை அழிப்பதற்காக இவர் வந்திருக்கிறார். கீழ்த்தரமான ஒரு அரசியலை செய்து கொண்டிருக்கிறார். ++++

கலந்துரையாடல் நடைபெறவிருந்த விடுதிக்குச் செல்லும் வழியில் வீதித் தடையை ஏற்படுத்தியும், டயர்களை எரித்தும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

வீதித்தடையை அகற்றுவதற்கு சிலர் முற்பட்டபோது அவர்களுக்கும் எதிர்ப்பில் ஈடுபட்டவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் பொலிஸ் பாதுகாப்பிற்கு மத்தியில் அங்கிருந்து வெளியேறினார்.

## கிழக்கு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இப்பொழுது கூறுகின்றார் வடக்கு, கிழக்கு இணைந்தால் எங்களுக்கு ஒரு மாகாணம் கிடைக்க வேண்டும் என்று. அவர்களுடைய சிந்தனையில் மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருவதை பார்க்கலாம். சுமார் 300 தமிழ்கிராமங்கள் முஸ்லீம் கிராமங்களாக மாறிவிட்டன. அத்துரலிய தேரர் என்னுடன் விமானத்தில் வந்தபோது ஒரு விடயத்தினை கூறினார் கிழக்கு மாகணத்தில் ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இந்து மத, கிறிஸ்த மத பெண்கள் இஸ்லாமுக்கு மாற்றப்பட்டிருக்கிறது உங்களுக்கு தெரியுமா என்று கேட்டார். ஆகவே எங்களுடைய காணிகள், பெண்கள். உரிமைகள் பறிபோகின்றன. இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாண சிந்தனைகள் இப்போது இருக்கின்றன.

இயக்கத்தின் முடிவு ஏற்பட்டபோது யாழ்ப்பாணத்தில் வெடிகொளுத்தினார்கள். பாற்சோறு உண்டார்கள் முஸ்லிம் மக்கள். ஏப்ரல் 21 ஆம் திகதி வந்தன் பின்னர் அவர்களுக்கு எதிரான சிந்தனையில் நாங்கள் ஈடுபடவில்லை. அப்படியிருந்தும் கல்முனையில் எங்களுக்கு உடைய சில உரித்துக்களை தரக்கூடாதுஎன முஸ்லிம் பிரதிநிதிகள் கூறிக் கொண்டுவந்தார்கள்

## பட்ட...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

தெரிவித்துள்ளார்.

ஹேன்டியகல சிறி இரத்தினபால மகா வித்தியாலத்தில் நிர்மாணிக்கப்பட்ட 3 மாடி கட்டடத்தை மாணவர்களிடம் கையளிப்பதற்காக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## தமிழ் அரசியல்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

எஸ்.வியாளேந்திரன்(அமல்)மற்றும் இலங்கை மக்கள் கட்சியின் தலைவர் எஸ்.விஸ்ணுகாந்தன் மற்றும் முற்போக்கு தமிழர் அமைப்பின் உறுப்பினர்கள்,மகளிர் அமைப்புக்கள், இளைஞர்கள் கலந்து கொண்டார்கள்.

நாட்டிலே உள்ள சிறைச்சாலைகளில் பயங்கரவாதச் சட்டத்தின் மூலம் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகளை உனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.அரசியல்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்து அவர்களை பிள்ளைகள்,உறவினர்களுடன் இணைக்கப்பட வேண்டும்.அரசியல்கைதிகளின் விடுதலையை ஜனாதிபதி, பிரதமர் போன்றோர்கள் துரிதமாக கவனமெடுத்து விடுதலை செய்யப்பட வேண்டுமென ஆட்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.அரசியல் கைதியான தேவசிங்கம் உள்ளிட்ட அனைத்து அரசியல்கைதிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

இதன்போது கலந்துகொண்டவர்கள் சுலோக அட்டையை தாங்கியவாறு தமது கோரிக்கைகளை தெரிவித்தார்கள்.'வெளியில் நல்லிணக்கம் உள்ளே பாராபட்சம்','ஜனாதிபதியே பிரதமரே பொதுமன்னிப்புடன் தமிழ் அரசியல்கைதிகளை விடுவிக்கப்படவேண்டும்','தமிழ் தலைமைகள் தமிழ்மக்களை ஏமாற்ற வேண்டாம்',என ஆட்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

# அட்டன் பன்மூர் தோட்டத்தில் வெள்ளத்தினால் 66 பேர் அகதிகளாகியுள்ளனர்



**ஆர்.ரஞ்ஜன்**

மலையகத்திற்கு தொடர்ந்து பெய்த கடும் மழையுடனான காலநிலையினால் 19.07.2019 அன்று காலை அட்டன் பன்மூர் தோட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்த 16 குடும்பங்களை சேர்ந்த 66 பேர் அகதிகளாகியுள்ளனர்.

அட்டன் பன்மூர் தோட்டத்தில் காணப்படும் குளம் பெருக்கெடுத்ததன் காரணமாக குளத்தின் கீழ் பகுதியில் காணப்பட்ட 13 குடியிருப்புகளுக்கு வெள்ள நீர் புகுந்தது இதனால் இந்த குடியிருப்புகளில் வாழ்ந்தவர்கள் தோட்ட சிறுவர் பாராமரிப்பு நிலையம் மற்றும் சிறுவர் முன்பள்ளி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டடுள்ளனர்.

இவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை தோட்ட முகாமை செய்து கொடுத்துள்ளதுடன் இவர்களுக்கான சமைத்த உணவை அம்பகமுவை பிரதேச செயலகம் ஊடாக 319 அட்டன் கிழக்கு கிராம சேவகர் பெற்றுக் கொடுத்துள்ளார்.

மழை குறைந்து வெள்ளம் வடிந்தோடியுள்ள போதும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகள் வெள்ள நீரினால் கொண்டு வரப்பட்ட கழிவு மற்றும் மண்ணால் நிறைந்து சேற்று மனத்துடனும் ஈரலிப்பாகவும் காணப்படுவதால் தமது வீடுகளுக்கு திரும்ப முடியாது உள்ளதாகவும் அதானால் தாம் தொடர்ந்தும் சிறுவர் பாராமரிப்பு நிலையம் மற்றும் சிறுவர் முன்பள்ளியில் தங்கியுள்ளதாக இவர்கள் தெரிவித்தனர்.

குளத்தில் இருந்து குடியிருப்புகளுக்கு அருகில் ஓடும் ஆற்றை ஆலம் மற்றும் அகலப்படுத்தி குடியிருப்புகளுக்குள் வெள்ள நீர் புகுவதை தடுப்பதற்கு முடியுமா என்பதனை கண்டறிவதற்காக அட்டன் - டிக்கோயா நகர சபையின் செயலாளர், பொது சுகாதார உத்தியோகத்தர், முன்னால் மாகாண சபை உறுப்பினர்; மற்றம் பிரதேச கிராம உத்தியோகத்தர் ஆகியோர் பாதிக்கப்பட்ட பகுதிக்கு விஜயம் செய்திருந்தினர்.

இதன் போது பாதிக்கப்பட்ட மக்கள் தாம் ஒவ்வொரு வருடமும் மழை பெய்யும் போது இந்த அகதி வாழ்க்கையை அனுபவிப்பதாகவும் எனவே தமக்கான நிரந்தர குடியிருப்புகளை பாதுகாப்பான இடத்தில் அமைத்து தரும்படி அவர்களிடம் வேண்டு கோள் விடுத்தனர்.

ஒவ்வொரு வருடமும் தாம் வெள்ளத்தினால் பாதிக்கப்படுவதுடன் தாம் மிக சிரமப்பட்டு சிறுக சிறுக சேகரித்த பொருட்கள், அத்தியவசிய ஆவணங்கள் என்பனவற்றையும் தாம் இழந்து மீண்டும் மீண்டும் இன்னல்களை அனுபவிப்பதாக இவர்கள் தெரிவித்தனர்.

## புதிய...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், அவர் புதிய மெகசின் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

தனக்கான வழக்கு விசாரணையின் போது, சட்டத்தரணிகள் இன்றி தாமே வாதாடியதாகவும் அதனால் போதுமான சாட்சியங்களை திரட்டமுடியாது போனதாகவும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதி கூறியுள்ளார்.

தனக்கு பிணை வழங்கும் பட்சத்தில் தேவையான சாட்சியங்களை தன்னால் சமர்ப்பிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கைது செய்யப்பட்ட கணகசபை தேவதாசன் மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அவற்றில் ஒரு வழக்கிற்கு ஆயுள் தண்டனையும் மற்றைய வழக்கிற்கு 20 வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

## அரசியல்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

தான் இறந்தாலும் பரவாயில்லை தங்களுக்கு பிணை வழங்க வேண்டும் என்று உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிக்காவும் நாங்கள் போராடுகின்றோம். அவரின் விடுதலைக்கு அமெரிக்க-ஐரோப்பிய நாடுகள் தலையிடக் கோரி நாளை நாங்கள் போராட்டம் ஒன்றை நடத்தவிருக்கின்றோம்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 5ஜி அலைக்கற்றை கோபுரங்கள் தொடர்பாக நாங்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளோம். அதேபோல் வன்னியிலும் புளியங்குளம் பிரதேசத்திலும் கோபுரங்கள் அமைப்பதற்கு எதிராக அப்பகுதி இளைஞர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக மலசலகூடம் அமைப்பதற்கு பிரதேச சபையின் ஊடாக அனுமதி பெற்று அதைக் கட்ட முடியாமல் இன்று வரை இருக்கும் நிலையில், 5ஜி அலைக்கற்றை கோபுரம் அமைப்பதற்கு எப்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டு வியப்படைந்துள்ளார்கள்.

எங்களின் போராட்ட களத்தில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஊடாக நீர்க்குழாய் பதிக்கும் பணிகள் காரணமாக ஒருபக்க கொட்டகையை கழற்றி திரும்ப தருவதாகக் கூறினார்கள்.

ஆனால் அந்த பந்தலை இன்னும் தரவில்லை. இது பந்தலைக் கழற்றினால் எங்களின் போராட்டம் முடிவுக்கு வந்தமாதிரி இருக்கும் மக்களின் பார்வைக்கு. இப்படியாக எங்களின் போராட்டத்திற்கு கடும் நெருக்குதலைக் கொடுக்கின்றார்கள்.

அதையும் மீறி கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் எங்களின் போராட்டம் தொடர்கின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பு செயலிழந்து விட்டது. கன்னியா விடயத்தில் கூட்டமைப்பின் செயற்பாடு தமிழர் அரசியல் அரங்கிலிருந்து அவர்களை ஒதுக்குவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அலுக்கோசு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இவ் இருவரில் ஒருவர் காவற்துறையில் விசேடப்பிரிவில் பணியாற்றிய பொலிஸ் கான்ஸ்ட்டபிலாகும்.

காலி மற்றும் கண்டி மாவட்டங்களை வசிப்பிடமாக கொண்ட இவர்களில் ஒருவர் திருமணமானவராகும் இவ்விருவருக்கும் தமது வீடுகளுக்கு செல்ல அனுமதி வழங்கியிருப்பினும் அவர்கள் வெளியில் செல்ல விருப்பமில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

## மலையகத்தில்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மக்கள் தெரிவித்தனர்.

இதன்காரணமாக இக்குடியிருப்பில் வசித்து வந்த 44 பேர் வெளியேற்றப்பட்டுள்ளதுடன் இவர்கள் தோட்ட சிறுவர் நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட 44 பேரில் 9 ஆண்கள், 12 பெண்கள், 23 சிறுவர்கள் அடங்குகின்றமை குறிப்பிடதக்கது.

## தமிழ்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அப்படிப்பட்ட ஒரு அரசியல் தீர்வை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால், தமிழ் மக்கள் தங்களது தனித்துவமான அடையாளங்கள் எல்லாவற்றையும் மறக்கவேண்டும். அதற்கு தாங்கள் அப்படிப்பட்ட உரித்துக்குரியவர்கள் என்பதை அவர்கள் மனங்களிலிருந்து நீக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதை தமிழர்கள் எதிர்க்கின்றார்கள் என்றால், அது அடிப்படையில் இது தமிழர்களின் தாயகம், இந்த தாயகப் பிரதேசங்களுக்குள் பௌத்த ஸ்தலங்கள் வரமுடியாது என்ற உணர்வின் அடிப்படையில்தான் அவர்கள் அதை எதிர்க்க முற்படுகின்றார்கள்.

ஆனால், இந்த உணர்வை இல்லாமல் செய்வதன் ஊடாகத்தான் அவர்கள் நீண்ட காலத்தின் பின் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்வார்கள் என்ற அடிப்படையில்தான் கூட்டமைப்பு கடந்த 10 வருடங்களாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அவர்கள் எந்த இடத்திலும் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றைப் பேசியது கிடையாது. மாறாக சிங்கக் கொடியேற்றுவது, சுதந்திர தினத்தில் பங்குகொள்வது அமைச்சர்கள் வடக்கு, கிழக்கிற்கு விஜயம் செய்கின்ற போது அவர்களை வெற்றிலை கொடுத்து அழைத்துச் செல்வது, போன்ற செயற்பாடுகளூடாக, சிங்கள தேசியவாதம், மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வைக்கின்ற செயற்பாடுகளில் கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றது. அந்த நோக்கத்திற்காகத்தான் கன்னியா விடயத்திலும் கூட்டமைப்பு கண்டும் காணாமல் இருந்து வருகின்றது.

அரசாங்கம் அளிக்கும் வாக்குறுதிகள் எவையும் நடைமுறைப்படுத்தப் படாது என்பது கூட்டமைப்பிற்கு தெரியும். அந்த நேரத்தில் மக்களை ஏமாற்றுவதற்காக வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளது என்று கூறுவார்கள். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது என்பது அவர்களின் பிரதானமான கோரிக்கையும் அல்ல. சும்மா மக்களை ஏமாற்றுவதற்காக அப்படிக் கூறுகின்றார்களே தவிர, நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்து அரசாங்கத்தைப் பாதுகாத்து விட்டார்கள்.

ஆகவே தற்பொழுது அரசாங்கத்திற்கு அவர்களின் தேவை இல்லை. மீண்டும் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானமோ அல்லது வரவு-செலவுத் திட்டமோ வரும் பொழுது மாத்திரம்தான் அவர்கள் அரசாங்கத்தை ஏதாவது ஒரு காரணம் சொல்லி ஆதரிப்பார்கள். இது முழுக்க முழுக்க ஒரு ஏமாற்று நாடகம்தான்.

கடந்த வாரம் எங்களுடன் பேசவேண்டுமென்று திருமதி அனந்தி சசிதரன் குறிப்பிட்டிருந்தார். அவருடனான சந்திப்பின் போது விக்னேஸ்வரன் ஐயாவின் அணியும் நாங்களும் இணைவது சம்பந்தமாகவே அங்கு பேசப்பட்டது.

அதில் நாங்கள் மிகத் தெளிவாக கூறியிருந்தோம், விக்னேஸ்வரன் ஐயாவுடன் தான் நாங்கள் ஒரு ஒப்பந்தத்தை செய்ய முடியுமென்றும், அதற்குள் ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் போன்றவை எந்தச் சந்தர்ப்பத்திலும் இருக்க முடியாது. குறிப்பாக ஈபிஆர்எல்எவ் இருக்கும் கூட்டினுடன் நாங்கள் சேர்வதற்கு தயாரில்லை என்பதை தெளிவாக சொல்லியிருக்கின்றோம்.

தமிழ் மக்கள் கூறுகின்றார்கள், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியும் விக்னேஸ்வரன் ஐயாவின் அணியும் இணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பை முற்றாக தோற்கடிக்கவேண்டுமென்று. ஆனால் விக்னேஸ்வரன் ஐயா கூறுகின்றார் தங்கள் அணி தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எதிரானது அல்ல என்று.

நாங்கள் ஒன்றுசேர்ந்தால் தான் பேரம் பேசும் சக்தியை அதிகப்படுத்தில் அரசாங்கத்துடன் பேசி மக்களுக்கு ஒரு மாற்றத்தை உருவாக்கலாம். ஆனால் அவரைச் சுற்றியுள்ளவர்கள் எங்கள் கட்சியை அழிப்பதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக இவரின் பேச்சு மக்கள் மத்தியில் குழப்பைத்தையே ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால் கூட்டமைப்பை பலவீனப்படுத்தவும் விரும்பாமல் பலமான கூட்டுடன் சேரவேண்டுமென்ற அவரின் கூற்று விளங்காத புதிராகவேயுள்ளது. எங்களுடன் கூட்டுசேர்வதையே மக்கள் பலமான கூட்டாக பார்ப்பார்கள். அதையும் தடுப்பதற்கு அவர் செயற்படுகின்றார். ஆகவே இவரின் உள்நோக்கம் என்னவென்பது தொடர்பாக நாங்கள் சந்தேகிக்கப்பட வேண்டிய இடத்திற்கு தள்ளப்படுகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசுக்கு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அப்பொழுதுதான் அடுத்தமுறை தாங்கள் தேர்தலுக்குச் செல்லும் பொழுது, அதைச் செய்யலாம் இதைத் தீர்க்கலாம் என்று சொல்வதற்கு இவை இருக்கலாம் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

ஆகவே பேச வேண்டிய நேரத்தில் கூட்டமைப்பு பேசாமல் அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டு இருப்பவர்கள் சில நிபந்தனைகளை விதித்து இன்னஇன்னவற்றைச் செய்ய வேண்டுமென்று பேசவேண்டும்.

எங்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு யாருமில்லை என்பதை எங்கள் மக்கள் விளங்கிக் கொள்ளவில்லை. காலத்தை சரியாக பயன்படுத்தியதா தமிழ் தேசிய கூட்டமைப்பு என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹட்டன் பன்மூர் தோட்டத்தில் வெள்ளம் காரணமாக 16 குடும்பங்கள் இடம்பெயர்வு



**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**

ஹட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பன்மூர் தோட்டத்தில் வெள்ளம் காரணமாக 16 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்

குறித்த குடும்பங்கள் பாதுகாப்பாக அப்பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலை ஒன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ள நீர் 13 வீடுகளில் புகுந்துள்ளதனால் இந்த வீடுகளில் வாழ்ந்த 66 பேர் இவ்வனத்தத்தினால்; இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் 35 ஆண்கள் 31 பெண்கள் 12 பாடசாலை மாணவர்கள் உட்பட மூன்று வயது நிரம்பிய மூன்று பிள்ளைகள் இருப்பதாகும் பிரதேசத்திற்கு பொறுப்பான கிராம சேவகர் தெரிவித்தார்.

குறித்த குடியிருப்புகளுக்கு மேலாக குளம் ஒன்று அமைந்திருப்பதால் இந்த குளத்தில் நீர் உயர்ந்துள்ளதன் காரணமாகவும் குறித்த குளம் உடைபெடுத்தால்; பாரிய அழிவுகளை சந்திக்க நேரிடும் என்பதனை கருத்தில் கொண்டு இக்குடும்பங்கள் மாற்றப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான சமைத்த உணவுகளை வழங்குவதற்கு பிரதேச இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் கிராம சேவகர் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# தீர்வு கிடைக்கும் என யாராவது தமிழ் தலைவர்கள் கூறுவார்களாக இருந்தால் அது அவர்களின் அரசியல் அறிவு அற்ற தன்மையே; சித்தார்த்தன்

**வவுனியா நிருபர்**

தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்கும் என யாராவது தமிழ் தலைவர்கள் கூறுவார்களாக இருந்தால் அது அவர்களின் அரசியல் அறிவு அற்ற தன்மையே என தமிழ் விடுதலைக் கழகத்தின் ( புளொட்) தலைவரும் யாழ் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் செய்த தியாகங்கள் வீண்போகக் கூடாது. ஏன் மக்கள் தியாகம் செய்தார்களோ. அந்த இலக்கை அடையும் வரை நாம் செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் செய்த தியாகங்கள் வீண்போகக் கூடாது. ஏன் மக்கள் தியாகம் செய்தார்களோ. அந்த இலக்கை அடையும் வரை நாம் செயற்பட வேண்டும்.

2009 ஆம் ஆண்டு ஆயுதப்போராட்டம் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்களது பிரச்சனை சதீர்த்து விட்டது என்றோ அல்லது தீர்க்க முடியாது என்றும் இருந்து விட முடியாது.

கல்முனை பிரதேச செயலக விடயத்தில் உறுதி மொழியை பெற்ற பின்னரே நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிராக வாக்களித்தோம். ஒமந்தையிலும் புதிய பிரதேச செயலகம் அமைப்பதை தடுத்துள்ளோம். இந்த நிலையை இனி மாற்றினால் ஒன்று செய்ய முடியாது.

இந்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்க அரசியலமைப்பு சபையை உருவாக்கி நான்கு குழுக்களை உருவாக்கி இருந்தது. அதில் ஒரு குழுவின் தலைவராக நானும் இருந்தேன். இவ் அரசியலமைப்பு வேலைகள் சர்வதேச அழுத்தம் மற்றும் ஐ.நா அழுத்தம் காரணமாக ஏற்படுவதாக பலரும் கருதினார்கள். இன்று அதன் நிலை என்ன? பிரதம மந்திரி அவர்கள் நாட்டில் இனப்பிரச்சினை தீர்க்க இன்னும் இரண்டு வருடங்கள் தேவை என தெரிவித்துள்ளார். அப்படியென்றால் இந்த அரசாங்கத்தின் காலத்தில் இனப்பிரச்சினை தீர்க்கப்படமாட்டாது. அடுத்த அரசாங்கமே தீர்க்க வேண்டும் என்கிறார். தமிழ் மக்களுக்கு இனி தீர்வு கிடைக்கும் என யாராவது தமிழ் தலைவர்கள் கூறுவார்களாக இருந்தால் அது அரசியல் அறிவு அற்ற தன்மையே எனத் தெரிவித்தார்.

# வவுனியா விவசாய திணைக்கள வளாகத்தில் பாரிய தீ விபத்து





**வவுனியா நிருபர்**

வவுனியா ஏ9 வீதியில் அமைந்துள்ள விவசாய திணைக்களத்தின் அனுசரனை ஆராய்ச்சி நிலையத்தில் (18.07.2019) மதியம் 1.00 மணியளவில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

ஆராய்ச்சி நிலையத்தில் காணப்படும் வயல் நிலத்தில் ஓர் இடத்தில் ஏற்பட்ட தீ வயல் முழுவதும் பரவி பற்றியேறிந்தது.

அதனையடுத்து வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினரின் உதவியுடன் வயலில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ ஏற்பட்ட பகுதி வெற்று வயல் என்பதினால் விவசாய திணைக்களத்தின் ஆராய்ச்சி நிலையத்தின் நடவடிக்கைகளில் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை

தீ விபத்து ஏற்பட்டத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

# இலவச வைத்திய முகாம்



**பைஷல் இஸ்மாயில்**

கல்முனை இளைஞர் சே அமைப்பின் ஏற்பாட்டில் அமரர் ரெட்ணம் ரெட்ணத்துரையின் ஞாபகார்த்தமாக இலவச வைத்திய முகாம் வெள்ளிக்கிழமை (19) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கல்முனை பாண்டிருப்பு நெசவு நிலைய பல் தேவை கட்டிடத்தில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இரா.முரளீஸ்வரனின் வழிநடத்தலில் நடைபெற்றது.

பிரதேச மக்களின் சுகாதார நலனை மேம்படுத்தும் நோக்கோடும், மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நோய்க்காரணிகளை கண்டறிந்து அதற்கான சிறந்த இலவச வைத்திய சிகிச்சைகளை இந்த வைத்திய முகாம் மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாக இடம்பெற்றது.

இந்த வைத்திய முகாமில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு சிகிச்சைகளையும் ஆலோசனையும் பெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மாகாணத்திற்கு தெரிவாகிய வீர வீராங்கனைக்கான பயிற்சி முகாமும் கௌரவிப்பும்

**துறைநீலாவணை நிருபர்**



சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தெரிவாகிய வீர வீராங்கனைக்கான இருநாள் பயிற்சி முகாம், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயத்தில் அண்மையில் (17) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

பயிற்சி முகாமின் ஆரம்ப நிகழ்வில் உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.நஸீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். உடற்கல்விக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.முஸ்ற்றாக் அலி தலைமையிலான இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.ஹைதர் அலி, கல்வி முகாமைத்துவ உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.அப்துல் மஜீட், ஆரம்பநெறிக் கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால், உடற்கல்வி ஆசிரியர் ஆலோசகர் சௌதுல் நஜாஸ், தேசிய பாடசாலை அதிபர் ஏ.சீ.ஏ.மொஹமட் இஸ்மாயில் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயம், அல்-அஸ்ஹார் வித்தியாலயம், அல் -சிராஜ் மகா வித்தியாலயம், அல்- முனீர் வித்தியாலயம், மத்தியமுகாம் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை, நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயம், றாணமடு இந்துக்கல்லூரி, வேப்பையடி கலைமகள் வித்தியாலயம், ஹோலிக்குறோஸ் வித்தியாலயம், விவேகானந்தா மகாவித்தியாலயம், காசாலி முஸ்லிம் வித்தியாலயம், தாருஸலாம் மகாவித்தியாலயம், மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலயம், வேப்பையடி வாணி வித்தியாலயம் ஆகிய 12 பாடசாலைகளிலிருந்து 88 மாணவர்கள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

வலய உடற்கல்வி பயிற்றுவிப்பாளர்களினால் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கங்களை பெற்ற மாணவர்கள் அதிதிகளால் வெற்றிக்கிண்ணம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்பு



**சீலாமுனை துஷாரா**

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டான் சர்வோதய வீதியிலுள்ள வீடொன்றில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த பத்து வருடங்களாக தனிமையில் இருந்துவந்த வயோதிபரான கணேசமூர்த்தி சாமித்தம்பி வயது 74 என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலீசார் தெரிவித்துள்ளனர்.

இவரது உடலில் சிறு காயங்கள் காணப்படுவதால் இவரது மரணம் குறித்து உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளதாகவும், வழமையாக தனது வீட்டிலுள்ள மாந்தோட்டத்திற்கு தண்ணீர் ஊற்றி விட்டு அருகில் உள்ள தனது மகளின் வீட்டிற்கு சென்று வரும் இவர் மகளின் வீட்டிற்கு வராமையினால் அவரை தேடிச் சென்ற மகள் தனது அப்பா மலசலகூடத்தில் இறந்து கிடப்பதை கண்டு மட்டக்களப்பு பொலீசாருக்கு அறிவித்துள்ளார்.

இது குறித்த மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலீசார் குற்றத்தடயவியல் பொலீசாரின் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் உரிமை அபிவிருத்திக்கும் மற்றும் பெண்கள் அபிவிருத்திகென ஒதுக்கீடு

**சீலாமுனை துஷாரா**

மாவட்ட செயலகங்கள் ஊடாக அதிக நிதிகள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டு சிறுவர் உரிமை அபிவிருத்திக்கும் மற்றும் பெண்கள் அபிவிருத்திகென ஒதுக்கீடு செய்யப்பட்டு அதிக திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என மட்டு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயக்குமார் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்டத்தின் சிறுவர்களின் உரிமைகள் சம்பந்தமான மீளாய்வு கூட்டத்தில் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

மாவட்ட உதவி செயலாளர் ஏ.நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இவ் மாவட்டத்தின் சிறுவர்களின் உரிமைகள் சம்பந்தமான மீளாய்வு கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள் மற்றும் பொலிஸ் நிலைய சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக சிறுவர் அபிவிருத்தி திட்ட அதிகாரிகள் எனப்பலரும் இதில் கலந்து கொண்டனர். இங்கு எதிர்காலத்தில் மாவட்டதின் சகல பிரதேச செயலகத்தினுடாக சிறுவர் உரிமைகள் அபிவிருத்தி மற்றும் பெண்கள் அபிவிருத்திகென வினைதிறனுடைய திட்டங்கள் வகுக்கப்பட்டு முன்னெடுக்கப்படவுள்ளதுடன் மற்றும் சிறுவர் பாடசாலை இடை விலகல் மற்றும் இளவயது திருமணம் போதைப்பொருள் பாவனை மற்றும் சிறுவர் துஸ்பிரையோகம் என பலதரப்பட்ட விடயங்கள் மீளாய்வு கூட்டத்தில் ஆராயப்பட்டது.







**யாழ்ப்பாணம் நவாலி சென் பீட்டர் தேவாலயத்தில் 1995ம் ஆண்டு ஜூலை 9 இல் தஞ்சமடைந்திருந்த அப்பாவி தமிழ் மக்கள் மீது விமான குண்டுத்தாக்குதலில் உயிர்நீத்த உறவுகளுக்காய் வருடாந்தம் இடம் பெறும் இந் நிகழ்வில் பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டு குருதிதானம் செய்தனர். நிகழ்வில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி பிரதீபன் தலைமையில் குழுவினர் கலந்துகொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. படம்: என்.ஹரன்**


# மண்டூர்-வெல்லாவெளி வெள்ளைப்பால வீதி மின்விளக்கின் நிலைமை



போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மண்டூர்-வெல்லாவெளி வீதியின் வெள்ளைப்பாலத்தில் பொருத்தப்பட்டுள்ள நான்கு தெரு மின்விளக்கில் இரண்டு விளக்குகளே ஒளிர்கின்றன.

ஏனையவை பழுதடைந்த நிலைமையில் உள்ளதால் இரவு வேளைகளில் பிரயாணங்களை மேற்கொள்ளும் வாகனசாரதிகள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே வீதி அபிவிருத்தி அதிகாரசபைக் குட்பட்ட இவ் மின் விளக்குகளை திருத்துவதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# வரிக்குதிரையான கழுதைகள்

ஸ்பெயின் நாட்டின் கடற்கரை நகரமான காடீசில் உள்ள கடை ஒன்றின் முன்பு 2 வரிக்குதிரைகள் புற்களை மேய்ந்து கொண்டிருந்தன. இதை பார்த்த ஒரு நபர் வரிக்குதிரைகள் ஊருக்குள் எப்படி வந்தது, என்ற ஆச்சரியத்தோடு அவற்றின் அருகில் சென்று பார்த்தார். அப்போதுதான் அவை வரிக்குதிரைகள் அல்ல கழுதைகள் என்பது தெரியவந்தது.

கழுதைகளுக்கு யாரோ வரிக்குதிரை போல் வண்ணம் பூசி தெருவில் உலாவவிடப்பட்டதை அவர் அறிந்துகொண்டார். உடனே அவர் அந்த கழுதைகளை புகைப்படம் எடுத்து, விலங்குகள் நல ஆர்வலர்களிடம் புகார் தெரிவித்தார். விசாரணையில் அண்மையில் காடீசில் நகரில் நடந்த திருமண நிகழ்ச்சிக்காக அந்த கழுதைகளுக்கு வரிக்குதிரைகள் போல வண்ணம் பூசியது தெரியவந்தது.

அந்த ஜோடிக்கு வனவிலங்குகளுக்கு இடையே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என ஆசையாம். ஆனால் அதற்கு வசதி இல்லாததால் தெருவில் சுற்றித்திரிந்த கழுதைகளை பிடித்து, அவற்றுக்கு வரிக்குதிரைகள் போல் வண்ணம் பூசி திருமண நிகழ்ச்சியில் அங்கும் இங்குமாக அலையவிட்டுள்ளனர்.

பின்னர் திருமணம் முடிந்ததும் கழுதைகளை அப்படியே தெருவில் விட்டுவிட்டனர். வரிக்குதிரைகள் போல் வண்ணம் பூசப்பட்ட அந்த கழுதைகளின் புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

# ரஷியாவில் சாலையில் உலாவிய புலியால் பரபரப்பு



ரஷியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள இவானோவோ நகரை சேர்ந்த வாலிபர் ஒருவர் தனது வீட்டில் ஒரு புலியை வளர்த்து வருகிறார். அண்மையில் இவர் அந்த புலியை காரில் ஏற்றிக் கொண்டு சென்றார். அப்போது நடு சாலையில் சிக்னலில் கார் நின்றது.

அப்போது காரில் இருந்த புலி திடீரென முரண்டு பிடித்தது. இதையடுத்து இளைஞர் புலியை கட்டுப்படுத்த முயன்றார். கார் கதவின் கண்ணாடி மூடப்படாமல் இருந்ததால் அந்த வழியாக புலி சாலையில் குதித்தது.

இதனால் அதிர்ச்சியடைந்த அந்த இளைஞர் காரில் இருந்து இறங்கி புலியை பிடிக்க முயன்றார். ஆனால் புலி அவரிடம் சிக்காமல் சாலையில் ஓடி ஆட்டம் காட்டியது. அப்போது சாலையில் நடந்த சென்ற மக்கள் இதை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

பின்னர் அந்த இளைஞர் புலியை பிடித்து, காருக்குள் தள்ளி பூட்டினார். இந்த சம்பவத்தால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு நிலவியது. இதற்கிடையில் ஆபத்தான உயிரினத்தை அபாயகரமாக கையாண்டதாக அந்த இளைஞர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# அமெரிக்காவில் வீசப்போகும் வெப்ப அலை



அமெரிக்காவின் பெரும்பாலான பகுதியில் மிகக் கடுமையான வெப்பமிகுந்த வானிலை நிலவ ஆரம்பிக்கும் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதே சமயம், இந்த வார இறுதியில் வெப்பம் மிக அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் முக்கிய நகரங்களான நியூயார்க், வாஷிங்டன், கிழக்கு கடற்கரையில் இருக்கும் போஸ்டன் மற்றும் மத்திய மேற்கு பகுதிகளில் வசிக்கும் 200 மில்லியன் மக்கள் வெப்ப அலையால் பாதிக்கப்படலாம்.

சில இடங்களில், 38 டிகிரி செல்சியஸுக்கு நெருக்கமாகவோ அல்லது அதைவிட அதிகமாகவோ வெப்பம் பதிவாகலாம்.

அமெரிக்கா மட்டுமின்றி, கனடாவின் சில பகுதிகளும் வெப்ப அலையால் தாக்கப்பட உள்ளது.

சமீப ஆண்டுகளில், அடிக்கடி நிகழும் வெப்ப அலையை காலநிலை மாற்றத்தோடு வல்லுநர்கள் ஒப்பிடுகின்றனர்.

புதிய தரவுகளின்படி, உலகளவில் பதிவான சராசரி வெப்பநிலை 16.4 செல்சியஸ் டிகிரியாக இருக்கிறது. மேலும், இந்த ஆண்டின் அதிக வெப்பம் ஜூன் மாதம் பதிவாகியுள்ளது.

இந்த மாத தொடக்கத்தில், ஆர்க்டிக் பகுதியில் அமைந்திருக்கும் அமெரிக்கா மாகாணம் அலாஸ்காவில் அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது.

# முதலிடத்தை தவறிவிட்ட பில்கேட்ஸ்



அமெரிக்காவைச் சேர்ந்த புளூம்பெர்க் எனும் நிறுவனம் உலக பணக்காரர்கள் பட்டியலை அவ்வபோது வெளியிட்டு வருகிறது. அமேசான் உரிமையாளர் ஜெஃப் பெசோஸ் தான் தற்போது முதலிடத்தை பல வருடங்களாக தக்க வைத்துக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் புளூம்பெர்க்க் வெளியிட்ட பணக்காரர்கள் லிஸ்ட்டில் ஜெப் பெசோஸ் அதே முதலிடத்திலேயே இருக்கிறார். ஆனால், கடந்த வருடம் இரண்டாவது இடத்திலிருந்த பில் கேட்ஸ் இந்த வருடம் மூன்றாவது இடத்திற்கு இறங்கியுள்ளார். இரண்டாவது இடத்தை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெர்னார்ட் அர்னால்ட் பிடித்துள்ளார்.

இவர் எல்விஎச் எம் எனும் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஆவார். இந்த ஆண்டுதான் இவரது சொத்து மதிப்பு அதிகரித்துள்ளது. பில்கேட்சை விட ஒரு பில்லியன் கூடுதலாக சொத்து மதிப்பு வைத்திருப்பதால் இரண்டாவது பிடித்திருக்கிறார். புளூபெர்க் நிறுவனத்தின் உலக பணக்காரர்கள் பட்டியலின்படி,

1. ஜெப் பெசோஸ் - 125 பில்லியன் டாலர்
2. பெர்னார்ட் அர்னால்ட் - 108 பில்லியன் டாலர்
3. பில்கேட்ஸ் -107 பில்லியன் டாலர்

# ஜப்பான் அனிமேஷன் ஸ்டுடியோ தீவிபத்தில் பலி எண்ணிக்கை 34 ஆக உயர்வு



ஜப்பான் நாட்டின் மிகப் பெரிய தீவுகளில் ஒன்றான ஹோன்சு தீவின் கியோட்டோ நகரில் கியோட்டோ அனிமேஷன் ஸ்டுடியோ உள்ளது. 3 தளங்களுடன் மிகப்பெரிய கட்டிட அமைப்பைக் கொண்ட இந்த அனிமேஷன் ஸ்டுடியோ வழக்கம்போல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

அங்கு 70-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது உள்ளூர் நேரப்படி காலை 10.30 மணிக்கு ஸ்டுடியோவில் திடீரென தீப்பிடித்தது. மளமளவென கொழுந்துவிட்டு எரிந்த தீ, சற்று நேரத்தில் ஸ்டுடியோ முழுவதும் பரவியது. வானுயரத்துக்கு கரும்புகை மண்டலம் சூழ்ந்தது.

தகவலறிந்து கியோட்டோ நகர தீயணைப்பு வீரர்கள், தீயணைப்பு வாகனங்களில் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயங்கிய 35 பேரை பத்திரமாக மீட்டனர்.

இந்நிலையில், ஜப்பான் அனிமேஷன் ஸ்டுடியோவில் ஏற்பட்ட தீவிபத்தில் பலியானோர் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது என மீட்புப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தேநீரின் விலை 13,800 ரூபாயா?



தேநீர் பிரியர்களே ஒரு டீக்கு இவ்வளவு செலவிட வேண்டுமா என்று ஆச்சரியத்தில் வாய் பிழக்கும் அளவிற்கு லண்டனில் ஒரு உணவகம் டீ கொடுக்கிறது. அந்த டீ யின் விலை எவ்வளவு தெரியுமா ரூ.13,800. லண்டனிலுள்ள பக்கிங்காம் அரண்மனைக்கு எதிரே உள்ள ரூபென்ஸ் உணவகத்தில்தான் அந்த டீ இவ்வளவு காஸ்ட்லியாக விற்கப்படுகிறது.

சாதாரண டீ தூளை பயன்படுத்தி இங்கு டீ போடுவதில்லையாம், அதற்கு பதிலாக இலங்கையில் இருந்து கொண்டு வரப்படும் 'கோல்டன் டிப்ஸ்'எனும் பிரத்யேக தேயிலையை வெல்வெட் துணியில் காய வைத்த பின்னரே, டீ போடப்படுகிறது. இதன் தனிச்சுவை உள்ளூர் வாசிகள் மட்டும் இன்றி, சுற்றுலா பயணிகளையும் வெகுவாக கவர்ந்து வருகிறது. இந்த டீ தரும் சுவைக்காக இந்த டீயை பலரும் சுவைத்து வருகிறார்களாம்.

# இங்கிலாந்தில் ஆளுயர ஜெல்லி மீன்



பிபிசி செய்தி நிறுவனத்தின் வனவிலங்குகள் குறித்த பெண் செய்தியாளரும், உயிரியல் வல்லுநருமான லிசி டேலி என்பவர் இங்கிலாந்து நாட்டின் தென்மேற்கு கடற்பகுதியில் கடல்வாழ் உயிரினங்கள் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். லிசி டேலி, கடலுக்கு அடியில் நீந்தி கொண்டிருந்த போது ஆளுயர ஜெல்லி மீன் ஒன்று அவரை கடந்து சென்றது. லிசி டேலியுடன் சென்றிருந்த ஒளிப்பதிவாளர் அதனை தத்ரூபமாக படம் பிடித்தார்.

பொதுவாக ஜெல்லி மீன்கள் ஒரு மீட்டர் நீளம் மற்றும் 25 கிலோ எடை வரை மட்டுமே வளரும் தன்மை கொண்டவை என வனவிலங்கு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால் மனிதர்கள் அளவிற்கு பிரமாண்டமாக இருக்கும் ஜெல்லி மீனின் இந்த புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது.



# அமெரிக்காவில் ஒற்றை நபர் பயணம் செய்யும் விமானம் அறிமுகம்



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் 'லிப்ட்' என்ற நிறுவனம் ஒற்றை நபர் மட்டும் பயணிக்கக்கூடிய விமானத்தை தயாரித்துள்ளது. ஒற்றை என்ஜின் கொண்ட 'ஹெக்சா' என பெயரிடப்பட்டுள்ள இந்த விமானத்துக்கு உள்நாட்டு விமான ஒழுங்காற்று அமைப்பு அனுமதி வழங்கி உள்ளது.

196 கிலோ எடை கொண்ட இந்த விமானம் 15 நிமிடத்தில் புறப்படத் தயாராகும் வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விமானம் தண்ணீரில் மிதக்கும் வகையிலும், அவசர காலத்தில் உயிர் பிழைக்க பாராசூட் உதவியுடனும் வடிவமைக்கப்பட்டு உள்ளது. அறுங்கோண வடிவில் அமைக்கப்பட்டுள்ள இந்த இலகு ரக விமானம் அரசு அனுமதியோடு டெக்சாஸ் மாகாணத்தில் சோதித்து பார்க்கப்பட்டது.

சோதனை வெற்றிகரமாக அமைந்ததாக தெரிவித்துள்ள 'லிப்ட்' நிறுவனம் அடுத்த ஆண்டு முதல் இந்த விமானத்தை செயல்பாட்டுக்கு கொண்டுவர முயன்று வருவதாக கூறியது.

மின்சாரம் மூலம் இயங்கும் இந்த விமானத்தை இயக்குவதற்கு விமானிக்கான உரிமம் பெற வேண்டிய அவசியம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரான்சில் அந்தரத்தில் பறந்து ராணுவ வீரர் சாகசம்



பிரான்சில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 14-ந் தேதி தேசிய தினமாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி பாரீசில் ராணுவ அணிவகுப்பு நடைபெற்றது. இதில் அதிபர் மெக்ரான் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். அப்போது அங்கு விசித்திரமான காட்சி ஒன்று அரங்கேறியது.

சிறிய ஜெட் எந்திரத்தில் நின்றபடி கருப்பு நிற உடையணிந்த ஒருவர் துப்பாக்கியுடன் அந்தரத்தில் பறந்து வட்டமடித்தார். ராணுவ வீரரான பிரான்கி ஜபாதா என்பவர் தானே தயாரித்த 'பிளைபோர்ட்' என்ற ஜெட் பவர் எந்திரத்தில் பறந்து சாகசத்தில் ஈடுபட்டார். இது பார்வையாளர்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. தாங்கள் பார்ப்பது கனவா, நிஜமா என்று புரியாமல் வியப்புடன் பார்த்து ரசித்தனர்.

பலர் ஆர்வத்துடன் தங்களது செல்போனில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தனர். அதிபர் மெக்ரான் இது தொடர்பான வீடியோவை டுவிட்டரில் பதிவிட்டு, நவீனம் மற்றும் புதுமையான தங்களது ராணுவத்தால் பெருமை அடைவதாக குறிப்பிட்டுள்ளார்.

# கிரீஸ் நாட்டில் தலையை உரசும்படி தாழ்வாக பறந்த விமானம்



கிரீஸ் நாட்டின் வடமேற்கு பகுதியில் ஸ்கியாதோஸ் தீவில் கடற்கரைக்கு மிக அருகில் விமான நிலையம் அமைந்துள்ளது. கடற்கரைக்கு வரும் சுற்றுலா பயணிகள் விமான நிலையத்தில் தரையிறங்க வரும் விமானங்கள் மிகவும் தாழ்வாக பறக்கும்போது அதன் கீழ்பகுதியில் நின்று 'செல்பி' எடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

அப்படி விமானங்கள் தரையிறங்கும்போது, விமான என்ஜின்களில் இருந்து வெளிப்படும் வேக காற்றினால் சுற்றுலா பயணிகள் தூக்கி வீசப்பட்டு காயமடையவோ, உயிரிழக்கவோ நேரிடும் என்பதால் ஓடுதளத்தின் முன்பாக 'செல்பி'எடுப்பதை தவிர்க்க வேண்டும் என்று அந்நாட்டு அரசு அறிவுறுத்தி வருகிறது. இந்த நிலையில், இங்கிலாந்தின் 'பிரிட்டிஷ் ஏர்வேஸ்' நிறுவனத்துக்கு சொந்தமான பயணிகள் விமானம் ஒன்று ஸ்கியாதோஸ் விமான நிலையத்துக்கு வந்தது.

இந்த விமானம் ஓடுபாதையில் தரையிறங்குவதற்காக வழக்கத்தை விட தாழ்வாக பறந்து வந்தது. அதாவது கடற்கரையில் நின்றுகொண்டிருந்த சுற்றுலா பயணிகள் தலையை உரசும் அளவுக்கு விமானம் தாழ்வாக பறந்தது.

ஆபத்தை உணராத சுற்றுலா பயணிகள் வழக்கம் போல விமானத்தின் கீழ்பகுதியில் நின்றுகொண்டு 'செல்பி'எடுத்துக்கொண்டனர். விமானம் மிகவும் தாழ்வாக பறந்தபோது எடுக்கப்பட்ட வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய். உரிமையாய். உணர்வாய்.
ஞாயிற்றுக்கிழமை 21.07.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

## அமெரிக்காவின் அதீத அக்கறை!

இலங்கையில் கடந்த வருடம் ஒக்ரோபரில் இருந்து அரசியல் குழப்பங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. அதற்கிடையில் ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு புதிதாக இன முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டு உள்ளன. அத்துடன், இந்த வருட இறுதியில் நாட்டின் மிக முக்கியமான ஜனாதிபதித் தேர்தலும் நடைபெறவுள்ளது. இந்தச் சூழ்நிலையில் அமெரிக்க அரசின் சர்வவல்லமை பொருந்திய இராஜாங்க அமைச்சரின் இலங்கை விஜயம் இலங்கை -அமெரிக்க உறவுகளில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இறுதியாக மைக் பொம்பியோ அமெரிக்காவின் இன்னொரு இளைய கூட்டாளியான யப்பான் செல்கின்றார். இந்த விஜயங்களின் நோக்கம் இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திரமான, வெளிப்படையான தன்மையை ஏற்படுத்துவது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதை இன்னொரு வார்த்தையில் சொல்வதானால், அமெரிக்காவின் பிரதான போட்டி நாடான சீனாவின் செல்வாக்கை இப்பிராந்தியத்தில் மட்டம் தட்டும் அமெரிக்காவின் முயற்சிகளில் ஒன்றே பொம்பியோவின் விஜயத்தின் உள்கிடக்கை எனலாம். இலங்கையில் தேர்தல்கள் வரப்போகும் ஒரு சூழ்நிலையில் சீர்திருத்தக் கொள்கைகளை இலங்கை தொடர்ந்தும் முன்னெடுப்பதை உறுதிப்படுத்த வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை செய்துள்ளது. அமெரிக்க தலைநகர் வொசிங்டனில் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய -பசிபிக் இலாகாவின் உதவி பணிப்பாளர் Anne-Marie Gulde இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

அத்துடன் தேர்தல் வரவுள்ள சூழலில் இலங்கை கட்டாயமாக புத்திசாலித்தனமான கொள்கையைப் பின்பற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தியிருக்கிறார். மேலும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், நாங்கள் இலங்கைக்கு மூன்று விடயங்களை வலியுறுத்த விரும்புகிறோம். வருவாயுடன் கூடிய புத்திசாலித்தனமான நிதிக் கொள்கை, ஜாக்கிரதையான நிதிக் கொள்கை, தொடர்ந்து நிதிக் கையிருப்பை பேணுதல் என்பனவற்றையே நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். உங்களுக்குத் தெரியும் அங்கு பெரும் பொதுக்கடன் உள்ளது. அப்படியிருக்கையில் சந்தைக்கான நம்பிக்கையை ஏற்படுத்துவது கடினமானது. அமைப்பு ரீதியான மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் வர்த்தகத்தைத் திறத்தல், சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல், போட்டித்தன்மையை அதிகரித்தல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இலங்கையில் வேலையில்லா நிலை கீழ்மட்டத்தில் உள்ளது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில், போட்டித்தன்மையை அதிகரிப்பது, வளர்ந்து வரும் முதியோர் நிலையில் கவனம் செலுத்துவது, தொழில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது என்பவை முக்கியமானவையாகும். இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார். உலகின் மிகப்பெரிய வட்டிக்கடைக்காரர்களில் ஒன்றான (மற்றது உலக வங்கி) சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியமான அதிகாரி ஒருவர் இலங்கையில் நடைபெறப் போகும் தேர்தல்களுடன் சம்பந்தப்படுத்தி இலங்கையின் பொருளாதார நிலை பற்றி தெரிவித்துள்ள இந்தக் கருத்துக்கள் மூலம் சில முக்கியமான விடயங்கள் தெளிவாகின்றன. அதாவது, இலங்கை தனது வருவாயைப் பெருக்க வேண்டும் என்பதையே அவர் வலியுறுத்துகிறார். ஆனால் எப்படி வருவாயைப் பெருக்க வேண்டும் என்பதில் அவர் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கவில்லை. பொதுவாக ஒரு நாடு தன் வருவாயைப் பெருக்குவதானால், அது சிறந்ததொரு தேசிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் மூலம் தேசிய உற்பத்தியைப் பெருக்கி, உள்நாட்டுச் சந்தையில் பொருட்களின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் இறக்குமதிக்கு செலவாகும் அந்நியச் செலவாணியை மீதப்படுத்த முடியும். இப்பொழுது தேசிய வருவாயில் 50 சதவிகிதம் இறக்குமதிக்கு செலவிடப்படுகின்றது. அத்துடன் இன்னொரு வழியில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலமும், அதன் தரத்தை மேம்படுத்துவதின் மூலமும் ஏற்றுமதியை அதிகரித்து அந்நியச் செலவாணி வருவாயையும் அதிகரிக்க முடியும். இவற்றின் மூலமே அரச கருவூலத்தில் பணத்தைச் சேமிக்க முடியும். ஆனால் வொசிங்டனில் பேட்டியளித்த சர்வதேச நாணய நிதிய அதிகாரி, இவற்றைப் பற்றிக் குறிப்பிடாமல், வேறு வழிகளில் பணத்தை திரட்ட முயற்சிக்குமாறு பூடகமாகக் குறிப்பிடுகிறார்.

அதாவது, பொருளாதாரக் கட்டமைப்பு முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு குறிப்பிடுகிறார். நிச்சயமாக இதன் அர்த்தம், தற்போது இலங்கையில் அரச துறைகளாக இருக்கும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, எரிபொருள், துறைமுகம், போன்ற அத்தியாவசியத் துறைகளை தனியார்மயப்படுத்த வேண்டும் என்பதாகும். அத்துடன் அவற்றைத் தனியார்மயப்படுத்தி போட்டியை ஊக்குவிக்க வேண்டும் என்பதுமாகும். இன்னொன்றை அவர் வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஆனால் அதைத்தான் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் தாளத்துக்கு ஏற்ப செயற்படும் இன்றைய ஐ.தே.க. அரசாங்கம் செய்து வருகின்றது. அதாவது, உற்பத்தியை ஊக்குவித்து, முதலீடுகளைக் கவர்ந்திழுத்து வருவாயைப் பெருக்குவதற்குப் பதிலாக, ஐ.தே.க. அரசு மக்கள் மீதான வரிகளை அதிகரித்து தனது நிதிப் பிரச்சினையைத் தீர்க்க முயல்கிறது.இது வீட்டின் கூரையைப் பிடுங்கி சமைப்பதற்கு அடுப்பை எரிப்பதற்கு பயன்படுத்துவது போன்றது. அண்மையில் நிதியமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில் இதை அவதானிக்கலாம். அதுமட்டுமின்றி, இரண்டு வரவு செலவுத்திட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பொருட்களின் விலைகளை திடீர் திடீரென பலமடங்கு அரசாங்கம் உயர்த்துவதிலிருந்தும் இதைக் கண்டு கொள்ளலாம். ஆனால் சர்வதேச நாணய நிதிய அதிகாரியின் பேட்டியிலிருந்து இன்னொரு விடயமும் புலனாகின்றது. அதாவது, இலங்கை அரசு நாணய நிதியத்தின் ஆலோசனைகளுக்கிணங்கபொருளாதாரத்துறையில் ஏற்கெனவே மாற்றங்களைச் செய்ய ஆரம்பித்துவிட்டது என்பதே அது. அதற்காகத்தான் நிதியமைச்சர் மங்கள சமரவீர அடிக்கடி வொசிங்டனுக்கு காவடி தூக்கிச் சென்றார் என்பதும் தெரியாத விடயமல்ல.

அதேநேரத்தில் இலங்கையில் ஒரு வருட கால அவகாசத்தில் நடைபெறவுள்ள மாகாண, ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்களில் தற்போதைய ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க. அரசுக்கு எதிரான தேசபக்த சக்திகளே வெற்றியீட்டப் போகின்றன என்ற எச்சரிக்கை உணர்வும் சர்வதேச நாணய நிதிய அம்மையாரின் பேச்சில் வெளிப்பட்டு நிற்கிறது.

# இலங்கையும் மறுக்கப்படும் ஜனநாயகமும்

நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால் எதிர்க்கட்சிகள் பலமானதாக இருப்பது அவசியமாகும். இவ்வாறு எதிர்க்கட்சிகள் பலமாக இருந்தால்தான் அரசாங்கம் தான்தோன்றித்தனமான வழியில் செல்லாது ஜனநாயக பாரம்பரியங்களை கடைப்பிடித்துச் செல்லும் சூழல் உருவாக்கப்படும். எதிர்க்கட்சிகள் பலவீனமடைந்திருந்த நாடுகளிலேயே சர்வதிகாரப்போக்குகள் தலைதூக்குவது வரலாறாக இருந்து வருகின்றது.

இத்தகைய ஜனநாயக பாரம்பரியங்களைக் கட்டிக்காப்பதற்கு நாட்டிலுள்ள சகல அரசியற் கட்சிகளும் தம்மால் இயன்ற ஜனநாயக பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியமானதாகும். எமது நாட்டைப் பொறுத்தவரையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து கடந்த 2015 ஆண்டு முதல் அரசாங்கத்தின் பலலமானது அதிகரித்துள்ளது. இப்பலத்திற்கு பிரதானமாக சிறுபான்மையினர் காரணமாக அமைந்ததுடன் அவர்களுடன் சிங்கள பெரும்பான்மையின மக்களும் பேராதரவை நல்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னணியில் வடக்கு கிழக்கு உட்படத் தமிழ் பேசும் மக்கள் கடந்த காலத்தின் போதுபட்ட சொல்லொண்ணாத் துன்பங்கள் தான் எத்தனையாயிரம். துயரத்தின் வலையில் சிக்குண்டு கண்ணீர் வடித்தே வாழ்ந்த சமூகத்திற்கு இந்தப் புதிய அரசாங்கத்தில் நல்லாட்சியின் பெயரில் நடந்தேறியதுதான் என்ன?

இன்றையப் அரசாங்கம் ஆட்சியில் காலடிபதித்து நான்கு வருடங்கள் முடிவடைகின்ற சந்தர்ப்பத்தில் இப்புதிய அரசின் நடவடிக்கைகள் தமிழ்மக்கள் சற்றும் எதிர்பார்க்காத வகையில் நடந்தேறிவருவது தமிழ்மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளன. அந்த வகையில் புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற நாள் முதல் தமக்கு கானல் நீராகிப்போன பல பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வு கிடைக்கும் என எண்ணிக் காத்திருந்த தமிழ் மக்களுக்கு இன்று அவர்கள் பற்றிய பிரச்சினைகளை காதில் வாங்காதும், வாங்கியும் அதனை நிறைவேற்றுவதில் தாமதம் காட்டுவதுமே இன்றைய இலங்கை அரசாங்கம் தமிழ்மக்களுக்குச் செய்யும் நன்றிக் கடனா என்று எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த காலத்தில் பட்டதுயரங்களின் வடுக்களை ஆற்றமுன்வராமல் இன்னும் மைத்திரி அரசும் தங்களது நலனை மட்டுமே நாடி நிற்பதென்பது நாட்டின் நல்லாட்சி அல்லவே! கடந்த கால அரசாங்கத்தின் போது முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தது போன்ற கொடூரங்கள், கொடுமைகள் முதலியவற்றை தமிழ்மக்கள் மாத்திரமே அனுபவித்திருக்கின்றனர். இது உலகறிந்த உண்மையே. அக்கட்டத்தில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், ஆண், பெண், சிறுவர்கள், தாய்மார், வயதானவர்கள் என்ற வேறுபாடின்றி நடந்த திட்டமிட்ட வரம்புமீறல்களும், உரிமை மீறல்களும், போர்க்குற்றங்களும் நிகழ்த்தி தமிழினத்தை அழித்தே யுத்தத்தை நிறைவு செய்ததாகக் கடந்த அரசு கூறி வருடம் 8 வருடங்களைக் கடந்துள்ளது. ஆனால் பயங்கரவாதத்தை ஒழித்தோம் என கடந்த அரசு மார்தட்டியவேளை அங்கு அப்பாவித் தமிழினத்தின் மூன்றில் இரு பங்கு அழிந்திருந்தமையை மாத்திரம் ஏன் யாரும் கண்டுகொள்ளவில்லை. இதன்போது திட்டமிட்டு நடத்தப்பட்ட மனிதப்படுகொலைகள், மனித உரிமை மீறல்கள், கடத்தல்கள், பெண்களுக்கு, சிறுவர் சிறுமியர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், சின்னாபின்னமாக்கப்பட்ட குடும்பங்கள் என இலங்கையில் தமிழர் பட்டதுன்பங்களுக்கு நிகர் ஏதும் இல்லை என்றே கூறவேண்டும்.

இவ்வாறு இருக்கின்ற நிலையில் இன்றையப் புதிய அரசாங்கத்தின் நல்லாட்சியின் தொடக்கப்பகுதி ஆரம்பித்து இருவருட காலப்பகுதியை பூர்த்தி செய்யவுள்ள இந்த தருவாயில் இவ்வரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் பாராமுகமாக இருப்பதுதான் தமிழ்மக்கள் மத்தியில் பாரிய பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது என்று கூறலாம்.

அதாவது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாக இலங்கையில உள்நாட்டு விசாரணை என்ற விடயம் மேற்கிளம்பிய நாள் தொடக்கம் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்திவரும் தமிழ்மக்களுக்கு இன்றளவேனும் இப்புதிய அரசாங்கம் தீர்வு வழங்காததும், தமது முடிவில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் இருப்பது ஏன்? இது தமிழ்மக்கள் குறித்துச் சிந்திக்காத போக்கு என்றும் தமிழர்களாக இந்த நாட்டில் பிறந்ததால் மௌனமாக இருக்க வேண்டுமா என்றும் மறுபுறம் எண்ணத் தோன்றுகின்றது.

அத்துடன் தமிழ்மக்களின் பிரச்சினைகளைக் குறிப்பாக போர்க்காலத்தின் இடம்பெற்ற மனிதாபிமானமற்ற குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றம் அங்கு இடம்பெற்ற ஏனைய எல்லை மீறிய செயற்பாடுகள், காணாமல்போனோர், கடத்தப்பட்டோர் (இன்றுவரை தொடரும் ஆர்ப்பாட்டங்கள்) கைதிகளாக்கப்பட்டோர் எனப் பல்வேறு தரப்பட்ட விடயங்கள் குறித்தும் 30 வருட கால யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளவும் குடியேற முடியாமலும், அத்தியாவசியமற்ற இராணுவத்தலையயீடுகள், தங்களது வாழ்வாதாரத் தொழிலை கையகப்படுத்தி அதில் வருமானம் ஈட்டும் இராணுவக் கெடுபிடிகள், அப்பாவிகளாக இன்று வரையும் எதற்காக கைதுசெய்யப்பட்டோம் என்று கூடத்தெரியாமல் சிறையில் தங்களது ஆயுட்காலத்தை கழித்துவரும் தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை, கரையோர மீனவர்களின் பொருளாதார சிக்கல், மற்றும் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான உயிர் உடமைகளை இழந்து அதற்குரிய எந்த இழப்பீடுகளையும் இன்று வரை பெற்றுக் கொள்ளாமல் தமக்கு தமது உறவுகளுக்கு விடிவுவரும் வகையில் உள்ளக விசாரணை அமையாது நீதியான சர்வதேச விசாரணைப் பொறிமுறை அமையும் என்று எதிர்பார்த்திருந்த தமிழ்மக்களுக்கு தற்போதுவரை சர்வதேச விசாரணையை பின் தள்ளிப் போட்டு அதனை தொடராமல் இருத்தல், என்று மக்கள் மத்தியில் பாரிய பிரச்சினைகள் எவ்வித தீர்வுகளுமின்றி இன்றுவரை காணப்பட்டுவருகின்றன.

**இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நாள் தொடக்கம் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்திவரும் தமிழ் மக்களுக்கு இன்றளவேனும் நல்லாட்சி அரசாங்கம் தீர்வு வழங்காததும், தமது முடிவில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் இருப்பது ஏன்? இது தமிழ்மக்கள் குறித்துச் சிந்திக்காத போக்கு என்றும் தமிழர்களாக இந்த நாட்டில் பிறந்ததால் மௌனமாக இருக்க வேண்டுமா என்றும் எண்ணத் தோன்றுகின்றது.**

அதுமட்டுமின்றி சிறைக்கைதிகளின் விடுதலை தொடர்பில் கடந்த ஆண்டு காலப்பகுதியில் தமிழர் தரப்பினர் கொடுத்த அழுத்தத்தினால் ஒரு சிலர் விடுதலை செய்யப்பட்ட போதுங்கூட அவர்களில் பெரும்பாலானோர் விடுதலை செய்யப்படாமலும் விடுதலை செய்யப்பட்டவர்களில் சிலர் மீண்டுங் கைதுசெய்யப்பட்டு அடைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இக்கைதிகள் சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக வாடிக்கொண்டிருப்பதால் அவர்களுக்குள் சிலர் உடல், ரீதியாக நோய்வாய்ப்பட்டிருப்பதோடு இன்னுஞ் சிலர் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவும் மற்றும் ஒரு சாரார் உடலாலும், உள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களாக விளங்குகிறார்கள் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியாகவே உள்ளது.

அத்துடன் எதிர்வரும் காலத்தில் உள்ளக விசாரணை இலங்கையில் இடம்பெறினும் அங்கு தமிழ்மக்களுக்கு திட்டமிட்டு அநீதிகளை இழைத்த குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்காது பாதுகாப்பு வழங்கப்பட்டு நல்லிணக்கத்தைப் பற்றிப் பேசுவதாகவும் அமையவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்மக்களுக்கு திட்டமிட்டு அநீதிகளைச் செய்த குற்றவாளிகளின் குற்றச் செயல்கள் குறித்து மாத்திரம் விசாரித்துவிட்டு அவர்களுக்குத் தண்டனை வழங்காமல் பாதுகாப்பு வழங்கி நல்லிணக்கம் பற்றிப் பேசுவதென்பது தமிழ்மக்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகவே தற்போதுவரை உள்ளது.

இனஅழிப்பு போரின் கொடூரத்தை அனுபவித்து கொண்டிருந்த மக்கள் சர்வதேச சமூகம் தம்மை காப்பாற்றும் என நம்பிக்கையோடு இருந்தனர். தாயகத்தில் வாழும் குரலற்ற மக்களின் குரலாக உலகின் பல்வேறு நாடுகளிலும் தொடர்ச்சியான போராட்டங்களில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் ஈடுபட்டனர். தமிழர்களின் அவலக்குரல் கணிசமானளவு சர்வதேசமயப்படுத்தப்பட்டாலும், இனஅழிப்பிலிருந்து தமிழர்களை காப்பாற்ற முடியாமற் போனமை கசப்பான உண்மையே.

**நக்கீரர்**

மேலும் முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் அமெரிக்காவும், சர்வதேசச் சமூகமும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் வெளியிட்ட அறிக்கைகளை மீண்டும் புரட்டிப் பார்த்தால் அக்குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதிக்கப்படாமை முக்கியமான ஒரு குற்றச் சாட்டாக அமைந்துள்ளமை தேசிய அரசானது அறிந்து ஒப்புக்கொண்ட பின்னரும் தீர்வுகளை விசாரணைகள் மூலம் வழங்கத் தாமதப்படுத்துவதன் பின்னணி இன்றுவரை புரியாத புதிராகவே உள்ளது. இதற்குத் தாமும் பலிகடாவாகாமல் செயற்படவேண்டியது புதிய அரசினதும் தமிழர்கள் நம்பியுள்ள தமிழ்த் தலைமைகளும் பாரிய கடப்பாடாகும்.

புதிய அரசாங்கமானது, நல்லாட்சியின் ஆரம்பத்தில் கடந்த காலத்தில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாகக் குறிப்பிட்டு உள்ளக விசாரணை நடத்த முன்வந்திருந்தும் அது தமிழ்மக்களுக்குத் திருப்தி அளிக்காத வகையில் நடத்துவதென்பதில் ஏதும் பின்னணி கடந்த அரசாங்கத்தை காப்பாற்றும் நோக்கில் செயற்பட உள்ளது என்பது புலனாகின்றது. குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்றால் அவ்வாறானதொரு உள்ளக விசாரணையின் தேவைதான் என்ன? இங்கு தமிழ்மக்களின் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்ளாமல் குற்றவாளிகளைத் தப்பிக்க விடுவதே அரசின் நோக்கமாக உள்ளது என அரசியல் ஆய்வாளர்களும் புத்திஜீவிகளும் கூறிவருகின்றனர்.

இலங்கையில் கடந்த காலத்தில் வட கிழக்கில் அதிகளவான போர்க் குற்றங்களும், கொலை, கொள்ளை, வன்புணர்வு, மனிதப் படுகொலை கடத்தல் முதலிய அநீதிச் செயற்பாடுகள் தொடர்ந்தும் அதிகரித்துச் சென்றமைக்குப் பிரதான காரணம் குறித்த குற்றத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு உரியமுறையில் தண்டனை வழங்கப்படாமையேயாகும். இதனை உள்ளக விசாரணை இடம்பெறுவதற்கு முன் புதிய அரசு கவனத்திற் கொண்டு உரிய தீர்வினை வழங்க முன்வர வேண்டும்.

அதுமட்டுமல்லாது இலங்கையில் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை விதிக்கப்படாமையாலேயே அதிகளவான குற்றச் செயல்கள் நாட்டில் இடம்பெற்றுவருகின்றன. இதற்கு அத்திபாரமிட்டவர்களாக அரசே இருந்துகொண்டு குற்றச் செயல்களைத் தடுப்போம் என அறிக்கை விடுவதில் எவ்வித அர்த்தமுமில்லை. எனவே இதுபோன்ற பல்வேறு விடயங்களையும், நாட்டின் எதிர்காலம் கருதியும் புதிய அரசாங்கம் சர்வதேச தலையீடுடன் கூடிய விசாரணைப் பொறிமுறையை மிக விரைவில் முன்னெடுக்க வேண்டியது பிரதானமானதாகும்.

விசாரணையை ஆரம்பிப்பதற்கு முன்னரே குற்றவாளிகள் தண்டிக்கப்படமாட்டார்கள் என்ற நோக்குடன் விசாரணையை முன்னெடுப்பதால் எவ்வித நன்மையும் தமிழ்மக்களுக்கு விழையப்போவதில்லை, அத்துடன் இவ்விசாரணை மூலம் எதிர்காலத்தில் இடம்பெறும் குற்றங்கள், எல்லை மீறல்கள் முதலியவற்றைக் கட்டுப்படுத்தமுடியாது என்பதும் நிதர்சனம்.

எனவே மக்கள் நலனில் அக்கறை கொண்டு தேசிய அரசாங்கம் இது போன்ற உண்மைகளைக் கருத்திற் கொண்டு தொடர்ந்து துன்பஅலைகளால் அடிக்கப்பட்டு துவண்டுபோன உள்ளங்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையிலும் குறிப்பாக இவ்வாறான குற்றங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாத வகையிலும் தமிழ் மக்களுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே தமிழ் உள்ளங்களின் தேவையாக உள்ளது.

# கிழக்கில் சிந்திய இரத்தங்கள் 08

# மூதூர் குமாரபுரம் படுகொலை

## கர்ப்பிணிப்பெண் உட்பட 26பேர் சுட்டுக் கொல்லப்பட்ட கொடூரம்

**சிரேஷ்ட ஊடகவியலாளரும் முன்னாள் தமிழ்ப்பத்திரிகை ஒன்றியத் தலைவருமான இரா.துரைரத்தினம்**

தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு உள்நாட்டில் நீதி கிடைக்காது என்பதற்கு மூதூர் குமாரபுரம் படுகொலை ஒரு சான்றாகும்.

1996ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி இரவு நடந்த இந்த படுகொலை சம்பவத்தில் கர்ப்பிணிப்பெண்கள் , குழந்தைகள் உள்பட 26 பேர் இராணுவதினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டனர். இச்சம்பவத்தில் 39 பேர் காயமடைந்தனர்.

மது போதையில் கிராமத்திற்குள் நுழைந்த ராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்கள் அந்த கிராமத்தை சேர்ந்த தமிழர்கள் ஆவர்.

தெஹிவத்த, கிளிவெட்டி, மற்றும் 58ஆவது மைல்கல் முகாம்களை சேர்ந்த இராணுவத்தினரே இந்த படுகொலைகளை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

6 பெண்களும், 5 ஆண்களும் மற்றும் 13 சிறுவர்களும் (18 வயதிற்கும் குறைந்தவர்கள்) இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் ஒரு கர்ப்பிணித் தாயும் 15 வயது சிறுமியொருவரும் அடங்குகின்றனர். கொல்லப்படுவதற்கு முன்னதாக அந்தச் சிறுமி இராணுவ குழுவொன்றினால் கூட்டாக பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.



கொல்லப்பட்டவர்களின் விபரம்.

சுப்பையா சேதுராசா, அழகுராசா பரமேஸ்வரி, அருமைத்துரை வள்ளிப்பிள்ளை, கிட்ணன் கோவிந்தன், அருணாசலம் தங்கவேல், செல்லத்துரை பாக்கியராசா, வடிவேல் நடராசா, ராசேந்திரம் கருணாகரன், சண்முகநாதன் நிதந்தன், ராமஜெயம் கமலேஸ்வரன், கந்தப்பொடி கமலாதேவி, சிவக்கொழுந்து சின்னத்துரை, சிவபாக்கியம் நிசாந்தன், பாக்கியராசா வசந்தினி, அமிர்தலிங்கம் ரஜினிகாந்தி, தங்கவேல் கலாதேவி, ஸ்டீபன் பத்மினி, சுந்தரலிங்கம் பிரபாகரன், சுந்தரலிங்கம் சுபாஜினி, கனகராசா சுவதிராசா, சுப்ரமணியம் பாக்கியம், விநாயகமூர்த்தி சுதாகரன், ஆனந்தன் அன்னம்மா, விஜயகாந்த் லெட்சுமி, அருமைத்துரை தனலெட்சுமி

இச்சம்பவம் பற்றி நேரடி சாட்சிகளின் வாக்குமூலங்களை மனித உரிமை அமைப்பின் அனுசரணையுடன் மாற்றம் என்ற இணையத்தளம் பதிவு செய்திருந்தது. அந்த தகவல்களையும் இங்கே நன்றியுடன் பதிவு செய்கிறோம்.

1996ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி மாலை 5மணியளவில் துப்பாக்கி சூட்டு சத்தங்கள் கேட்கத்தொடங்கின.

ஆரம்பத்தில் துப்பாக்கி சூட்டு சத்தங்களை கேட்டு அக்கிராம மக்கள் பெரிய அளவில் அச்சம் கொள்ளவில்லை. துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களைக் கேட்டால் பயப்பட வேண்டாம் என்றும், பறவைகளை நோக்கி அவர்கள் சுடுவார்கள் என்றும் சில தினங்களுக்கு முன்னதாக இராணுவத்தினருடன் நடைபெற்ற கூட்டமொன்றின்போது இராணுவ அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் சற்று நேரத்தில் துப்பாக்கி சூட்டு சத்தங்களும் மக்களின் அவல ஓலங்களும் கேட்ட போதுதான் மக்கள் ஆபத்து நெருங்கி வந்திருப்பதை உணர்ந்து கொண்டனர்.

என்னை சுடுங்கள். ஆனால், தயவுசெய்து எனது பிள்ளைகளைக் கொல்ல வேண்டாம், என்று கந்தப்பொடி கமலாதேவி குமாரபுரத்திலுள்ள தமது வீட்டுக்கு வெளியில் வைத்து இலங்கை இராணுவத்தால் தாம் சுட்டுக்கொல்லப்படுவதற்கு சற்று முன்னதாக அவரது தலைக்கு மேலாக இரு கைகளையும் கூப்பி கெஞ்சியிருந்தார் என சம்பவத்தை நேரில் பார்த்த அவரின் மகளான கந்தப்போடி பிரபாராணி தெரிவித்தார்.

துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் நெருங்கி வர ஆரம்பித்ததும் அவரது தயார் அவரை வீட்டுக்குள் ஓடுமாறு கூறினார். அந்த வீட்டினுள் ஏனைய கிராமவாசிகளும் அடைக்கலம் புகுந்திருந்தனர். வீட்டு சுவர் வெடிப்பொன்றின் ஊடாக அவர்கள் எட்டிப்பார்த்தபோது சீருடையில் இருந்த பெரும் இராணுவ அணியொன்று அவர்களது வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்ததைக் கண்டனர். வெளியில் வருமாறு அவர்களது வீட்டுக்கு வெளியில் இருந்து இராணுவத்தினர் கத்தியதும் தமது பிள்ளைகளின் உயிர்களை காப்பாற்றிக்கொள்வதற்காக பிரபாராணியின் தாயார் வீட்டை விட்டு வெளியில் வந்தார். இராணுவத்தினர் அவரது தாயாரை கொன்றதன் பின்னர் வீட்டை நோக்கி சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தியதில் வீட்டினுள் இருந்த பெரும்பாலானோர் காயமடைந்தனர். இதில் ஒரு வயதேயான குழந்தையொன்றும் அடங்கும்.

இந்த படுகொலைகளை நடத்திய இராணுவத்தினரை அக்கிராம மக்கள் ஏற்கனவே நன்கறிந்திருந்தனர். முகாமை சுத்தம் செய்வதற்கு அம்மக்களை இராணுவத்தினர் முகாமுக்கு அழைப்பதுண்டு. கிராம மக்கள் சோளன் அறுவடை செய்து வந்தால் அதனை இராணுவத்தினருக்கு கொடுப்பது வழக்கம்.

தச்சு வேலை, மேசன் வேலை செய்பவர்களையும் தங்கள் முகாம் திருத்த வேலைகளுக்காக அழைப்பதுண்டு

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தங்கவேலு. இவர் தச்சுத்தொழில் செய்பவர்.

அவரின் மனைவி மருதாயி தனது கணவர் கொல்லப்பட்டதை தான் நேரில் பார்த்ததாக சாட்சியமளித்திருந்தார்.

எனது கணவர் அப்போதுதான் வேலை முடித்து வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது,



அருகிலுள்ள முகாமைச் சேர்ந்த கோப்ரல் கபில எனும் நன்கறிந்த இராணுவ உத்தியோகஸ்தர் ஒருவரும் அவருடன் வந்திருந்த இன்னுமொருவரும் எமது வீட்டின் வெளிப்புறத்தில் இருந்து எனது கணவரை அழைத்தனர். எனது கணவர் தச்சு வேலைகள் செய்பவர் என்பதால் அவரிடம் பொருட்களை பழுது பார்த்துக் கொள்வதற்கோ அல்லது புதிய பொருட்களை செய்துகொள்வதற்கோ கபில அடிக்கடி வருவார். அந்த வகையில், அவரை எமக்கு நன்கு தெரியும்

தனது கணவர் வெளியில் சென்று ஏன் அழைத்தீர்கள் என கேட்ட போது அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இச்சம்பவத்தில் தங்கவேல் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் 15 நாட்களின் பின் உயிரிழந்தார்.

கூலித் தொழிலாளியான அரசரட்னம் நாகராசா இச்சம்பவம் பற்றி பின்வருமாறு விபரித்தார்.

வீட்டிற்கு வெளியே துப்பாக்கிச் சூடுகள் இடம்பெறுவதை நாம் தொடர்ந்தும் கேட்டுக் கொண்டிருந்தோம். ஆகையால், வீட்டில் இருந்து வெளியில் வருவதற்கு நாம் மிகவும் அஞ்சினோம். எமது வீட்டை நோக்கி 4 இராணுவத்தினர் வருவதை சுவரிலிருந்த வெடிப்பொன்றின் ஊடாக நாம் கண்டோம். எமது வீட்டை அடைந்ததும், பர தெமழு, எலியட்ட வரெங்! (பற தமிழனே, வெளியியே வா!) என்று வீட்டுக்கு வெளியில் இருந்து அவர்கள் கத்தினர். யாரும் வெளியில் செல்லாததை அடுத்து தகரங்களினால் அமைக்கப்பட்டிருந்த வீட்டின் சுவர் பகுதி மீது இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டனர். துப்பாக்கி குண்டொன்று எனது இடக்கண்ணினூடாக சென்று மறுபுறமாக வெளியில் வந்தது. எனது அயலவர்கள் என்னை அருகிலிருந்த மருத்துவ நிலையத்திற்கு கொண்டுசெல்ல முயற்சித்தனர். எனினும், செல்லும் இடைவழியில் மீண்டும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதை அடுத்து அருகிலிருந்த இன்னுமொரு வீட்டுக்குள் ஓடிச் சென்று ஒளிந்துகொண்டோம். எனது மனைவியும் மகனும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியிருந்தனர்.

இச்சம்பவத்தை நேரில் பார்த்த நடராசா தவமணி என்ற பெண் தமது சாட்சியத்தில்..

துப்பாக்கிச் சூட்டு சத்தம் அருகில் நெருங்கி வருவதைப் போன்று தெரிந்ததும் அருகில் இருந்த வீடொன்றுக்கு நான் ஓடினேன். அந்த வீட்டின் அருகில் வந்த இராணுவத்தினர் எம்மை வெளியில் வருமாறு கத்தினர். எம்மில் யாரும் வெளியில் செல்லாததை அடுத்து வீட்டின் கதவை உதைத்து திறந்த அவர்கள் எம்மை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். அதில் பெண்ணொருவர் கொல்லப்பட்டார். எனது கணவரின் வயிற்றுப் பகுதியில் துப்பாக்கி சூடு பட்டதுடன், இன்னுமொருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளானார். அதையடுத்து எம்மை சோதித்துப் பார்க்க அவர்கள் மீண்டும் வந்தனர். நாம் அனைவரும் நிலத்தில் அசைவற்று படுத்து கிடந்தோம். ஆகவே, நாங்களும் உயிரிழந்துவிட்டோம் என்று அவர்கள் நினைத்திருக்க வேண்டும் நடராசா தவமணி தெரிவித்தார்.

தவமணியின் சகோதரர் வீதிக்கருகில் கடையொன்றை நடத்திவந்தார். அந்த கடையில் இருந்த மக்களை ஓடுமாறு கூறியதை அடுத்து, தவமணியின் சகோதரர் அவரது பிள்ளைகளுடன் தவமணியின் வீட்டுக்கு ஓடினார்.

தரையில் கிடந்த எனது கணவரின் வயிற்றுப் பகுதியில் இருந்து இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருந்தது. தம்மை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று காப்பாற்றுமாறு அவர் எனது சகோதரரிடம் மன்றாடினார். எனினும், வெளியில் தொடர்ந்தும் துப்பாக்கிச் சூடு நடந்து கொண்டிருந்தமையால் எனது சகோதரரால் கணவரை கொண்டுசெல்ல முடிந்திருக்கவில்லை. 2 மணித்தியாலங்களின் பின்னர் எனது கணவர் இறந்துவிட்டார் தவமணி கூறினார்.

பிரியா என்ற சிறுமிக்கு அப்போது 7வயது தான். வீட்டில் தனது கர்ப்பிணி தாயும் 3வயது சகோதரியும் இருந்த போது வீட்டுக்கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த இராணுவத்தினர் தங்கள் மீது துப்பாக்கி சூட்டை நடத்தினர் என அவர் தெரிவித்திருக்கிறார்.


எங்களது அம்மா அந்த நேரத்தில் 9 மாத கர்ப்பிணியாக இருந்தார். அவரின் வயிற்றுப் பகுதியில் துப்பாக்கிச்சூடு பட்டதால் அவர் கொல்லப்பட்டார். அம்மாவின் கைகளில் இருந்த எனது சகோதரியின் இரு கால் விரல்களும் பாதத்தின் ஒரு பகுதியும் சிதறிவிட்டன. நாம் ஒளிந்திருந்த அறையில் 7 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். கர்ப்பிணியாக இருந்த எமது அம்மா, அவரது சகோதரி, அக்கம்பக்கத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகள் மற்றும் அவர்களது தாயார் மற்றும் இன்னுமொரு சிறுவன் ஆகியோர் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர். எனது சகோதரியும், சகோதரனும் நானும் மட்டுமே உயிர்தப்பினோம். எனினும், இந்தத் துப்பாக்கிச் சூடானது எமது சகோதரியின் பாதத்தையும் எனது சகோதரரின் காலையும் நிரந்தரமாக முடமாக்கியிருந்தது என பிரியா கூறியிருக்கிறார்.


15 வயது சிறுமியொருவர் இராணுவ குழுவொன்றினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதை தாம் பார்த்திருந்ததையும் நீதிமன்றத்தில் வைத்து கோப்ரல் குமார கிராமவாசிகளிடம் தெரிவித்திருந்தார் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்தச் சிறுமி அரிதாகவே உயிருடன் இருந்திருந்ததாகவும், ஆகையால் அந்த சிறுமியை அவ்வாறானதொரு நிலையில் பார்க்க முடியாமையினால் அச்சிறுமியை தாம் சுட்டுக் கொன்றுவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். மறுநாள் காலை சிறுமியின் உடலை கிராமவாசிகள் சடலமாக மீட்டிருந்தனர்.

**(குமாரபுரம் படுகொலை விசாரணை மற்றும் நீதிமன்ற தீர்ப்புக்கள் பற்றிய விபரங்களை அடுத்த வாரம் பார்ப்போம்)**

# இனப்பிரச்சினை தீர்வு குறித்த பிரதமர்களின் கடந்த கால அறிவிப்புகள்









**அமெரிக்காவிலிருந்து எம்.ரூபன்**

இனப்பிரச்சினைக்கு மூன்று வருட காலத்தில் தீர்வு என பிரதமர் ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளார்.2016 ஜனவரி 15 யாழ்.நகரில் இடம்பெற்ற பொங்கல் விழாவில் பேசிய பிரதமர் ரணில்,2009 மே மாதம் யுத்தம் முடிவடைந்த பின்னர் படையினரிடம் சரண்டைந்தவர்கள் இல்லை. வெளிநாடுகளுக்கு தப்பி சென்றுவிட்டனர் என்றார். அதுமட்டுமா கடந்த ஆண்டு கிளிநொச்சியில் பொதுமக்கள் கொடுத்த மகஜர்கள்,கடிதங்களை வீசி எறிந்தார். பாடசாலை கட்டடம் அமைத்து தருமாறு மக்கள் கேட்ட போது,மரங்களுக்கு கீழே இருந்து படியுங்கள் என்றவர்.சந்திரிகா அரசு கொண்டு வந்த யோசனை நகலை சபையில் ஐ.தே.க.எம்.பிக்கள் எரித்தபோது சிரித்துக்கொண்டிருந்தவர். இவரா இனப்பிரச்சினைக்கு தீர்வை தருவார் என ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் கேட்கின்றன. இரா.சம்பந்தரும் அடுத்த தீபாவளிக்குள் தீர்வு என ஒவ்வொரு நிகழ்வுகளிலும் கூறினார்.தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களும் இந்த ஆட்சியல் தீர்வு என்றே கடந்த நான்கு வருடங்களாக கூறுகின்றனர்.ரணிலைப்போலவே இதற்கு முன்னரும் யாழ்ப்பாணம் வந்த பிரதமர்களும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றே கூறிவந்தனர்.ஆனால்,அவர்களால் எந்த தீர்வையோ, அல்லது தீர்வு திட்டங்களையோ மேற்கொள்ள முடியவில்லை என்பது வரலாறு.

இன்று இந்த அரசுக்கு ஆதரவு அளித்து வரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அரசுடனோ, ஜனாதிபதியுடனோ பேச்சுக்களை நடாத்தவில்லை.ஆட்சிக்காலம் முடிவடையும்போது ஜனாதிபதி ஏமாற்றிவிட்டார்,நல்லாட்சி அரசில் தீர்வு கிடைக்காது என்கின்றனர் பிரதமர் ரணில் கூறும் தீர்வு என்ன? அவர் எப்படி கால அவகாசம் வழங்குவார். ஜனாதிபதி தேர்தல்,பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளன. அவற்றில் யார்,யார் பதவிக்கு வருவார்கள். ஆட்சி எப்படி அமையும் என்ற ஒரு நிலைமை உள்ளது. அத்துடன் பொதுபல சேன தலைவர் ஞானசார தேரர் கண்டியில் இது சிங்கள இராச்சியம் எனவும்,தமிழர்கள் கோபிக்கக்கூடாது எனவும் கூறிவிட்டார்.இனி அடுத்து ஆட்சிக்கு வருபவர்கள் இனப்பிரச்சினைக்கு எந்த தீர்வை தருவார்கள். அதற்கு பௌத்த உயர் பீடங்களின் அனுமதி கிடைக்குமா ? என்ற கேள்வி தமிழர்கள் தரப்பில் எழுந்துள்ளது.அரசியல் யாப்பும் அவர்களின் விருப்பப்படியே தயாரிக்கப்படவேண்டிய நிலைமை.பண்டாரநாயக்காவும்,செல்வநாயகமும் செய்துகொண்ட ஒப்பந்தம் பிக்குமாரின் கடும் எதிர்பினாலேயே கிழித்து எறியப்பட்டது.

### பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலையின் சம அந்தஸ்து

1956 ஆனி 5 தனிச்சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னரே இனப்பிரச்சினை நாட்டில் ஏற்பட்டது. ஆனால் அதற்கு முன்னரே தமிழுக்கு சம அந்தஸ்தை வழங்க முன்வந்தவர்தான் ஐக்கிய தேசிய கட்சியின் மூன்றாவது பிரதமரான சேர் ஜோண் கொத்தலாவலை.ஆனால் அது பின் கைவிடப்பட்டது. 1954 இல் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலை யாழ்ப்பாணம் வந்தபோது கொக்குவில் இந்துக்கல்லூரியில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசும் போது நாட்டில் தமிழுக்கும்,சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வழங்கப்போவதாக அறிவித்தார்.பிரதமரின் பேச்சு தமிழர்களுக்கு மகிழ்ச்சியை தந்தது. இலங்கை வரலாற்றில் ஒரு புதிய திருப்பு முனை ஒன்று ஏற்படப்போகிறது என பலரும் நம்பினார்கள்.ஏனெனில் பிரதமருக்கு யாழ்.நகர மண்டபத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டபோது அமிர்தலிங்கம் தலைமையில் தமிழரசு இளைஞர்கள் கறுப்புக்கொடி காட்டி திரும்பிப்போ என கோசமிட்டனர். பொலிசார் தாக்கி அமிர்தலிங்கம் உட்பட அவர்கள் படுகாயமடைந்தனர்.

அப்போது இனப்பிரச்சினை,மொழிப்பிரச்சினை நாட்டில் ஏற்படவில்லை. தமிழரசு,தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்களை ஐக்கிய தேசிய கட்சியின் பக்கம் இழுக்கவே கொத்தலாவலை இந்த சம அந்தஸ்து திட்டத்தை அறிவித்திருந்தார்.ஆனால்,கொத்தலாவலை யாழ்ப்பாணத்தில் கூறிய பின்னர் தெற்கே கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டார்.அவரின் தொடங்கஸ்லந்தை தொகுதிக்கு வந்தபோது பௌத்த பிக்குமார் வீதிகளில் நின்று அவருக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன்,சம அந்தஸ்தை கண்டித்து துண்டு பிரசுரங்களையும் விநியோகித்தனர். எதனையும் இராணுவ மிடுக்குடன் செய்த்துணியும் கொத்தலாவலை வீதியில் நின்றே பிக்குமாரை கண்டித்தார்.மதவாதிகளே,அரசியலில் உங்களுக்கு என்ன வேலை,நீங்கள் மத வேலைகளை செய்யுங்கள் என்றார்.அவர் அன்று கூறியபடி இன்று இவர்கள் அரசியலில் தலையிடுகின்றனர். தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

அன்றைய எதிர்க்கட்சித்தலைவரான பண்டாரநாயக்கா இதனை தனக்கு சார்பாக பயன்படுத்தி ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியை கவிழ்க்க இனவாதமே சரியான வழி என்று தனிச்சிங்களத்தை பிரசாரமாக்கினார். தான் அரசு அமைத்தால் இருபத்து நான்கு மணித்தியாலத்துக்குள் சிங்களத்தை அரச கரும மொழியாக்குவேன் என்றார்.இது தீவிரமாக தெற்கில் பரவியது.பண்டாரநாயக்காவின் பின்னால் சிங்கள மக்கள் அணி திரண்டனர்.இதனால் தடுமாறிய ஐக்கிய தேசிய கட்சினருக்குள் கொத்தலாவலைக்கு எதிராக எதிர்ப்பு கிளம்பியது. இதனையடுத்து கட்சியின் மாநாடு 1956 இல களனியில் நடைபெற்ற போது கொத்தலாவலையின் சம அந்தஸ்து கொள்கையை வைத்து தேர்தலில் களமிறங்கமுடியாது என முடிவு செய்தனர்.'தனிச்சிங்களமே' எமது கட்சியின் கொள்கை என தீர்மானம் நிறைவேற்றினர். ஆனால்,பண்டாரநாயக்காவே ஆட்சியை பிடித்தார்.

இந்த தீர்மானம் ஐக்கிய தேசிய கட்சியில் அங்கம் வகித்த பல தமிழர்களுக்கு மட்டுமல்ல அதன் ஆரம்ப கால ஆதரவாளர்களுக்கும்

14 ஆம் பக்கம் பார்க்க....



# சமஷ்டி கோரிக்கையும் தமிழினமும்

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

ஜனநாயகத்தை அடியொற்றி மேற்கொள்ளப்பட்டு வரும் ஆட்சி முறைகளில் ஒன்று சம;டியாகும். அதிகாரம் ஒரு நாட்டின் மத்திய அரசுக்கும் அங்கத்துவ அரசுகளுக்கும் இடையே பிரிக்கப்பட்டுப் பிரயோகிக்கப்படுவது சம;டியாகும். இது கனடா, பிரேசில், பெல்ஜியம், ஸ்பெயின், சுவிஸ்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடைமுறையில் இருந்து வருகின்றது. அந்த வகையில் இலங்கைத் தீவு பல்லின மக்களை கொண்ட ஒரு நாடாக காணப்படுகின்றது. அதில் கடந்த காலத்தில் தமது உரிமைகளுக்காக போராடி மிகவும் பாதிப்படைந்த ரீதியில் காணப்படுவது தமிழ் மக்களே யாவர். இலங்கையில்.1956ம் ஆண்டுக்கு பின் உச்சம் பெற்ற அரசியல் மோதல்கள் வலுப்பெற்று 1983ஆம் ஆண்டுக்கு பின் எழுச்சி பெற்று ஆயுத போராட்டமாக வளர்ச்சி பெற்றது. இதற்கான காரணத்தை ஒரே வரிகளில் கூறுவதானால் அதிகாரம் என்பது பெரும்பான்மை சமூகத்தின் கைகளிலேயே அல்லது அவை தமிழர்களுக்கு வழங்க மறுக்கப்பட்டமேயாகும் எனக் கூறலாம். இதனாலேயே நாட்டில் தமிழ்த் தேசியம் என்ற விடயமும் தமிழ்த் தரப்பு மத்தியில் பரவலாகப் பேசப்பட்டு வந்தது.

இலங்கையில் ஆட்சிபீடம் ஏறும் ஆட்சியாளர்களின் மூலமாக தமிழ் மக்கள் தமது தீர்வை பெற வேண்டும் என சிந்திக்கிறார்கள். மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டு விடுவோம் என அச்சம் கொள்கிறார்கள். இதனால் மற்றவர் பார்வையில் இனவாதிகளாக மாற்றப்படுகிறார்கள். தமது இனத்திற்காக குறைந்தபட்ச தீர்வாக தருவதை வாங்குவதற்கு பதிலாக இந்த நாட்டின் பூர்வீகத்தின் உரிமையாளர்கள் என்பதால் அதிகாரத்தை பகிர்ந்துகொள்ள துடிக்கிறார்கள். இதன் அடிப்படையிலையே வடக்கு கிழக்கு இணைந்த சமஸ்டி பற்றி தமிழ் மக்கள் இன்று பேசுகிறார்கள். அதுவே 1947ல் கோரப்பட்ட அதாவது 70 வருடங்களுக்கு முன் தமிழருக்கு தந்தை செல்வநாயகம் முன்மொழிந்த சமஸ்டி தீர்வாகும்.

இன்றைய சிக்கலான முறைக்குள் சமஸ்டி தீர்வை வழங்க நாட்டின் நிலைமை இடமளிக்க போவதில்லை. தமிழ் தலைவர்கள் அந்த தீர்வை பெறும் காலத்தை கடந்து வந்துவிட்டார்கள். இன்று பேரம் பேசும் சக்தி எதுவும் தமிழர்களுக்கு இல்லை. ஆட்சியாளர்கள் தீர்மானிக்கும் அதிகார பகிர்வே சாத்தியமாக காணப்படுகின்றதாக அரசியல் நிலவரம் புடம் போட்டுக்காட்டுகின்றது.

எனவே நீண்டகால இனமுறுகளால் பாதிக்கப்பட்ட சமுகத்துக்கு சமஸ்டி முறையிலான தீர்வை வழங்க ஒடுக்குமுறையாளர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். அது மீண்டும் ஒரு தனி நாட்டுக் கோரிக்கைகளை வலுப்பெற செய்யும் என்பதே ஆட்சியாளர்களின் கருத்தாகும். சமஸ்டி ஆட்சி நீடித்து நிலைபெறும் என சொல்ல முடியாது. இதனால் இனகுழுமங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் நாட்டில் பேராபத்தை கொண்டு வந்து விடும் என்பது ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பாகும். எனவே இலங்கை அரசு தமிழருக்கு என்று சில விசேட அதிகாரங்களை பகிர்வதே நல்லாட்சிக்கு ஆரோக்கியமானதாகும். இன்று தமிழர்கள் அனைத்தையும் இழந்து விட்டனர். பேரம் பேசும் வாய்ப்புகள் எவையும் இல்லை. அத்துடன் இன்று போராட்டங்களில் ஈடுபட்டுள்ள தமிழ் மக்களின் எதிர்கால ஏமாற்றங்களை நல்லாட்சி அரசாங்கம் தவிர்க்க நடவடிக்கை மேற்கொண்டால் எதிர்கால வாழ்வு இலங்கையில் உள்ள இனங்களை ஐக்கியப்படுத்தும். அவ்வாறின்றேல் ஏனைய சமூகங்களும் விரோதம் பாராட்ட வேண்டிய நிலையே ஏற்படும். அது மீண்டும் இலங்கையில் பல்லின சமுகங்களுக்கு இடையே அச்சத்தையும் எதிர்கால இருப்பையும் கேள்விக்குறியாக்கி விடும் என்பதே உண்மை.

இவ்வாறு தமிழ்த் தரப்பு கேட்டு நிற்கும் சம;டிக் கோரிக்கையின் எதிர்கால நகர்வுகள் இவ்வாறிருக்க, தொடர்ந்தும் வாழையடி வாழையாக ஒடுக்கப்பட்டு இனப்படுகொலைகளுக்கு உள்ளாகி பாதிப்படைந்த தமிழ்த் தரப்பினரிடையேயே தமிழ்த் தேசியம் என்ற கருத்தாடலும் காலம் காலமாக வலுப்பெறத் தொடங்கியது. தமிழர்கள் தாம் வாழ்ந்த பூர்வீக நிலத்தில் வேற்றினத்தால் அடிமைகள் போல் நடத்தப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு உணர்வுகள் நசுக்கப்படும் அத்தனை வேளையிலும் தமது வீரிய குரல் கொண்டு தமிழ்த் தேசியம் பற்றி கூறி தமிழர்களை ஒன்றுபடுத்தினர் என்பது எமது போராட்டத் தமிழ்த் தலைமைகள் உட்பட அரசியற் தமிழ்த் தலைமைகள் வரை பேசப்பட்டு வந்து, தற்கால அரசியற் சூழலிலும் பேசப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதே. எனினும் இன்று பலராலும் தமிழ் தேசியம் என்று பேச்சளவில் பேசப்படுகின்றதே தவிர, செயலளவில் இல்லை என்று தான் கூறவேண்டும்.

அந்தவகையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அன்றைய மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அமரர் யோசப்பரராஜசிங்கம், 25.12.2005 அன்று புனித மேரி தேவாலயத்தில் பிரார்த்தனைக்காக சென்ற போது இனம் தெரியாதோரினால் தேவாலயத்திலேயே வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் கிழக்கு பகுதியில் மட்டும் அல்ல இலங்கை தமிழ் மக்கள் அனைவருக்குமே ஒரு தூணாக விளங்கினார். விடுதலை போராட்டத்தையும் ஆதரித்து பேசிய இவருக்கு தேசிய உணர்வே முடிவானது. அந்த வரிசையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ். இவர் ஒரு சட்டத்தரணி அத்தோடு தென் இலங்கை மக்களையும் வடபுல மக்களையும் ஒன்றினைக்கும் செயற்பாடுகளை காய்நகர்த்தி வந்தவர். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோரை தனது வாதத் திறமையால் வாதாடி விடுதலையும் பெற்றுக் கொடுத்தார். தமிழ் தேசியம் பற்றி இவர் பேசாத மேடைகள் இல்லை என்றே குறிப்பிடலாம்.

அதுபோன்றே நீண்ட காலமாக கிட்டத்தட்ட 25 வருடங்களுக்கு மேல் ஊடகத்துறையில் கடமையாற்றி வந்த ஊடகவியலாளர் நடேசன் 2004ம் ஆண்டு 31ம் திகதி மட்டக்களப்பில் தனது வீட்டிலிருந்து வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டார். 20 வருடங்களுக்கு மேல் வீரகேசரி பத்திரிகையில் செய்தியாசிரியராக நெல்லை நடேசன் என்ற பெயரில் எழுதி வந்தார். அது மட்டுமின்றி டீ.டீ.ஊ வானொலி, சக்தி வானொலிக்கும் பல ஊடகங்களுக்கும் தனது இறுதி மூச்சுவரை செய்திகளை வழங்கியிருந்தார். என்பது குறிப்பிடத்தக்கதாகும். மட்டக்களப்பு மட்டுமன்றி இன அழிப்பை அதிகம் கொண்ட தென் தமிழீழ இனப்படுகொலை பற்றிய விபரங்களையும் துல்லியமான முறையில் கரிசனை கொண்டு வழங்கியிருந்தார்.

அடுத்து, ஏப்ரல் 28.2005 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் சிவராம் கடத்திச்செல்லப்பட்டு பாராளுமன்றத்திற்கு அருகில் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்டு இவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டது. கொழும்பு உயர் நீதிமன்றம் 5 ஆண்டுகளுக்குப் பின்னர் வழக்கு ஜுன் 28 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேக நபர் என்று கருதப்படும் பீற்றர் என்று அழைக்கப்படும் ஆறுமுகம் சங்கரராஜா என்று அடையாளம் காணப்பட்டார். இவர் ஒரு தமிழ்போராளி குழுவின் உறுப்பினர் என பொலிசார் அடையாளம் கண்டனர். கொல்லப்பட்ட சிவராம் உள்ளூர், வெளியூர் ஊடகங்களிலும் தமிழ் நெற் இணையத்தள ஆசிரியராகவும் கடமையாற்றினார். இவர் ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதில் தலைசிறந்த வல்லுனராக காணப்பட்டார். இவரது புணைப்பெயர் தராக்கி என்றும் அழைப்பர். பேச்சில் ஆளுமை ஆற்றல் கொண்டவர். தமிழ் தேசியத்திற்காக இவரும் அரும்பெரும் பாடுபட்டார் எனக் கூறுவர்.

மயில்வாகனம் நிமல்ராஜன் இவர் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவர் எனினும் இலங்கையில் நடைபெற்ற யுத்த செய்திகளை துல்லியமான முறையில் உலக நாடுகளுக்கு எடுத்துரைத்தவர். லண்டன் டீ.டீ.ஊ யின் சிறந்த செய்தியாளருமாவார். தமிழ் தேசியம் பேசுவதில் இவரும் ஒரு வல்லுநர் என்றே கூறவர். அத்துணை மாத்திரத்துடன் நின்று விடாமல் இன்றுவரையிலும் 30றகும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களை படுகொலை செய்தவர்கள் யாரென்று தெரிந்தும் தண்டனைகள் வழங்கப்படவுமில்லை. இழக்கப்பட்ட உயிர்களுக்காக நீதி கிடைக்கவுமில்லை. இதுவே இன்று நிலவுகின்ற உண்மைத்தன்மையாகும். நீதியை நீதியாக பார்க்காதவரை நாட்டில் சட்டமியற்றுவது தேவையற்ற ஒன்று என்ற மண்டேலாவின் கூற்றே சாலப் பொருத்தமாகின்றது.

எனவே இன்று தமிழ் மக்களின் வாக்கினைப் பெற்றுக்கொள்ள பல்வேறு கட்சிகள் தமிழ் தேசியம் பேசுவதென்பது இக்காலகட்டத்தில் வேடிக்கைக்குரிய விடயமாகும். எமக்குரிய உரிமைகளை நாம் பாராளுமன்றத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்வதைத் தவிர்த்து, தமிழ் தேசியம், தமிழீழ விடுதலைப்போராட்டம் என்று மீண்டும் வீர வசனங்களைப் பேசிக் கொண்டு உள்நுழையாது தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குரிய பேச்சுக்களையும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியதே தமிழ்த் தலைமைகளின் முன் உள்ள அரசியற் பணியாகும்.


கோப்புப்படம்

**இன்று போராட்டங்களில் ஈடுபட்டுள்ள தமிழ் மக்களின் எதிர் கால ஏமாற்றங்களை நல்லாட்சி அரசாங்கம் தவிர்க்க நடவடிக்கை மேற்கொண்டால் எதிர் கால வாழ்வு இலங்கையில் உள்ள இனங்களை ஐக்கியப்படுத்தும். அவ்வாறின்றேல் ஏனைய சமூகங்களும் விரோதம் பாராட்ட வேண்டிய நிலையே ஏற்படும். அது மீண்டும் இலங்கையில் பல்லின சமுகங்களுக்கு இடையே அச்சத்தையும் எதிர்கால இருப்பையும் கேள்விக் குறியாக்கி விடும் என்பதே உண்மை.**

# மத, இன, மொழிவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்

**சமுக செயற்பாட்டாளரும் வைத்தியருமான நா.பன்னீர்செல்வம் அவர்களுடனான நேர்காணல்**

வயிரமுத்து துசாந்தன்



தாங்கள் சமூகசிந்தனையாளர், மனிதநேய பணிபுரியும் வைத்தியர் என்ற வகையில், நாட்டின் நல்லிணக்கத்தினை சீர்குலைக்கும் சக்திகளாக எவ்வற்றினை அல்லது யாரை பார்க்கின்றீர்கள்?

ஒருநாட்டில் ஜனநாயகமும், நீதியும் உயர்ந்த இடத்தில் இருந்தால் சிறுபான்மை என்ற பிரச்சினை ஏற்படாது. இலங்கை நாட்டின் அரசியல், இனவாத, மதவாத, மொழிவாத அரசியலாகவே இருக்கின்றன. இதனால், எதிர்காலம் என்பது சூனியமான, நம்பிக்கையற்ற சூழலைதான் உருவாக்கும். இந்தநாட்டில் மனித நேய, மனித அபிமானத்திற்கு முன்னுரிமை அளித்து இனிவாத, மொழிவாத, மதவாத என்ற எண்ணப்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைத்து நாம் இலங்கையர்கள் என்ற தேசியவாத சிந்தனையேற்படுகின்ற போது, தீவிரவாத செயற்பாடுகளோ, யுத்தங்களோ இல்லாமல்போகும். ஏப்ரல் 21ல் நடைபெற்ற குண்டுவெடிப்புக்கு அரசியல்வாதிகள்தான் காரணம். இந்த நாட்டில் தேசியம் இல்லாமல் போய்விட்டது. ஜனநாயக ரீதியில் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமைதான் இது இல்லாமல் போனதற்கு காரணம். நாட்டில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமாகவிருந்தால், தூரநோக்குள்ள, அரசியல் சிந்தனை உள்ள அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள் இந்த நாட்டிற்கு தேவை.

நல்லிணக்கத்தினை உருவாக்க எவ்வாறான அரசியல் சிந்தனையாளர்கள் உருவாக்கப்பட வேண்டும்.

குறுகிய சிந்தனைகளையுடன் சிந்திக்காமல் நீண்ட சிந்தனைகளுடன் சிந்திக்ககூடிய அரசியல்வாதிகள் உருவாக வேண்டும். பொருளாதாரம், கல்வி இரண்டிற்கும் பூரணமாக தீர்வுகாண்பதோடு, நீதியென்பதும் உயர்ந்த இடத்தில் இருக்க வேண்டும். அத்தோடு ஜனநாயக விடயங்களை விரும்புகின்ற, நேசிக்கின்ற மதிக்கின்ற சிந்திக்கின்ற புதியவர்கள் உருவாக வேண்டும். அவ்வாறான புதியவர்களால் மாத்திரம்தான் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

இனநல்லுறவு இல்லாமல் செல்வதற்கு காரணம் எவையென கருதுகின்றீர்கள்? தற்போதைய சூழ்நிலை பற்றிய உங்களது கருத்து என்ன?

இனத்தின் நல்லுறவு எனும் வகையில், இச்சம்பவங்கள் மட்டும் காரணமல்ல. வடக்கு, கிழக்கிலே நடைபெற்ற யுத்தத்தின் விளைவுகளினால் பலர் வறுமைக்கோட்டின்கீழ் தள்ளப்பட்டுள்ளனர். இளைஞர்களின் வேலையில்லா திண்டாட்டம், காணிதொடர்பிலான பிரச்சினைகள் என பல பிரச்சினைகள் இருந்து கொண்டே இருக்கின்றன. இப்பிரச்சினைகள் எல்லாம்; ஒருநாள் பூகம்பமாக உருவாக கூடிய சூழலும் உள்ளது. தற்போதைய சூழல் ஒரு சமாதானமான இடைக்கால சாதாரண விடயமாகவே உள்ளது. இச்சமாதானமான சூழல் மக்களுக்கு ஆறுதலான சூழலே தவிர தீர்க்கமான, ஏற்றுக்கொள்ளக்கூடிய சமாதானமான சூழலாக இல்லை.

நல்லுறவை ஏற்படுத்த எவ்வாறான சட்டங்களையும், எவ்வாறான விடயங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும்?

இலங்கையில் மறைமுகமான சூழல் காணப்படுகின்றது. முஸ்லிம்சகோதரர்களுடன் எந்த முரண்பாடுகளும் எமக்கு இல்லை, அவர்களது உரிமைகளை பறிப்பதற்கு நாங்கள் சிந்திக்கவில்லை. இங்கு வளர்க்கப்பட்ட அரசியல் மதவாத அரசியல்தான். கிராமங்கள், நகரங்கள் எல்லா இடங்களிலும் மொழி, இன, மத வாத அரசியலே வளர்க்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக முஸ்லிங்களுக்கென்றொரு அரசியல், தமிழ்மக்களுக்கென்றொரு அரசியல், சிங்கள மக்களுக்கொரு அரசியல் சிந்தனை இருக்கின்றது. ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கென்று எல்லா நீதியும், எல்லாச்சட்டங்களும் இருந்தால் மட்டும் தான், இனங்களுக்கிடையில் நல்லுறவை எதிர்பார்க்க முடியும். அது இல்லாததினால்தான் ஏப்ரல் 21போன்ற பிரச்சினைகளை தற்போதும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஏப்ரல் 21ம் திகதி நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தினை எவ்வகையில் நோக்குகின்றீர்கள்?

ஏப்ரல் 21ம் திகதி நடைபெற்ற சம்பவம் நாட்டின் பொருளாதாரம், எதிர்கால பொருளாதாரம், எதிர்கால பாதுகாப்பு எல்லா விடயங்களையும் சீர்குலைத்த சம்பவமாக பார்க்கின்றேன். முஸ்லிம் மக்களை வெறுக்ககூடிய சூழலில் நாங்கள் இல்லை. அவர்களுடனும் சமாதானமாக சேர்ந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு 10இலட்சத்திற்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்புரிகின்றனர். எண்ணெய் போன்ற நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய வளங்கள் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்துதான் கிடைக்கப்பெறுகின்றன. எல்லா மக்களோடும் இணைந்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதன் மூலமாகதான் எல்லா மக்களும் ஒன்றுபட்ட தேசியத்தின் ஊடாக இந்த நாட்டின் எதிர்காலத்தை சிறப்படைய வைக்க முடியும்.

கடந்த யுத்தத்தின் காரணமாக பலகோடி அமெரிக்க டொலர் பணம் வீணாகி இருக்கின்றது. பொருளாதாரம் அவ்வாறு சிதைக்கப்படும் நேரத்தில் மக்கள் தாக்கங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். இச்சம்பவங்களை படிப்பினையாக கொண்டு எல்லோரும் ஒன்றுபட்ட இலங்கை மக்களாக, நீண்ட நோக்குள்ள, தலைமைத்துவம், நீண்ட அரசியல் சிந்தனையின் ஊடாகத்தான் விடிவு, முடிவு, நம்பிக்கையை உண்டுபண்ண முடியும்.

கல்முனை பிரதேச செயலக தரமுயர்த்தல் தொடர்பில் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

அரசியல் சிந்தனையின் அடிப்படையில் ஒவ்வொரினது கருத்துக்களைச் சொல்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அவ்வாறான கருத்துக்கள் ஒவ்வொருவரையும், நாட்டினையும் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். நாட்டினை நேசிக்ககூடிய சமுகம் தேவை. அவ்வாறிருந்தால் கல்முனை பிரதேச செயலக தரமுயர்த்துதல் சம்பவம் புரிந்துணர்வின் அடிப்படையில் இலகுவில் ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கும் மனிநேய, மனிதஅபிமான பண்பே அவசியம்.

நல்லுறவை ஏற்படுத்துவதில் நாட்டின் தலைமை தொடர்பில் உங்கள் கருத்து என்ன?

பௌத்த தர்மம் சிறந்துவளர்ந்தோங்கிய இலங்கை நாட்டில், மனிதனுடைய வாழ்கையை உயர்ந்த சிந்தனையோடு நோக்கியவர்தான் புத்தபெருமான். ஈக்கும், எறும்புக்கும் கூட பாவம் செய்யாதே எனக்கூறியவர். புத்தபெருமானின் போதனைகளை ஏற்றுக்கொண்டால் இந்த நாடு சிறந்ததொரு நாடாக மாறும். புத்ததர்மம் ஒழுங்காக கடைப்பிடிக்கப்படாமைதான் யுத்தம் நடைபெற்றதற்கும் காரணம். எல்லோருக்கும் மத உரிமை இருக்கின்றது. மதத்திற்கும் அப்பால் மனிதநேயத்திற்கான கதவுகள் திறக்கப்பட வேண்டும். முரண்பாடுகள் இருக்கும் வரை ஜனநாயகமோ, சமாதானமோ கிடைக்காது, கிடைக்க முடியாது. இம்முரண்பாடுகளை தீர்க்க உடன்பட வேண்டும். எவ்வாறு உடன்பட வேண்டும் என்றால் நான் இலங்கையர் என்ற எண்ணப்பாட்டுடன் உடன்பட வேண்டும். அப்படியான அரசியல் தலைவர்கள் இந்த நாட்டில் கிடைத்தால்தான் தூய்டிமான நல்லிணக்கம் ஏற்படும். தீவிரவாதிகள், தீவிரவாத சிந்தனையாளர்கள் நாட்டில் இருப்பார்கள்தான், அவர்களை மனிதநேய பண்புள்ளவர்களாக மாற்றவேண்டும். இதற்கு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முடியும். பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்படாத விடயமல்ல.

# கிழக்கு மாகாண சபையும் தமிழ் தேசிய கூட்டமைப்பும்



கிழக்கு மாகாணத்தின் ஆட்சிக்காலங்கள் நிறைவு பெற்று ஆளுனரின் ஆட்சியின் கீழ் மாகாணசபையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், 2020ல் மாகாணசபை தேர்தல் நடைபெறலாம் என்ற பேச்சுக்களும் மேலெழுந்துள்ளன. ஆட்சியை யார் கைப்பற்றுவது என்றதான போட்டி நிலைமை கிழக்கு மாகாணத்தில் எழுகின்றமை வரலாறு. ஏன்னெனில் மூன்றின மக்கள் வாழக்கின்ற மாகாணசபை என்பதினால் ஆட்சிப்பொறுப்பினைக் கைப்பற்றுவதில் சாவாலாக தமிழ்தேசியகூட்டமைப்புக்கு இருந்து வருகின்றது. இந் நிலையில் கிழக்கு மாகாணம் தொடர்பில் ஆராய்கின்ற போது, கிழக்கு மாகாணம், 2007ம் ஆண்டு தரவுகளின் அடிப்படையில், மொத்தமாக 9996மஅ2 நிலப்பரப்பினையும், 1,460,899 மக்கள் தொகையினையும் கொண்டுள்ளது. இவற்றுள் அம்பாறை மாவட்டம் 4415மஅ2 நிலப்பரப்பையும், 610,719 மக்கள் தொகையையும், மட்டக்களப்பு மாவட்டம் 2855மஅ2 நிலப்பரப்பையும், 515,817 மக்கள் தொகையையும், திருகோணமலை மாவட்டம் 2727மஅ2 நிலப்பரப்பையும், 334,363 மக்கள் தொகையையும் கொண்டுள்ளது.

1987ம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்ததை அடுத்து இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு 1988ம் ஆண்டு ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து, 2006 யூலை 14 இல் மக்கள் விடுதலை முன்னணி கிழக்கு மாகாணத்துக்கெனத் தனியே மாகாணசபை நிறுவ வேண்டும் என இலங்கை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. இவ் வழக்கு விசாரணையை அடுத்து அன்றைய அரசுத்தலைவர் ஜெயவர்தனாவினால் அறிவிக்கப்பட்ட இணைப்பு சட்டவிரோதமானது எனக் கூறி அதனை செல்லுபடியற்றதாக்குவதாக 2006 அக்டோபர் 16 இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனை அடுத்து 2007 ஜனவரி 1 இல் வட கிழக்கு மாகாணசபை வட மாகாண சபை, கிழக்கு மாகாண சபை என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

**முனையூரான்**

கிழக்கு மாகாணசபை தனியாக பிரிக்கப்பட்டதை தொடர்ந்து, கிழக்கு மாகாணத்திற்கான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் தேர்தல் 2008ம் நடாத்தப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்தேசிய கூட்டமைப்பினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சில கட்சிகள் என நாட்டில் செல்வாக்குள்ள கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டன. இதில் ஐக்கிய மக்கள் சுதந்திரகூட்டமைப்பு அம்பாறை மாவட்டத்தில் 08 ஆசனங்களையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 06ஆசனங்களையும், திருகோணமலை மாவட்டத்தில் 04 ஆசனங்களையும் பெற்று மொத்தமாக 18 ஆனங்களுடன், மேலதிக 2ஆசனங்களையும் பெற்று மாகாணசபையின் ஆட்சியினை கைப்பற்றியது. இதில் ஐக்கிய தேசிய கட்சி அம்பாறை மாவட்டத்தில் 06ஆசனங்களையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 04 ஆசனங்களையும், திருகோணமலை மாவட்டத்தில் 05ஆசனங்களையும் பெற்று மொத்தமாக 15ஆசனங்களை மாகாணத்தில் பெற்றுக்கொண்டது. மக்கள் விடுதலை முன்னணி ஒரு ஆசனத்தினை திருகோணமலையிலும், தமிழ்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சியொன்று மட்டக்களப்பில் ஒரு ஆசனத்தினையும் பெற்றுக்கொண்டது. இதனால் ஆட்சியை பொறுப்பேற்பதில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு பிரச்சினைகள் இருக்கவில்லை. இத்தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பு தன்னை முழுமையாக பிரதிநித்துவப்படுத்தி இறங்கவில்லை. இதற்கு காரணம் தமிழ்தேசிய கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவிருந்தது. இதனால் தேர்தலில் களமிறங்கவில்லை.

கிழக்கு மாகாண முதல் முதலமைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான ஆட்சி கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த சூழலில், மாகாணசபைக்கான ஆயூட்காலம் நிறைவுபெறதா நிலையிலும், 2012ம் ஆண்டு கிழக்குமாகாணசபை கலைக்கப்பட்டு அதே ஆண்டு தேர்தல் இடம்பெற்றது. இத்தேர்தல் 2008ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலைவிட முக்கியமான தேர்தலாக பார்க்கப்பட்டது. இதனால் போட்டிகளும் அதிகரித்திருந்தன. இதற்கு காரணம் கிழக்கு மாகாணத்திலே தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் வாழ்கின்றபோதிலும், அதிகளவாக தமிழர்களும் வாழ்கின்றனர். இதனால் தமிழ்மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, தமிழ் மக்கள் அதிகம் ஆதரிக்கின்ற தமிழ்தேசிய கூட்டமைப்பு இத்தேர்தலில் போட்டியிட்டது.

முப்பத்தேழு பேரினை தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட தேர்தலில், அம்பாறை மாவட்டத்தில் 05 ஆசனங்களையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 04ஆசனங்களையும், திருகோணமலை மாவட்டத்தில் 03ஆசனங்களுமாக, 12ஆசனங்களுடன், மேலதிகமாக இரண்டு ஆசனங்களுடன் மொத்தமாக 14ஆசனங்களையும் பெற்று அதிகூடிய ஆசனங்களை பெற்ற கட்சியாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தெரிவு செய்யப்பட்டது. தமிழ்தேசிய கூட்டமைப்பு அம்பாறை மாவட்டத்தில் 02 ஆசனங்களையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 06ஆசனங்களையும், திருகோணமலை மாவட்டத்தில் 03 ஆசனங்களுமாக மொத்தம் 11ஆசனங்களைப்பெற்று இரண்டாவது பெரும்பான்மை கட்சி என்ற ஸ்தானத்தினை பெற்றுக்கொண்டது. ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தில் 04ஆசனங்களையும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு ஆசனத்தினையும், திருகோணமலை மாவட்டத்தில் இரு ஆசனங்களையும் பெற்று மூன்றாவது பெரும்பான்மை என்ற இடத்தினை வகித்தது. மாகாணத்தில் ஐக்கிய தேசிய கட்சி 04 ஆசனங்களையும், தேசிய சுதந்திர முன்னணி ஒரு ஆசனத்தினையும் பெற்றுக்கொண்டது. இவ்வாறான நிலையில் எந்தவொரு கட்சியும் தனித்து நின்று ஆட்சி செய்ய முடியாத நிலை கிழக்கு மாகாண சபைக்கு ஏற்பட்டது. இதனால் ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மாகாணத்தில் ஆட்சி அதிகாரத்தினை நிலைநிறுத்திக்கொண்டது. இவ்வாட்சி நடவடிக்கைகள் 2015ம் ஆண்டுவரை நீடித்தது. 2015ம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் பொறுப்பேற்று,

**மீண்டும் முதலமைச்சர் பதவியை தவறவிட்டு இன்னும் ஐந்து வருடங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு கழிக்க நினைத்தால் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு செய்யும் மிகவும் துரோகச்செயலாகவே அமையும். தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மிகவும் சவாலான தேர்தலாகவே கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அமையவிருக்கின்ற நிலையில், அனைத்து மக்களும் விரும்புகின்ற முதலமைச்சர் வேட்பாளரை வெளிப்படையாக தமிழ் தேசிய கூட்டமைப்பு அறிவித்து தேர்தலில் இறங்க வேண்டும்.**

ஐக்கியமக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு, ஐக்கியதேசிய கட்சி போன்றன இணைந்து நாட்டினை ஆட்சி செய்தனர். இதனால் கிழக்கு மாகாணசபையின் ஆட்சியிலும் மாற்றம் ஏற்பட்டன. தமிழ்தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளைச் சேர்ந்த 27பேர்கள் ஒன்றிணைந்து கிழக்கு மாகாணத்தின் ஆட்சி, அதிகாரித்தினை பெற்றுக்கொண்டனர். இதன் முதலமைச்சராக மட்டக்களப்பு மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஹாபிஸ் நசீர் அஹமட் பதவி வகித்து வருகின்றார். அத்தோடு தமிழ்தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இருவருக்கு அமைச்சுப்பதவியும், ஒருவருக்கு பிரதிதவிசாளர் பதவியும் வழங்கப்பட்டிருந்தன.

கிழக்கு மாகாணசபை தேர்தலும், தமிழ் மக்களுக்கு முக்கியமானதாகவும், போட்டிமிக்கதாகவும் பார்க்கப்படுகின்றது. இவ்வாறான தருணத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு அரசியலில் இறுதிப்பயணத்தில் நின்றுகொண்டிருப்பதாகவும், தமிழ்தேசிய கூட்டமைப்பு செல்வாக்கு பெறும் தொகுதிகளில் இனிவரும் தேர்தலில் வேறுகட்சிகள் அமோக வெற்றியீட்டும் எனவும், அரசியல்வாதிகளால் கூறப்பட்டு வருகின்றன. இவ்வாறான விடயங்கள் ஒருபக்கமாக இருந்தாலும் கிழக்கு மாகாணத்தினை தனியொரு கட்சி, ஆட்சி அமைப்பதென்பது முடியாததொன்றாகவே அமையும். இதற்கு காரணம் மாகாணத்தின் சனத்தொகை விகிதங்களுக்கிடையிலான வித்தியாசம் மிகக்குறைவாகவே இருக்கின்றன. இன்னோர்பக்கம் மாகாணத்தில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, தமிழ்தேசிய கூட்டமைப்பு, ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி போன்றன செல்வாக்கு பெற்ற கட்சிகளாவே இருக்கின்றன. ஆனாலும் ஐக்கிய சுதந்திர கூட்டமைப்பு கடந்த தேர்தலில் 14ஆசனங்களைப் பெற்றிருந்தாலும், இனிவரும் தேர்தலில் குறைவான ஆசனங்களை பெறுவதற்கு வாய்ப்பிருக்கின்றது. இதற்கு காரணம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் உள்ள சிலர், கூட்டு எதிரணியினரின் பக்கமாக இருப்பதினால் இவ்வாறனவர்கள் வேறு, கூட்டமைப்பில் இருந்து பிரிந்து அதற்குள் உள்ள வேறு கட்சிகளில் தேர்தலில் களமிறங்க வாய்புள்ளது. நாட்டின் தற்போதைய ஆளும்கட்சியாக ஐக்கியதேசிய கட்சியும் இருக்கின்றமையினால், ஐக்கிய தேசிய கட்சியின் செல்வாக்கு மாகாணத்தில் அதிகரிக்கலாம் என்றதான கருத்தும் இருக்கின்றன. அதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பும் அதிகரிப்பதற்கான ஒரு சில சந்தர்ப்பங்களும் இல்லாமல் இல்லை எனவும் அரசியல் விமசகர்கள் கூறுகின்றனர். இவ்வாறு இருகட்சிகளும் கடந்த காலங்களில் பெற்ற ஆசனங்களை விட அதிகமான ஆசனங்களை பெற்றால்தான் இருகட்சிகளும் நாட்டினது ஆளும் கட்சி என்றவகையில், கிழக்கு மாகாணத்திலும் இரு கட்சிகளும் இணைந்து ஆளும் கட்சிகளாக மாறி, ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்ற முடியும்.

ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை பொறுத்தவரை கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மை இடத்தினை பெறுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. எனினும் கடந்த தேர்தல்களின் அனுபவங்களின் அடிப்படையில், ஐக்கிய மக்கள் சுதந்திரகூட்டமைப்புடனோ, தமிழ்தேசிய கூட்டமைப்புடனோ இணைந்து ஆட்சி அமைப்பதற்கான பங்களிப்பை வழங்கக்கூடிய கட்சியாக அமைய சந்தர்ப்பம் இருக்கின்றது. இதனால் கடந்த காலங்களைப் போன்று தமக்கு முதலமைச்சர் பதவியினையோ அல்லது வேறு அமைச்சுப்பதவிகளையோ வழங்கவேண்டும். என்ற உடன்பாட்டில் இணைவதற்கு சாத்தியம் இருக்கின்றது.

தமிழ்தேசிய கூட்டமைப்பு கடந்த தேர்தலில் 2ம் ஸ்தானத்தினைப் பெற்றுக்கொண்டது, என்ற வகையில், தமிழ்தேசிய கூட்டமைப்பு மாகாணத்தில் தனித்துநின்று ஆட்சி அமைக்கமுடியாத நிலையே இருக்கின்றது. இன்னொரு கட்சியின் ஆதரவினைக்கொண்டே ஆட்சி அமைப்பதற்கான சந்தர்ப்பம் இருக்கின்றது. அவ்வாறு ஆட்சி அமைக்கின்ற சந்தரப்பத்தில் மாகாணத்தினது முதலமைச்சரை தமிழ்தேசிய கூட்டமைப்பு பெறுவதற்கு வாய்ப்பிருக்கின்றன. தமிழ்தேசிய கூட்டமைப்பு தனித்துநின்று ஆட்சியமைப்பதாகவிருந்தால் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள முஸ்லிம், சிங்களம் ஆகிய இனத்தினைச் சேர்ந்த அந்த சமூகத்திலே செல்வாக்கு உள்ளவர்களை உள்வாங்க வேண்டும். அவ்வாறு அவர்கள் உள்வருவதாகவிருந்தால், அவர்கள் அமைச்சுப்பொறுப்புக்களை கேட்பதற்கு சந்தர்ப்பம் உள்ளது. அதேவேளை அங்குள்ள மக்கள், தமிழ்தேசிய கூட்டமைப்பினை எவ்வகையில் ஆதரிப்பர் என்ற வினாவும் இருக்கின்றது. இந்நிலையில் மாகாணசபையினை தனித்துநின்று ஆட்சி செய்வதென்பது கடினமானதொன்றே.

கடந்த தேர்தலிலே தமிழ்தேசிய கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு இலட்சத்து நான்காயிரத்தி ஆறுநூற்றி எண்பத்தி இரண்டு (104,682) வாக்குகளையும், அம்பாறை மாவட்டத்தில்; நாற்பத்தி நான்காயிரத்தி எழுநூற்றி நாற்பத்தொன்பது (44,749) வாக்குகளையும், திருகோணமலை மாவட்டத்தில் நாற்பத்தி நான்காயிரத்தி முந்நூற்றி தொன்னிற்றி ஆறு (44,396) வாக்குகளையும் பெற்று மொத்தமாக மாகாணத்தில் ஒரு இலட்சத்து தொண்ணிற்றி மூவாயிரத்து எண்ணூற்றி இருபத்தேழு (193,827) வாக்களையே பெற்றுக்கொண்டது. மாகாணத்தில் முதலிடத்தினைப் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு இரண்டு இலட்சத்து நாற்பத்தி நான்கு (200,044) வாக்குகளை பெற்றிருந்தது. இதனடிப்படையில் ஆறாயிரத்தி இருநூற்றி பதினேழு (6217) வாக்குகள் வித்தியாசத்திலே கடந்த தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பு இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டது. அவ்வாக்குகளை தமிழ்தேசிய கூட்டமைப்பு பெற்றிருந்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பெற்ற ஆசனங்களான 14ஆசனங்களை தமிழ்தேசிய கூட்டமைப்பு பெற்றிருக்கும். இனிவரும் தேர்தலில் அவ்வாசனத்தினை அல்லது அதைவிட இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆசனங்களை பெறுவதற்கு தமிழ்தேசிய கூட்டமைப்பு முயற்சிக்கலாம். அதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றன. இறுதியாகவிருந்த தமிழ்தேசிய கூட்டமைப்பின் அங்கத்தவர்களை தவிர்த்து, வேறு கட்சிகளில் போட்டியிட்டு வெற்றியீட்டிய இன்னும் மூன்று தமிழர்கள் மாகாணசபையின் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். இவ்வகையில் பார்க்கின்ற போது 17க்கு மேற்;பட்ட ஆசனங்களை தமிழ்தேசிய கூட்டமைப்பு பெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. கடந்த காலத்திலும் கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைப்பதில் இழுபறி நிலையேற்பட்டபோது, தமிழ் அங்கத்தவர்கள் தாமும் தமிழ்தேசிய கூட்டமைப்புடன் இணைவதாக குறிப்பிட்டிருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு அதற்கு இசைவு கொள்ளவில்லை. இவ்வாறான நிலைகளில் மாகாணத்தில் 17ஆசனங்களை பெறுவதென்பது, எவ்வகையில் சாத்தியமாகும் என்பது உயர் தலைமைகள் தெரிவு செய்யும், வேட்பாளர்கள் தெரிவிலே தங்கியிருக்கின்றது.

தமக்கு தெரிந்தவர்கள், தமக்கு பின்னால் வருகின்றவர்கள் என்ற முகஸ்துதியின் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறுமாயின் தமிழ்தேசிய கூட்டமைப்பு ஏற்கனவே பெற்ற ஆசனங்களையும், மீண்டும் இழக்கும் நிலைகூட ஏற்படலாம். மக்களின் அங்கீகராத்துடன், மக்கள் செல்வாக்கு வைத்துள்ளவர்களை இனங்கண்டு அவர்களை வேட்பாளர்களாக தெரிவு செய்யும் பட்சத்திலேயே தமிழ்தேசிய கூட்டமைப்பின் ஆசனம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. கடந்த காலங்களிலும் தமிழ்தேசிய கூட்டமைப்பு தொடர்பில் சில விமர்சனங்களும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. மாலைக்கும், கௌரவத்திற்கும் ஆசை கொள்பவர்கள் உள்வாங்கப்பட்டால் கூட்டமைப்பின் வாக்கு குறைவடைய சந்தர்ப்பம் ஏற்படும். பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பிலும் பேசப்படுகின்ற சூழலும் இருக்கின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து நிற்கின்ற சில கட்சிகளும் மாகாணதேர்தலில் களமிறங்க அதிக வாய்ப்புள்ளது. இதனாலும் வாக்குகள் பிரிவதற்கும் அதிக சந்தர்ப்பம் உள்ளது. எல்லோரையும் ஒன்றிணைத்து செயற்பட்டால் வாக்கு வங்கியை அதிகரிப்பதற்கு வழியேற்படும். தமிழ் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைக்கப்படுமா? என்ற வினாவும் இருக்கின்றது.

போட்டிமிக்க, சவால்மிக்க தேர்தலாகவும் அமையவுள்ளமையினால் அதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டியது தமிழ்தேசிய கூட்டமைப்பின் கடமையாகும்.



# இலக்கை நோக்கிய பயணத்தில் ஒற்றுமை காண வேண்டிய தமிழ் பேசும் சமூகங்கள்

இலங்கையின் வடக்கு கிழக்கு வாழ் மக்கள் மாத்திரமன்றி நாட்டில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்களாகிய முஸ்லிம்களும் தமிழர்களும் ஒற்றுமையுடன் செயற்படாவிட்டால் இலக்கை நோக்கிய பயணத்தினை மேற்கொள்ள முடியாது என்பது தெரிந்திருந்தும் அவ்வப்போது புல்லுருவிகள் போல சிலர் வெளிக்கிளம்புவதும் இரண்டு சமூகங்களுக்கிடையே பூசல்களை ஏற்படுத்தி பேரிவாதிகளின் துணையுடன் ஒரு சமூகத்தை ஓரங்கட்டி மற்றொரு சமூகம் வாழலாம் என்கிற நப்பாசைகள் அண்மைய காலங்களில் ஏற்பட்டுவருவதைப் பார்க்கின்றபோது நடுநிலைவாதிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

பல்லின மக்கள் வாழுகின்ற பூமி. இருமொழியில் அழகுணர்வுடன், ஒற்றுமையுடன் ஓங்கி திருநாட்டை பொழிவுக்குள்ளாக்கிய மக்கள் ஒருமித்து வாழுகின்ற பூமி. இன ஒற்றுமை, நாட்டுப்பற்று, அன்புடன் உபசரிப்பு, எல்லோருக்குள்ளும் எல்லோரும் வாழுகின்ற பண்பு போன்ற பல்வேறு விடயங்களில் ஒருமித்து வாழவேண்டிய சமூகங்களை பிரித்தாள நினைத்து அரசியல்செய்கின்றவர்களை இனங்காணவேண்டியதும் அவசியமான ஒன்றாகும். குறிப்பாக கல்முனையை எடுத்துக்கொண்டால் சிறுசிறு உள்வீட்டுப் பிரச்சினைகள் போன்று காணப்பட்ட விடயத்தை ஊதிப்பெருப்பித்தவர்கள் யார் என்பதை நீங்கள் அறிவீர்கள். இன்று அதே பேரினவாதம் நாட்டின் பல்வேறு இடங்களில் அதன் கோர முகத்தைக் காண்பித்திருக்கிறது. ஒரு கட்டத்தில் உதவி செய்கிறேன் என்று கூறிவிட்டு இன்னுமொரு சந்தர்ப்பத்தில் ஏகாதிவாதிகளாக மாறி விடுகின்றனர். பாவம் அந்த அரசியல்வாதிகள் இப்போது கல்முனையில் ஏற்பட்ட ஒற்றுமை போல் ஏன் செயற்படவில்லை.

அண்மையில் ரெலோ அமைப்பின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி என் ஸ்ரீகாந்த விடுத்திருந்த அறிக்கையொன்றில் கன்னியா வெந்நீருற்றுப் பிரதேச விடயத்தில் பேரினவாத இனவெறி தனது, கோர முகத்தைக் காட்டியிருப்பதாகக் கூறியிருக்கின்றார். மேலும் அவர் தெரிவிக்கையில், தென்கையிலை ஆதீனம் அகத்தியர் அடிகள் மீதும் கன்னியா வெந்நீரூற்றுக் காணியின் உரிமையாளரான பெண் ஒருவர் மீதும் மேற்கொள்ளப்பட்ட கீழ்த்தரமான தாக்குதல் மூலம் இந்த இனவெறியின் மீண்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இந்த வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தி சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட படை தவறியிருக்கின்றது. மாறாக அங்கு திரண்டு வந்திருந்த தமிழ் மக்கள் மீது அடக்குமுறை கலந்த அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. பாரபட்சமின்றி செயற்பட்டிருக்கிறார்கள் இவற்றுக்கெல்லாம் மூல காரணம் நல்லாட்சி அரசாங்கத்தின் அணுகுமுறை. தொல்லியல் திணைக்களம் பக்கச்சார்பாகவே நடந்துகொள்வதாக தெரியவருகிறது.

ஆயிரம் விகாரைகளை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமைக்கப் போவதாக கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் பகிரங்கமாக பிரகடனம் செய்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமை தாங்கும் நல்லாட்சி அரசாங்கமே கன்னியா பிரச்சினைக்குப் பொறுப்பேற்க வேண்டும். இதே வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவில்லை என்றால் நான் இன்று பிரதமராக உங்கள் முன் நின்று கொண்டிருக்க முடியாது என்று சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலை நகரில் மனந்திறந்து பேசிய ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு கன்னியா பிரச்சினையில் தமிழ் மக்களின் உரிமையை நிலைநாட்டுவதோடு உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக எடுத்தாக வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் திருகோணமலை மாவட்டத்தில் தமது அடிப்படை உரிமைகளுக்கு தமிழ் மக்கள் போராட வேண்டியுள்ள நிலைமையில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்துவைக்க கூட்டமைப்பு தவறினால் அதன் நாட்கள் எண்ணப்படும் நிலைமை தவிர்க்கப்பட முடியாதது என்பதை சம்பந்தப்பட்ட சகலரும் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும். இத்தனை காலமும் எமது இனத்தின் விடுதலை நோக்கிய பயணத்தில் இந்திய துணைக் கண்டத்தில் வாழும் எட்டுகோடி தமிழர்களின் ஆதரவையே நாம் தொடர்ந்து நாடி வந்திருக்கின்றோம். ஆனால், தமிழ் இனத்தின் வரலாற்றையும் இருப்பையும் வாழ்வையும் சிதைக்கச் செயற்படும்; பேரினவாதம் இந்துக் கோவில்களையும் வரலாற்றுச் சின்னங்களையும் தொடர்ந்து குறிவைக்கப் போகிறது என்றால் இந்தத் திட்டத்தைத் தகர்த்தெறிய இந்திய நாட்டின் நூறு கோடிக்கு மேற்பட்ட இந்துக்களின் நேரடித் தலையீட்டை நாம் பகிரங்கமாக கோர வேண்டியிருக்கும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

எனவேதான் தனது கோரமுகத்தை சந்தர்ப்பங்கள் வருகின்றபோது காண்பித்து இலங்கையில் வாழ்கின்ற இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை சீர்குலைப்பதற்கென்றே ஒரு கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கிறது. இதற்குள் ஒருசில தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஒத்து ஊதுவதனால்தான் இந்நிலை ஏற்படுகின்;றதோ எனவும் எண்ணத் தோன்றுவதாக நமது ஊடக நண்பர் ஒருவர் தெரிவித்தார். அதேவேளை ஒருசில நாட்களுக்கு முன்னர் அக்கரைப்பற்றில் இடம்பெற்ற ஒரு பகிரங்க நிகழ்வின்போது தேசிய காங்கிரஸின் முன்னாள் முக்கியஸ்தரான சட்டத்தரணி பஹீஜ் அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் இருப்பு அவர்கள் எதிர்நோக்கியிருக்கியிருக்கும் அபாயகரமான தோற்றப்பட்டினை பற்றி விபரித்திருந்தார். அதாவது, ஒரு அபாயகரமான சூழ்நிலையை, முஸ்லிம் சமூகம் இன்று எதிர் நோக்கியிருக்கிறது. முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காக குரல் கொடுக்கும் அனைவரும் சஹ்ரான்வாதிகளாக குறிவைக்கப்பட்டு, அவர்கள் அடையாளப்படுத்துகின்ற ஒரு அபாயகரமான சூழ்நிலையை முஸ்லிம் சமூகம் இன்று எதிர் நோக்கியிருக்கிறது.

இன்று முஸ்லிம் சமூகத்தினுடைய மத கலாசார விடயங்கள், பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு, காணி உரிமைகள், நிர்வாக அதிகார எல்லைகள் தொடர்பில் பேசுகின்ற அனைவரும் குறிவைக்கப்பட்டு எல்லா வகையிலும் முஸ்லிம்கள் எதிரியாக சித்திரிக்கப்படுகின்ற ஒரு அபாயகரமான சூழ்நிலையை முஸ்லிம் சமூகம் தற்போது இலங்கையில் எதிர்கொண்டுள்ளது. தமிழ் சமூகத்தின் உரிமைப் போராட்டத்திற்காக தமிழ் இயக்கங்கள் ஆயுதமேந்தி போராடிய போது, தமிழ் சமூகம் பொது எதிரிகளாகப் பார்க்கப்பட்டு பல்வேறுபட்ட சொல்லொணா துயரங்களை அனுபவித்திருந்தது. இன்று அந்த நிலை மாறி முஸ்லிம் சமூகத்தை குறிவைத்து பொது எதிரிகளாகப் பார்க்கப்படும் அபாயம் தோற்றம்பெற்று வருகின்றது.

**தந்திமகன்**

இலங்கையுடைய எதிர்காலம் இன்று கேள்விக்குறியாக உள்ளது. சர்வதேச சக்திகள் மூலம் தீர்மானிக்கப்படவிருக்கிற் ஒரு சூழ்நிலையில் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் பொதுஎதிரியாக சித்தரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எதிர்வரும் காலம் தேர்தல் காலமாகும். இத்தேர்தல்களில் முஸ்லிம்களின் அரசியல் பலம் பரீட்சிக்கப்படவிருக்கின்றது. நாங்கள் சுயாதீனமாக உரிமைகள் சார்ந்து எங்களுடைய முடிவுகளை எடுக்கப் போகின்றோமா? அல்லது வன்முறைகளுக்கும், அடக்கு முறைகளுக்கும் பயந்து நாங்கள் எங்களுடைய முடிவுகளை எடுக்கப் போகின்றோமா? என்ற கேள்வி இருக்கின்றது என்கிற விடயங்களையும் முஸ்லிம் சமூகம் தீர்மானம் எடுக்க வேண்டியிருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இப்போது கல்முனை விடயத்தில்கூட ஒரு மாங்காடய் பறிக்கப்போய் பல மாங்காய்களைப் பறிக்கும் நிலைக்குள் இப்போது கல்முனை தள்ளப்பட்டுள்ளது. கல்முனையைப் பிரிக்கின்றபோது சாய்ந்தமருதுக்கும், மருதமுனைக்கும் பிரதேச செயலங்கள் வழங்கப்படும் என்கிற உறுதிமொழிகளும் அப்பிராந்தியத்தில் அரசியல்வாதிகளால் கூறப்பட்டு வருகின்றது. இந்த விடயம்தொடர்பாக கல்முனையின் மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் குறிப்பிடுகின்றபோது கல்முனை வடக்கு தமிழ் மக்களுக்கான உப பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுகின்றபோது மருதமுனையை மையப்படுத்தி தனியான பிரதேச செயலகம் ஒன்று உருவாக்கப்படும். கல்முனை வாழ் தமிழ் சகோதரர்கள் கடந்த முப்பது வருடங்களாக தமது உப பிரதேச செயலகத்தை அனைத்து அதிகாரங்களும் கொண்டதாக தரமுயர்த்தித் தருமாறு போராடி வருகின்றனர். அதேவேளை அவர்கள் கோருவது போன்று தற்போதுள்ள நிலையிலேயே அச்செயலகம் தரமுயர்த்தப்பட்டால் தமக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்பதனால் முஸ்லிம்களாகிய நாம் எதிர்த்து வருகின்றோம்.

எவ்வாறாயினும் தமிழ் மக்களின் அண்மைய உண்ணாவிரத போராட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கின்ற அரசியல் சூழ்நிலையில் எவ்வாறேனும் அவர்களுக்கான பிரதேச செயலகத்தை தரமுயர்த்திக் கொடுத்தாக வேண்டும் என்கின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. தற்போதிருக்கின்றது போல் கல்முனையை இரண்டாகப் பிரித்தால் முஸ்லிம்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதனால் எமது தரப்பில் முன்வைக்கப்பட்ட தீர்வாக கல்முனையை மூன்றாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் முன்னிலையில் தமிழ், முஸ்லீம் தலைவர்கள் நடாத்திய பேச்சுவார்த்தையில் இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டு, அதன்படி எல்லை நிர்ணயம் செய்வதற்கான ஏற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை வடக்கு தமிழ் உப செயலகத்தை தரமுயர்த்துகின்றபோது எமது மருதமுனையை மையப்படுத்தி ஒரு செயலகம் உருவாக்கித்தரப்பட வேண்டும் என்று நாங்கள் கோரிகையை முன்வைப் போம் என்று நமது ஊர்ப்பிரமுகர்களை ஒன்றுகூட்டி கலந்துரையாடியபோது, நம்மவர்களே அது சாத்தியமற்றது, வெறும் கனவு என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் எமது விடாப்பிடியான அழுத்தம் காரணமாக அது இன்று சாத்தியப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம் அடுத்த இரண்டு மாதங்களில் மருதமுனை, பெரிய நீலாவணை மற்றும் நற்பிட்டிமுனை ஆகிய மூன்று முஸ்லிம் பகுதிகளையும் உள்ளடக்கியதாக ஒரு தனியான பிரதேச செயலகம் உருவாக்கப்படும் என்பதுடன் அதையொட்டியதாக எதிர்காலத்தில் இப்பிரதேசத்திற்கு ஓர் உள்ளூராட்சி சபையும் உருவாக்கப்படும் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன். உரிய தருணத்தில் நாம் மேற்கொண்ட சாதுர்யமான முயற்சியினால் மருதமுனை மக்களுக்கு இந்த வெற்றி கிடைத்திருக்கிறது என்று முதல்வர் ஏ.எம்.றகீப் குறிப்பிட்டார்.

எனவே, சாத்தியப்பாடுகள் பற்றிதெரிந்து கொண்டு போராட்டங்களை மொழிரீதியாக ஒற்றுமையுடன் செயற்படுகின்றபோது இவ்வாறான விடங்கள் ஏற்படுவது தவிர்க்கப்படும். ஆனால் இன்று பேரினவாதிகளுடன் கைகோர்த்து ஒரு சமூகத்தை இழக்கச் செய்ய முடியாது. அந்தவகையில் இனிமேலாவது இனரீதியான பிளவுகள், மொழிரீதியான பிளவுகள், சந்தேகப் பார்வைகளை விட்டுவிட்டு மொழிரீதியான ஒற்றுமைக்குள் அரசியல்தலைவர்கள், சமூகத்தலைவர்கள் ஒற்றுமைப்பட்ட சமூகத்தைக் கட்டியெழுப்பி எதிர்காலத்தில் ஒற்றுமையுடன் வாழவேண்டிய தலைமுறைகளை உருவாக்க முனைவதற்கு உதவிசெய்வதற்கு தங்களை உசார்படுத்துக்கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

# இன ஐக்கியத்தை சீர்லைப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை அவசியம்

இலங்கை ஒரு ஜனநாயக கட்டமைப்பைக் கொண்ட நாடாகும். இங்கு பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம், பேர்கர் மற்றும் மலே இனத்தவர்களைக் கொண்ட பல்லின, பல்சமுக மக்கள் வாழும் இந்த நாட்டினை காவு கொண்டிருந்த சுமார் மூன்று தஸாப்தகால யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் மக்கள் அமைதியான சுவாசக் காற்றினை சுவாசிப்பதற்கான காலங்கள் கணிந்தாலும் அதனை அடைய முடியாதவாறு ஒருசில தீய குழுக்கள் முயற்சித்து வருகின்றமை பாரியதொரு பிரச்சினையாக இன்று உருவெடுத்து சமுகத்தில் ஒரு வகையான அச்ச நிலைமைகளை உண்டாக்கி வருகின்றது.

பௌத்த மதத்தினை பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கையில் பல்லின சமுகங்கள் வாழுகின்ற வேளையில் ஒருசில இனவாதக் கொள்கைகளைக் கொண்ட தரப்பினர் தாம் பெரும்பான்மை என்ற அகர்வத்தால் சிறுபான்மைச் சமுகங்கள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு அவர்களின் ஜனநாயக உரிமைகளையும், சலுகைகளையும் வழங்க மறுத்து அவற்றை தாம் தட்டிப்பறித்து சிறுபான்மைச் சமுகங்களை அழிக்கத் துடிக்கும் நிலைமைகள் இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான கலாந்தொட்டு இன்று வரை இருந்து வருகின்றது.

இந்த நிலைமைகளினால் இலங்கையில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பிரிவினைக் கருத்துக்கள் தோற்றம் பெற்று அது காலப்போக்கில் சமுகங்களுக்கிடையில் பாரிய பின்விளைவுகளையும், சமுக, கலாசார சிக்கள்களையும் தோற்றுவித்தது மட்டுமல்லாது ஒரு பாரிய யுத்தத்தின் விளிம்புக்கு இட்டுச் சென்ற விடயத்தினை யாரும் மறந்து விடமுடியாது இவ்வாறான மற்றொரு கைங்கரியத்திற்கான செயற்பாட்;டை கடந்த ஏப்ரல் 21ஆம் திகதிய தீவிரவாதத் தாக்குதலை காரணமாக வைத்து மீண்டும் அரங்கேற்றி சிறுபான்மை மக்களை ஏதாவது ஒரு வகையில் ஒடுக்க முனைகின்றனர்.

மேற்படி நிலைமைகளுக்கு வித்திட்ட விடயங்களில் இலங்கையின் அரசியல் யாப்பில் காலத்திற்கு காலம் பெரும்பான்மை மக்களுக்குச் சாதகமாகக் கொண்ட அரசியல் மாற்ற விடயங்களைக் குறிப்பிடலாம். இந்த அரசியல் யாப்பு மாற்றங்கள் சிறுபான்மை மக்களாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை வெகுவாகவும், நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிப்புக்களுக்கு உள்ளாக்கின.

இந்தப் பாதிப்புக்களின் ஒரு அங்கமாகவே வடகிழக்கில் தமிழ் இளைஞர்கள் அரசுக்கும், அரச படைகளுக்கும் எதிராக ஆயுதம் ஏந்திப் போராட வழிவகுத்தது. இந்தப் போராட்டங்கள் இலங்கையில் பல உயிர்களைக் காவு கொள்ளவும், பல ஆயிரக் கணக்கானவர்களை ஊணமுற்றவர்களாகவும், பல பெண்களை விதவைகளாக்கியதுடன் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளின் வாழ்வில் அநாதைகள் என்ற இருண்ட யுகத்தைத் தோற்றுவித்ததுடன் இன்னும் பல ஆயிரக் கணக்கானவர்களை தமது இருப்பிடங்களை விட்டு அகதிகளாகவும், நிம்மதியற்றவர்களாகவும் ஆக்கிய வரலாறுகளே அதிகம் எனலாம்.

**சத்தார் எம் ஜாவித்**

மேற்படி யுத்தமானது இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களில்கூட பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி விட்டது. ஒருசில நாடுகள் உள்நாட்டு யுத்தம் இடம் பெற்றதால் அதன் மூலம் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தை வைத்து தமது உதவிகளை நிறுத்தியதுடன் பொருளாதார சலுகைகளைக் கூட நிறுத்தும் துர்ப்பாக்கிய நிலைமைகள் அப்போது காணப்பட்டன. இந்த தாக்கங்கள் இலங்கை மக்களின் வாழ்வாதாரமும், வாழ்க்கைத்தரமும் இழிவு நிலைக்கு செல்ல வழி வகுத்தது எனலாம். இச்செயயற்பாடுகள் காரணமாக இலங்கையில் பண வீக்கம் பாரியளவில் அதிகரித்து பொருட்களின் பொது விலை மட்டங்களில் தாக்கத்தினை ஏற்படுத்திய தன் பயனாக மக்களின் வாழ்வாதாரத்திலும்கூட பின்னடைவுக்கான வழியை நெரடியாக ஏற்படுத்தி விட்டது.

இவ்வாறானதொரு துர்ப்பாக்கிய நிலையில் இலங்கையின் பல தஸாப்தகால யுத்தக் கோரம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் ஏதோ ஒரு விதத்தில் கடந்த 2099ஆம் ஆண்டு மே மாதம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டதுடன் இலங்கையில் பயங்கரவாதம் என்ற எண்ணக்கரு இல்லாது ஒழிக்கப்பட்டு யுத்தத்தில் ஈடுபட்ட பலர் அரசினால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு இன்று சமுக மயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் இலங்கையைப் பொருத்த வரையில் ஒரு மைல்கல் என்றும் குறிப்பிடலாம். இந்த விடயத்தினை சர்வதேச சமுகங்கள்கூட பாராட்டியிருந்தன. காரணம் யுத்தம் இடம் பெற்ற காலத்தில் ஒவ்வொரு கணப்பொழுதிலும் ஒவ்வொரு குடிமகனும் தமது உயிர்களை கையில் பிடித்தவர்களாக பாதையில் இறங்கினால் தமது உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லை என்ற அச்சத்துடனும், பயத்துடனுமே வாழ்ந்த யுகத்தினை அனைவரும் தாராளமாகவே அனுபவித்து விட்டனர்.

இவ்வாறான ஆபத்து மிகுந்த ஒரு யுகம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இலங்கையில் யுத்தத்தின் மீதிருந்த அச்சமும் பயமும் மக்கள் மத்தியிலிருந்து அகன்றாலும் சமாதானம் என்ற விடயம் சற்று வழுவிழந்த நிலையிலேயே இருந்து வந்தது. யுத்தத்தினை முடிவிற்கு கொண்டு வந்த மஹிந்த அரசு சமாதான விடயத்தில் அப்போது அக்கறை காட்ட வில்லை. மாறாக அபிவிருத்தியிலேயே அவர்களின் 5 வருடகாலமும் கழிந்தனவே தவிர மக்களின் துன்பங்களைப் போக்க முனையவில்லை அல்லது அவை மந்த கதியில் இருந்தது எனலாம்.

இதன் காரணமாக மக்கள் குறிப்பாக வடகிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மஹிந்த அரசில் நம்பிக்கை இழந்தவர்களாக காணப்பட்டதுடன் மக்கள் மனங்களை கண்டு கொள்ளாது தமது சுயநல அரசியல் கலாச்சாரத்தில் சென்று கொண்டிருந்த விடயம் நாட்டிலும், சர்வதேசத்திலும் பரவலாகப் பேசப்பட்டுக் கொண்டு வந்ததுடன் தமது மக்கள் நலன்கள் விடயச் செயற்பாடுகள் செயலிழந்து வருவதையும் சமாதான விரும்பிகளும், சமுக ஆர்வளர்களும் அவ்வப்போது சுட்டிக்காட்டியிருந்த போதும் அதனை அந்த அரசு கவனத்திற் கொள்ளாத நிலைமைகள் இருந்து வந்ததுடன் ஒருசில கடும்போக்குவாத சக்திகள் சிறுபான்மை தமிழ் முஸ்லிம்கள் மீது தமது இனவாதச் செயற்பாடுகளை மேற்கொண்டு வந்ததனையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

யுத்த வெற்றிக்குப் பின்னரான காலத்தில் சமாதானத்தை நிலை நாட்டவும், சமுக ஒற்றுமையை ஏற்படுத்தவும் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனக் கூறி மஹிந்த அரசு 2010ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியையும் பெற்றிருந்தனர். இந்த வெற்றிக்கு மக்கள் மஹிந்த அரசு சமாதானத்தை ஏற்படுத்தும் என்ற ஒரே நோக்கத்திலேயே தமது பூரண ஆதரவுகளை வழங்கி தேர்தலில் தமது வாக்குகளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கி அவரை வெற்றிபெற வைத்தனர்.

ஆனால் சமாதானத்தை ஏற்படுத்தவும், இனங்களுக்கு இடையில் இன ஐக்கியத்தையும் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பில் அவர்கள் அக்கறை காட்டாது இருந்ததுடன் தேர்தல் வாக்குறுதிகளுக்கு மாற்றமான முறையில் பௌத்த இனவாதம் குறிப்பாக பொதுபல சேனா, ராவணபலய, சிங்கள ராவய உள்ளிட்ட இனவாத குழுக்கள் இவர்களின் காலத்தில் தலைதூக்க இடமளிக்கப்பட்டமை மக்கள் மத்தியில் பாரிய கவலையைத் தோற்றுவித்திருந்தது. இந்த இனவாதச் செயற்பாடுகள் சிறுபான்மைச் சமுகங்களை தாக்கும் ஒரு ஆபத்தான நிலைக்கு செல்வதற்கு வித்திட்டது. இதன் காரணமாக மக்கள் மஹிந்தவின் அரசை எதிர்க்கவும், அவரின் ஆட்சியில் நம்பிக்கை இழந்து செல்வதற்கும் வலிகோலியது எனலாம்.

இதன் ஒரு கட்டமாக பொதுபல சேனா மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் முஸ்லிம் சமுகம் மீது அளுத்கம மற்றும் தர்ஹா நகர் உள்ளிட்ட முஸ்லிம் கிராமங்கள் மீது பகிரங்கமாக மேற்கொண்ட கொலைக் கலாச்சாரத்தினைக் குறிப்பிடலாம். இச்செயற்பாடுகளைக் கண்டு கொள்ளாத மஹிந்த அரசினை சிறுபான்மைச் சமுகங்கள் எதிர்ப்பதற்கும் தேல்தல் மூலம் மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கும் வழிவகுத்த விடயத்தினை இங்கு குறிப்பிடலாம்.

யுத்தத்திற்குப் பின்னர் பிரதானமாக மேற்கொள்ள வேண்டிய விடயத்தினை மஹிந்த அரசு மறந்து வேறு திசைக்குச் செல்ல முனைந்ததே தவிர சமுகங்கள் மத்தியில் இன ஐக்கியத்தினையும், சமுக ஒற்றுமையையும் ஏற்படுத்தத் தவறிவிட்டதன் காரணமாகவே இனவாதக் குழுக்கள் கட்டுக்கடங்காத வகையில் தலைதூக்க வழிவகுத்தது எனலாம்.

கடந்த காலங்களில் சிறுபான்மை முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சகல விதமான இனவாதச் செயற்பாடுகளுக்குமான பொறுப்பை மஹிந்த அரசே பொறுப்பேற்க வேண்டும், மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய அரசு நேர்மையான அரசாகவும், சிறுபான்மை மக்களை நேசிக்கும் அரசாகவும் இருந்தால் மேற்படிச் செயற்பாடுகளுக்கு உடந்தையான சகலரையும் இனங்கண்டு அவர்களுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு மஹிந்த அரசின் சகல சொத்துக்களையும் பறிமுதல் செய்து நஷ்டஈடாக வழங்கவேண்டும் என அம்மக்கள் கோரிக்கை விடுக்கின்ற

12 ஆம் பக்கம் பார்க்க....

# காலநிலை மாற்றத்தினால் உயிரிழக்கும் கால்நடைகள்






**வாழையூர் ந.குகதர்சன்**

நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் நிலத்தில் வாழும் உயிரினங்கள் முதல் பயிர்கள் அனைத்தும் பெப்பத்தின் பிடியில் இருந்து மீள முடியாமல் பாதிப்படைந்து காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் வெயிலுடன் கூடிய உஸ்னமான காலநிலை நிலவி வருகின்றது. அதிலும் சில இடங்களில் செவ்வாய்கிழமை மாலை ஓரளவு மழை பெய்தது. ஆனாலும் இவற்றுக்கு மத்தியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதியிலுள்ள சிறிய குளங்கள் முற்றாக வற்றிய நிலையில் காணப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க குளங்கள், வாய்க்கால்கள் அனைத்தும் நீரின்றி வற்றிப்போயுள்ள நிலையில், சில கிணறுகளும் வற்றிப் போய் காணப்படுகின்றது. பெரும்பாலான மேய்ச்சல் தரை நிலங்களில் புற்கள் அனைத்தும் கருகிய நிலையில் காணப்படுகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலைமை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்தில் காணப்படும் கால்நடைகள் குடி நீர் இன்றி உயிரிழக்கும் நிலைமை காணப்பட்டு வருகின்றது.

வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குளங்கள் முழுமையான புனரமைப்பு இல்லாமல் குளத்தில் நீர் வற்றிய நிலையில் காணப்படுதால் கால்நடைகள் குடிப்பதற்கு நீர் இல்லாமல் உயிரிழக்கும் நிலைமை காணப்பட்டு வருகின்றது.

அத்தோடு வாகரைப் பிரதேசத்தில் உள்ள மேயச்சல் தரைகள் மற்றும் விவசாய நிலங்களில் காணப்படும் புற்கள் நீர் இல்லாமலும், வெப்பத்தில் தன்மை அதிகரித்து காணப்படுவதாலும் கருகிய நிலையில் காணப்படுகின்றது.

இதன் காரணமாக கால்நடைகள் உணவுக்காக பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு சிலரது வயல்களுக்கு சென்று வேளான்மையை உண்ணக் கூடிய நிலைமை காணப்பட்டு வருகின்றது.

இவ்வாறு வேளான்மையை உண்ணும் போது வயல் உரிமையாளர்கள் கால்நடைகளை பிடித்து கட்டி விடுகின்றனர். இதனை மீட்பதற்காக பண்ணையாளர்கள் விவசாயிகளுக்கு பணத்தினை வழங்கி விட்டு கால்நடைகளை பெற்றுக் கொண்டு வரும் நிலைமை காணப்படுகின்றது.

வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் கால் நடைகளை நம்பி வாழும் பண்ணையாளர் தங்களுடைய கால் நடைகளுக்கு குடிக்க நீர் இன்மையால் உயிரிழப்பதால் பெரிதும் பாதிப்படைந்த நிலையில் காணப்படுகின்றனர்.

வாகரை பிரதேசத்திலுள்ள குளங்கள் புனரமைப்பு செய்யப்படும் பட்சத்தில் கால்நடைகளில் குடி நீர் பிரச்சனைக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்கக் கூடிய நிலை காணப்படும் என பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வறட்சி காரணமாக கால்நடைகளும் வன விலங்குகளும் நீர் தேடி அலைகின்றன. நீர் இன்றி இறந்து மடிந்துள்ளதாக தகவல்களும் வெளியாகியுள்ளன.

காலநிலை மாற்றம் ஏற்படாத காலத்தில் பெரும்பாலும் எங்களது மாடுகளின் பெருக்கம் அதிகரித்து காணப்பட்டது. அத்தோடு மாடுகளின் உடல் எடைகள் அதிகரித்து காணப்பட்டது. தற்போது அனைத்தும் குறைவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

பசுக்களின் மூலம் கிடைக்கும் பால்களை கொண்டு வியாபாடரம் செய்து எங்களது வாழ்க்கையை நடாத்தி வந்தோம். ஆனால் தற்போது பசுக்களில் இருந்து பால்கள் அரைவாசி அளவில் தான் எமக்கு கிடைக்கின்றது. எமது கால்நடைகளின் உணவு, நீர் என்பன தற்போது இல்லாத காரணத்தினால் எமது வாழ்க்கைத் தரம் குறைவடைந்து காணப்படுகின்றது.

கால்நடை வளர்க்கும் பண்ணையாளர்களுக்கு அரசாங்கத்தினால் எந்தவித உதவிகளும் வழங்கப்படுவதில்லை. எங்களை யாரும் ஏன் என்று பார்ப்பதும் இல்லை. ஆனால் ஏனைய தொழில் செய்பவர்களை மாத்திரம் அரசாங்கமும் சரி அரசியல்வாதிகளும் சரி பார்த்து உதவிகளை வழங்குகின்றனர்.

தற்போது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தினால் ஆளும் கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகளுக்கு கம்பெரலிய திட்டத்தின் மூலம் பல்வேறு வேலைத் திட்டங்கள் வழங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

ஆனால் கால்நடை பண்ணையாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையில் எமது பகுதியில் காணப்படும் குளங்களை புனரமைப்பு செய்து உதவிகள் புரிய யாரும் இன்னும் முன்வரவில்லை.

தேர்தல் காலங்களில் மாத்திரம் எமது பகுதிகளுக்கு வருகை தருகின்றனர். ஆனால் வெற்றி பெற்றதும் எங்களை கவனிப்பதும் இல்லை. எங்களது நிலைமைகள் தொடர்பாக பலமுறை அரசியல்வாதிகளிடம் தெரிவித்தால் செவிடன் காதில் சங்கு ஊதியது போன்று உள்ளதாக நாங்கள் நினைக்கின்றோம் என கால்நடை பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வாகரைப் பிரதேசத்தில் உள்ள கால்நடை பண்ணையாளர்கள் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது விடயமாக அரச அதிகாரிகள் இதுவரை பண்ணையளார்களை பார்வையிட்டு தங்களது நிலைமை தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே வாகரைப் பிரதேசத்தில் உள்ள கால்நடை பண்ணையாளர்களின் நிலைமையை கருத்தில் கொண்டு அவர்களின் விடிவுக்காய் சிறிய குளங்களை புனரமைப்பு செய்வதுடன், ஒழுங்கான மேயச்சல் தரைகளை வழங்க அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் முன்வர வேண்டும்.

அத்தோடு காலநிலை மாற்றத்தினால் பாதிப்படைந்த கால்நடை பண்ணையாளர்களுக்கு நஷ்ட ஈட்டினை வழங்க அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் முன்வர வேண்டும் என பாதிப்படைந்த பண்ணையாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

எனவே இந்தவிடயத்தில் அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் கால்நடைகள் எதிர்நோக்கும் பாதிப்பை தீர்க்க நடவடிக்கை எடுங்கள்.



# வலது குறைந்தவர்களுக்கான உளவளத்துணை

பொதுவாக நோக்கும்போது வலது குறைந்தோரை அவதானிக்கும் போது அறியக்கிடக்கின்ற பல்வேறு பிரச்சினைக்குரிய நிலைகளை பிரதானமாக 4 வகைக்குள் அடக்கலாம்.

1.உடல் ரீதியான பலவீனம் **(Somatic Limitation)**

2.மனவெழுச்சிசார் பிரச்சினை **(Emotional Problems)**

3. ஆளுமை ஒழுங்கீனங்கள் **(Personality Disorders)**

4. உள சமூகத்திறன் குறைபாடு **(Lack of Paycho Social Skill)**

இலங்கையில் வலது குறைந்த ஆண்களை விடவும், வலது குறைந்த பெண்கள் கூடுதலாக மேற்சொன்ன அமைப்பில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். அடிப்படையாக கல்வி, பயிற்சி, தொழில்வாய்ப்பு, சமூக விடயங்களில் பங்கு கொள்ளும் வாய்ப்பு குறைவு போன்ற காரணிகள் வலது குறைந்த பெண்களை கடுமையாகப் பாதித்துள்ளது எனப் பல்வேறு ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. அவ்வாறான ஒரு சூழலில் அவர்கள் விரக்திக்கும், திருப்தியற்ற நிலைக்கும் உட்படுவதைத் தவிர்ப்பது கடினமான ஒரு விடயமாகும்.

இதிலுள்ள பயங்கரமானதும், கவனத்திற்கொள்ள வேண்டியதுமான விடயம் என்னவெனில் அவர்கள் வலது குறைந்த நிலை மேலும் தீவிரமடைவதோடு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இன்னும் ஒரு பயங்கரமான நிலைக்கு செல்லத் தொடங்குகின்றது. உதாரணமாக மேற்சொன்ன பாதிப்புக்களால் ஏற்படும் துக்கம், பயம், சந்தேகம் , பொறாமை, வைராக்கியம், உளப்பாதிப்பு, பின்வாங்கல், தனிமை மற்றும் விரக்தி போன்ற உளமனவெழுச்சிசமநிலையின்மையால் மன அழுத்தம், பதகளிப்பு ஏற்பட்டு அதனால் உடலினுள்ளே உயிரியல், இரசாயன மாற்றம் ஏற்படுவதால் இருதயம், சுவாசப்பை, உணவுக்கால்வாய், இனப்பெருக்கத் தொகுதி, தோல், நரம்பு, தசைகள், குருதிச்சுற்றோட்டம் உட்பட உடலின் அனைத்து உறுப்புக்களும் கடுபாதிப்புக்குட்பட்டு உடல் நோய்களும், பலவீனங்களும் தோன்றுகின்றன.

அவ்வாறே மேற்சொன்ன நிலைமைகளிலிருந்து வலது குறைந்தோர் மிகவும் குறைவான தனி நபர் வளர்ச்சி **(Self Development)** என்ற கட்டத்திலிருப்பதால் அதனைக் கூடுதலாகக் கவனத்தில் எடுக்க வேண்டும். தனிநபர் வளர்ச்சியில் முக்கியமாகத் தாக்கம் ஏற்படுத்துவது சிறந்த மனநிலையாகும். இன்னொரு வகையில் கூறினால் உளரீதியான சிக்கல்கள், அழுத்தங்கள் போன்றவற்றிலிருந்து நீங்கியிருப்பது தனிநபர் விருத்தியைப் பெற்றுக்கொள்வதற்கு பெரும் உதவி புரியும்.

ஒருவர் அடிக்கடி உள பிரச்சினைகள், அழுத்தங்களால் பாதிக்கப்படுவாராயின் தனிநபர் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. அதனால் அவர் வாழ்க்கை பற்றிய நோக்கு ஒன்றைச் செய்வது பயனுள்ளதாக அமையும். அதனால் தனது பிரச்சினைகளில் உண்மை நிலையை அறிந்து கொள்ள வாய்ப்பு கிட்டும். அதற்காக தனி நபர் வளர்ச்சியை நோக்காகக் கொண்ட உளவளத் துணையின் மூலம் சில வழிகாட்டல்களை வழங்க முடியும்.

வலது குறைந்தவர்களுக்குப் பல மனச்சிக்கல்கள் ஏற்படக் காரணம் தனிநபர், சமூகம் பற்றிய தெளிவு குறைவாக இருப்பது ஆகும். இவ்வாறான ஒரு பின்னணியில் இருந்து தோன்றும் பல்வேறு உடல் நடத்தை சார்ந்த பிரச்சினைகளை வெற்றிகரமாக தீர்த்துக் கொள்வதற்கு சிகிச்சை, உளவளத்துணை நுட்பங்கள், எளிய உளவளத்துணை முறையும் பயன்படுத்த முடியும். புலக்காட்சி அறிவு, தன்னைப் புரிதல், அவதானித்தல் போன்ற நுட்பங்களை மிகவும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அவ்வாறே விரிந்த அமைப்பில் குழுப் பகுப்பாய்வுச் சிகிச்சை முறையும் பயன்படுத்தலாம்.

**றாசிக் நபாயிஸ்**
**(BA, MA) சமூகப்பணியாளர், மருதமுனை**

உடல் , உள ரீதியாக வலது குறைவுக்கு உட்படுவது பெரும்பாலான சந்தர்ப்பங்களின் போது அடிப்படையில் அது ஆளுமையில் சிக்கல்களை ஏற்படுத்துகிறது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் உளவளத்துணை மூலம் ஆளுமை வளர்ச்சி ஒழுங்கீனங்களை இனங்கண்டு அதற்கு **(Personality Development Theraphy)** ஆளுமை வளர்ச்சி சிகிச்சைகளை உபயோகிக்க முடியும். அதன் மூலம் ஏனையோரின் அனுபவங்களை அறிந்து தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தனிநபர் இடைத் தொடர்பாடல் கற்றல் **(Inter personal leaming)** செயற்பாட்டை வழங்கலாம். குறிப்பாக இம்முறையினால் தமது வாழ்வில் புதிய எதிர்பார்ப்புக்கள், புதிய பெறுமானங்கள் இண்டையும் சேர்த்துக்கொடுக்க முடியும்.

அது வலது குறைந்த நிலையின் காரணமாக சமூகத்தினுள் இழிவுபடுத்தப்பட்டும், ஒதுக்கப்பட்டும் உள்ள நிலையினை மாற்றி அவர்களினுள் ஓர் எழுச்சியை எற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறானவர்களுக்கு என ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கான உயர்ந்த வழிகாட்டல் செயற்திறன் வாய்ந்த நுட்படங்கள், முறைசார் தொழில்வாண்மை, உளவளத்துணை சேவையில் காணப்படுகிறது. அதன்படி குறிப்பாக வலது குறைந்தவர்களுக்கான கீழ் வரும் அமைப்பில் வளர்ச்சி ரீதியான ஒரு மாற்றத்தை நோக்கிய உளவளத்துணையின் மூலம் வழங்க முடியும்.



★தனிநபர் ஆளுமையின் ஒருங்கிய போக்கை இல்லாமல் செய்தல்.

★வாய் மூல, வாய் மூலமற்ற தொடர்பாடல் திறன்களை வளர்த்தல்.

★மறைந்துள்ள இயல்பான திறமைகளை இனங்கண்டு விருத்தி செய்தல்.

★ஆக்கத்திறன் வாய்ந்த ஆற்றல்களை வளர்த்தல்.

★முன்வரல், சவால்களை ஏற்றுக் கொள்ளும் திறன்களை விருத்தி செய்தல்.

★செயற்திறன், செயற்படும் மட்டத்தை விருத்தி செய்தல்.

★சமூகம் பற்றிய பயம், பிரச்சினையை விட்டு ஓடல் போன்ற பண்புகளை இல்லாமல் செய்தல்.

★சமூகப் பொருத்தப்பாடு உள்ளானவாக மாற்றல்

★மன அழுத்தம், பதகளிப்பைக் குறைத்தல்.

★வாழ்க்கை பற்றிய சரியான தெளிவை வழங்குதல்

★வாழ்க்கைக்கு மகிழ்ச்சியூட்டடல்.

மேற்சொன்ன காரணிகளை நோக்கும் போது வலது குறைந்தவர்களுக்கு என காணப்படும் விஷேட உளவளத்துணையின் தேவையையும், முக்கியத்துவத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அதனால் வலது குறைந்தோரை இனங்கண்டு அவர்களை உளவளத்துணைக்காக அனுப்ப வேண்டிய பொறுப்பும், கடமையும் அவர்களின் பொறுப்புதாரர்களுக்கும், அதேபோல் மக்களோடு வேலை செய்கின்ற அரச ஊழியர்களுக்கும் உண்டு. அதற்காக அனைவரும் அறிவூட்டப்பட வேண்டும். என்பது கட்டாயம் இதற்காக பல நிறுவனங்கள் இன்று சமூக மட்டத்தில் தனது கடமைகளை செய்து கொண்டுதான் இருக்கின்றன என்பது யதார்த்தம்.

# கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கமைய பாடசாலைகள் இயங்கியதா?

ஏப்ரல் 21 நாட்டில் இடம்பெற்ற விரும்பத்தகாத ஒரு செயற்பாட்டின் காரணமாக நாட்டின் பல்வேறு துறைகளிலும் பல்வேறு வகையான பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது . என்பது யாவரும் அறிந்த ஒரு விடயமே . அந்த வகையில் பாடசாலைகளும் மாணவர்களின் கல்வியில் சற்று பின்னடைவை ஏற்படுத்தியமையும் வருந்தத்தக்க விடயமாகவே உள்ளது. அந்த வகையில் இரண்டாம் தவணைக்கான பாடசாலை 2 வாரங்கள் கழித்து ஆரம்பிக்கப்பட்டன .அதற்கமைய தாமதமாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் மாணவர்களின் நலன் கருதி பல்வேறு வகையான மேலதிக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஒரு கட்டாய தேவை எழுந்தது.

அதற்கமைய மத்திய மாகாண கல்வி அமைச்சின் ஆலோசனைகளுக்கு அமைய சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு சுற்றறிக்கை ஒன்று அனுப்பப்பட்டதாக ஒரு தகவல் கிடைத்திருந்தது. அதற்கமைய மத்திய மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளும் வழமையான நேர அட்டவணைக்கு மாறாக தத்தமது கல்வி செயல்பாடுகளை அதிகரிக்க வேண்டும் என குறித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கான பல்வேறு வகையான கூட்டங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்களுக்கு நடத்தையும் வந்தனர் அதன்படி ஒரு பாட வேலைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 40 நிமிடங்கள் 50 நிமிடங்கள் வரை நீடிக்கப்பட்டு தினமும் 8 பாட வேலைகளையும் நடாத்துவதற்கு சில பாடசாலைகள் இணக்கம் தெரிவித்தன் . அதன்படி காலை 8 மணிக்கு ஆரம்பித்து 2 மணிக்கு நிறைவு பெறும் பாடசாலைகள் தமது கல்விச் செயற்பாடுகளை 3 மணி வரையும் நடித்ததோடு மேலும் ஒரு சில பாடசாலைகள் 4 மணி வரை கூட தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தன .

அதாவது குறித்த இரு வார காலப்பகுதியில் நிறைவு செய்ய வேண்டிய பாடத்திட்டங்களை முடிப்பதற்காகவே இவ்வாறான ஒரு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்திருந்ததாக பணிப்பாளர்கள் கூறினர். மேலும் நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பாடசாலைகள் சுற்றறிக்கைகளுக்கமைய செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது . அதேபோன்று கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்த ஒரு விடயம் பாடசாலைகளில் நிலைமைகளுக்கும் சூழ்நிலைகளையும் கருதிக்கொண்டு மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு ஏற்றவாறு நேர அட்டவணைகளை சரி செய்து கொண்டு அவர்களின் நலன் கருதி உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க மாறும் பணிப்புரை வழங்கியிருந்தனர்..

**சுஜீவன், தலவாக்கலை**

ஆனாலும் கூட சில பாடசாலைகள் வழமை போல இயங்கி வருவதையும் மகாணக்கூடியதாகவே இருக்கின்றது . அதாவது கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கமைய செயற்படாது வழமையான பாடசாலை நேரங்களுக்கு கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்திருந்தன. குறிப்பாக காலை 8 மணி முதல் 2 மணிவரை மாத்திரமே இயங்கிய பாடசாலைகளும் இல்லாமலில்லை . இவ்வாறான நிலையில் கல்விப் பணிப்பாளர்கள் வழங்கப்பட்ட பணிப்புரையை பின்பற்றாத அவ்வாறான பாடசாலைகள் தொடர்பில் இதுவரை அவர்கள் எவ்விதமான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்களா என்று ஆராயும்போது ஒன்றுமே எடுக்கப்படவில்லை என்று தான் கூற வேண்டும். சுற்றறிக்கை என்பது சகல பாடசாலைகளுக்கும் பொதுவான ஒன்றாக இருந்த போதிலும் சில பாடசாலைகள் அதனை பின்பற்றியதோடு சில பாடசாலைகள் சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப செயற்டாமலும் இருக்கின்றன . அவ்வாறான பாடசாலைகளில் நிர்வாகிகளுக்கு எதிராக கல்வித் திணைக்களம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றது என பலரும் கேள்விகளை தொடுத்து வருகின்றனர்?

பொதுப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நலன் கருதியே இவ்வாறானதொரு செயற்பாட்டினை கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. எனவே மாணவர்களின் நலன் கருதி செயற்பட வேண்டிய பாடசாலை நிர்வாகங்கள் ஏன் கல்வியமைச்சின் சுற்றறிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில்லை என கேள்விகள் கேட்க வேண்டிய நிலைமை தற்போது எழுந்துள்ளது. இருந்தபோதிலும் கல்வி அமைச்சின் அல்லது அரசாங்கத்தின் சுற்றறிக்கை களுக்கும் நியமங்களுக்கு அமைய தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும் பாடசாலைகளும் இல்லாமல் இல்லை அ இருப்பினும் அவ்வாறான பாடசாலைகளுக்கு அழுத்தங்களை பிரயோகிக்கும் அதிகாரிகள் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளை அலட்சியமாக எண்ணி செயற்படும் பாடசாலைகளுக்கு ஏன் அழுத்தங்களை பிரயோகிப்பதில்லை ?எனவும் கல்வி சமூகம் கேள்விகளை துடிக்கின்றன .

அதேபோல் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு வகையான பாதுகாப்பு வேலைத்திட்டங்களை பாடசாலை சமூகங்கள் முன்னெடுத்து வரும் நிலையில் அவற்றிற்கான தடைகளையும் கல்வி அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது... குறிப்பாக பாடசாலைகளில் பாதுகாப்பு கமராக்களை பொருத்துவதற்கு ஆரம்பத்தில் பாடசாலைகளுக்கு அனுமதி வழங்கி இருந்த போதிலும் ஒரு சில பாடசாலை அதிபர்களின் தவறான பண வசூலிப்பு செயற்பாடுகளின் காரணமாக அதற்கான தடையினை கல்வி அமைச்சு ஏற்படுத்தியதோடு வெகுவிரைவில் சகல பாடசாலைகளுக்கும் பாதுகாப்பு கமராக்களை பொருத்துவதற்கான வேலைத்திட்டங்களை அமைச்சரவையின் அனுமதியோடு முன்னெடுப்பதாகவும் தெரிவித்திருந்தது .. ஆனாலும் இன்றுவரை அது தொடர்பான எவ்விதமான செயற்பாடுகளும் முன்னெடுத்ததாக தெரியவில்லை .. ஏதாவது ஒரு அசம்பாவிதம் நடந்த போது மாத்திரம் குரல் கொடுக்கும் தரப்பினர் எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நிகழ்வு ஏற்படாமல் இருப்பதற்கு அல்லது பாதிப்புகள் ஏற்படாது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் ஏன் குரல் கொடுப்பதில்லை ?அதற்கான செயற்பாடுகளை துரிதமாக முன்னெடுக்க படாமல் குறித்து விசனமும் வெளியிடப்பட்டு வருகின்றது.

அதேபோல் கல்வி உளவியலாளர்களின் கருத்தின்படி ஒரு மாணவனின் கல்வி செயற்பாட்டிற்காக ஒரு பாடவேளை 40 நிமிடங்கள் மாத்திரமே ஒதுக்கப்பட வேண்டும் என்றும் அதற்கமைய பாடசாலைகளில் நேர அட்டவணைகளை வகுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது .அதற்கமைய சகல பாடசாலைகளிலும் ஒரு பாட வேலைக்கு 40 நிமிடங்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டு தினமும் 8 பாடவேளைகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கல்வி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றினை 10 நிமிடங்களால் அதிகரித்தபோது மாணவர்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்கள் பல காணப்பட்டன. குறிப்பாக 2 மணிக்கு மேல் மாணவர்கள் கற்றலில் ஈடுபடுவதில் சிரமங்களை எதிர்நோக்கியதை காணக்கூடியதாக இருந்தது என ஆசிரியர்கள் தெரிவித்து வருகின்றனர். அத்தோடு பாடத்திட்டங்களை நிறைவு செய்வதற்காகவே இந்த செயற்பாட்டினை கல்வி அமைச்சு முன்னெடுத்து இருந்த போதிலும் அது சாத்தியமக அமைந்ததா என்றும் கேள்விகளை எழுப்பி வருகின்றனர். குறித்த காலத்தில் முடிக்க வேண்டிய பாடத்திட்டங்களை முடிப்பதற்கு தேவையான செயற்பாடுகளை பாடசாலை நிர்வாகங்கள் தமக்கேற்றவாறு நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்று கல்வியமைச்சின் சுற்றறிக்கை தெரிவித்து இருந்ததே தவிர கல்வி உளவியலாளர்களின் தத்துவங்களை புறக்கணித்து செயற்பட வேண்டும் என எந்த சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்டு இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயம்

எது எவ்வாறாக இருப்பினும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை தங்குதடையின்றி முறையாக முன்னெடுத்துச் செல்வதில் பல பாடசாலைகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன . அதே நேரத்தில் சில பிரபல பாடசாலைகள் மற்றும் சில கிராமப்புற பாடசாலைகளில் மாணவர்களின் நலன்களை கருத்தில் கொள்ளாது ஆசிரியர்களின் நலன்களை கருத்தில் கொண்டு மாத்திரமே செயற்பட்டு வருகின்றமை வேதனைக்குரிய விடயமாகவே இருக்கின்றது . இவ்வாறான பாடசாலைகளுக்கு கல்வி அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் என பலரும் உதவிக்கரம் நீட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும் . எனவே கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளை சகல பாடசாலைகளையும் இயங்க வைக்க வேண்டிய பணிப்புரைகளை எடுக்க வேண்டியது யாரின் கரங்களில் தங்கியுள்ளது ? அதேபோல் குறித்த சுற்றறிக்கைக்கமைய பாடசாலைகள் செயற்படுகின்றதா என்பதை அவதானிக்க கல்வி பணிமனைகள் உரிய முறையில் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன .. அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பது தொடர்பில் பல்வேறு வகையான சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன . எனவே மாணவர்களுக்காக செயற்படுகின்ற சகல கல்வி அதிகாரிகளும் அவரவர் பொறுப்பினை உணர்ந்து செயற்படும் பட்சத்தில் மாத்திரமே சிறப்பான எதிர்கால கல்வி சமூகத்தை உருவாக்க முடியும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை என்பது உண்மையான விடயம்.

## இன..

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

வேளையிலும்கூட இன்று பொதுபல சேனா முஸ்லிம்கள் மீது தொடர்ந்தும் தேவையற்ற குற்றங்களைச் சுமத்தி வருவது முஸ்லிம் சமுகத்தின் மத்தியில் கவலையைத் தோற்று வித்துள்ளது.

இவ்வாறான இன, மத நிந்தனைகளை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்தினதும், ஜனாதிபதியினதும் கைகளிலேயே உள்ளது. மக்களும் இந்த விடயத்திலேயே நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதனை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. என்றாலும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலத்திலும் அவரால் சொன்ன விடயங்கள் எதுவும் உரியவாறு செய்யப்படாது அரசியல் சர்ச்சைகளில் சிக்குண்டு காணப்படுவது மக்கள் மத்தியில் கவலையை தோற்றுவித்துள்ளது.

இன்றைய நிலையில் அதிகமான பிரச்சினைகளுக்கு காரண கர்த்தாக்களாக இருப்பவர்கள் ஒருசில பௌத்த இனவாத தேரர்களாகும். இவர்கள் சமயத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் சிறுபான்மை முஸ்லிம்களை பலிக்கடாக்களாக்கி முஸ்லிம் சமுகத்தினை விரோதிகளாக சித்தரித்து அப்பாவி மக்களிடத்தில் குற்ற உணர்வுகளை ஏற்படுத்தி குழப்பங்களை உண்டாக்கி வருகின்றனர். இதுவே கடந்த அரசில் தாராளமாக இடம் பெற்றது. அவ்வாறான தொடர்கதையே மைத்திரி ஆட்சியிலும் இடம் பெறுவதே ஆசியாவின் அதிசய சம்பவங்களாக காண முடிகின்றது.

சமுகத்தினையும், சமய ஒற்றுமையையும் ஏற்படுத்த வேண்டிய ஒரு சில பெரும்பான்மை இனவாத தேரர்கள் அமைதி இன்மையை ஏற்படுத்தம் விடயத்தில் செல்வதனை இந்த அரசு அதீத அக்கறை செலுத்தி அவர்களின் தீய செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்புள்ள நிலையில் அது இடம் பெறவில்லை இனவாத சக்திகள் தமது அடாவடித்தனங்களை தொடராகவே மேற்கொள்கின்றனர். முஸ்லிம்களின் சமயத் தளங்களை உடைப்பதும், அழிப்பதும் இருக்கின்ற நிலையில் தற்போது தமிழ் மக்களின் வரலாற்று சிறப்புமிக்க இந்துக்கோயில்களை அழித்து சட்டத்திற்கும், நீதிக்கும் மாற்றமான முறையில் சண்டித்தனமாக அதில் பௌத்த விஹாரைகளை அமைத்து வருகின்றனர். இதுவே இன்றைய இலங்கையின் நிலையாகும்.

சமுக மாற்றத்தை சமயத் தளங்கள் மூலமே மேற்கொள்ள முடியும் என்பதனை கடந்தகால அனுபவங்கள் காட்டி நிற்கின்ற நிலையில் இன்று சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்களின் இந்துக் கோயில்களையும், பள்ளிவாசல்களையும் அழிக்கும் மிகமோசமான இனவாதச் செயற்பாடுகள் சமாதானத்தை விரும்பும் இலங்கை வாழ் சிறுபான்மை மக்கள் மத்தியில் பாரிய மன உழைச்சல்களையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதுடன் சமுக வெறுப்புணர்வுகளை மேலும் வழுவடையச் செய்வதற்கான அவர்களின் செயற்பாடுகள் கவலையளிக்கின்றது.

எனவே அரசாங்கம் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்த கடுடிமாயான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாறாக பௌத்த நாடு என்பதற்காக இனவாத சக்திகளின் அடாவடித்தனங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் இடமளிக்காது சமுகத்தினைப் பாதுகாக்கும் வகையிலான நாட்டினதும், சர்வதேசத்தினதும் சட்ட திட்டங்களை உரியவாறு கடைப்பிடித்து சமுகச் சீர்குலைவை ஏற்படுத்துபவர்களை பாரபட்சமின்றி கைது செய்து சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என சமுக ஆர்வளர்களும், சிறுபான்மைச் சமுகங்களின் சமயத் தலைவர்களும் அரசாங்கத்திடம் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றனர்.

# நஞ்சருந்தும் நிலையில் வாகரை விவசாயிகள்

வாழையூர்
ந.குகதர்சன்



நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் நிலத்தில் வாழும் உயிரினங்கள் முதல் பயிர்கள் அனைத்தும் பெப்பத்தின் பிடியில் இருந்து மீள முடியாமல் பாதிப்படைந்து காணப்படுகின்றது.

அந்த வகையில் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கதிரவெளி மானாவெளிக் கண்டத்தில் ஜனாதிபதியின் நஞ்சற்ற உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தில் விவசாய செய்கை செய்யப்பட்டுள்ளது.

கதிரவெளி கிராமத்திலுள்ள ஐம்பத்தைந்து விவசாயிகள் எண்பத்தி நான்கு ஏக்கர் விவசாய நிலத்தில் நஞ்சற்ற வேளாண்மையை செய்து வந்த நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

நூறு ஏக்கர் விவசாயம் செய்யும் நிலப்பரப்பில் இம்முறை எண்பத்தி நான்கு ஏக்கர் விவசாய நிலத்தில் நஞ்சற்ற வேளாண்மையை செய்துள்ளனர். இதில் நஞ்சற்ற முறையில் விவசாயம் செய்வதால் நீர் இன்மையால் வேளான்மையோடு சேர்த்து புற்களும் அதிகம் படர்ந்து காணப்படுகின்றது.



கதிரவெளி மானாவெளிக் கண்டத்தின் விவசாயிகளின் விவசாய நடவடிக்கைக்கு மானாகுளத்தின் மூலம் கிடைக்கும் நிரினைக் கொண்டு விவசாயம் செய்து வந்தனர். கடந்த பதினைந்து வருடங்களாக குளம் புனரமைக்கப்படாதமை காரணமாக குளத்தில் நீரின் தேக்கம் குறைந்து காணப்படுவதால் விவசாய நடவடிக்கைக்கு நீர் இன்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் நஞ்சற்ற உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தில் விவசாய செய்கை செய்ய முற்பட்ட எங்களுக்கு எந்த அரசாங்கமும் உதவிகளை வழங்க முன்வரவில்லை. ஏன் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளிடம் முறையிட்டால் இதனை செவிமடுப்பதில்லை.

கதிரவெளி கிராமத்திலுள்ள ஐம்பத்தைந்து விவசாயிகள் எண்பத்தி நான்கு ஏக்கரில் விவசாயம் செய்துள்ளோம். ஆனால் நாங்கள் எங்களது மனைவி, பிள்ளைகளின் நகைகள் மற்றும் சிலரிடம் கடன்களை பெற்று விவசாயம் செய்துள்ளோம்.

ஆனால் தற்போது நீர் இன்மையால் விவசாய நிலம் பிளவுபட்டு காணப்படுவதுடன், வேளான்மையை விட புற்கள் அதிகம் காணப்படுகின்றது. அத்தோடு விளைந்து வரும் வேளான்மை கதிர்கள் பதர்களாக வருகின்றதே தவிர நெல்களாக வருவது குறைவாக காணப்படுகின்றது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாட்டில் நிலவும் வறட்சி காரணமாக 17 மாவட்டங்களில் சுமார் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய இடங்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் பருவப்பெயர்ச்சி மழை பெய்யாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ளோரின் எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் 21,000 பேர், கிளிநொச்சியில் 5,000 பேர், முல்லைத்தீவில் 12,000 பேர், மன்னாரில் 18,000 பேர், வவுனியாவில் 39 பேர், திருகோணமலையில் 2,457 பேர், அனுராதபுரத்தில் 915 பேர், புத்தளத்தில் 10,435 பேர், மாத்தளையில் 4,399 பேர், பொலன்னறுவையில் 3,523 பேர், மட்டக்களப்பில் 23,518 பேர், கேகலையில் 160 பேர், மொனராகலையில் 340 பேர், இரத்தினபுரியில் 3,041 அம்பாறையில் 11,536 பேர், ஹம்பாந்தோட்டையில் 2,149 பேர் என மாவட்ட ரீதியான பட்டியலில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளது

சிறுபோக நெற்செய்கைக்காக நெல் விதைக்கப்பட்டு பயிரும் வளர்ந்து வரும் நிலையில் தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்படுள்ளதால் வேளாண்மையை கைவிட்டும் நிலையில் பல விவசாயிகள் உள்ளனர்.

குளத்தில் நீரை சேமித்து வைத்தாலும், சிறுபோகம் செய்யும் காலத்திற்குள் மழை பெய்யவில்லை எனின் குளத்தில் இருக்கின்ற நீர் போதாது. எப்படிதான் குளத்தில் இருக்கிற நீரை பாய்ச்சினாலும் மழை பெய்யா விட்டால் வேளாண்மைகளும் செழிபில்லை. இதனால் பல வயல்கள் வரண்டுபோய் உள்ளது.

சில வயல்களில் புற்கள் மட்டும் தான் நிற்கின்றது. மக்களின் வாழ்வாதாரமே நெல் உற்பத்தி தான். என்ன கஸ்டபபட்டாலும், அடகு வைத்தாலும், கடன் வாங்கினாலும் வேளாண்மை செய்கையை கைவிடுவதில்லை.

நட்டமோ, இலாபமோ ஒவ்வொரு வருடமும் செய்த விவசாயிகளின் கால் கைகள் சும்மா இருக்காது செய்யத்தான் தொடங்கும். அதேபோலதான் இந்த வருடமும் வேளாண்மையைச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதன்போது வேளாண்மைக்கு அடிக்கடி நீர் பாய்ச்ச வேண்டும். அந்நீர் குளத்தில் இருந்தே பாய்ச்சப்படுகின்றது. நீண்ட நாட்களாக வாகரை பகுதியில் நினைத்தளவிலான மழை பெய்யாததினால் குளத்தின் நீர் குறைவாக உள்ளது. இதனால் இருக்கின்ற நீர் வேளாண்மைக்கு பாய்ச்சுவதற்கு முடியாது.

சித்திரை மாதத்தில் வழமையாக மழை பெய்யும் ஆனால் இந்தவருடம் மழை மிகமிக குறைவாக இருந்தது. வைகாசி மாதம் பிறந்தால் கண்ணகி அம்மன் குளிர்தியில் அன்றும் மழை பெய்யும் இந்தவருடம் அதையும் காணவில்லை. இதனால் விவசாயிகள் மிகுந்த கவலையில் ஆழ்ந்திருப்பதுடன், நீரைப் பாய்ச்சுவதில் இரவு, பகலாக பல பிரயத்தனங்களை செய்து கொண்டிருக்கின்றனர்.

சில வயல்களுக்கு வாய்க்காலை கட்டி நீர் பாய்ச்ச வேண்டும். சில வயல்களுக்கு இன்னொருவரின் வயல் ஊடாக நீர் பாய்ச்ச வேண்டும். அவ்வாறிருக்கையில் தற்போதைய நீர் பஞ்சம் காரணமாக முன்னுக்குள்ளவர் வாய்க்காலை கட்டி நீர் பாய்ச்சுவதற்கு ஆரம்பித்தால் பின்னுக்குள்ளவர் அவர் இல்லாத நேரத்தில் அதனை வெட்டி தான் பாய்ச்சுக் கொள்வது போன்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றன.

நீர் பஞ்சம் காரணமாகவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றது. இதனால் விவசாயிகளிடம் முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. சிலர் நீர் பம்பிகளை கொண்டு நீர் உள்ள இடத்திலிருந்து வயலுக்குள் இறைக்கின்ற செயற்பாடுகள் தற்காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாருடைய நெல் வயலை, யார் காப்பாற்றிக் கொள்வதென்ற அச்சமும் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ளது. மழை பெய்யாததன் வெளிப்பாட்டினாலேயே இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

உரிய காலத்திற்கு மழை கிடைக்காவிட்டால், பயிர்செய்கையில் பலனை காண முடியாது. வேளாண்மை செய்கை என்பது, இலாபத்திற்கான தொழில் என்பதனை விட வீட்டில் உணவு சமைப்பதற்கு அரிசி இருக்கும் என்ற எண்ணத்திலே தான் பெம்பாலான மக்கள் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

வீட்டில் நெல் இருந்தால் அதை சீதேவி என்கின்றனர். இதற்காகத் தான் எத்தனை வறட்சிகள், வெள்ளங்கள் வந்து வயல்கள் அழிந்து ஒரு மூடை நெல்லுடன் வீடு திரும்பினாலும் வேளாண்மைச் செய்கையை கைவிடாமல் செய்து கொண்டிருக்கின்றனர். தற்போதைய மழை இல்லாத நிலையில் இரவு, பகலாக விவசாயிகள் வயல்களிலே நீருக்கு அருகில் அதனைப் பெற்று வயலுக்குள் பாய்ச்சுவதற்காக போராடிக் கொண்டிருக்கின்றனர்.

தாம் அருந்துவதற்கு நீர் இல்லாவிட்டாலும் பயிருக்கு நீரை செலுத்துவதிலையே அதிக கவனம் செலுத்துகின்றனர். இதனால் தான் உழவுத் தொழில் செய்பவர்களை பிறர் வாழ தம்மை அர்ப்பணிப்பவர்கள் என சொன்னார்கள். வேளாண்மைச் செய்கையை இந்த வருடம் கைவிடும் நிலைமை தான் ஏற்படும் நிலையிலுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் தங்களது கஸ்ட நிலைமை தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்-

கதிரவெளி மானா குளத்தை நம்பி விவசாயம் செய்த நாங்கள் தற்போது நஞ்சருந்தி தற்கொலை செய்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம் என கதிரவெளி விவசாயி மு.நவரெட்ணராசா கவலையுடன் தெரிவித்தார்.

கதிரவெளி மானாக் கண்டத்தில் சிறுபோக வேளான்மை செய்துள்ளோம். ஆனால் எங்களது பகுதியிலுள்ள மானா குளம், தாமரக்கட்டு குளம் என்பன புனரமைப்பு செய்யப்படவில்லை. இதுவிடயமாக பல தடவைகள் அரச அதிகாரிகள் மகஜர்கள் வழங்கியும் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் கவனம் செலுத்தி ஏழை விவசாயிகளின் வாழ்வின் ஒளியேற்ற குளத்தினை புனரமைப்பு செய்ய வேண்டும். தண்ணீர் இன்னையால் எங்களது வயல் கதிர்கள் பதராகவும், வெள்ளையாகவும் காணப்படுகின்றது.

நாட்டின் ஜனாதிபதியின் நஞ்சற்ற உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நஞ்சற்ற விவசாய செய்கையை மேற்கொண்டுள்ளோம். எமது மானா கண்ட வயல் நிலத்தில் இலகுவாக நஞ்சற்ற விவசாயத்தினை மேற்கொள்ள முடியும். எமது வயலில் எந்தவித இரசாயண மருந்துகளோ, உரங்களோ பயன்படுத்த வேண்டிய தேவை இல்லை.

வயல் விதைத்து ஒழுங்கான முறையில் தண்ணீர் பாய்ச்சி வந்தால் அமோக விளைச்சல் கிடைக்கும். ஆனால் கடந்த காலங்களில் வேளான்மை செய்கை பாதிக்கப்பட்டு காணப்படுகின்றது. மானா குளம் புனரமைக்கப்படும் பட்சத்தில் கதிரவெளி விவசாய அமைப்பின் கீழ் உள்ள அனைத்து விவசாயிகளும் நன்மை பெருவார்கள்.

அவ்வாறு இடம்பெறவில்லையாயின் விவசாயிகள் அனைவரும் கையேந்தி பிச்சை எடுக்கும் நிலையில் தான் உள்ளோம். விவசாயிகள் இலட்சக் கணக்கில் பணத்தினை செலவழித்துள்ளனர். மனைவி, பிள்ளைகளின் நகைகளை அடகு வைத்து, கால் நடைகளை விற்பனை செய்து வெளான்மை செய்துள்ளனர்.

இன்றைய நிலையில் நாங்கள் கைவிட்ட நிலையில் தான் உள்ளோம். இனிவரும் காலங்களில் எவ்வாறு நாங்கள் வேளான்மை செய்வது. அதிகாரிகள் வருவார்கள் உங்களுக்கு நஷ்டஈடு தருவோம் என்பார்கள் ஆனால் எந்தவித நஷ்ட ஈடுகளும் தருவதில்லை. அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுப்பதில்லை.

இனிவரும் காலங்களில் ஒட்டுமொத்த விவசாயிகளும் நஞ்சு அருந்த வேணடடிய நிலைதான் உள்ளது. மானா குளத்தை நம்பி வாழும் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ளனர். அதில் சில கால்நடைகள் இறந்து கொண்டு வருகின்றது.



விவசாயிகள் மற்றும் பண்ணையாளர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இந்த விடயத்தில் அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்காவிடின் மானாக் கண்டத்தில் விவசாயம் செய்த விவசாயிகள் நஞ்சறுந்த வேண்டிய நிலை ஏற்படும் என்றார்.

மானா குளத்தினை புனரமைப்பு செய்து தராவிட்டால் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வாக்கு கேட்டு இங்கு வர வேண்டாம் என கதிரவெளி விவசாயி ஏ.சுவேந்திரராஜா தெரிவித்தார்.

நான் பதினைந்து வருடங்களாக விவசாயம் செய்து வருகின்றேன். ஆனால் கடந்த வருடமும், இவ்வருடமுமே தண்ணீர் இன்மையால் வேளான்மை அனைத்தும் அழிந்து விட்டது.

நாங்கள் நஞ்சற்ற விவசாய செய்கையை மேற்கொண்டுள்ளோம். இதற்கு மாட்டெரு மாத்திரம் பயன்படுத்தி விவசாயம் செய்கின்றோம். நஞ்சற்ற விவசாயம் செய்வதால் எங்களுக்கு விவசாய திணைக்களத்தினால் எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை.

மானா குளம் புனரமைப்பு இன்மையால் எமது வேளான்மை அழிந்து கொண்டு வருகின்றது. இதுவிடயமாக பல தடவை அதிகாரிகள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகளான சீ.யோகேஸ்வரன், சா.வியாளேந்திரன், ஞா.ஸ்ரீநேசன் ஆகியோரிடம் தெரியப்படுத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆனால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவுமில்லை, வருகை தந்து பார்க்கவும் இல்லை. குளத்தினை புனரமைப்பு செய்து தந்தால் வாகரைப் பிரதேசத்தில் உள்ள மக்கள் அனைவரும் நஞ்சற்ற உணவை உண்ணக் கூடிய வகையில் விவசாயத்தினை மேற்கொள்ள முடியும்.

வாகரைப் பிரதேசத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பை மாத்திரம் தான் நாங்கள் நம்பியுள்ளோம். இவ்விடயமாக அவர்களிடம் தெரிவித்தோம். பார்ப்பதாக தெரிவித்தார்கள். ஆனால் இன்னும் இல்லை. வாகரை பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் தெரிவித்தோம். இன்னும் எந்தவித நடவடிக்கையும் இல்லை.

நாங்கள் இவர்களை எங்களது பிரச்சனைகளை தீர்ப்பதற்காக பாரளுமன்ற உறுப்பினராக கொண்டு வந்தோம். ஆனால் அவர்கள் அவர்களுடைய சட்டை பையை நிரப்பி விட்டு செல்கின்றனரே தவிர எங்களை கவனிப்பதில்லை. இனி இவர்கள் வாக்கு கேட்டு எங்கள் பகுதிக்கு வர தேவையில்லை என்றார்.

கடன் சுமையோடு விவசாயம் செய்வதை தடுக்க குளத்தினை புனரமைப்பு செய்து தாருங்கள் என கதிரவெளி விவசாயி எஸ்.ஜீவன் தெரிவித்தார்.

நாட்டின் ஜனாதிபதியின் நஞ்சற்ற உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நஞ்சற்ற விவசாய செய்கையை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். தற்போது தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் வேளான்மையை விட புற்கள் அதிகமாக வளர்ந்து காணப்படுகின்றது.

விவசாயம் செய்வதற்கான பல்வேறு கடன்கள் மற்றும் நகைகளை அடகு வைத்து விவசாயம் செய்தோம். இவ்வாறு நிலைமை போகுமானால் கடனையும் செலுத்த முடியாது, நகைகளையும் மீட்க முடியாமல் போகும்.

நாங்கள் விவசாயத்தினை நம்பியே எங்களது வாழக்கையை நடாத்தி வருகின்றோம். இரவு, பகலாக காவல் செய்து விவசாயம் செய்து வரும் எங்களுக்கு வீட்டுக்கு கொண்டு செல்வதற்கு கூட நெல் கிடைக்காத நிலைமையே ஏற்பட்டு வருகின்றது.



இந்த விடயம் தொடர்பாக எமது பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரியப்படுத்த அவர்களை நாடிப் போனால் எங்களது கருத்துக்களை செவிமடுப்பது இல்லை. பல தடவைகள் தெரிவித்தும் எங்களது நிலைமையை கவனத்தில் கொள்வதுமில்லை. தேர்தல் காலத்தில் மாத்திரம் தான் எங்களை தேடி வருகின்றனர்.

எனவே எங்களது நிலைமையை கருத்தில் கொண்டு மானா குளத்தினை புனரமைப்பு செய்து எங்களது விவசாய நடவடிக்கையை தொடர்ந்தும் மேற்கொள்ள உதவிகள் புரியுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

எனவே மானா குளத்தினை புனரமைப்பு செய்து தரும் பட்சத்தில் விவசாயிகள் நஷ்டத்தின் காரணமாக நஞ்சு அருந்து இறந்து போக வேண்டிய நிலை ஏற்படாது. ஆகவே தமிழ் அரசியல்வாதிகள் வாக்குகளுக்கு மட்டும் எம்மிடம் வராமல் எமது தேவைகளை நிறைவேற்றி தருமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எமது குறைகளை தீர்த்து தராத பட்சத்தில் வாகரைப் பிரதேசத்தின் மானா குளத்தினை நம்பி விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகள் நஸ்டத்தின் மூலம் நஞ்சு அருந்தி இறந்து விட்டால் இதற்கு முழுப்பொறுப்பும் அரச அதிகாரிகள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகளையே சாரும் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


எனவே விவசாயிகளின் பிரச்சனைகளை தீர்த்து நாட்டில் நஞ்சற்ற உணவு உற்பத்தியை அதிகரிக்க அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்க முன்வருமாறு பலரது கோரிக்கையாக உள்ளது.

# இன ஒற்றுமையும் தேசத்தின் வளர்ச்சியும்




பெரும்பாலான உலக நாடுகளில் பல்வேறு இனக்குழுக்கள் இன ஒற்றுமையுடனும் நாட்டுப்பற்றுடனும் வாழ்ந்து வருகின்றன. இவ்வாறான ஒற்றுமை அந்தந்த நாடுகளின் தேசிய பொருளாதாரத்தை வெகுவாக வளர்ச்சியடைய செய்து வருகின்றது.

பொதுவாக நாடுகள் சுதந்திரம் பெறுவதற்கு பல்வேறு போராட்டங்களை நடத்தவேண்டியிருக்கின்றது. ஆயுதப் போராட்டமோ அல்லது அஹிம்சை முறையிலான போராட்டங்கள் ஆண்டாண்டு காலமாக நடாத்தி சுதந்திரத்தை பெற்றுக் கொள்கின்றன. அவ்வாறு வாழ்க்கையே போராட்டமயமாக மாறி விடுகின்றது. ஆனால் சுதந்திரமென்பது ஒரு நாட்டின் மீது திணிக்கப்பட்டதென்றால் அது சிங்கப்பூர் மட்டும் தான். ஆம் 1965ம் ஆண்டு மட்டும் மலேசியாவின் ஒரு பகுதியாக இருந்த சிங்கப்பூர் மலேசிய நாட்டில் இருந்து ஒதுக்கிவைக்கப்பட்டது. அது சிங்கப்பூர் மீது திணிக்கப்பட்ட சுதந்திரமாக மாறியது. அன்றைய காலக்கட்டத்தில் குப்பைமேடுகளும், சேரிகளும் நிறைந்த வறிய சிங்கப்பூரின் தலைவனாக லீகுவான் யூன் உருவானார். இங்கு பல்வேறுப்பட்ட இனக்குழுக்கள் இருந்தாலும் எல்லோரும் சரிசமமாக மதிக்கப்பட்டனர். தேசத்தின் பொருளாதார விடுதலையே முக்கியமென இரவும் பகலுமாக உழைத்தனர். இன்று சகல





துறைகளிலும் உலகமே வியக்கக்கூடிய வகையில் தலைநிமிர்ந்து அந்த தேசம் நிற்கின்றது. இன்றல்ல 30 வருடங்களுக்கு முன்னரே நிமிர்ந்து விட்டது.

சிங்கப்பூர் சுதந்திரமடைந்த காலப் பகுதியில் சிங்கப்பூரின் சிற்பியிடம் உங்கள் சிங்கப்பூரை எவ்வாறு உருவாக்கப் போகின்றீர்கள் என்பதற்கு அவர் அளித்த பதில், சிலோன் மாதிரி மாற்றி அமைக்கப்போகின்றேன் என்றார். ஆனால் 30 வருடங்களின் பின்னர் அதாவது 1995ம் ஆண்டு சிங்கப்பூரின் அமைச்சர் ஜெயக்குமார் அவர்கள், உள்ளூர் கூட்டமொன்றில் உரையாற்றிய போது பின்வருமாறு கூறினார். நாங்கள் பல மொழி பேசுகின்ற, பல கலாசாரம், சமயத்தை பின்பற்றுகின்ற மக்கள்கூட்டத்தை கொண்ட நாடு. இங்கு நாங்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம். இதனால் நாம் பாரிய பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கின்றோம். இவ்வாறு நாம் ஒற்றுமையாக செயற்படாமல் விட்டிருந்தால் சிறிலங்காவைப்போல் சீரழிந்திருப்போம் என்று கூறினார்.

**செல்வரட்ணம் சுதாகரன்**

இலங்கையின் இன ஒற்றுமையையும் பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்த சிங்கப்பூர் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு கருத்துக்களையும் செயற்பாடுகளையும் செய்து வருகின்றது. இதை இலங்கைத் தலைவர்கள் ஒரு போதும் உணர்ந்து கொள்வதாக இல்லை. இதற்கு சிறந்த உதாரணமாக இலங்கை பிரதம மந்திரி திரு ரணில் விக்ரமசிங்க அவர்கள், தான் பிரதமராக பதவி ஏற்ற பின் 2016ம் ஆண்டு சிங்கபூரிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அப்போது அவரை நான்கு பிரதான அமைச்சர்கள் சந்தித்தார்கள். அவர்கள் முறையே பிரதி பிரதம மந்திரி திரு.தர்மன் சண்முகரத்தினம், உள்நாட்டு அலுவல்கள் மட்டும் சட்டத்துறை அமைச்சர் திரு.சண்முகம், வெளிநாட்டு அமைச்சர் திரு.விவியன் பாலகிருஸ்ணன், வர்த்தக கைத்தொழில் அமைச்சர் திரு.ஈஸ்வரன் உட்பட்ட ஏனைய இரு அமைச்சர்களையும் சந்தித்தார்.



அவ்வாறே இவ்வருடமும் பிரதமர் ரணில் சிங்கப்பூர் சென்றபோது அமைச்சர்களான திரு.விவியன் பாலகிருஸ்ணன் (வெளிநாட்டு அலுவல்கள்), திரு.சண்முகம் (சட்டம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள்)ஆகியோரை சந்தித்தார்.

இங்கு ஒரு பிரதான செய்தியில் சிங்கப்பூர் அரசாங்கம் நேரடியாகவும், மறைமுகமாகவும் இலங்கையில் இருக்கக்கூடிய அரசியல்வாதிகளிற்கு சொல்கின்றது. அதுதான் இன ஒற்றுமை. சிங்கப்பூரில் இருக்ககூடிய தமிழர்களின் தொகை வெறும் இரண்டு இலட்சமாகும். சிங்கப்பூரின் மொத்த சனத்தொகை 56 இலட்சம். இரண்டு இலட்சம் மக்கள் கூட்டத்தில் இருந்து ஐந்து முக்கிய அமைச்சர்கள் அமைச்சரவைக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களை திரு.ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்க வைத்திருக்கின்றார்கள். இதில் இருந்து இலங்கைப்பிரதமர் ஒரு பாடத்தினை படித்திருக்க முடியாதா?

இவர் ஓர் உண்மையான நாட்டை நேசிக்கும் தலைவராக இருந்திருந்தால் சிங்கப்பூர் விஜயம் முடிந்து வந்ததுமே இனப்பிரச்சினையை ஆறுமாதத்திற்குள் தீர்த்துவைத்து இந்த நாட்டை கட்டியெழுப்பவேண்டுமென்ற தன்மையுடன் செயற்பட்டிருக்கலாம். ஜனாதிபதியுடனும் ஏனைய அரசியல் தலைவர்களுடனும் ஒற்றுமையாக முயற்சிகளை மேற்கொண்டிருக்கலாம். மாறாக செவிடன் காதில் ஊதிய சங்குபோல் பிரதமர் செயற்படுகின்றார். நித்திரை கொள்பவனை எழுப்பலாம், ஆனால் நித்திரை கொள்வதுபோல் நடிப்பவனை எழுப்ப முடியாது. இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களிற்கு இந்த நாட்டில் இனப்பிரச்சினையை தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்ற அக்கறை துளி கூட இல்லை. அது மட்டுமல்ல அவர் இந்த நாட்டை நேசிப்பவராக இருந்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றே இந்த தேசத்தின் முன்னேற்றத்திற்கு வழி காட்டும் என்று முடிவெடுத்திருப்பார்.

நல்லாட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டபோது தேசிய அரசாங்கமாக அது உருவெடுத்தது. மக்கள் இனப்பிரச்சினையை தீர்த்து வைத்து நாட்டின் தேசிய பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கே வாக்களித்தார்கள். ஆனால் கிடைத்த சந்தர்ப்பத்தை இந்த அரசியல் தலைவர்கள் வீணடித்து விட்டார்கள்.

அரசு அமையப்பெற்று இரண்டு வருடக்காலப் பகுதிக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வுக்காணப் பட்டிருந்தால் இலகுவாக அதனை சாதித்திருக்க முடியும். மாறாக தேர்தல் முடிவடைந்தவுடன் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வுகான நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேலைகள் ஆரம்பிக்கப் பட்டது. இது முற்றுமுழுதாக ஏமாற்று, வாக்களித்த சிறுப்பான்மையினரையும் சர்வதேசத்தினையும் ஏமாற்றுவதற்கான ஒரு நாடகமே. இனப்பிரச்சினையை தீர்க்க ஒரு துளி கூட பிரதமர் ரணிலிற்கு விருப்பம் கிடையாது.

உண்மையில் இனப்பிரச்சினையை தீர்க்க வெறும் ஆறுமாதகாலம் போதுமானதாகும். 19வது திருத்தசட்டத்தை வரைவதற்கு எவ்வளவு காலம் தேவைப் பட்டது? அவ்வாறே இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் வரையப்பட்ட 13வது திருத்தச்சட்டத்தை வரைவதற்கு எவ்வளவு காலம் தேவைப்பட்டது. இனப்பிரச்சினையை தீர்க்கவேண்டுமென்ற உண்மையான இதேசுத்தியுடன் சிங்கள தலைவர்கள் செயற்படுவது இல்லை. அவ்வாறு செயற்பட்டிருந்தால் பிரதம மந்திரி, ஜனாதிபதியுடன் முரண்பட்டிருக்க மாட்டார். மகிந்த அணி மீள் எழாமல் பாய்ப்படுக்கையாக கிடந்த காலத்திற்குள்லேயே தீர்வு கண்டிருக்கலாம். ஆனால் மகிந்த அணியினரை காப்பாற்றி அவர்களை மீள் எழச்செய்து விட்டு தம்மிடம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் போய்விட்டது என்று பொருள் படவும் தெல்லிப்பளையில் நின்றுக்கொண்டு பிரதமர் நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்.

---

## இனப்பிரச்சினை..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

பேரிடியாகியது. இதனால் ஐக்கியத்துக்கும்.தேசியத்துக்கும் இன இக்கட்சியில் இடமில்லை என்றனர்.அன்றைய ஐ.தே.க.தமிழ் எம்.பிக்களான சு.நடேசபிள்ளை (காங்கேசனதுறை),எஸ்.எம்.இராசமாணிக்கம் ( பட்டிருப்பு),ஏ.எல்.தம்பி ஐயா (ஊர்காவற்றுறை),வீ.நல்லையா( பட்டிருப்பு),சி.சிற்றம்பலம்( மன்னார் ),அருணாசலம் மகாதேவா போன்றோர் இத்தீர்மானம் நிறைவேறியதும் மாநாட்டில் இருந்து இடை நடுவில் வெளியேறினார்கள்.அல்பிறட் தம்பி ஐயாவின் இல்லத்தில் கலந்துரையாடி,ஐக்கிய தேசிய கட்சியில் எதிர்காலத்தில் தமிழர்களுக்கு விமோசனம் இல்லை என்றனர்.

ஜே.ஆர் .ஜெயவர்த்தனா

இதேபோலவே 1975 இல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக இடம் பெற்ற ஐ.தே.க.கூட்டத்தில் பேசிய கட்சியின் தலைவரும்,அன்றைய எதிர்க்கட்சி தலைவருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தாம் பதவிக்கு வந்தால் சர்வகட்சி மாநாடு மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண்போம் என்றார். அக்கூட்டத்தில் பண்டா- செல்வா ஒப்பந்தத்தை அன்றும் எதிர்த்தேன், இன்றும் எதிர்க்கிறேன்,இனியும் எதிர்ப்பேன்.ஏனெனில் அது நாட்டை பிரிக்கும் என்றார். இதனால் அக்கூட்டம் குழப்பத்தில் முடிந்தது.இதேபோல 1982 ஜனாதிபதி தேர்தல் கூட்டத்திலும் சர்வகட்சி மாநாடு- இனப்பிரச்சினை தீர்வு என்றே குறிப்பிட்டார். அதன் பின்னர்தான் 1977,83 கலவரங்கள்,யுத்தம் ஆரம்பம்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா 1974 இல் யாழ்.கோட்டை மைதானத்தில் இடம்பெற்ற கூட்டத்திலும் இனப்பிரச்சினைக்கு இந்த அரசு தீர்வை காண நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினார்.1977 தேர்தல் கிளிநொச்சியில் அமைச்சர் செல்லையா குமாரசூரியரின் கூட்டத்தில் பேசியபோதும் அவர் இதனையே குறிப்பிட்டார். ஆனால்.1977 தேர்தலில் சுதந்திரக்கட்சி படுதோல்வி அடைந்தது. அவரின் மகள் சந்திரிகாவும் பிரதமராக வந்த பின்பு ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பேன்,யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவேன் என்றார். என்ன நடந்தது. இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்

பிரதமர் ஆர்.பிரேமதாச

1988 ஐ.தே.க ஜனாதிபதி தேர்தல் கூட்டம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது பேசிய பிரதமர் ரணசிங்க பிரேமதாசவும் தான் ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடாத்துவேன்,யுத்தத்தை நிறுத்துவேன்,இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை காண்பேன் அதுவும் வெளியார் உதவியின்றி தீர்வு என்றார். என்ன நடந்தது. தீர்வு வந்ததா. 1990 இரண்டாவது ஈழப் போர் ஆரம்பம்.

பிரதமர் டீ.பி.விஜயதுங்கா

பிரதமர் டீ.பி.விஜயதுங்கா ஒரு நிகழ்வில், இங்கே இனப்பிரச்சினையே இல்லை. பயங்கரவாதப்பிரச்சினையே உள்ளது. தமிழர்களுக்கு சம்பளம், ஓய்வூதிகொடுப்பனவு, நிவாரண உதவிகளை அரசே வழங்குகிறது.இலங்கையின் தெற்கில் சகல இன மக்களும் ஒன்றாகவே வாழுகின்றனர். என்ன இனப்பிரச்சினை என்றார். இவர்களைப் போலவே பிரதமர் ரணிலும் ஒரு பொய்யை கூறி தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளார்.அடுத்த முறையும் நாம் பதவிக்கு வர ஆதரவு தரும்படி மறைமுகமாக கேட்கிறார்.

ஜனாதிபதி தேரதல்,பாராளுமன்ற தேர்தல்,மாகாணசபை தேர்தல் என மூன்று தேர்தல்களை நாடு சந்திக்கவுள்ளது. இந்த தேர்தல்களில் சிங்கள மக்களின் அதிகபட்ச வாக்குகளை பெறவேண்டியுள்ளது. அதனால்,தற்போதைய நாட்டின் அரசியல் சூழல் நிலைமைகளால் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும் நடவடிக்கையை எடுத்தால் அது ஐக்கிய தேசிய கட்சிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்பது பிரதமருக்கு தெரியும். அதனால் அவர் தந்திரமாக இந்த அரசியல் தீர்வு விடயத்தை கூறியுள்ளார். தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் மௌனமாக உள்ளது.







# ஏரியா 51; வேற்றுக்கிரகவாசிகள் வசிக்கிறார்களா?

அது ஒரு நகைச்சுவை போல தொடங்கியது. ஆனால் ஏரியா 51 அருகில் மக்கள் செல்லக் கூடாது என்று அமெரிக்க விமானப் படை கூறியுள்ளது. அமெரிக்காவில் நெவேடா மாகாணத்தில் உள்ள அதிகபட்ச ரகசிய இடமான ஏரியா 51ல் அத்துமீறி நுழைவதற்கான முகநூல் நிகழ்ச்சியில் பங்கேற்க விருப்பம் தெரிவித்து பத்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பதிலளிக்குமாறு கோரும் விண்ணப்பம் (ஆர்.எஸ்.வி.பி.) செய்திருந்தனர். அங்கு வேற்றுக்கிரகவாசிகள் இருப்பதாக சிலர் நம்புகின்றனர்.

அவர்களுடைய துப்பாக்கிக் குண்டுகளைவிட நாம் வேகமாகச் செல்வோம். வேற்று கிரகவாசிகளை நாம் பார்ப்போம் என்று பொருள்படும் வகையில் ஆயிரக் கணக்கானோர் அந்த முகநூல் பக்கத்தில் கருத்துகள் பதிவிட்டுள்ளனர்.

அமெரிக்கா மற்றும் அதன் சொத்துகளைப் பாதுகாக்க தாங்கள் தயாராக இருப்பதாக, வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையிடம் விமானப் படை பெண் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

முகநூல் நிகழ்வு (உங்உமீகூ) பக்கத்தில் இதுபற்றி கருத்து தெரிவித்துள்ள முகநூல் பயன்பாட்டாளர் ஜாக்சன் பர்னெஸ், ஹலோ அமெரிக்க அரசே, இது வெறும் நகைச்சுவை தான். இந்தத் திட்டத்தை அமல்படுத்தும் எண்ணம் எனக்குக் கிடையாது என்று கூறியுள்ளார்.

இன்டர்நெட்டில் தம்ஸ்அப்கள் கிடைக்கும் என்பதற்காகவும், இது விளையாட்டாக இருக்கும் என்பதற்காகவும் இப்படி செய்தேன். உண்மையிலேயே ஏரியா 51ல் மக்கள் அத்துமீறி நுழைந்தால் நான் பொறுப்பாளியல்ல என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இதில் நகைச்சுவை இருப்பதாக விமானப்படை எடுத்துக் கொள்ளவில்லை.

ஏரியா 51 என்பது அமெரிக்க விமானப் படையின் திறந்தவெளிப் பயிற்சி முகாம். அமெரிக்க ஆயுதப் படையினருக்குப் பயிற்சி அளிக்கும் பகுதிக்கு வர யாரும் முயற்சித்தால் அதை நாங்கள் தடுத்து நிறுத்துவோம்'' என்று பெண் செய்தித் தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏரியா 51 பற்றிய செய்திகள் என்ன?

வேற்று கிரகங்களில் உயிரினங்கள் இருப்பது பற்றியும், வேற்றுக்கிரக பறக்கும் சாதனங்கள் பற்றி அமெரிக்க அரசிடம் தகவல்கள் உள்ளதாகவும், மக்களிடம் தெரிவிக்காமல் அவற்றை மறைத்து வைத்திருப்பதாகவும் சிலர் கருதுகின்றனர்.

2013 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட - ஏரியா 51 முகாமில் - பிடிபட்ட வேற்றுகிரகவாசிகள் வைக்கப்பட்டுள்ளனர் - அவர்களுடைய தொழில்நுட்பமும், பறக்கும் வாகனமும் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன என்று அவர்கள் நினைக்கிறார்கள். இதை அமெரிக்க அரசு மறுத்து வருகிறது.

ஏரியா 51ல் பணியாற்றிய இயற்பியலாளர் என்று தம்மை கூறிக் கொண்ட பாப் லாஸர் என்பவர் அமெரிக்கத் தொலைக்காட்சி ஒன்றில் 1989ல் பேட்டி அளித்த போது, இந்தத் தகவல்கள் பரவத் தொடங்கின.

நகைச்சுவை நடிகர் ஜோ ரோகனின் போட்காஸ்ட்டில் சமீபத்தில் அவர் பங்கேற்றார். அவரைப் பற்றி நெட்பிலிக்ஸ்-ல் ஆவணப்படம் ஒன்றும் வெளியானது. அதுதான் அவருடைய கதை குறித்து புதிய ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அடையாளம் தெரியாத பறக்கும் வாகனத்தை எடுத்துச் செல்வதில் தாம் பணியாற்றியதாகவும், பூமியில் வேற்று கிரகவாசிகள் இருப்பதை விவரிக்கும் அரசு ஆவணங்களை தாம் படித்ததாகவும் லாஸர் கூறியிருந்தார்.

அவர் சொன்னவற்றுக்கு உறுதியான ஆதாரங்கள் அல்லது அத்தாட்சி எதுவும் அவரிடம் இல்லை. அவர் குறிப்பிடும் இயற்பியல் பல்கலைக்கழகப் பட்டமும் இல்லை - ஆனால் ஏரியா 51 பற்றிய கதைகளை பரபரப்பாக்குவதில் அவர் நிச்சயமாக உதவியாக இருந்திருக்கிறார்.

அடையாளம் தெரியாக பறக்கும் வாகனங்களின் புதிரும், பழமையான நம்பிக்கையும் என்ற புத்தகத்தை எழுதிய தாமஸ் புல்லர்டு பின்வருமாறு கூறியுள்ளார் : ``வியட்நாம் மற்றும் வாட்டர்கேட் நிகழ்வுகளுக்கு பிறகு அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான நம்பகத்தன்மை குறைந்து விட்ட நிலையில், ரோஸ்வெல் மற்றும் ஏரியா 51 ஆகியவை அரசின் இரட்டை வேட நிலையின் மாறுபட்ட வார்த்தைகள் என்ற அளவில் பார்க்கப்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ளார்.

1947ல் வான்வழியாக வந்த ஒரு பொருள் நியூ மெக்சிகோவில் விழுந்து நொறுங்கிய இடம் ரோஸ்வெல்.

அது வானிலை பலூன் என்று ராணுவம் கூறுகிறது. ஆனால், அது விபத்தில் சிக்கிய அடையாளம் தெரியாத (வேற்றுக் கிரக) பறக்கும் வாகனம் என்றும், அது மூடி மறைக்கப்பட்டுவிட்டது என்றும் பரவலாகப் பேசப்படுகிறது.

உண்மையிலேயே அது அணு பரிசோதனை கண்காணிப்பு பலூன் என்று 1990களில் அமெரிக்க அரசு கூறியபோதிலும், அந்த நிகழ்வு நிறைய கவனத்தை ஈர்ப்பதாக இன்னும் உள்ளது. அதுபற்றிய தகவல்கள் மூடி மறைக்கப் படுவதாகவும் கருதப்படுகிறது.

லாஸ் வேகாஸில் இருந்து வடமேற்கே 80 மைல்கள் தொலைவில் நிவேடாவில் உள்ள ராணுவப் பயிற்சி முகாம் தான் ஏரியா 51 எனப்படுகிறது.

நிவேடா பரிசோதனை மற்றும் பயிற்சி வளாகம் என்று அதை அமெரிக்க அரசு குறிப்பிடுகிறது. அது பரவலான எட்வர்ட்ஸ் விமானப் படை தளத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள பல ராணுவ முகாம்களைப் போல, இதன் முதன்மையான பயன்பாடு பற்றிய தகவல்கள் மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

முகநூல் கமெண்ட்களில் உள்ளதைப் போல அந்த இடத்தில் அத்துமீறி நுழைவது சிரமமான காரியம் - அது மக்களுக்குத் தடை செய்யப்பட்ட பகுதி. வெளி வளாகத்தில் ஆயுதம் ஏந்திய காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் துறை அனுமதி இல்லாமல், அந்தப் பகுதிக்கு மேலே உள்ள வான்வெளியில், நுழைவதும் கஷ்டமான காரியம். அதற்கு அனுமதி தரப்படுவது கிடையாது.

``நாங்கள் விமானப்படை தளத்திற்குச் செல்லவில்லை. ஆனால், பாலைவனத்தில் எவ்வளவு தொலைவுக்குச் செல்ல முடியுமோ அவ்வளவு தொலைவு செல்வோம், நம் அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம் என நினைத்துப் பயணித்தோம் - விலகி இருக்குமாறு அமெரிக்க ராணுவத்தின் மிரட்டும் வகையிலான எச்சரிக்கைகளை மட்டுமே நாங்கள் பார்க்க முடிந்தது என்று சினியட் கர்வன் தெரிவித்தார்.

அவர் முன்பு ரேடியோ 1 நியூஸ்பீட்-ல் பொழுதுபோக்குப் பிரிவு செய்தியாளராக இருந்தார். இந்தக் கட்டுரை தொடர்பான விஷயங்களைக் கையாண்டதை அடுத்து, எங்களுடைய முதன்மையான வேற்றுகிரகவாசி செய்தியாளராகிவிட்டார். 2014ல் சாலைப் பயணமாக அவர் ஏரியா 51-க்குச் சென்றார்.

உயர் ரகசியத்தன்மை உள்ள அந்த ராணுவ முகாமை சுற்றியுள்ள அனைத்துப் பகுதிகளுமே வேற்றுகிரகம் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தன.

அங்கு `பூமிவாசிகளை வரவேற்கிறோம்' என்ற அறிவிப்புப் பலகை, நெடுஞ்சாலையில் இருந்தது

பெட்ரோல் நிலையமும் வேற்றுகிரகத்தைப் போலவே அமைக்கப்பட்டிருந்தது. அலுவலர்களும் அதுபோலவே இருந்தனர். கவுண்டரில் இருந்த பெண்மணியும் போரடித்து இருப்பவரைப் போல இருந்தார்.

அங்கு சுற்றியிருந்த சில கட்டடங்களின் சுவர்களில் கார்ட்டூன் வேறுகிரகவாசிகள், அடையாளம் தெரியாத பறக்கும் வாகனங்களின் படங்கள் இருந்தன. அவற்றில் பிரபலமான லிட்டில் ஏரியன் மோட்டலும் ஒன்று.

புகைப்படம் எடுத்துக் கொள்ளத் தூண்டும் நிறைய அம்சங்கள் இருந்தன; ஆனால் ஏரியா 51 ன் பாதுகாப்பான வாயிலில் இருந்து நாங்கள் கண்காணிக்கப்படுகிறோமா என்று எங்களுக்கு சிறிது அச்சம் இருந்தது.

நன்றி: பிபிசி

# டொனால்ட் ட்ரம்பின் மூலோபாயம்

காங்கிரஸ் சபையில் ஜனநாயகக் கட்சியின் நான்கு புதிய பெண் உறுப்பினர்களான Rashida Tlaib, Alexandria Ocasio-Cortez, Ilhan Omar மற்றும் Ayanna Pressle ஆகியோரைக் குறித்து மோசமான இஸ்ரேல்-விரோதமானவர்கள், அமெரிக்க-விரோதமானவர்கள், பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்கள் என்று ட்வீட் செய்து, டொனால்ட் ட்ரம்ப் நேற்று அவர்கள் மீதான அவரின் பாசிசவாத தாக்குதல்களை நீடித்தார். தீவிர இடதைக் கண்டித்து, காங்கிரஸ் சபையின் அந்த பெண்மணிகளை கம்யூனிஸ்டுகள் என்று குறிப்பிட்ட ட்ரம்ப், தேசத்தை வெறுக்கிறீர்கள் என்றால், அல்லது இங்கே மனநிறைவாக இல்லை என்றால், நீங்கள் வெளியேறலாம்! என்பதையும் சேர்த்துக் கொண்டார்.

காங்கிரஸின் அந்த நான்கு பெண் உறுப்பினர்களும் -அவர்கள் அனைவரும் அமெரிக்க பிரஜைகள்- அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த குற்றங்கள் நிறைந்த இடங்களுக்கே திரும்ப செல்லட்டும் என்று ட்வீட் செய்து, ட்ரம்ப் ஞாயிற்றுக்கிழமை அந்த ஆத்திரமூட்டலை தொடங்கி இருந்தார். பொதுவாக சமூக எதிர்ப்பையும் குறிப்பாக சோசலிச எதிர்ப்பையும் பயங்கரவாதத்திற்கான ஆதரவுடன் சமாந்தரப்படுத்தி, அவர் ட்வீட் செய்தார், நாம் ஒரு போதும் ஒரு சோசலிச அல்லது கம்யூனிச நாடாக இருக்கமாட்டோம்.

நேற்று நியூ யோர்க் டைம்ஸில் வெளியான ஒரு தலையங்க அறிக்கை, ட்ரம்பின் கருத்துக்கள் அவரின் கொள்கை குழப்பங்கள், அவரின் நீதிமன்ற தோல்விகள், அவரின் அரசியல் தோல்விகளில் இருந்து கவனத்தை திசைதிருப்பும் தந்திரங்கள் என குறிப்பிட்டது. இலக்கு வைக்கப்பட்ட அந்த நான்கு பெண் காங்கிரஸ் உறுப்பினர்களும், திங்களன்று மதியம் ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில், ட்ரம்பின் ஆத்திரத்தை கவனக்குறைவான கருத்து என்பதாக குறிப்பிட்டு அதேபோன்ற கருத்துக்களை வெளியிட்டனர்.

இது, திங்கட்கிழமை பத்திரிகையாளர் சந்திப்பின் போது ட்ரம்ப் எழுதி எடுத்து வந்த உரை குறிப்புகளைக் கொண்டு பேசியதை புகைப்படக்காரர்கள் படமெடுத்திருந்தனர் என்ற உண்மையுடன் முரண்பட்டிருந்தது. சொல்லப் போனால் அது அபாயகரமானது-ஏனென்றால் அவர்கள் அமெரிக்காவை வெறுப்பதாக தெரிகிறது, என்று அந்த முன்தயாரிக்கப்பட்ட குறிப்புகள் குறிப்பிடுகின்றன. அவர்கள் அமெரிக்கா சோசலிசமாக இருக்க விரும்புகிறார்கள்.

இந்த குறிப்புகளை விரிவாக்கி, ட்ரம்ப் அல் கொய்தா மீதான அவர்களின் அன்பை குறிப்பிட்டதுடன், அந்த காங்கிரஸ் பெண் உறுப்பினர்கள் யூதர்களை வெறுப்பதாக வாதிட்டார். அவரது ட்வீட்கள் மீது வெள்ளையின தேசியவாதிகள்'' உற்சாகமடைந்திருப்பது கவலை அளிக்கிறதா என்று வினவிய போது, ட்ரம்ப், பலரும் என்னுடன் உடன்படுகிறார்கள் என்பதால் அது எனக்கு கவலையில்லை, என்று பதிலளித்தார்.

புலம்பெயர்ந்தவர்கள் மீதான ட்ரம்பின் ஒடுக்குமுறையை வடிவமைத்த ஸ்டீபன் மில்லர் உட்பட வெள்ளை மாளிகையின் பாசிசவாத மூளை ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்ட ஓர் ஆழ்ந்து ஆராய்ந்த அரசியல் மூலோபாயத்திற்கு ஏற்ப, ட்ரம்ப் செயல்பட்டு வருகிறார். அவர் பாசிசவாத மற்றும் அதிவலது அரசியல் இயக்கங்களால் பகிரப்பட்ட அரசியல் கருத்துருக்களை மீண்டும் மீண்டும் கூறியவாறு, அந்த நான்கு பெண் காங்கிரஸ் உறுப்பினர்களையும் வழக்கமாக தாக்கி வருகிறார்.

அவரது நிர்வாகத்திற்கான எதிர்ப்பையும் அவரின் தனிப்பட்ட ஆட்சி மீதான விமர்சனங்களையும் பயங்கரவாதத்திற்கான ஆதரவுடன் சமாந்தரப்படுத்தி, பேச்சு சுதந்திரம் மற்றும் விமர்சனபூர்வ சிந்தனைகளை குற்றகரமாக்க வழி வகுக்கிறார். அரசாங்க கொள்கைகளைக் குறைகூறுவது தேசதுரோகம் என்ற ரீதியில், எதிர்ப்பாளர்களை அபாயகரமானவர்கள்'' என்றும், தேசத்தை வெறுப்பவர்கள் என்றும் அவர் குறிப்பிடுகிறார். அவர் சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தை அமெரிக்க மக்களுக்கு எதிராக திருப்பிவிடப்பட்ட வெளிநாட்டு சித்தாந்தங்கள் என்பதாக சித்தரிக்கிறார்.

இத்தகைய சிந்தனைகள், நாஜி சர்வாதிபத்திய ஆட்சியை நியாயப்படுத்த விதிவிலக்கான நிலை என்ற கருத்துருவை உருவாக்கிய சட்ட வல்லுனர் கார்ல் ஷிமித் போன்ற நாஜி தத்துவவியலாளர்களால் அபிவிருத்தி செய்யப்பட்டவையாகும். மனநிறைவோடு இல்லாதவர்கள் மற்றும் அமெரிக்கா சோசலிசமாக விரும்புபவர்கள் அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டும் என்ற ட்ரம்பின் வலியுறுத்தல்களுக்குப் பின்னால் ஒளிந்திருப்பது என்னவென்றால், அவர்கள் சுயமாக முன்வந்து அதை செய்யவில்லை என்றால், படைகளைக் கொண்டு அவர்களைச் சுற்றி வளைத்து அரசாங்கம் அதை மெய்பிக்கும் என்ற சூசகமான குறிப்பாகும்.

ட்ரம்பின் அறிக்கைகளின் கணக்கிடப்பட்ட மூலோபாய தன்மை, அவை முன்வைக்கப்பட்டு வரும் சூழலால் அடிக்கோடிடப்படுகிறது. அந்நிர்வாகம் குழந்தைகள் உட்பட புலம்பெயர்ந்தவர்களைக் கழிவறை வசதி கூட இல்லாத அடைப்பு முகாம்களில் சிறை வைத்து வருகிறது என்று வலியுறுத்தியதற்காக, ட்ரம்ப் அதி இடதை கண்டித்தார். அவை தடுப்பு முகாம்கள் இல்லை, அவை நிஜமாகவே சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றன, என்றார். இலக்கு வைக்கப்பட்ட 10 நகரங்களில் தொழிலாள வர்க்கத்தின் கணிசமான பகுதியாக விளங்கும் மில்லியன் கணக்கான புலம்பெயர்ந்தவர்கள், இம்மாத தொடக்கத்தில் ட்ரம்பால் அறிவிக்கப்பட்ட அடுத்து நடத்தப்படவிருக்கின்ற தேடல்வேட்டைகளைக் குறித்த அச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 2020 மக்கள்தொகை கணக்கெடுப்பில் குடியுரிமை அந்தஸ்து மீதான கேள்வியை உள்ளடக்குவதற்கு அவருக்கு தடை விதித்த ஓர் உச்சிநீதிமன்ற முடிவு மீறப்படுமென கடந்த வாரம் அவர் அச்சுறுத்தினார். மத்திய அமெரிக்கர்கள் அமெரிக்காவில் தஞ்சம் கோருவதை நடைமுறையளவில் தடுக்கும் ஒரு புதிய மத்திய அரசு நெறிமுறையைத் திங்களன்று அந்நிர்வாகம் திணித்தது-இது தெளிவாக ஒரு சர்வதேச விதிமீறலாகும்.

இந்த நடவடிக்கைகள், பணியில் உள்ள ஆயிரக் கணக்கான துருப்புகளை அவர் அமெரிக்க-மெக்சிகன் எல்லையில் நிலைநிறுத்தி இருப்பதைத் தொடர்ந்தும், அவரின் எல்லைச்சுவர் கட்டமைப்பதற்காக பென்டகன் நிதியை ஒதுக்குவதில் காங்கிரஸ் கட்டுப்பாடுகளை நீக்க ஓர் அவசரகாலநிலை பிரகடனத்தைத் தொடர்ந்தும் வருகின்றன.

ட்ரம்ப் இத்தகைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும், அடிப்படை அரசியலமைப்பு விதிகளை மீறுவதற்கும் மற்றும் உத்தரவாணைகளைக் கொண்டு சட்டங்களை ஸ்தாபிப்பதற்கும் புலம்பெயர்வோர்-விரோத வெறியூட்டலைப் பயன்படுத்தி உள்ளார்.

ட்ரம்பும் அவரது ஆலோசகர்களும், அவரின் பிற்போக்குத்தனமான கொள்கைகளை ஆதரிக்கும் சிறுபான்மை வாக்காளர்களுடன் சேர்ந்து -குடிபெயர்வு மற்றும் சுங்க அமலாக்கத்துறை மற்றும் சுங்க-எல்லை பாதுகாப்பு ஆணையத்தின் பத்தாயிரக் கணக்கான முகவர்கள் உள்ளடங்கலாக- அரசுக்குள் பாசிசவாத கூறுபாடுகளை இணைத்து அரசியலமைப்புக்கு அப்பாற்பட்ட ஓர் இயக்கத்தைக் கட்டமைக்க முயன்று வருகின்றனர்.

ஜனநாயகக் கட்சியின் விடையிறுப்போ, அதன் குறிப்பிடத்தக்க அலட்சியத்துடன் சேர்ந்து ட்ரம்ப் மூலோபாயத்திற்குச் சாதகமாக இனவாத அடிப்படையிலான முறையீட்டை கொண்ட ஒரு வழமையான கலவையாகும். ட்ரம்பின் கருத்துக்களுக்காக அவரை முறைப்படி கண்டிப்பதற்கு ஜனாதிபதி வேட்பாளர் தேர்வுக்குழுக்குள் இருந்து வந்த அழைப்புகளை அது எதிர்ப்பதாக ஜனநாயகக் கட்சி தலைமை நேற்று அறிவித்தது, அதற்கு பதிலாக அது ரோனால்ட் ரீகனை அமெரிக்க ஜனநாயகத்தின் உரு அடையாளமாக தாங்கிப்பிடிக்கும் ஒரு மிருதுவான, கூடுதல் இணைப்பு ஏதுமற்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு ட்ரம்பை எரிச்சல்படுத்துவதை தேர்ந்தெடுக்கிறது.

ட்ரம்பின் சர்வாதிகார நகர்வுகளுக்கு ஜனநாயகக் கட்சி எந்த தீவிர எதிர்ப்பையும் காட்டவில்லை என்பதோடு, புலம்பெயர்ந்தவர்கள் மீதான அவரின் போருக்கு நிதி வழங்க கூடுதலாக 4.6 பில்லியன் டாலரை அவருக்கு வழங்குவதற்கு கடந்த மாதம் வாக்களித்தது. ஜனநாயகக் கட்சி தரப்பில் அணிசேர்ந்த பத்திரிகைகள், பொதுவாக வெள்ளையினத்தவர்களையும் குறிப்பாக தொழிலாள வர்க்க வெள்ளையினத்தவர்களையும் வக்கிரமாக குறைகூறியதன் மூலமாக ட்ரம்பின் பழியுரைக்கு விடையிறுத்துள்ளன. வெள்ளையின அடையாள அரசியல் ட்ரம்பை வழிநடத்துகிறது, குடியரசுக் கட்சி அவரின் கீழ் உள்ளது, என்று தலைப்பிட்ட ஒரு கட்டுரையில், வாஷிங்டன் போஸ்ட் நேற்று ட்ரம்பின் சமீபத்திய கருத்துக்களை வெள்ளையினத்தின் மனக்குறைகள் என்று பழிசுமத்தியது. வெள்ளையின அமெரிக்கர்களில் பெரும்பான்மையினர் தேர்தல்-ஆண்டு கருத்துக்கணிப்புகளில் சில இனவாத மனக்கசப்புகளை வெளிப்படுத்துகின்றனர், என்று வலியுறுத்திய போஸ்ட், வெள்ளையின அடையாளத்தின் உணர்வு கல்லூரி படிப்பு பெற்ற வெள்ளை இனத்தவர்களை விட கல்லூரி படிப்பு முடித்திராத வெள்ளை இனத்தவர்கள் மத்தியில் பலமாக இருப்பதாக விவாதிக்க ட்யூக் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரை மேற்கோளிட்டது.

ட்ரம்பின் அமெரிக்கா ஒரு வெள்ளை இன மனிதனின் நாடு என்று தலைப்பிட்ட நியூ யோர்க் டைம்ஸ் இன் திங்கட்கிழமை கட்டுரை ஒன்றில், ஜனநாயகக் கட்சியினர் வெள்ளை இனத் தொழிலாளர்களுக்கான எந்தவொரு முறையீட்டில் இருந்தும் முற்றிலுமாக தங்களைத் தொலைவில் நிறுத்தி கொள்வதன் மூலமாக, இனவாத வெள்ளையின வாக்காளர்களைத் தண்டிக்க வேண்டுமென Jamelle Bouie கோரினார்.

ஜனாதிபதியின் இரத்தமும்-தேசமும் (blood-and-soil) இனவாதத்தை விட எது மிகவும் அதிர்ச்சியூட்டுகிறது என்றால், அவர் எழுதினார், ஜனநாயகக் கட்சியின் உயரடுக்குகள் -அல்லது குறைந்தபட்சம் அவர்களில் ஒரு குழு- எவ்வாறு இதேபோன்ற அனுமானங்களோடு செயல்படுகின்றன என்பதுதான். இல்லை, அவர்கள் வெள்ளை இன உழைக்கும் செராத்துரிமையாளர் மட்டுமே மதிப்புடைய பிரஜைகள் என்று பாசாங்கு செய்யவில்லை, ஆனால் அந்த வாக்காளர்களை தம் பக்கம் வென்றெடுக்கவேண்டுமென்ற ஆவேசம் அவர்களுக்கு உள்ளது என்று குறிப்பிட்டார்.

தொழிலாள வர்க்கம் மீதான வெறுப்புடன் செறிவூட்டப்பட்ட இதுபோன்ற கருத்துக்கள், ஜனநாயகக் கட்சியின் இனவாத அரசியலுக்கு அதிவலதிடம் இருந்து ஓர் இனவாத விடையிறுப்பு அவசியப்படுவதாக வாதிட பாசிசவாதிகளுக்கு வளமான களத்தை வழங்குகின்றன. 2017 இல் ஸ்டீபன் பானன் கூறியதைப் போல, அடையாள அரசியலைக் குறித்து ஜனநாயக கட்சியினர் எவ்வளவு காலத்திற்கு பேசுகிறார்களோ, அது எனக்கு வசதியாக இருக்கும், என்றார்.

ட்ரம்ப் அரசாங்கம் மக்கள்தொகையில் பெரும் பெரும்பான்மையினரால் வெறுக்கப்படும், தூற்றப்படும் மற்றும் நீடித்த நெருக்கடியில் சிக்கிய ஓர் அரசாங்கமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக அது, ஆசிரியர்களின் வேலைநிறுத்தங்கள் மற்றும் பிற வேலைநிறுத்தங்களின் அலையில் ஆரம்ப நிலையில் எடுத்துக்காட்டப்பட்டவாறு அமெரிக்காவுக்குள் தொழிலாள வர்க்க எதிர்ப்பின் வளர்ச்சியைக் குறித்து அஞ்சுகிறது.

அது குறைந்த அபாயத்தையும் ஏற்படுத்தாது. அதன் பிரதான சொத்திருப்பே ஜனநாயகக் கட்சியின் பெயரளவிலான எதிர்ப்பாகும். ஜனநாயகக் கட்சியினரும் பாரிய சமூக எதிர்ப்புக்கான சாத்தியக் கூறால் பீதி கொண்டுள்ளனர், அவர்கள் அவர்களின் அனைத்து முயற்சிகளையும், ட்ரம்ப் மற்றும் அவரின் பெருநிறுவன-சார்பு, போர்-வெறி கொள்கைகளுக்கான எதிர்ப்பைத் தணிப்பதற்கும் மற்றும் அடைத்து வைப்பதற்கும் அர்ப்பணித்துள்ளனர்.

சோசலிச சமத்துவக் கட்சி பாசிசவாத அச்சுறுத்தலுக்கு ஒரு வர்க்க விடையிறுப்புக்காக போராடுகிறது. உலகெங்கிலுமான பில்லியன் கணக்கான மக்கள் அமெரிக்காவில் சமீபத்திய அபிவிருத்திகளால் பீதியடைந்துள்ளனர். அமெரிக்காவில் குழந்தைகளைக் கூண்டுகளில் அடைப்பதற்கும் மற்றும் நிர்வாக கட்டளை ஆட்சிக்கும் அங்கே பெருந்திரளான மக்கள் ஆதரவு இல்லை. ட்ரம்பின் சொந்த வாக்காளர்களில் பெரும்பான்மையினரே கூட ஒரு பாசிசவாதியை தேர்ந்தெடுக்க விரும்பவில்லை.

சமூக சமத்துவத்திற்கான ஒரு பொதுவான, சர்வதேச போராட்டத்தில் அனைத்து இனங்கள் மற்றும் தேசியங்களையும் சேர்ந்த தொழிலாளர்களின் சமூக சக்தியை அணிதிரட்டுவதே தலையாய பணியாகும். தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்தை ஸ்தாபிப்பதற்கு, இனவாத மற்றும் அடையாள அரசியல், உயர் மட்ட நடுத்தர வர்க்கத்தின் பிற்போக்குத்தனமான சித்தாந்தங்களின் விஷத்திற்கு எதிராக ஒரு சளைக்காத போராட்டம் அவசிப்படுகிறது.

இந்த ஜனாதிபதியின் பாசிசவாத துவேசமானது, ட்ரம்ப் என்ற தனிநபரின் மூளையில் இருந்து உதித்ததல்ல. அது, தனது செல்வவளத்தைப் பாதுகாக்க சர்வாதிகாரத்தை நோக்கி வரும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு குறிப்பிடத்தக்க பிரிவினது கண்ணோட்டமாகும். பாசிசத்திற்கு எதிரான போராட்டத்திற்கு அதன் மூலவேரான முதலாளித்துவ அமைப்புமுறைக்கு எதிரான ஒரு போராட்டம் அவசியப்படுகிறது.

நன்றி: உலக சோசலிச இணையத்தளம்




# காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு தெரிவு

**ந.குகதர்சன்**

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்கள் மாகாண மட்டத்தில் உதைப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் எஸ்.எச்.பிர்தௌஸ் தெரிவித்தார்.

திங்கட்கிழமை திருகோணமலையில் பாடசாலைக்கிடையில் நடைபெற்ற கிழக்கு மாகாண மட்ட உதைப்பந்தாட்ட போட்டியில் 18 வயதுக்குட்பட்ட அணி வெற்றி பெற்று அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டிக்கு தெரிவாகி உள்ளனர்.

காத்தான்குடி மத்திய கல்லூரியின் 18 வயதுக்குட்பட்ட அணியின் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை அணியுடன் இறுதிப் போட்டியில் விளையாடி வெற்றி பெற்றுள்ளனர்.



தேசிய மட்டத்திற்கு தெரிவாகி பாடசாலைக்கும், வலயத்திற்கும் பெருமை சேர்த்த மாணவர்கள் மற்றும் மாணவர்களை ஊக்குவித்த உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

# திருவானூர் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்



நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 15ம் கிராமம் திருவானூர் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த ஜூலை 7ம் திகதி வெள்ளிக்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி ஜூலை 18ம் திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறவுள்ளது.

இவ் அலங்கார உற்சவத்தில் 12ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு திருமணமான பெண்களுக்கான திருமாங்கல்ய திருவிளக்கு பூசையும் 13ம் திகதி 15ம் கிராமம் விளாவடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து அடியார்கள் பாற்குட பவனி எடுத்து வந்து முருகப் பெருமானுக்கான சங்காபிஷேகமும் 14ம் திகதி புஸ்பாஞ்சலித் திருவிழாவும் 15ம் திகதி கற்பூரத் திருவிழாவும் 16ம் திகதி மாம்பழத்திருவிழாவும் 17ம் திகதி வேப்பையடி வைத்தியசாலைக்கு முன்பாக வேட்டைக் களத்தில் வேட்டைத் திருவிழா மற்றும் ஊர் வலமும் சிறப்பு பூசை நிகழ்வுகளாக இடம் பெற்று 18ம் திகதி வியாழக்கிழமை காலை பெருந்திரளான பக்தர்கள் மத்தியில் தீர்த்த உற்சவத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

# மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தின் தலைவராக வி.ஆர்.மகேந்திரன் பதவியேற்பு



**புதுக்குடியிருப்பு நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட லயன்ஸ் கழகத்தின் 2019,2020 இற்கான புதிய தலைவராக திருப்பழுகாமத்தைச் சேர்ந்த தேசமான்ய லயன் வி.ஆர்.மகேந்திரன் பதவியேற்றுள்ளார்.

மாவட்ட லயன்ஸ் கழகத்தின் நடப்பாண்டுக்குரிய புதிய தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் பதவியேற்கும் நிகழ்வு மட்டக்களப்பு லயன்ஸ் நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் லயன் ரி.அருணகிரிநாதர், லயன் ஜி.பாஸ்கரன், லயன் செல்வேந்திரன் உட்பட லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

2019,2020 இற்கான புதிய தலைவராக கடந்த பத்து வருடங்களாக உறுப்பினராக இருந்து சிறப்பான சேவையாற்றிவரும் லயன் வி.ஆர்.மகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் போரதீவுப்பற்று திருப்பழுகாமத்தைச் சேர்ந்தவர். போரதீவுப்பற்று கடந்த காலங்களில் பிரதேச சபையின் தவிசாளராகவும் அத்துடன் பழுகாமம் திலகவதியார் இல்லப்பொறுப்பாளர், சராந்திபுரம் விவேகானந்தா விவசாயிகள் அமைப்பின் தலைவர், சமூகநலன்புரி அமைப்பின் தலைவர், ஆகிய பதவிகளை வகித்துள்ளார்.

தற்போது லண்டன் அகிலன் பவுண்டேஷன் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளராகவும், மட்டக்களப்பு மாவட்ட புகைப்பட பிடிப்பாளர் சங்கத் தலைவராகவும், திருப்பழுகாமம் பாஞ்சாலி கலைக்கழகத்தின் பொருளாளராகவும், கணனிகள் மட்டும் காட்சிப்படுத்தல் உரிமையாளர் சங்கத்தலைவராகவும், அரச ஒப்பந்த நிறுவன உரிமையாளர் உட்பட பல்வேறு பதவிகளை வகித்துவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கலந்துரையாடலும் பழமரக்கன்று விநியோகமும்

**புதுக்குடியிருப்பு நிருபர்**

கல்முனை ஹட்டன்நெஷனல் வங்கியினால் ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடலும் பழமரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.



கல்முனை ஹட்டன்நெஷனல் வங்கி முகாமையாளர் ஏ.எல்.எஸ்.அகமட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்முனை பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறும் பலரும் கலந்து கொண்டனர். இங்க 70 வயதிற்குட்பட்ட அனைவருக்கும் ஓரேநாளில் இலகுவாக கடன்களைப் பெற்றுக்கொர்டு:க்கும் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

# விவசாய விரிவாக்கமும் ஆராய்ச்சியும் இணைந்த விவசாயக் கலந்துரையாடல்

**அன்புவெளி நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விவசாய விரிவாக்கமும் ஆராய்ச்சியும் இணைந்த விவசாயக் கலந்துரையாடல் தெற்கு வலய களுதாவளை விவசாய போதனாசிரியர் பிரிவில் கடற்கரை வீதியில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்திற்கு அருகில் கடந்த திங்கட்கிழமை (15) நடைபெற்றது.

கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திரு.கே.சிவநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண மேலதிக ஆராய்ச்சி பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஜே.அரசகேசரி அவர்களும் விவசாய திணைக்களத்தின் கிழக்கு மாகாண பிரதி மாகாண பணிப்பாளர் திரு.ஹரிகரன் அவர்களும் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் திரு.வி.பேரின்பராஜா மற்றும் தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் திரு.ரி.மேகராசா அவர்களும் மட்டக்



களப்பு மாவட்ட விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பெருமளவான விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வின் போது பயிர்களின் நோய்த்தாக்கங்கள் தொடர்பாக களுதாவளை விவசாயிகளின் தோட்டங்களுக்கு நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு நோய் பீடைத் தாக்கங்களை அவதானித்து அவற்றுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டதுடன். மரக்கறிப் பயிர்கள் ஏனைய வயற்பயிர்கள் பழப்பயிர்கள் போன்றவற்றில் பிரதானமாக காணப்படும் நோய் பீடைத் தாக்கங்களுக்கான மாதிரிகள் விவசாயிகளாலும் விவசாய போதனாசிரியர்களாலும் காட்சிப்படுத்தப்பட்டு அவற்றிலுள்ள நோய் நிலமைகள் கண்டறியப்பட்டு அவை ஏற்படுவதற்கான காரணிகள் அந் நோய் நிலமைகளை கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாட்டு முறைகள் என்பனவும் வடமாகாண

மேலதிக ஆராய்ச்சி பணிப்பாளரால் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய பயிர்ப் பராமரிப்புக்கள் பற்றியும் தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் நெய்தல் மேட்டுநில விவசாய அமைப்பினதும் களுதாவளை பிரதேசத்தினதும் பெருமளவான விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# புனரமைப்பில் புறந்தள்ளப்பட்ட கல்முனை அம்மன் கோயில் வீதி

**அன்புவெளி நிருபர்**

கல்முனை நகருக்குள் இருந்து கடற்கரையை நோக்கிச் செல்லும் சுமார் 1.5 கி.மீ நீளமான அம்மன் கோயில் வீதியில் அரைவாசிக்கு மேல் புனரமைக்கப்படாது புறந்தள்ளப்பட்டுள்ளது.



கல்முனை கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் இருந்து சுமார் 600 மீ நீளம் வரை தார் இடப்பட்டு திருத்தப்பணிகள் கடந்த 2013 காலப்பகுதியில் இடம்பெற்ற போதிலும் வீதியின் 900 மீ நீளமான பிற்பகுதி இதுவரை புனரமைப்பில் கண்டுகொள்ளப்படவில்லை எனவும் இதே போன்று பல முக்கிய போக்குவரத்து வீதிகள் பாதி புனரமைப்போடு கைவிடப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கல்முனை கடற்கரையை அண்மித்த பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் நகருக்குள்ளும் ஆலயங்களுக்கும் இவ்வீதியால் வருகைதருகின்ற போது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். மக்களின் இருப்புக்கு அபிவிருத்தியும் அவசியம் என்பதை கருத்தில் கொண்டு விரைவாக இவ்வீதியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கதிர்காம பாதயாத்திரையின் சில காட்சிகள்

**பிள்ளையாரடி நிருபர்**

கதிர்காம பாதயாத்திரையின் போது உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இருந்து காட்டு வழிப் பாதையூடாக தமது யாத்திரையினை ஆரம்பித்த பக்தர்களுக்கு அகத்தியர் பெருமான் அருளாசியோடு, அன்னை சித்தர் ராஜ்குமார் ஸ்வாமியின் பெரும் கருணையினால் சித்தர்களின் குரல்,அகில உலக மஹா சித்தர்கள் ட்ரஸ்ட் ஏற்பாட்டில், லேஷியா, பைரவி கன்ஸ்ட்ரக்ஷன் உபயத்துடன் மட்டக்களப்பு தமிழ் இளைஞர்களின் பூரண ஒத்துளைப்புடன் கதிர்காமம் செல்லும் அடியார்களுக்கு ருத்ராக்ஷ தானம் நடைபெற்றவேளை அமைச்சர் மனோகணேசன், மட்டக்களப்பு மாநகர மேயர் தி. சரவணபவன், பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் மற்றும் பலர் கலந்து சிறப்பித்ததனையும், காட்டுப் பாதையில் எட்டாவது வருடமாகவும் தொடர்ச்சியாக ஸ்ரீ தளதா மாளிகையினால் அன்னதானம் வழங்கப்படுவதையும், கதிர்காமத்தை சென்றடைந்த பக்தர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.













இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 21.07.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# பழமை வாய்ந்த கல்முனை கடற்கரை வீதியை பயன்படுத்த முடியாத நிலையில் அவதியுறும் மக்கள்



**அன்புவெளி நிருபர்**

கல்முனை கடற்கரைக்கு சமாந்தரமாக கல்முனை மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்திற்கு பின்புறமாக செல்லும் கடற்கரை வீதி முற்றாக சிதைவடைந்து பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளது.

இவ்வீதி மிகவும் பழமை வாய்ந்த பிரதான போக்குவரத்துப் பாதையாக காணப்பட்டது. கல்முனைக்குடியை நோக்கி செல்லும் இவ்வீதியில் கல்முனைக்குடியிலிருந்து முற்றாக கொங்கிறீட் இடப்பட்டு புனரமைப்புக்கள் பூர்த்தியாகியுள்ள போதிலும் தமிழர்கள் வாழும் பகுதி மாத்திரம் புனரமைப்பின்றி மேடும் பள்ளமுமாக காணப்படுகின்றது.

அதிகமான பொதுமக்கள் பயன்படுத்தும் உள்வீதியாக காணப்படுவதால் இவ்வீதியால் பயணிப்போர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். தமிழ் அரசியல்வாதிகளும் உரிய அதிகாரிகளும் மக்களின் நலனுக்காக விரைவில் இவ்வீதியை திருத்தித் தருமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




# காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்களை வரவேற்கும் வைபவம்

**ந.குகதர்சன்**



மாகாண மட்ட 18 வயதுக் குட்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்களை வரவேற்கும் வைபவம் காத்தான்குடி காத்தான்குடி மத்திய கல்லூரியில் இன்று நடைபெற்றது.

காத்தான்குடி மத்திய கல்லூரி அதிபர் எஸ்.எச்.பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எஸ்.உமர் மௌலானா, காத்தான்குடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.எம். ஹக்கீம், முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.பதுர்தீன் உட்பட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது மாகாண மட்ட 18 வயதுக்குற்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரி மாணவர்கள் காத்தான்குடி குட்வின் சந்தியிலிருந்து மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதுடன் அதிதிகளும் வரவேற்கப்பட்டனர்.

கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் காத்தான்குடி மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று கிழக்கு மாகாண சம்பியன் அணியாக (2019) தெரிவு செய்யப்பட்டுள்ளது.

18 வயதுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி திருகோணமலையில் இந்தப் போட்டியின் இறுதிப் போட்டி திங்கட்கிழமை (15) நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை உதைபந்தாட்ட அணியும் காத்தான்குடி மத்திய கல்லூரி அணியும் மோதியது. இதில் எந்தவொரு அணியும் கோள்களை போடாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைய பெனல்டியில் 5க்கு 4 என்ற அடிப்படையில் காத்தான்குடி மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று கிழக்கு மாகாண சம்பியன் அணியாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வருடாந்த தேரோட்டம்





**பெரியகல்லாறு நிருபர்**

பெரியகல்லாறு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின்முக்கிய நிகழ்வான தேரோட்டம் வியாழன்று காலை (18) ஆலய தலைவர்ம. கிருமைராஜா தலைமையில் நடைபெற்றபோது ஆலய பிரதமகுருபிரம்மஸ்ரீ மா.குலேந்திரரூபசர்மா ஆரம்ப கிரியைகளைமேற்கொள்வதையும். வடம் இழுக்கப்படுவதையும் கலந்துகொண்டோரில்ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# நாவிதன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சக்தி விழா



**அன்புவெளி நிருபர்**

கல்முனை நகரிலிருந்து சுமார் 8 கி.மீ தொலைவிலுள்ள நீர்வளம் நிலவளம் நிறைந்த இயற்கை எழில் கொஞ்சும் நாவிதன்வெளியில் பன்னெடுங்காலமாக வீற்றிருந்து அடியார்க்கு அருள்பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த சக்தி விழா கடந்த ஜூலை 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

திங்கள் (8) அதிகாலை திருக்கதவு திறத்தலும் 9ம் திகதி அலங்கார பூசையும் நாவிதன்வெளி கிராமத்துக்கான அம்மன் ஊர்வலமும் 10ம் திகதி அலங்கார பூசையும் அன்னமலை கிராமத்துக்கான அம்மன் ஊர்வலமும் 11ம் திகதி அலங்கார பூசையும் சவளக்கடை மற்றும் முதியோர் வீட்டுத் திட்டத்துக்கான அம்மன் ஊர்வலமும் 12ம் திகதி கற்பூரத் திருவிழாவும் 13ம் திகதி 7ம் கிராமத்தில் குளிர்த்திக்கால் வெட்டுதலும் அம்மன் ஊர்வலமும் 14ம் திகதி காலை 10 மணிக்கு நாவிதன்வெளி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து அடியார்களின் பாற்குட பவனியும் இரவு அன்னமலை வரையிலான முத்துச்சப்பரப்பவனியும் திங்கட்கிழமை (15) தீ மூட்டுதல் காத்தானை கழுவில் வைத்தல் அம்மன் தவநிலைஆகியனவும் இடம்பெற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தீ மிதித்தலுடன் சக்தி விழா 2019 இனிதே நிறைவுற்றது. இம்முறையும் தினமும் பூசை ஆராதனைகளில் பெருந்திரளான பக்த அடியார்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பீபிள்ஸ் லீஸிங் அல்-சபா நிறுவனத்தினால் ஜனாஸா வாகனம் கையளித்த நிகழ்வு

**மருதமுனை நிருபர் றாசிக் நபாயிஸ்**

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மருதமுனை கிளையின் ஏற்பாட்டில் கல்முனை பீபிள்ஸ் லீஸிங் அல்-சபா நிறுவனத்தினால் மருதமுனை பிரதேச மக்களுக்கு நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த ஜனாஸா வாகனம் கையளித்த நிகழ்வு ஜம்இய்யத்துல் உலமா மருதமுனை கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.ஹுசைனுத்தீன் தலைமையில் மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் சனிக்கிழமை(13-07-2019) நடைபெற்றது.



இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்முனை பீபிள்ஸ் லீஸிங் அல்-சபா நிறுவனத்தின் முகாமையாளர் எம்.ஐ.எம்.பைசால் நிறுவனத்தின் நிதியுடன் தனது சொந்த நிதியையும் சேர்த்து சுமார் நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான ஜனாஸா வாகனத்தையும் அதன் ஆவணங்களையும் ஜம்இய்யத்துல் உலமா மருதமுனை கிளையின் பிரதிநிதிகளிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மருதமுனை கிளையின் பிரதிநிதிகளும், மருதமுனை மிமா சமூக சேவை அமைப்பின் பிரதிநிதிகளும், ஜனாஸா நலன்புரிச் சங்க பிரதிநிதிகளும், பள்ளிவாசல்களின் தலைவர்களும், ஊர்ப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# அனர்த்த அபாய குறைப்பு தொடர்பான பயிற்சி நெறி

**மருதமுனை நிருபர் றாசிக் நபாயிஸ்**

சமூக மட்டத்தில் அனர்த்த அபாய குறைப்பு மற்றும் செயல்பாட்டை முறையாக கொண்டு செல்வதற்குமான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று அம்பாறை மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னெடுக்கவுள்ளது என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர்,எம்.ஏ.சி.எம். றியாஸ் தெரிவித்தார்.

இரண்டரை மாத காலத்தைக் கொண்ட இக்கற்கை நெறியானது ஆகஸ்ட் 5ஆம் திகதி முதல்செப்டம்பர் 24ஆம் திகதி வரை வாரத்தில் ஒரு நாள் அடங்கலாக நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

# தகுதியான தலைமைத்துவத்தின் வறுமை நிலையை எமது சமூகம் மிகவும் நன்றாகவே உணர்ந்துள்ளது

நாட்டில் ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசிய கட்சி முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் இனவாதிகளால் மேற்கொள்ளப்படும்போது தடுத்து நிறுத்த தவறியது. மஹிந்தவின் அழுத்கமயும் ரனிலின் திகனயும் கடந்த காலங்களில் எமக்கு கற்றுத்தந்த பாடங்கள் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், இன்னாள் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான பொறியியலாளர் ஷிப்லி பாறுக் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே மேற்சொன்னவாறு தெரிவித்துள்ளார். அவரின் அறிக்கையில் மேலும் தொடர்வதாவது,

அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும், மஹிந்த பிரதமராகவும் வரக்கூடாது என்ற கோசத்தில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) இனரால் அரசாங்கத்திற்கெதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரனை 11ஆம் திகதி தோல்வியில் முடிந்தது.

உரிமை அரசியல் அஷ்ரபுடன் மரணித்துவிட்டது இன்று நமது சமூகம் எதிர்பார்ப்பது அபிவிருத்தி அரசியலை மாத்திரமே. முஸ்லிம்களுக்கான தனியார் சட்டத்தை இல்லாமல் செய்வதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

விவாக, விவாகரத்து சட்டத்தை மாற்றுவதற்குரிய முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டவேளையில் உலமா சபை, அரசியல் கட்சிகள் இன்னும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் முன்மொழிவுகளை சமர்ப்பித்து தங்களால் முடிந்த பங்களிப்புகளை செய்திருந்தது.

ஐரோப்பிய சங்கத்தினைடைய வரிச்சலுகைகளுக்குகூட இது மிகப்பெரும் பேசு பொருளாக மாறியிருந்தது. இறுதியில் அரசியல் இழுபறிகளால் இன்று வரை கிடப்பில் உள்ள சட்டதிருத்தம் ஒட்டுமொத்தத்தில் ஓர் இலங்கை ஓர் சட்டம் என்ற தொணிப்பொருளில் முஸ்லிம்களுக்கான தனியார் சட்டக்கோவையே இல்லாமல் செய்யப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் ஏற்பட்ட 21.4.2019 சம்பவம் என்பது இத்தனைகாலமும் முஸ்லிம்களுக்கெதிராக புரையோடிப் போய்கிடந்த அத்தனை காழ்ப்புணர்வுகளையும் கட்சிதமாக அரங்கேற்றுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தலைவர் அஷ்ரப் வரையிலான அரசியல் தலைமைகள் உரிமைக்காக போராடி வெற்றி கண்டபோதிலும் அவருக்கு பிந்திய காலத்தில் முஸ்லிம் மக்களின் பிரதான அரசியல் எதிர்பார்ப்பாக அபிவிருத்தியே முன்னிலைப்படுத்தப்பட்டது. றோட்டுப் போட்டால் வோட்டுப் போடுவொம் என்கின்ற கோசம் அதிகமான பிரதேசங்களில் உருப்பெற்றதால் அந்தந்த பிரதேச குறுநில மன்னர்கள் தமது ஆதிக்கத்தை பலப்படுத்திக்கொள்ள அபிவிருத்தி என்கின்ற மாயையை தமது அரசியல் மூலதனமாக பயன்படுத்த ஆரம்பித்தார்கள்.

அபிவிருத்திக்காகவும் தனிப்பட்ட சலுகைகளுக்காகவும் உரிமைகளை விட்டுக்கொடுக்கும் அரசியல் பெரும்பான்மை சக்திகளின் நிகழ்ச்சி நிரல்களை நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களிற்கெதிராக கட்டவிழ்த்துவிடுவதற்கு வழிவகுத்தது.

இதனுடைய ஒட்டுமொத்த விழைவு இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கென்றிருந்த தனியார் சட்டம் முஸ்லிம்களுக்கான விசேட சலுகைகள் எல்லாம் இல்லாதொழிக்கப்படுகின்ற ஓர் நிலைக்கு முஸ்லிம் சமூகம் தள்ளப்பட்டுள்ளது.

கட்சி சார்ந்த அரசியலுக்கு முன்னுரிமை கொடுத்து அல்லது அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுத்து முன்னிலைப்படுத்தப்பட்ட தலைமகள் 21.04.2019 சம்பவத்திற்குப் பிறகு சமூகம் சார்ந்து பேச வேண்டிய எத்தனையோ சந்தர்ப்பங்களில் தமக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கின்ற ஆதாரப்பூர்வமான அல்லது ஆதாரபூர்வமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு பதில் சொல்வதிலேயே தமது காலத்தை கழிந்து கொண்டிருக்கின்றார்கள்.

தகுதியான தலைமைத்துவத்தின் வறுமைநிலையை எமது சமூகம் 21.04.2019 இற்குபிறகு மிகவும் நன்றாகவே உணர்ந்துள்ளது அந்த வகையில் இலங்கையில் வாழ்கின்ற ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு தன்னந்தனியாக நின்று நாட்டிற்குள்ளும் சர்வதேசத்திற்கும் முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்காக குரல்கொடுக்கின்ற ஒரே ஓர் தலைவராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசியத் தலைவர் கௌரவ அல்ஹாஜ் றஊப் ஹக்கீம் திகழ்கின்றார் என்றால் அதை இலங்கை முஸ்லிம்கள் நிராகரிப்பதற்கு தனிப்பட்ட காரணத்தைத்தவிர வேறு எந்த நியாயமான காரணத்தையும் முன் வைக்க முடியாது.

இந்த நாட்டில் பெரும்பான்மை ஆட்சி அமைக்கின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் அதனை எந்தக்கட்சியினர் அமைக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கின்ற சமூகமாக யுத்த காலங்களில் பெரும்பாலும் அது முஸ்லிம் சமூகமாகவே இருந்துவந்துள்ளது. யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் இதனை தீர்மானிக்கும் விடயத்தில் பிரதான இரண்டு சிறுபான்மை சமூகங்களும் இருந்துவருகின்றது.

இதனை எப்படி சிறுபான்மை சமூகங்கள் கையாழவேண்டும் என்பது பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் பெரும்பான்மையிடம் நாட்டை துண்டாடி தனி நாட்டிற்காக போராடிய சமூகம் இன்று சக சிறுபான்மை சமூகத்தோடு பிரதேச செயலக பிரிவிற்காக இனவாதம் பேசுவது ஆச்சரியமாகவுள்ளது என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், இன்னாள் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான பொறியியலாளர் ஷிப்லி பாறுக் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.







குருமண்வெளி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த சங்காபிஷேக பாற்குட பவனி நடைபெற்றபோது பக்தர்கள் பாற்குடம் ஏந்தி பவனி வருவதைக்காணலாம்.

படம்: பாண்டிருப்பு நிருபர்




## பாடசாலை மாணவர்களுக்கு சுவசரிய சேவை பற்றி தெளிவூட்டல்



**கிண்ணியா நிருபர்**

1990 சுவசரிய இலவச அம்பியுலன்ஸ் சேவை தொடர்பாக, தி/ குறிஞ்சாக் கேணி மகளிர் மகா வித்தியாலய மாணவிகளுக்கு, விளக்கமளிக்கும் கூட்டம், பாடசாலையில்,(12) நடைபெற்றது. 24 மணி நேர சேவையினை இலவசமாக இதனூடாக பெற முடியும் போன்ற பல்வேறு விடயங்கள் விளக்கமளிக்கப்பட்டன. பாடசாலையின் அதிபர் எஸ்.ரீ.நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## திருகோணமலையில் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி நெறி

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

திருகோணமலை மாவட்டப் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான நான்காவது டிப்ளோமா பயிற்சிநெறிக்கான அங்குராப்பணவைபவம் திருகோணமலை ரோட்டறிக்கழக நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஆரம்பநிகழ்வு (14) திகதி காலை 9.00மணிக்கு மூதூர் அந்தோனியார் கல்லூரியிலும் அதன் பின்பு 11.00மணிக்கு சேவியர் கல்லூரியிலும் நடைபெற்றது.

ரோட்டறிக் கழக நிதியுதவியுடனும் ஆறுதல் நிறுவனத்தின் நடைமுறைப்படுத்தலுடனும், இக்கற்கை நெறி இடம்பெறவுள்ளது.

43 பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான இப் பயிற்சி மூதூர் ,திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் நடைபெற்றது.




இந் நிகழ்வில் திருகோணமலை ரோட்டறிக் கழகத் தலைவர் திரு ஆ. உதயராஜன் அவர்கள் தலைமை தாங்கினார்.

இவர் தமது உரையில் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி நெறியின்முக்கியத்துவத்தை எடுத்துரைத்து அவர்களது எதிர்கால சுபிட்சத்தை முன்னிட்டு ஒழுங்காக பங்குபற்றும் படி எடுத்துரைத்தார்.

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

**ஹஸ்பர் ஏ ஹலீம்**



கிண்ணியாவை பிறப்பிடமாகவும், வசிப்படமாகவும் கொண்ட அப்துல் முத்தலிப் - அப்துல் பரீத், திருகோணமலை நீதிமன்ற வலயத்திற்கான சமாதான நீதிவானாக திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.பி.மொஹிதீன், முன்னிலையில் (03.07.2019) அன்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஒய்வு பெற்ற ஆசிரியரான இவர் ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஆவர்.

இவர் அப்துல் முத்தலிப் (சேரமன்) செய்துான் வீவீ ஆகியோரின் கனிஷ்ட புதலவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பது தொடர்பான கலந்துரையாடல்





**சீலாமுனை நிருபர் துஷாரா**

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் ஏற்பாட்டில் தேர்தல் பிரசார நிதியாக்கம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவர் ஷிராணி ஜனன் தலைமையில் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கையில் தேர்தல் செயற்பாட்டினை மிகவும் சுதந்திரமாகவும் நீதியாகவும் அதேவேளை நேர்மையானதாகவும் நடாத்துவதற்கு அவசியமான மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டுமெனில் தேர்தலுக்கென செய்யப்படுகின்ற செலவுகள் கிடைக்கின்ற நிதிகள் தொடர்பான தெளிவான விளக்கம் வாக்காளர்களுக்கு இருக்க வேண்டும் என்பது தொடர்பாக மக்களுக்கு தௌிவுபடுத்தப்பட்டது.

இத்தகைய தேர்தல் பிரசார நிதியாக்கம் தொடர்பான பொதுக் கலந்துரையாடல் நாடெங்கிலும் நடாத்தப்பட்டு வருவதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

நிகழ்வில் முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம்.எம். முஹம்மத் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல்கள் உதவி ஆணையாளர் ஆர். சசீலன் பப்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் ஆணையாளர் ரோஹண ஹெற்றியாராச்சி தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மாகாண இணைப்பாளர் ஏ.எம்.என் விக்ரர் மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவர் ஷிராணி ஜனன் மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மாவட்ட இணைப்பாளர் எஸ்.பி. பிரசன்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுதந்திரமானதும் நீதியானதும் நேர்மையானதுமான தேர்தலுக்காக செயற்படுகின்ற ஆர்வலர்கள் சுமார் 125 பேர் வரை கலந்து கொண்டனர்.

## மருதம் கிரிக்கெட் வெற்றிக் கிண்ணம்-2019





**மருதமுனை நிருபர், றாசிக் நபாயிஸ்**

தொடர்ச்சியாக நான்காவது வருடமாக மருதமுனை, மருதம் விளையாட்டு கழகத்தினால் நடாத்தப்படும் மருதம் கிரிக்கெட் வெற்றிக் கிண்ணம்-2019 இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் மருதமுனை, மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் (14) ஞாயிற்றுக்கிழமை 04 மணியளவில் மிகவும் சிறப்பாக முறையில் நடைபெற்றது.

இத்தொடர் சுற்றுப் போட்டியில் 12 அணிகள் பங்குபற்றிய நிலையில் இறுதிப் போட்டியில் மருதமுனைக் விளையாட்டுக் கழகங்களான யுனிவர்ஸ் மற்றும் மருதம் அணிகள் இறுதிப் போட்டியில் பங்குபற்றிய நிலையில் யுனிவர்ஸ் அணி வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சறோ பாம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர், எம்.எச். எம்.தாஜுடீன் வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்கி வைத்தார்.

## ஹாஜியார் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டி

**முள்ளிப்பொத்தானை நிருபர்**



தம்பலகாம பிரதேச சபை உறுப்பினர் தாலிப் அலி ஹாஜியார் மற்றும் மீரா நகர் சுதந்திர விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்திய ஹாஜியார் கிண்ணம் -2019 மென்பந்து இறுதிச் சுற்றுப் போட்டி மீரா நகர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

முள்ளிப் பொத்தானை புஹாரி விளையாட்டுக் கழகமும் மீரா நகர் சுதந்திர விளையாட்டுக் கழகமும் இறுதிச் சுற்றுக்கு தெரிவாகியிருந்த நிலையில் இறுதிச் சுற்றில் புஹாரி அணி வெற்றியீட்டி சம்பியன் பட்டத்தை சூட்டிக் கொண்டது.

இரு அணிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதுடன் பணப்பரிசில்கள், கேடயங்களையும் பாரளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஃறூப் வழங்கி வைத்தார்

இதில் இணைப்பாளர் ஈ.எல். அனீஸ், தம்பலகாம பிரதேச சபை உறுப்பினர்களான தாலிப் அலி ஹாஜியார், றஜீன், கிண்ணியா நகர சபை உறுப்பினர் நிஸார்தீன் முஹம்மட், உட்பட கட்சி சமுக சேவகன் ஏ சி நஜிமுதீன் ஆதரவாளர்கள் மற்றும் பல முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்து வெற்றி பெற்ற புகாரி அணிக்கு காசோலையை மற்றும் கேடயம் வழங்குவதை படத்தில் காணலாம்.

## கடந்த மூன்று மாதகாலத்துக்கும் மேலாக நிலவும் வரட்சி காரணமாக இதுவரை 1516 பேர் பாதிப்பு

**கந்தளாய் நிருபர்**

கடந்த மூன்று மாதகாலத்துக்கும் மேலாக நிலவும் வரட்சி காரணமாக இதுவரை 459 குடும்பங்களை சேர்ந்த 1516 பேர் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் குடி நீர் இன்றி பாதிக்கப்படுள்ளதாக தெரிவித்த பிரதேச செயலாளர் எம்.முபாரக் இவர்களுக்கு தேவையான குடிநீரை பிரதேச செயலகம் ஊடாக நாளாந்தம் விநியோகம் செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

சேனையூர் கிராம சேவையாளர் பிரிவில் 105 குடும்பங்களை சேர்ந்த 330 பேரும் நல்லூர் கிராம சேவையாளர் பிரிவில் 42 குடும்பங்களை சேர்ந்த 143 பேரும் இக்பால் நகர் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 22 குடும்பங்களை சேர்ந்த 96 பேரும் பள்ளிக்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவில் 215 குடும்பங்களை சேர்ந்த 620 பேரும், கட்டபறிச்சான் தெற்கில் 74 குடும்பங்களை சேர்ந்த. 327 பேரும் குடிநீரின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

மொத்தமாக மூதூரில் 459 குடும்பங்களை சேர்ந்த 1516 பேரும் இ துவரை குடிநீர் இன்மையால் பாதிக்கப்படுகின்றனர்.

## சகல மத மாற்றுத்திறனாளிகளின் ஒன்றிணைந்த கலாச்சார மற்றும் விளையாட்டு விழா

மருதமுனை ஹியூமன் லிங்க் மாற்றுதிறனாளிகளுக்கான வளப்படுத்தல் நிலைய 12ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஒன்றிணைந்த கலாச்சார மற்றும் விளையாட்டு விழா ஹியூமன் லிங்க் தவிசாளர் எஸ்.எல். அஜ்மல் கானின் தலைமையில் ஹியூமன் லிங்க் வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அன்சார் கலந்து கொண்டார். அத்துடன் பல முக்கிய பிரமுகர்களும், விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்கள்,ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ்விளையாட்டு கலாச்சார விழாவில் மருதமுனை ஹியூமன் லிங்க் மாற்று திறனாளிகள் வளப்படுத்தல் நிலையம், காரைதீவு கமு/கமு சண்முகா மகா வித்தியாலயம், அம்/ உஹன கனிஸ்ட வித்தியாலயம் என்பன கலந்து கொண்டன.

விசேட தேவையுடைய தமிழ்,சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் கலந்துகொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டினர். இன ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டிய அவசியம், மாற்று திறனாளிகள் இந்த சமூகத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டிய அவசியம், அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி அதிதிகள் வலியுறுத்தி பேசினர்.

## திருமலை மாவட்டத்தில் 3161.36 மில்லியனில் 5224 வேலைத்திட்டங்கள்

**முள்ளிப்பொத்தானை நிருபர்**

திருகோணமலை மாவட்டத்திற்கென 2019ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 3161.36மில்லியன் ரூபா நிதியில் 5224அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 726.74மில்லியன் பெறுமதியான 1399வேலைத்திட்டங்கள் நிறைவுபெற்றுள்ளதாகவும் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 56.77மில்லியனில் 357வேலைத்திட்டங்களும் நிறைவு பெற்றுள்ளன.

கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1242.35மில்லியன் ரூபா நிதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள 2149வேலைத்திட்டங்களில் 301நிறைவடைந்துள்ளதுடன் ஏனையவை நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம், விளையாட்டு அபிவிருத்தி, கிராம சக்தி நிகழ்ச்சித்திட்டம், மீள்குடியேற்ற வேலைத்திட்டம், சிரிசர பிவிசும உள்ளிட்ட வேலைத்திட்டங்களும் திருகோணமலை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண சபையின் ஊடாக 639.87மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 401அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில், உள்ளூராட்சி மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு, சுகாதார மற்றும் சுகாதார சேவைகள் அமைச்சு, கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, வீதி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு, கிராமங்களின் விசேட தேவைகள் சிறப்புச் செயற்திட்டம் ஆகியவற்றின் ஊடாக இவை முன்னெடுக்கப்படுகின்றன.



மாவட்டத்தின் 11பிரதேச செயலகப்பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள் இவ்வருடத்தில் நிறைவுக்கு வரும் வகையில் முன்னெடுப்புக்கள் அரசாங்க அதிபரின் அறிவுறுத்தல்களுக்கமைய மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திருகோணமலை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

## திருமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை இன்மை காரணமாக கடும் வரட்சி

**கந்தளாய் நிருபர்**

திருமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை இன்மை காரணமாக கடும் வரட்சி நிலவுகிறது, இதனால் சகல குளங்களும் வற்றிப் போயுள்ளது.

இதனால் உப்பாறு , மற்றும் மஜீத் நகர், கிழக்கு பகுதி, கண்டல் காடு பகுதிகளில் கால் நடைகள் குடி நீரின்றி அவதியுறுவதையும் காணக் கூடியதாக இருக்கிறது.

கிண்ணியா மணியரசங்குளம் , சுங்கான் குழி குளம் உடபட பல குளங்கள் வற்றிப் போயுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடிநீர் தட்டுப்பாடுகள் நிலவுவதால் , மாவட்டத்தில் பல பகுதிகளில் தற்போது நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடி நீர் தட்டுப்பாடு நிலவுவதாகவும், கிண்ணியா பிரதேச செயலகம் ஊடாக, அப்பகுதிகளுக்கு கடந்த மூன்று மாத காலமாக குடி நீரை பவுஸர் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந் நீரும் அந்த பகுதிகளுக்கு போதாது இருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழையின்மை காரணமாக விவசாயத்துடன் அண்டிய தொடர்புடைய மற்றும் நன்னீர் மீன் பிடிப்பாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளமையும் இந்த நிலமையினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அந்த அடிப்படையில் விவசாயத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கோரி விவசாய அமைப்புகளும் மற்றும் சங்கங்கள் கோரிக்கை முன் வைக்க முன் வந்துள்ளதாக அறியக் கூடியதாக உள்ளது.

# சிறைக் கைதிகளுக்கு கைத்தொழில் பயிற்சிகள் வழங்க நைற்றா நிறுவனம் திட்டம்

**கந்தளாய் நிருபர்**

கைதிகளுக்குப் புணர்வாழ்வளிப்பது தொடர்பில் அவர்களுக்கு கைத்தொழில் பயிற்சி திட்டங்களை வழங்குவது குறித்து தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (நைற்றா) மூலம் நடவடிக்கை எடுக்கத் திட்டமிடுகின்றது.

இதுகுறித்த முக்கிய கலந்துரையாடல் நைற்றா நிறுவனத் தலைவர் நஸிர் அஹமட்டுக்கும் சிறைத் துறைசார் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்றது.

சிறையிலுள்ள கைதிகளின் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கு உதவும்வகையில் அவர்க ளுக்குத் கைத்தொழில் பயிற்சிகளை வழங்குவதுடன் அதனைப் பூர்த்தி செய்தவர்களுக்கு அரச அங்கீகாரமுள்ள சான்றிதழ்களை வழங்கவும் எதிர்காலத்தில் இதன் மூலம் அவர்கள் சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ்வதற்கான நடைமுறைகளை அறிமுகம் செய்யவும் இதன்போது ஆலோசிக்கப்பட்டிருக்கிறது.

நைற்றா நிறுவனம் தற்போது 16 வயது முதல் 35 வயதுக்கு உட்பட்ட இருபாலாரு க்கும் பல்வேறு கைத்தொழில் பயிற்சிகளை வழங்கிவருவதுடன் தகவல் தொழில் நுட்பம் குறித்த புதிய பாட விதானங்களை அறிமுகம்செய்து அவற்றுக்கான பயிற்சி களையும் மேற்கொண்டு வருகின்றது. இந்த பயிற்சிகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு அவர்கள் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற் கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன.

இந்த நடவடிக்கை காரணமாக நாட்டின் அணைத்து பகுதிகளிலுமுள்ள வேலை வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் தமது வாழ்கை வளமேம்பாட்டுக்கான பயிற்சி களை பெற்றுவருவதுடன் தொழில்துறை வாய்ப்புக்களையும் பெற்று வருகின்றனர்.

மேற்படி நிறுவனத்தின் தலைவராக நஸிர் அஹமட் பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் பல்வேறு புதிய செயற்றிட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்த நிறுவனத்தில் பயிற்சியை பெற்றுக்கொண்டவர்கள் தமது மேலதிக கல்வியை வெளிநாடுகளிலுள்ள அரச,தனியார் பல்கலைகழங்களில் பெற்றுக்கொள்ளவும் முன்பள்ளி ஆசிரியைகள் தமது கல்விமேம்பாட்டை வளர்த்துக் கொள்ளுவதற்கான பயிற்சித்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக தனியார் தொழில் துறைகளில் இளையவர்கள் வாய்ப்புகளைப்பெற கூட்டுறவுப் பயிற்சித் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன.

அந்தவகையில் சிறைக் கைதிகள் மற்றும் மனநிலை பாதிப்பிற்கு உள்ளானவர் களின் மேபாட்டுக்கான பயிற்சிகளை மேற் கொள்ளவும் நடவடிக்கை எடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.




## வீதி விபத்தை தடுக்க 100 துவிச்சக்கர வண்டிகளுக்கு டைனமோ வழங்கிவைப்பு

**சீலாமுனை துஷாரா**

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்கில் மட்டு மாநகரசபை உறுப்பினரும் சமூக பொலிஸ் குழு தலைவருமான ஸ்ரீபன் ராஜன் ஏற்பாட்டில் ஒலைசட் சிறிலங்கா நிறுவனத்தின் அனுசரனையுடன் 100 மீனவர்களின் துவிச்சக்கர வண்டிகளுக்கு டைனமே வழங்கி வைக்கப்பட்டது.

மட்டு மாநகரசபை விளையாட்டு மைதானத்தில் (14) இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளக மட்டக்களப்பு போதகர் சங்க தலைவர் கணவதிப்பிள்ளை தெய்வேந்திரன், போதகர் சங்க தலைவர் ஜீவானந்தம் நகுலாஜ், மட்டு மாநகரசபை உறுப்பினரும் சமூக பொலிஸ் குழு தலைவர் ஸ்ரீபன் ராஜன் ஒலைசட் சிறிலங்கா நிறுவனத்தின் தலைவர் போதகர் நரேன் அட் கின்சன் ஆகியோர் கலந்து கொண்டு இதனை வழங்கி வைத்தனர்.



இதில் வறுமை நிலையிவுள்ள மீன்பிடி மீனவர்களின் நன்மை கருதி வழங்கப்பட்ட டைனோமேக்கள் யாவும் விச்சக்கர வண்டிகளுக்கு உடன் பொருத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மைதான புனரமைப்புக்கான அங்குரார்ப்பண நிகழ்வு

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

திருகோணமலை மாவட்டம் தம்பலகாம பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மீரா நகர் பொது விளையாட்டு மைதான சுற்றுமதில் நிர்மாணத்திற்கான அடிக்கல் நடும் அங்குரார்ப்பண வைபவம் இடம் பெற்றது

தம்பலகாம பிரதேச சபை உறுப்பினர் தாலிப் அலி ஹாஜியாரின் வேண்டுகோளிற்கிணங்க) திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஃறூப் அவர்களால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

கம்பரெலிய வேலைத் திட்டத்தின் கீழ் சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் மைதானத்துக்கான சுற்றுமதில் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே அங்குரார்ப்பண வைபவம் இடம் பெற்றதுடன் தம்பலகாம பிரதேச செயலக பிரிவை உள்ளடக்கிய பதிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கான உபகரணங்கள் வழங்குவதற்கான அனுமதிப் பத்திரங்களும் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஃறூப் அவர்களால் 25 கழகங்களுக்கு இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

இக் குறித்த நிகழ்வில் தம்பலகாம பிரதேச சபை உறுப்பினர் ஆர்.எம். றஜீன்,கிண்ணியா நகர சபை உறுப்பினர் நிஸார்தீன் முஹம்மட் உள்ளிட்ட விளையாட்டு கழகங்களை சேர்ந்த வீரர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

## பிரதேச செயலாளருக்கு பாராட்டு விழா



கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளராக கடமையாற்றிய வன்னியசிங்கம் வாசுதேவனுக்கு சேவைநலன் பாராட்டு விழா பிரதேச செயலக மண்டபத்தில் சனிக்கிழமை(13)உதவிப்பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது இடமாற்றம் பெற்று மண்முனை வடக்குப் பிரதேசசெயலகத்திற்கு இடமாற்றலாகி சென்றதை முன்னிட்டு சேவைநலன் பாராட்டு விழா மற்றும் பிரியாவிடை நிகழ்வும் இடம் பெற்றபோது பிரதேச செயலாளருக்கு பாராட்டுப்பத்திரம் வழங்கி வைப்பதையும் படத்தில் காணலாம்.

## சமுர்த்தி திட்டத்துக்காக யாரும் எதனையும் கொடுக்க தேவையில்லை



நல்லாட்சி அரசினால் வழங்கப்படும் சமுர்த்தி திட்டத்துக்காக யாரும் பெற்றுத் தந்ததாக கருதி எதையும் கொடுக்க தேவையில்லை இதனை பிரதேச செயலாளர் என்ற வகையில் கூறிக் கொள்ள விரும்புகிறேன் என கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.ஹனி தெரிவித்தார்.

புதிய சமுர்த்தி பயனாளிகளுக்கான உரித்து படிவங்களை கிண்ணியா பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கும் வைபவத்தின் போதே இவ்வாறு தெரிவித்த

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்

இந்த சமுர்த்தி கொடுப்பனவு ஊடாக தங்களது பிள்ளைகளின் கல்வி வறுமை ஒழிப்பில் இருந்து வெளியேற வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான வழியாக அமைகின்றது இதன் ஊடாக வறுமை நிலையில் இருந்து மீண்டு பிள்ளைகளுடைய கல்வியின் வளர்ச்சியிலும் உதவக் கூடிய வழி வகைகளை அரசாங்கம் செய்து தந்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் எதிர்கால திட்டமும் இதுவே இத் திட்டத்தின் ஊடாக நாட்டில் வறுமையற்ற நிலை காணப்பட வேண்டும் இதனை நோக்கிய பயணத்தை அரசாங்கம் எதிர்காலத்திலும் நடைமுறைப்படுத்தவுள்ளது இதுவே அரசின் எதிர்பார்ப்பாகவும் காணப்படுகிறது என்றார்.

## வீட்டுத்திட்டத்தை அதிகாரிகள் பார்வை

**தோப்பூர் நிருபர்**

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இக்பால் நகர் பட்டியடி பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 750.000 ரூபா பெறுமதி கொண்ட மானிய அடிப்படையில் 51 வீடுகள் வீடற்ற மக்களுக்காக நிர்மாணிக்கப் பட்டுவருகின்ற இதனை மூதூர் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் மற்றும் அதிகாரிகள் குழு 2019.07.18 உரிய இடத்திற்கு விஜயம் செய்து நிர்மாண வேலைகளை பார்வையிடுவதனை படத்தில் காணலாம்.



## கல்முனை மாநகர எல்லைக்குள் சேவையில் ஈடுபடும் வாகனங்கள் அனைத்தும் மாநகர சபையில் பதிவு செய்யப்பட வேண்டும்

**சாய்ந்தமருது நிருபர்**

கல்முனை மாநகர சபை எல்லைக்குள் சேவையில் ஈடுபடுகின்ற முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களும் கல்முனை மாநகர சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில் தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு என்பவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப்புடன் கல்முனை பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோர் நடாத்திய கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக இந்த அறிவுறுத்தல் விடுக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் கல்முனை மாநகர சபை எல்லைக்குள் வாடகைக்கு சேவையில் ஈடுபடுகின்ற முச்சக்கர வண்டிகள், வேன்கள், லொறிகள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களும் கல்முனை மாநகர சபையில் உடனடியாக பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் கல்முனை மாநகர சபையில் இதற்காக விசேட கரும பீடம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் முதல்வர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

வாகனங்களின் உரிமையாளர்கள் அல்லது பாவனையில் வைத்திருப்போர் அவ் வாகனங்களின் புத்தகங்களுடன் மாநகர சபைக்கு வருகைதந்து இக்கருமபீடத்தில் கட்டணம் எனுவுமின்றி இலவசமாக வாகனங்களை பதிவு செய்து கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு மாநகர சபையினால் பதிவிலக்கம் ஒன்று வழங்கப்படும். பொலிஸ் சோதனைகளின்போது குறித்த வாகனங்கள், கல்முனை மாநகர சபையில் பதிவு செய்யப்பட்டதற்கான இப்பதிவிலக்கத்தை காண்பிப்பது அவசியம் என கல்முனை பொலிஸ் அத்தியட்சகர் எச்.எம்.ஹேரத் அறிவுறுத்தியுள்ளார்.

## வருடாந்த பொதுக் கூட்டம்

**கந்தளாய் நிருபர்**

திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களின் சங்கத்தின் 16 ஆம் வருட புதிய நிருவாக சபையினரின் தெரிவு மற்றும் அங்கத்துவம் புதுப்பித்தல் தொடர்பான ஒன்று கூடல் கூட்டம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை (21) திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் மூவீன ஊடக அங்கத்தவர்களை கொண்ட ஊடகவியலாளர் சங்கமாக தமது ஊடகப் பணிகளுடன் சமூக நலப் பணிகளையும் செய்து திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் இயங்கி வருவது ஏனைய மாவட்டத்திற்கும் ஒரு மாதிரியாகும். காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் அ.அச்சுதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் ஒன்று கூடல் கூட்டத்தில் பிரதி நிதித்துவப்படுத்தும் அனைத்து ஊடகவியலாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## 45 இலட்சம் ரூபா செலவில் ரேன்ஞர்ஸ் மைதானம் புனரமைப்பு

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியாற்றுமுனை ரேன்ஞர்ஸ் மைதானம் மிக நீண்ட நாட்களாக புனரமைப்புச் செய்யப்படாமை மிக மோசமான நிலையில் காணப்பட்டதையடுத்து அப்பிரதேச வட்டாரத்தின் கிண்ணியா நகர சபை உறுப்பினர் நிஸார்தீன் முஹம்மட் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

குறித்த விளையாட்டு மைதானமானது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஃறூப் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 45 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

கம்பரெலிய திட்டம் ஊடாக 30 இலட்சம் ரூபாவிலும் , வர்த்தக வாணிப கைத்தொழில் முன்னால் அமைச்சின் அமைச்சர் றிசாத் பதியுதீன் அவர்களின் கீழ் இயங்கும் மீள்குடியேற்ற செயலணி திட்டம் ஊடாகவும் 15 இலட்சம் ரூபா செலவில் விளையாட்டு மைதானத்தின் விளையாட்டு அரங்கு புனரமைக்கப்படவுள்ளது .

இதற்கான ஆரம்ப கட்ட வேலைத் திட்டங்களை நகர சபை உறுப்பினர் நிஸார்தீன் முஹம்மட் இன்று (18) வியாழக் கிழமை பார்வையிட்டார்.

## கவனிப்பாரின்றி கிடக்கும் வீதி




**தோப்பூர் நிருபர்**

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் பாலத்தோப்பூர், மருத நகர் வீதி சீமெந்துக்கல் வீதியாக புனரமைக்கப்பட்டிருக்கும் இவ் வீதியானது இடையிடையே வீதிசேதடைந்துசெல்கிறது

இவ் வீதி நெடுகிலும் முழுமையாக சேதமடைவதற்கிடையில் இதனை புனரமைக்கவேண்டுமென மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிநிற்கின்றனர்.

## குன்றும் குழியுமாக மாறும் வீதி



**தோப்பூர் நிருபர்**

திருகோணமலை மாவட்ட சேருவில பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, தெகிவத்தை, கங்குவேலி சேருவில ஆகிய பகுதிகளுக்கு செல்லும் பிரதான வீதியானது சேதமடைந்துள்ளது. இதனால் இவ் வீதியூடாக தினமும் பயணிக்கும் பொது மக்கள் பெரிதும் சிரமப்படுவதாக கூறுகின்றனர். இவ் வீதி இடையியே சேதமடைந்து குன்றும் குழியுமாக மாறியுள்ளது இதனால் இவ் வீதியூடாக சென்றுவரவேண்டிய பொது மக்கள் பெரிதும் சிரமப்படுவதாக கூகின்றனர் இதனை கருத்திற்ண்டு இவ் வீதியை புனரமைத்துத்தருமாறு பொதுமக்கள் உரிய பகுதியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.





**கிழக்கிலங்கை காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் திருவிழா புதன்கிழமை காலை இராண்டம் முறையாக தேரோட்டம் சிறப்பான முறையில் இடம்பெறுவதையும் அதிகாலை முதல் கிரியைகள் இடம்பெற்று காலை 7.30மணியளவில் வசந்தமண்டப பூஜைகளின் பின்னர் முருகப்பெருமன் உள்வீதி வலம் வந்து தேரில் எழுந்தருளி பூசைகள் இடம்பெறுவதையும் பெருந்தொகையான பக்தர்கள் வழிவடுவதையும் படத்தில் காணலாம்.**

**படம்: காரைதீவு நிருபர்**




# வவுனியாவில் 30வது வீர மக்கள் தினம் அனுஸ்டிப்பு

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் தமிழீழ விடுதலை கழகத்தின் 30வது வீரமக்கள் தினம் (16) அனுஸ்டிக்கப்பட்டது.

தேசிய இன விடுதலை போராட்டத்தில் இன்னுயிரை இழந்த போராளிகள் மற்றும் பொது மக்களை நினைவு கூர்ந்து கோவில் குளம் உமாமகேஸ்வரன் நினைவு இல்லத்தில் புளொட் அமைப்பினரால் நினைவு கூரப்பட்டது.

இந்நிகழ்வானது தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் உப தலைவரும் வவுனியா நகரசபை உறுப்பினருமான சந்திரகுலசிங்கம் தலைமையில் நடைபெற்றதுடன் நிகழ்வில் புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டு கழகத்தின் கொடியை ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டதுடன் இறந்த போராளிகள் மற்றும் பொது மக்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது உமா மகேஸ்வரன் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு கழகத்தோழர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து வீரமக்கள் தினம் அனுஸ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள்



**வவுனியா நிருபர்**

வவுனியாவில் தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப்புலவர் நினைவுச் சிலையடியில் (17.07.2019) காலை 8.30 மணியளவில் வவுனியா முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் அனுசரணையில் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சோமசுந்தரப்புலவரின் நினைவுரையினை தமிழருவி சிவகுமார் நிகழ்த்தியதுடன் வவுனியா விபுலானந்தக்கல்லூரி மாணவர்களின் ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை பாடசாலைப்பாடியதுடன் சோமசுந்தரப்புலவரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர்கள், வவுனியா நகரசபை செயலாளர் தயாபரன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் , பிரதேச கலாச்சார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், செயலாளர் மாணிக்கம் ஜெகன், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தலைவர் ரவீந்திரன் , வர்த்தக சங்க உறுப்பினர்கள், நகரசபை ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள், வர்த்தகர்கள் விபுலானந்தாக்கல்லூரி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# வ/விபுலாநந்தா கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான பல்லூடக எறியி அன்பளிப்பு

**வவுனியா நிருபர்**



வவுனியா விபுலாநந்தாக் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான பல்லூடக எறியி ஒன்றினை கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளரும், வவுனியா நகர சபை உறுப்பினரும், வ/ஸ்ரீ நாகராஜா வித்தியாலய ஆசிரியருமான சுந்தரலிங்கம் காண்டீபன் அவர்களினால் 18/07/2019 பாடசாலையின் காலைப் பிரார்த்தனையில் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இவ் பல்லூடக எறியி (projector) கல்லூரி முதல்வர் திருவாளர் பொ.சிவநாதன், விஞ்ஞான ஆசிரியர் திருவாளர் தற்பரன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

# இந்திய வம்சாவழி மக்களுக்கு இந்திய அரசாங்கம் பல புலமைப்பரிசில்களை வழங்குகின்றது



**வவுனியா நிருபர்**

இந்திய வம்சாவழி மக்களுக்கு இந்திய அரசாங்கம் பல புலமைப் பரிசில்களை வழங்குகின்றது என இந்திய துணைத்தூதர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

வவுனியா, புளியங்குளம், பழைய வாடி தம்பா மல்லிகை பண்ணையில் மல்லிகை நறுமணத் திரவ உற்பத்தி தொழிற்சாலைக்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

இந்திய துணைத்தூதரகத்தின் ஆதரவுடன் வவுனியா, புயிளங்குளம் தம்பா மாதிரிப் பண்ணையில் மதுரை மல்லிகை செய்கை பண்ணப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக சனசமூக நிலையங்கள் மூலம் கிராம மட்டத்தில் 100 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு மல்லிகை கன்றுகள் செய்கை பண்ணுவதற்காக வழங்கப்படுகிறது. குறித்த மல்லிகை செடிகளில் இருந்து குறித்த பண்ணை பூக்களை கொள்வனவு செய்து அந்த பூக்களில் இருந்து மல்லிகை நறுமண திரவம் தயாரிக்கப்படவுள்ளது. இத் தொழிற்சாலைக்கான அடிக்கல் இந்திய துணைத்தூதரால் நாட்டப்பட்டது.

இதன்போது இந்திய துணைத்தூதர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையும்இ இந்தியாவும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது எங்களது அவா. மலையக மக்களுக்கு வீட்டுத்திட்டங்களை இந்தியா வழங்குவது போன்று இந்திய வம்சாவழி மக்களுக்கு இந்தியா பல புலமைப்பரிசில்களை வழங்கி வருகின்றது. பல்வேறு துறை சார்ந்த புலமைப்பிரிசில்கள் வழங்கப்படுகின்றது. இது தொடர்பான விழிப்புணர்வு மக்களிடம் இல்லை. எவ் நேரமும் எமது தூதரகத்துடன் தொடர்பு கொண்டு அதனைப் பெற முடியும்.

அத்துடன், படிப்பில் ஆர்வம் காட்ட வேண்டும். தமிழர்களுக்கு படிப்பு தான் முக்கியம். நன்றி உடையவர்களாகவும் நாம் இருக்க வேண்டும். தோட்டம் செய்து கொண்டும் படிக்க முடியும். மல்லிகைத் தோட்டத்திற்கும் அது சார்ந்த உற்பத்திகளுக்கும் நாம் தொடர்ந்தும் ஆதரவு கொடுத்து வருக்கின்றோம். இதன் மூலம் நீங்கள் இலாபமீட்ட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா, முன்னாள் அரச அதிபர் தில்லை நடராஜா, அகத்தேசிய முற்போக்கு கழக செயலாளர் நாயகம் எம்.பி.நடராஜா, சட்டத்தரணி க.தயாபரன் மற்றும் கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மல்லிகை செய்கையாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# முழு நிலா கலைவிழா நிகழ்வு









**வவுனியா க.மதி**

வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரனையுடன் வவுனியா வடக்கு கல்வி வலயம் நடாத்தும் முழு நிலா கலைவிழா சேமமடு சன்முகானந்தா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதன் போது வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலையை சேர்ந்த மாணவ, மாணவிகளின் நடனம், பாடல்கள், நாட்டுக்கூத்து போன்ற பாரம்பரிய நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தது.

அத்துடன் பிரதம விருந்தினர்களினால் மாணவர்களிற்கான பரிசல்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா வடக்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி. அன்னமலர் சுரேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்கழகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், பிரதேசசபை உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஐக்கிய உணர்வை ஏற்படுத்தும் நயினை தேர் உற்சவம்



நயினை நாகபூசணி அம்பாள் தேர் உற்சவ நிகழ்வில் அடியவர்களோடு ஒன்றிணைந்து வடம் பிடிக்க கிடைத்தமை மகிழ்ச்சியாக உள்ளது எனவும்,

ஆன்மீக பயணத்தை மேற்கொள்ளும் அனைவர்க்கும் உவந்து உணவளிக்கும் அமுத சுரபியும் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவை காண்கின்றது. உணவே மருந்து மருந்தே உணவு என்பதை போன்று, ஐக்கிய ஆன்மீக பயண உணர்வையும் நயினை மண்ணிலே காணக்கூடியதாக உள்ளது. ஆலய அறங்காவலர் சபையினர் நிவர்த்தி செய்து வழங்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் தெரியப்படுத்தி இருந்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

# இலவச கண் பரிசோதனையுடன் மூக்கு கண்ணாடி வழங்கல்



சாவகச்சேரி கோவில் குடியிருப்பை சேர்ந்த அமரர் பூங்கோதை சபாரத்தினத்தின் ஓர் ஆண்டு நினைவை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால் இலவச கண் பரிசோதனையுடன், பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கு மூக்குக்கண்ணாடி வழங்கல் நிகழ்வு1 3/07/2019 ல் சாவகச்சேரி கச்சாய் வீதியில் சத்தியம்மன் வித்தியாலத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

சாவகச்சேரி நகரம், சங்கத்தானை, கல்வயல், மீசாலை, நுணாவில் போன்ற கிராமசேவக அலுவலக பிரிவுகளை சேர்ந்த 150 க்கும் மேற்பட்ட மக்கள் பரிசோதனைக்காக வருகை தந்திருந்தனர். பரிசோதனையின் போது 126 பேருக்கு பார்வையில் குறைபாடு கண்டுபிடிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர், லயன்ஸ் இளங்குமரன், சமூக சேவையாளர் அருளானந்தம், தொழில் அதிபர் அ.ஓ. சபாரத்தினம் குடும்பத்தினர், லயன்ஸ் கழக தொண்டர்கள் என பலர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொழில் அதிபர் அ.ஓ. சபாரத்தினம் குடும்பத்தினர், போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவி, சாவகச்சேரி வைத்தியசாலை புனரமைப்பு நிதி என பல சமூக பணிகளை தென்மராட்சி மண்ணுக்கு செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# மீதி பணம் கேட்டவரை தகாத வார்த்தைகளில் திட்டிய உணவக உரிமையாளர்! வவுனியாவில் சம்பவம்!!

வவுனியாவில் பிரபல உணவகம் ஒன்றில் உணவருந்தியபின் பணத்தை செலுத்தி மீதிப்பணம் கேட்ட நபரை தகாத வார்த்தைகளால் திட்டி தாக்க முயற்சி செய்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

வவுனியா பழைய பேருந்து நிலையம் முன்பாக அமைந்துள்ள பிரபல சைவ உணவகத்தில் உணவருந்திய நபர் ஒருவருக்கு மீதிப்பணத்திற்கு பதிலாக'டொபி' ஒன்றை கடை உரிமையாளர் வழங்கியுள்ளார் குறித்த நபர் 'டொபியை' ஏற்க மறுத்து மீதிப்பணத்தை வழங்குமாறு கோரிய நிலையிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர் கருத்து தெரிவிக்கையில்

குறித்த உணவகத்தில் உணவருந்தியதற்காக 105 ரூபா பில் தரப்பட்டது அதற்காக 120 ரூபாவை கொடுத்த நிலையில் மீதி 15 ரூபாவிற்கு ஒரு 10 ரூபாவும் ஐந்து ரூபாவிற்கு ஒரு 2.00 ரூபா பெறுமதியான 'டொபியும்' வழங்கப்பட்டது. குறித்த டொபியை ஏற்க மறுத்து ஐந்து ரூபா மீதிப் பணத்தை கேட்டபோது சில்லறை நாங்கள் அச்சடிப்பதில்லை என எகத்தாளம் பேசி என்னை தகாகாத வார்த்தைகளால் திட்டி தாக்க முயற்சித்தனர் என தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த பாதிக்கப்பட்ட நபர். குறித்த சம்பவத்தின் காரணமாக தான் பெரிதும் மன உழைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும், இவ்வாறாக அப்பாவிகளிடம் ஏமாற்றி நூதன முறையில் கொள்ளையிடும் வர்த்தக நிலையங்கள் மீதும், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பாவனையாளர்கள் அலுவலக அதிகார சபையினர் குறித்த உணவகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், வவுனியாவில் இது போன்று சரியான சில்லறை வழங்காது'டொபி, இனிப்புக்களை' வழங்கும் வர்த்தக நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் பல வர்த்தக நிறுவனங்களில் 'குபேரன்'சிலையை வைத்து அதற்குள் சில்லறைப் பணத்தை போட்டு பகிரங்கமாகவே பதுக்கி வைக்கும் வர்த்தகர்களால் செயற்கையாக சில்லறைத் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது என பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

# போர் அவலத்தின் சாட்சியாளர் பத்திநாதர் அடிகளாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது

**- தவிசாளர் நிரோஷ்**

அப்பாவிப் பொது மக்களை நோக்கி இராணுவத்தாக்குதல்கள் நடைபெற்ற காலத்தில் மக்களோடு மக்களாக மனிதநேயப்பணியாற்றிய அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அவர்களின் மறைவு எமது இனத்திற்கு போரிழப்பாகும். இவ்வாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

கிழக்கு பிரதேச மக்கள் சார்பாக எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். யுத்த காலத்திலும் அதற்குப் பின்னரான வேளைகளிலும் அருட்தந்தையர்கள் பலர் ஆற்றிய ஆற்றிவரும் சேவைகளை நாம் எப்போதும் நினைவில் கொள்கின்றோம். எமது மக்கள் மீது கோர யுத்தம் முடுக்கிவிடப்பட்டு மனிதாபிமானப் பேரவலத்தினுள் எமது மக்கள் தள்ளப்பட்டிருந்த சமயத்தில் மக்களோடு மக்களாக அநீதியை உலக அரங்கிற்கு கொண்டு செல்லவும் மக்களின் துயரினை துடைப்பதிலும் ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் போன்றோர் ஆற்றிய நடுநிலைமைப்பணிகள் என்றும் மறக்க முடியாதவை.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்கள் மறைக்கப்பட எத்தனிக்கப்படும் தருணங்களில் அதன் நேரடி சாட்சியாளர்களாக நடுநிலையான உண்மைத்தெரிவிப்பாளர்களாக ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் போன்றோரின் பங்களிப்புக்கள் எதிர்காலத்திலும் இருந்திருக்கவேண்டும்.

ஆனால் துரதிஸ்டவசமாக அவர் இவ் உலகை விடைபெற்றுள்ளார். பிறப்பு நிச்சயம் இல்லாவிட்டாலும் இறப்பு நிச்சயானது என்பார்கள். இவ் வரையரைக்குள் அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் உடைய பிரிவை சகித்துக் கொள்ள முடியாது. போரின் இறுதித் தருணங்கள்இ அவலங்கள் தொடர்பில் அவருக்கு இன்றும் எம் இனம் சார்ந்து இருந்து வருகின்ற பாரிய பொறுப்பினை அவரது பிரிவு தடுத்துவிட்டதா என்ற ஏக்கம் உணர்வுள்ள தமிழர்களாக எம்மிடத்தில் நிழலாடுகின்றது.

போரின் இடர்கள்இ ஆழிப்பேரலையின் பின்னரான அவலங்கள்இ இறுதி யுத்தத்தின் அவலங்களில் அவராற்றிய மனிதாபிமானப்பணி அவரை என்றும் நினைவுகூர்வதற்கான தேவையினை வலியுறுத்தி நிற்கின்றது. அநாதரவான சிறார்கள்இ பெண்கள்இ வயோதிபர்கள்இ குரலற்றோருக்கு நிரந்தர சுபீட்சம் கிடைக்க பல்வேறு திட்டங்களை வன்னிப்பெருநிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தியிருந்தார் என்பது கண்கூடு.

பொதுவில் போரின் பின்னரான சூழ்நிலையில் மனிதாபிமானப்பணியாற்றியோர் மகோன்னதமாகப் பேணப்பட்டுள்ளனர். துரதிஸ்டவசமாக போருக்குப் பின்னரும் தமிழ் மக்களுக்கான நீதி முன்வைக்கப்படாமையினால் போரில் மனிதாபிமானப்பணியாற்றியோர் ஏதோ ஒருவகையில் குரலற்றவர்களாக மாற்றப்படவேண்டும் என்ற நிகழ்ச்சிநிரல் நாட்டில் இருந்தே வருகின்றது. அப்படியான ஓர் சூழ்நிலையில் அருட்தந்தையின் மறைவு நிரந்தரமாகவே அவரின் குரலை அல்லது பணியை நிறுத்தி விட்டது தமிழ் மக்களின் துரதிஸ்டங்களில் ஒன்று என்றே பார்க்கப்படவேண்டும். மதங்களுக்கப்பால் நாம் எமது இனமாக செயற்பட்டு மக்களின் அவலங்களைத் தீர்க்கவேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் சேவையாற்றிய ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரின் துயரத்தில் வலி கிழக்கு மக்கள் சார்பாக நாம் அஞ்சலிக்கின்றோம்.




# வவுனியா புதிய பேருந்து நிலைய சோதனைச்சாவடியை உடன் அகற்றவும்

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள படையினரின் சோதனைச்சாவடியால் தினமும் பயணிகள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். எங்கேயோ குண்டு வெடித்ததற்கு இங்கு சோதனைச்சாவடிகளை அமைத்துள்ளனர். தற்போதுள்ள நிலைமைகளில் இச் சோதனைச்சாவடி பேருந்து நிலையப்பகுதியில் தேவையற்றதே. இதனை உடனடியாக அகற்றுமாறு கோரிக்கை விடுக்கின்றேன் என வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் இன்று ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா புதிய பேரூந்து நிலையத்தின் சோதனை நடவடிக்கையில் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் பாதுகாப்புத்தரப்பினருக்கு நாங்கள் கடுமையான அழுத்தம் பிரயோகிக்க முடியாது. ஆனால் தற்போது ஆட்சியாளர்களாக இருக்கின்றவர்கள் இது குறித்து பேசமுடியும். இவ்விடயங்களில் சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து ஒரு முயற்சி மேற்கொள்ளவேண்டும். எங்கேயோ குண்டுகள் வெடித்ததற்காக இங்கே பாதுகாப்பு ஏற்பாடுகளையும், பொதுமக்களுக்கு இடையூறுகளையும் அதிகளவில் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இதனைப் பேசும் போது நாங்கள் பாதுகாப்புத்தரப்பினரை குறைகூறுவதாக அமைந்துவிடக்கூடாது. தற்போது நிலைமைகள் சீராகி வருகின்றது. எந்தப்பகுதிகளிலும் இவ்வாறான பாரிய சோதனைகள் காணப்படவில்லை. இதனால் மக்களுக்கு பாரியளவில் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன. இச் சோதனை சாவடியினை புதிய பேருந்து நிலையப்பகுதியிலிருந்து உடனடியாக அகற்றி பொதுமக்களுக்கு இடையூறுகள் இன்றி தமது பயணங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றேன் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் விபுலானந்தரின் 72 ஆவது நினைவு தினம்





**வவுனியா க.மதி**

வவுனியாவில் இரண்டாம் குறுக்குத் தெரு சந்தியில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தரின் நினைவுச்சிலையில் அன்னாரின் 72ஆவது நினைவு தினம் நினைவு கூரப்பட்டுள்ளது.

நகரசபையினரின் ஏற்பாட்டில் உபநகரபிதா சு.குமாரசுவாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முத்தமிழ் முனிவர் சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கை நினைவுப்பேருரையை தமிழ்மணி அகளங்கன் நிகழ்த்தினார்.

வவுனியா நகரசபை உறுப்பினர்களான எஸ்.சந்திரகுலசிங்கம், சுமந்திரன், சேனாதிராஜா , பாலபிரசன்னா, கலை இலக்கிய நண்பர்கள் வட்ட தலைவர் தமிழ் மணி அகளங்கன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்

# வெளிநாட்டு அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள பகுதியிலுள்ளவர்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கிவைப்பு

**வவுனியா க.மதி**

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் இருக்கும் அயல் பகுதியிலுள்ள மக்களுக்கு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தற்போது மழை இல்லாத காலத்தில் நுளம்பு வலைகள் ஒரு குடும்பத்திலுள்ளவர்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒரு குடும்பத்திற்கு இரண்டு முதல் மூன்று நுளம்பு வலைகளை கடந்த இரண்டு தினங்களாக வழங்கி வருகின்றனர்.

இதனால் அப்பகுதியிலுள்ளவர்களுக்கு மேலும் சந்தேகங்கள் அதிகரித்துக்காணப்படுகின்றது. இவ்வாறு நோய் தாக்கத்திற்குள்ளானவர்களை எமது பகுதிகளில் கொண்டு வந்து குடியேற்றியுள்ளார்கள். இதனால் இங்குள்ள நாங்களும் இவர்களுடன் சேர்ந்த இனந்தெரியாத நோய்த்தாக்கத்திற்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட் வாய்ப்புக்கள் காணப்படுகின்றாகவும் அயலிலுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறன நோய்த்தாக்கம் ஏற்பட்டதன் காரணமாகவே இவர்கள் அனைவரும் தத்தமது நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதி மக்களின் குற்றச்சாட்டுக் குறித்து வவுனியா பிராந்திய மலேரியா தடை இயக்க பொறுப்பதிகாரி வைத்தியர் பிரசாத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

அவ்வாறான இனந்தெரியாத நோய்த்தொற்றுக்கள் எவையும் அவர்கள் மீது இனங்காணப்படவில்லை எமது பரிசோதனைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. முகாம் பகுதியிலிருந்து 500மீற்றர் சுற்றளவில் தங்கியுள்ளவர்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மலேரியா நோயைத் தடை செய்யும் நடவடிக்கையாக இத்திட்டம் பல கிராமங்களில் இடம்பெற்று வருகின்றது. இதன் ஒரு அங்கமாகவே பூந்தோட்டம். ஸ்ரீநகர் பகுதிகளில் எம்மால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் இலங்கையிலிருந்து மலேரியாவை முற்றாக அழித்தொழிக்கும் நடவடிக்கையாகும். அடப்பன்குளம், எல்லப்பர்மருதங்குளம், நேரியகுளம் போன்ற பகுதிகளுக்கும் இவ்வாறு நுளம்பு வலைகள வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் இந்தியாவிலிருந்து வந்த தொழிலாளர்கள் தங்கியிருந்து வேலை செய்து வருகின்றனர். மலேரியா நோயை தடை செய்யும் நோக்குடன் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது என்று மேலும் தெரிவித்துள்ளார்.

# வவுனியாவில் வரட்சியினால் 120 ஏக்கர் நெற்செய்கை அழிவு 49 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம்: அரச அதிபர்




**வவுனியா நிருபர்**

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி காலநிலை காரணமாக 89 குடும்பங்களை சேர்ந்தவர்களின் 120 ஏக்கர் நெற்செய்கை காணிகள் முற்றாக அழிவடைந்துள்ளது. அத்துடன் 49 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது என மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியின் பாதிப்புக்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை வவுனியா மாவட்டத்திலும் தொடர்கிறது. வவுனியா மாவட்டத்தில் இவ் வரட்சி காரணமாக 89 குடும்பங்களைச் சேர்ந்த 120 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளது. இந்த வரட்சிக் காலநிலை இன்னும் தொடர்ந்தால் பயிர்செய்கை பாதிப்புக்கள் இன்னும் அதிகரிக்கக் கூடிய நிலை காணப்படுகின்றது. ஓமந்தை, பம்பைமடு, கோவில்குளம் போன்ற கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட நெற்செய்கை நிலங்களே இவ்வாறு அழிவடைந்துள்ளன. இராசேந்திரங்குளத்தின் கீழான 60 ஏக்கர் நெற் செய்கை அழிவடைவதைத் தடுக்கும் நோக்கில் அனர்த்த முகாமைத்துவ நிலைவயம் ஊடாகவும், மத்திய நீர்பாசன திணைக்களம் ஊடாகவும் நீர்ப்பம்பிகள் மூலம் நீர் விநியோகிக்கப்படுகிறது.

இதுதவிர, வவுனியா வடக்கு ஊஞ்சல் கட்டி, மருதோடை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 49 குடும்பங்களைச் சோந்த 140 பேர் பாதிப்படைந்துள்ளனர். இவர்களுக்கான குடிநீர் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வவுனியா வடக்கு பரதேச செயலகத்துடன் இணைந்து வழங்கப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

# வவுனியா சைவப்பிரகாசாவில் பார்வையாளர் கூடம் திறந்து வைப்பு

**வவுனியா க.மதி**



வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியின் மைதானத்தில் பார்வையாளர் கூடம் திறந்து வைக்கப்பட்டது.

வன்னி பாரளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகனின் பத்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட இப் பார்வையாளர் கூடத்தின் திறப்பு விழா பாடசாலையின் அதிபர் பா. கமலேஸ்வரியின் தலைமையில் இடம்பெற்ற நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ச. சிவமோகனால் திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் அதிபர் கனகரத்தினம் அவர்களது பெயர் சூட்டப்பட்ட இப் பார்வையாளர் கூடத்தின் திறப்பு விழாவில் பாடசாலையின் ஆசிரியர்கள், அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இரணைதீவு மக்களின் பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்தார்

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் இன்று இரணைமதாநகர் மற்றும் இரணைதீவு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர், அப்பகுதி மீனவர்களுட் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

இதேவேளை இதுவரை காலமும் இரணைமாதா நகரில் நண்டு சதை ஏற்றுமதி தொழிற்சாலையிலிருந்து ஏற்றுமதிக்கான செயற்பாடுகள் இடம்பெற்று வந்த நிலையில், முதல் முதலாக இரணைதீவிலிருந்து குறித்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த ஏற்றுமதி தொடர்பான விடயங்களை பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தொழிற்சாலையின் செயற்பாடுகள் மற்றும் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

தொடர்ந்து குறித்த பகுதியில் கடலட்டை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்களை சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் தேவைகள் தொட்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

இரணைதீவில் குறித்த கடலட்டை வளர்ப்பை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் எவ்வாறு மெற்கொள்ள முடியும் எனவும் அட்டைப்பண்ணையாளர்களிடம் கேட்டறிந்துகொண்டார்.

இதேவேளை குறித்த பண்ணையாளர்களின் தேவைகள் மற்றும், ஏற்றுமதிசார் விடயங்கள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்ததுடன் எதிர்காலத்தில் கடலட்டை பண்ணைகளை அதிகரித்து அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் அவர் ஆராய்ந்திருந்தமை குறிப்பிடதக்கதாகும்.

# அங்காடி வியாபாரிகள் வவுனியா நகரசபையை திடீர் முற்றுகை

**வவுனியா நிருபர்**



வவுனியாவில் வியாபாரம் செய்யும் அங்காடி வியாபாரிகள் தங்களுக்கு நிரந்தரமான இடம் ஒன்று வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வவுனியா நகரசபையை முற்றுகையிட்டனர்.

கடந்த 20 நாட்களுக்கு மேலாக வீதிகளில் வியாபாரம் மேற்கொள்வது வவுனியா நகரசபையினரால் தடைசெய்யப்பட்டுள்ளமையால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தே குறித்த முற்றுகை நடைபெற்றிருந்தது.

வவுனியா நகரசபை உறுப்பினர்களையும் முற்றுகையிட்ட அங்காடி வியாபாரிகள் தங்களுக்கு ஓர் தீர்வை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்திருந்ததுடன் காலையிலிருந்து நகரசபை தலைவர் தங்களை சந்திக்க மறுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் அங்காடி வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நகரசபை தலைவர் இ.கௌதமன் தற்போது அங்காடி வியாபாரிகளுக்கு தற்காலிகமாக இடம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான நிரந்தரத்தீர்வு வெகு விரைவில் வழங்கப்படும் என தெரிவித்தார்.

நகரசபை தலைவருடனான பேச்சுவார்த்தையின் பின்னர் கருத்து தெரிவித்த சிறு வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் யூ.அயூப் கான்

கடந்த 20 வருடங்களாக சிறு வியாபாரிகளின் பிரச்சனைகள் தீர்க்கப்டாமல் இருக்கிறது. எமக்கு ஒரு நிரந்தரமான இடம் பெற்றுத்தருவதாக நகரசபை தலைவர் உறுதியளித்துள்ளதாக தெரிவித்தார்

# பொலிஸ் நிலைய வளாகத்தில் உள்ளக விளையாட்டு அரங்கம் திறந்து வைப்பு

**வவுனியா க.மதி**

வவுனியா பொலிஸ் நிலைய வளாகத்தில் இன்று காலை வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி விஜேய குணவர்தனவினால் அனுரா அபேயவிக்கிரம உள்ளக பூப்பந்தாட்ட விளையாட்டு அரங்கம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர அபேவிக்கிரமவின் உன்னத திட்டத்தின் கீழ் முன்னாள் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாணந்துவின் வழிகாட்டலின் கீழ் வவுனியா பிராந்திய வேலைப்பகுதி உத்தியோகத்தர்களின் உழைப்பு மூலம் வவுனியா பொலிஸ் கட்டடத் தொகுதியில் நிர்மானிக்கப்பட்ட அனுர அபேவிக்கிரம உள்ளக விளையாட்டு அரங்கம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.




# நடைப்பாதை திறந்து வைப்பு

**க.கிஷாந்தன்**

தோட்டப்புறங்களில் காணப்படும் போக்குவரது வசதிகளை துரிதப்படுத்தும் நோக்கில் கொட்டகலை பிரதேச சபையின் தலைவரினதும், உப தலைவரினதும் வேண்டுக்கோளுக்கிணங்க, இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் பத்தனை கிறேக்கிலி தோட்டத்தின் நடைப்பாதை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.



கொட்டகலை பிரதேச சபையின் தலைவர் ராஜமணி பிரசாத்தினால் 17.07.2019 அன்று பிரதேச மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கொட்டகலை பிரதேச சபையின் உப தலைவர் எம்.ஜெயகாந்த், முன்னாள் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர் மலர்வாசகம், பிரதேச வாசிகள் என பலர் கலந்துக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# கோதுமை மா விலை அதிகரிப்பால் தோட்டத்தொழிலாளர் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிப்பு

**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**

கோதுமை மாவின் விலையினை நேற்று முன்தினம் முதல் பிரிமா நிறுவனம் அதிகரித்ததனை தொடர்ந்து தோட்டத்தொழிலாளர்கள் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக தோட்டத்தொழிலாளரகள் தெரிவிக்கின்றனர்.

இந்த கோதுமை மா அதிகரிப்பின் காரணமாக கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் அனைத்து பேக்கரி உணவு பொருட்களும் அதிகரிக்கப்படவுள்ளன.

தோட்டத்தொழிலாளர்கள் தங்களது நாளாந்த உணவின் பெரும் பகுதியினை கோதுமை மாவின் மூலமே பூர்த்தி செய்து வருகின்றனர்.

காலை வேலையில் இரவு வேளையிலும் அவர்களுக்குரிய நேரத்திற்கேற்ப கோதுமை மாவினை பயனபடுத்திய அவர்கள் தங்களுக்கு தேவையான உணவினை தயாரித்து கொள்கின்றனர்.

இவ்வாறான சூல்நிலையில் குறைந்த சம்பளம் பெரும் இவர்கள் தற்போது அதிகரிக்கப்பட்ட மாவின் விலை காரணமாக தாங்கள் மேலும் மேலும் பொருளாதார சுமைக்கு தள்ளப்படுவதாகவும் தங்களுக்கு அரசாங்கம் அதிகரிப்பதாக சம்பள அதிகரிப்பு அதிகரிக்காத நிலையில் பொருட்களின் விலை அதிகரிப்பு ஈடுகொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

நல்லாட்சியின் மூலம் தங்களுக்கு விடிவு கிட்டும் என்று எதிர்ப்பார்த்த போதிலும் அரசாங்கம் தொழிலாளர்கள் தொடர்பாக எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை என இவர்கள் விசனம் தெரிவிக்கும் அதே வேளை அரசாங்கம் தோட்டத்தொழிலாளர்களது பொருளாதார நிலைமையினை கருத்தில் கொண்டு கோதுமை மாவின் விலையினை உடன் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் இல்லாவிட்டால் தொழிலாளர்களுக்கு மானியமாவது வழங்க முன்வரவேண்டும் எனவும் இவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தொழிலாளர்கள் கருத்து தெரிவிக்கையில்.....

நாங்கள் மிகவும் கஸ்ட்டத்திற்கு மத்தியில் தான் வேலை செய்கின்றோம.; சோறு சமைத்து கொண்டு பொய் தேயிலை மலையில் சாம்பிடமுடியாது ஆகவே தான் நாங்கள் பிரதான உணவாக ரொட்டியினை சாப்பிடுகின்றோம். அத்தோடு அதிகாலையில் எழுந்து எங்களது பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்து விட்டு எங்களுக்கு சோறு இரண்டு மூன்று கறி என சமைக்க நேரம் இருக்காது. ஆகவே தான் நாங்கள் எங்களுக்கு இலகுவாக செய்யக்கூடிய உணவுகளை செய்துகொளகிறோம்;.தோட்டத்தில் வேலைகது காலதாமதமாகி சென்றால் எங்களுக்கு குறித்த இறாத்தல் கொழுந்து பறிக்கா முடியாது. அவ்வாறு பறிக்காவிட்டால் அரை நாள் பெயர் தான் பதிவார்களா.; பொருளாதார சுமையில் வாழும் இவ்வாறான விலை உயர்வுகள் மூலம் மேலும் நாங்கள் வறுமை நிலைக்கு தள்ளப்படுகின்றோம்.

இந்த அரசாங்கத்தினை தெரிவு செய்வதற்காக நாங்கள் எங்களது வாக்குகளை பயனபடுத்தினோம். காரணம் எங்களுக்கு இவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள.; என்று ஆனால் இவர்கள் சம்பளம் அதிகரிப்பதாக தெரிவித்த வாக்குறுதியும் நிறைவேற்றவில்லை. மாறாக பொருட்களின் விலையினையே அதிகரித்து வருகின்றனர.என இவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# கொட்டகலை பகுதியில் வெள்ளம்; சுமார் 63 வீடுகள், கடைகள் பாதிப்பு

**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**

மலையகத்தில் ஏற்பட்ட சீரற்ற கால நிலையினை தொடர்ந்து கொட்டகலை பகுதியில் கணத்த மழை பெய்து வருகிறது இந்த மழை காரணமாக கொட்டகலை சாமஸ்ட்டன் பகுதியின் தொடர் குடியிருப்பு ஒன்றில் உள்ள 30 வீடுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன் இப்பகுதியில் உள்ள பாடசாலை கொழுந்து மடுவம் ஆகியனவற்றிக்கும் வெள்ள நீர் புகுந்துள்ளன.

இதே வேலை கொட்டகலை ஆறு பெருக்கெடுத்தன் காரணமாக ரொப்கில் பகுதியில் உள்ள 30 வீடுகளுக்கு வெள்ள நீர் புகுந்துள்ளன.அத்தோடு கொட்டகலை லூட்டன் பகுதியில் மூன்று கடைகளும் 10 கடைகளுக்கும் வெள்ள நீர் புகுந்துள்ளன.

வட்டவளை பகுதியில் வெள்ள ஏற்பட்டதன் காரணமாக பல குடும்பங்கள் வட்டவளை தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தெரிவிக்கப்படுகிறது

மலையகத்தில் பல பகுதிகளில் கடும் மழை பெய்து வருகிறது தொடர்ச்சிய பெய்து வரும் மழை காரணமாக பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளன.





மழையுடன் கடும் குளிரும் நிலவுவதனால் பல்வேறு தொழில் துறைகள் முடங்கி போய்வுள்ளன.தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பல பிரதேசங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளன.

அட்டன் டிக்கோயா நகர சபைக்குட்பட்ட ஹட்டன் பொலிஸ் நிலைய வீதியில் மண்திட்டு சரிந்து வீழ்ந்தததில் கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு ஹட்டன் கொழும்பு மற்றும் ஹட்டன் நுவரெலியா வீதிகளில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் நிலவுவதனால் இந்த வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

நீரேந்தும் பிரதேசங்களுக்கு கணத்த மழை பெய்து வருவதனால் லக்ஸபான நீர்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் 06 அங்குலம் வரை திறக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால் அதிகமான தொழிலாளர்கள் கொழுந்து பறிப்பதற்கு சமூகம் தரவில்லை. என்றும் இதனால் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளதாக தோட்ட நிர்வாகங்கள் தெரிவிக்கின்றனர்.

காலை முதல் இடை விடாது மழை பெய்து வருவதனால் கால்நடை உற்பத்தியாளர்கள் தங்களது கால் நடைகளுக்கு தேவையான புற்களை அறுக்க முடியாது சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மழை காரணமாக மலையக நகரங்களில் வர்த்தக நடவடிக்கைகளும் சோகையிழந்து காணப்படுகின்றன.

# மலையகத்தில் சீரற்ற காலநிலை வீடுகளில் வெள்ள நீர்

**க.கிஷாந்தன்**

மலையகத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினை தொடர்ந்து கொட்டகலை பகுதியில் கன மழை பெய்து வருகிறது. இந்த மழைகாரணமாக கொட்டகலை மேபீல்ட் சாமஸ் பகுதியில் தொடர்குடியிருப்பு ஒன்றில் உள்ள 6 வீடுகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன்இப்பகுதியில் உள்ள பாடசாலை, கொழுந்து மடுவம் ஆகியனவற்றிக்கும் வெள்ள நீர் புகுந்துள்ளன.

இதேவேளை கொட்டகலை ஆறு பெருக்கெடுத்தன் காரணமாக லொக்கீல் பகுதியில் உள்ள 30 வீடுகளுக்கு வெள்ள நீர் புகுந்துள்ளன.அத்தோடு கொட்டகலை லூட்டன் பகுதியில் 10 கடைகளுக்கும் வெள்ள நீர் புகுந்துள்ளன.

வட்டவளை பகுதியில் வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக பல குடும்பங்கள் வட்டவளை தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மலையகத்தில் 17.07.2019 அன்று இரவு பல பகுதிகளில் கடும் மழை பெய்து வருகிறது. தொடர்ச்சியாக பெய்து வரும் மழைகாரணமாக பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளன.

மழையுடன் கடும் குளிரும் நிலவுவதனால் பல்வேறு தொழில் துறைகள் முடங்கி போய்யுள்ளன. தொடர்ச்சியாக பெய்து வரும் மழைகாரணமாக பல பிரதேசங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளன. அத்தோடு அட்டன் கொழும்பு மற்றும் அட்டன் நுவரெலியாவீதிகளில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் நிலவுவதனால் இந்த வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும்அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

நீரேந்தும் பிரதேசங்களுக்கு கனத்த மழை பெய்து வருவதனால் லக்ஸபான நீர்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் 06 அங்குலம்வரை திறக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால் அதிகமான தொழிலாளர்கள் கொழுந்து பறிப்பதற்கு சமூகம்தரவில்லை என்றும் இதனால் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளதாக தோட்ட நிர்வாகங்கள் தெரிவிக்கின்றனர்.

காலை முதல் இடை விடாது மழை பெய்து வருவதனால் கால்நடை உற்பத்தியாளர்கள் தங்களது கால் நடைகளுக்கு தேவையானபுற்களை அறுக்க முடியாது சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மழை காரணமாக மலையக நகரங்களில் வர்த்தக நடவடிக்கைகளும்சோகையிழந்து காணப்படுகின்றன.

# டிஜிட்டல் தொழில்நுட்ப கருவிகள் வழங்கி வைப்பு

**க.கிஷாந்தன்**



மலையக பாடசாலைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக 18.07.2019 அன்று நுவரெலியா மற்றும் அட்டன் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளுக்கான டிஜிட்டல் தொழில்நுட்ப கருவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த கருவி ஒன்றின் பெறுமதி தலா 45 ஆயிரம் ரூபாவாகும். இந்த கருவிகள் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான வேலுசாமி ராதாகிருஷ்ணனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆர்.ராஜாராம் கலந்துகொண்டு டிஜிட்டல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இவரோடு நுவரெலியா வலயக் கல்விப் பணிமனையின் மேலதிக வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.மோகன்ராஜ், மலையக ஆசிரியர் முன்னணியின் செயலாளர் ரவீந்திரன் உட்பட பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# கினிகத்தேனையில் 10 வியாபார ஸ்தலங்கள் பள்ளத்திற்கு சரிந்து விழுந்தன

**க.கிஷாந்தன்**

கினிகத்தேனை பிரதான நகரத்தில் 10 வியாபார ஸ்தலங்கள் பள்ளத்திற்கு சரிந்து விழுந்துள்ளது. இவ்வாறு சரிந்து விழுந்துள்ள கடைகளில் ஒருவர் சிக்குண்டு இருப்பதாக தெரியவந்துள்ளது. இவரை மீட்கும் பணி இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு சரிந்து விழுந்துள்ள கடைகளில் சில்லறை கடைகள் மற்றும் ஹோட்டல்கள் போன்றவை இருந்துள்ளன.

இப்பிரதேசத்தில் 19.07.2019 அன்று பெய்த கடும் மழை காரணமாக இந்த அனர்த்தம் இடம்பெற்றிருக்கின்றது.

அதேநேரத்தில் இப்பிரதேசத்தில் போக்குவரத்து தடைகளும் ஏற்பட்டுள்ள நிலையில், கினிகத்தேனை நாவலப்பிட்டி பிரதான வீதி பாதுகாப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

பிரதேசத்தில் பொது மக்கள் இயற்கை சீர்கேட்டின் காரணமாக பெரும் அச்சத்தில் உள்ளதாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

கினிகத்தேனை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இப்பிரதேசத்தில் பாதுகாப்பினை பலப்படுத்தியுள்ளனர்.

# தமிழ் கலைஞர்களுக்கு சரியான களம் அமைய வேண்டும் என்றால் நாட்டிலுள்ள அனைத்து கலைஞர்களும் ஓர் அணியில் திரள வேண்டும்

## இலங்கை தமிழ் இசைக் கலைஞர் சங்கத்தின் தலைவர் கே.மஹிந்தகுமார் தெரிவிப்பு



**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்;**

தமிழ் கலைஞர்கள் என்ற வகையில் இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு கொடுத்து வருகின்றோம். இன்று நாட்டில் உள்ள ஏனைய கலைஞர்களுக்கு அதாவது பெரும்பான்மை கலைஞர்களுக்கு கிடைக்கின்ற அங்கிகாரம் களம் சலுகைகள் எதுவும் எமக்கு கிடைப்பதில்லை. அதனால் ஆரம்ப காலத்தில் தங்களது வாழ்க்கையினை நல்ல முறையில் வைத்திருந்த கலைஞர்கள் பலர் இறுதி காலத்தில் பெரும் துன்பத்துக்குள்ளாகியுள்ளனர்.இன்று பலர் பல்வேறு பட்ட கஸ்ட்டங்களுக்கு உட்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களை பற்றி ஊடகங்களோ அல்லது வேறு எந்த அமைப்பினரோ அல்லது அரசாங்கமோ கண்டு கொள்வதில்லை. எனவே தான் நாங்கள் இலங்கை தமிழ் இசைக் கலைஞர் என்ற சங்கத்தினை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த அமைப்பின் ஊடாக நாடு முழுவதும் உள்ள அனைத்து கலைஞர்களையும் ஒன்றினைத்து அவர்களுக்கு நல்ல களத்தினை அமைத்து கொடுத்து அவர்களின் வாழ்வினை ஒளிமயமாக்குவதே எமது ஒரே நோக்கம.; என, இலங்கை தமிழ் இசைக்கலைஞர் சங்கத்தின் தலைவர் கே.மஹிந்தகுமார் தெரிவித்தார்.

மலையக இசைக்கலைஞர்களுடன் ஒன்றினையும் நிகழ்வு இன்று (16) திகதி காலை ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் அமைப்பின் நோக்கம் பற்றி தெளிவு படுத்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்...

இன்று நாம் எத்தனையோ சொந்த பாடல்களை பாடினாலும் சரி, சொந்த இசையினை இசைத் துறையில் வெளியிட்டாலும் கூட அவற்றிக்கு சரியான வரவேற்பு கிடைப்பதில்லை. ஊடகங்களும் எமது கலைஞர்களின் கலைத்துறைக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. மாறான வெளிநாடுகளிலிருந்து வரும் கலைஞர்களுக்கே அனைத்து சலுகைகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் நாம் வெளிநாடுகளுக்கு சென்று பாடுவதற்கேற்ற சூழல் இது வரை உருவாக்கப்படவில்லை. அதனை நாம் உருவாக்கி கொள்ள வேண்டுமானால் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது திறமைகளை மேலும் வலுவூட்டி எமக்கு தேவையான வற்றை பெற்றுக்கொள்ள வேண்டும.; அத்தோடு அரசாங்கம் இன்று கலைஞர்களுக்காக பல்வேறு நலன்புரி விடயங்களை அறிமுகப்படுத்தியிருந்தாலும் அதனை கூட பெற்றுக் கொள்ள தெரியாத நிலையிலேயே எமது கலைஞர்கள் உள்ளனர்.அரசாங்கம் இன்று கலைஞர்களுக்காக கடன் வழங்குகிறது. அத்தோடு வட்டியில்லா வாகன கடன் வழங்குகிறது.அது மாத்திரமின்றி சாதனை படைத்த படைப்பாளிகளுக்கு விருது வழங்கி கௌரவிப்பதுடன் பணப்பரிசும் வழங்குகிறது. இது எதனையுமே நாம் பெற்றுக்கொள்வதில்லை. இந்நிலை மாற்றி கலைஞர்களின் இசைத் துறையினை மேம்படுத்தி சமூக பொருளாதார ரீதியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதே எமது நோக்கம்.

அது மாத்திரமன்றி எமது அமைப்பின் ஊடாக சிறந்த கலைஞர்களை கோண்டு மேலும் பயிறிசி பட்டடறைகளை உருவாக்கி, அவர்களின் இசை திறமையினை இந்த நாட்டில் மட்டுமன்றி வெளிகடுக்கு கொண்டு செல்ல கூடிய அளவுக்கு அவர்களை ஊக்குவிப்பதுடன் அரசியல் ரீதியாக கலைஞர்களுக்கு கிடைக்க வேண்டிய அந்தஸ்து உரிமைகள் ஆகியனவும் இந்த ஒன்றியத்தினூடாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு இலங்கை இசைக்கலைஞர் சங்கத்தின் உபதலைவர் செந்தூரன்,செயலாளர் ரட்ணம் ரட்ணதுறை,உப செயலாளர் ஸ்ரீ வத்சலா,பொருளாளர் மோகனரூபன்,உப பொருளாளர் வாகிசன்,மலையக இசைக்கலைஞர் ஒன்றியத்தின் சார்பாக தலைவர் டி.பி.சரஸ்தீன், செயலாளர் ரஜனிகாந்த்,பொருளாளர் சிவகுமார் உப தலைவர் அசோக்குமார் உட்பட மலையகத்தின் பல்வேறு பிரதேசங்களை சேர்ந்த கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

# இணைய குற்றங்கள்; தடுப்பது எப்படி?

குறுந்தகவல்களை மொத்தமாக பலருக்கு ஒரே சமயத்தில் அனுப்ப, இலவச எஸ் எம் எஸ் சேவை தரும் தளங்கள் உள்ளன. அவற்றில் நம் எண்ணைப் பதிந்துவிட்டால், அவர்கள் ஒரு பாஸ்வேர்டு தருவார்கள்.

அதன் பின் கம்ப்யூட்டரில் அந்த தளத்தில் பாஸ்வேர்டை உள்ளிடுவதன் மூலம், தகவலை அனைவருக்கும் ஒரே சமயத்தில் அனுப்பலாம்.

சரி இதில் ஒரு முடிச்சு உள்ளது. அதாவது, உங்கள் செல்ஃபோன் ஐந்து நிமிடங்கள் என்னிடம் இருந்தால், உங்கள் மொபைல் எண்ணை அந்த தளத்தில் பதிந்துவிட்டு, உங்கள் மொபைலுக்க்கு அவர்கள் அனுப்பும் பாஸ்வேர்டை குறித்துக் கொண்டுவிட்டு, பின் உங்கள் மொபைலில் உள்ள அந்த பாஸ்வேர்டை அழித்துவிட்டு, உங்களிடம் உங்கள் மொபைலைத் திருப்பித்தந்துவிட்டால் உங்களுக்கு ஏதும் வித்தியாசம் தெரியாது.

இப்போது உங்கள் மொபைலில் இருந்து வருவது போல யாருக்கு வேண்டுமானாலும் என்ன தகவல் வேண்டுமானாலும் அனுப்பலாம் அல்லவா?

இதே போலத்தான் ஈ-மெயில் பாஸ்வேர்டு தொலைந்து/மறந்துவிட்டால், நம் தொலைபேசி எண்ணை கன்ஃபர்ம் செய்ததும் அந்த எண்ணுக்கு ஒரு கோட் எண் அனுப்புவார்கள். அதை உள்ளிட்டு புது பாஸ்வேர்டு அமைக்க முடியும். இதை நம் மொபைலை சில நிமிடங்கள் கடன் வாங்குவதன் மூலமும் நம் பாஸ்வேர்டை களவாட முடியும் அல்லவா?

மொபைலை யாரிடமும் பகிந்து கொள்ளாதிருத்தல்தான் ஒரே வழி.

நாம் அனுப்பும் ஒரு ஈ-மெயிலை அவர் படித்துவிட்டாரா இல்லையா என செக் செய்ய நாம் அனுப்பும் மெயிலோடு ஒரு ஒற்றை (குகநு) அனுப்ப முடியும். இதை, நீங்கள் அனுப்பிய மெயிலை படித்துவிட்டு அதன் படி நடக்காமல் அல்லது நடக்கப்பிடிக்காமல் ‘‘இன்னும் படிக்கவில்லை என ஏய்க்கும் நபர்களைக் கண்காணிக்கப் பயன்படுத்த முடியும்.

SPYPIG போன்ற தளங்கள் இதற்கு உதவுகிறது.

நாம் அனுப்பிய அந்த ஒற்றுத்தகவலானது அந்த நபர் அந்த மெயிலை படிக்க திறந்ததும், நமக்கு தகவல் தரும்.

அந்த ஒற்று, அனுப்பப்பட்டுள்ளது எனும் தகவலை அந்த நபரிடமிருந்து மறைத்தும் அனுப்ப இயலும்.

சரி. இதே போல ஒற்றை உங்கள் பாஸ் உங்களைக் கண்காணிக்க மறைவாக அனுப்பி இருக்கிறாரா? என நீங்கள் அறிந்து கொள்ள,

எந்த மெயில் அப்படி இருக்க வாய்ப்புள்ளது என நீங்கள் நினைக்கிறீர்களோ அந்த மெயிலின் டெக்ஸ்டை காபி செய்யுங்கள். அப்படி காபி செய்கையில், காபியான பகுதி எழுத்துக்கள் நீல நிறமாகும். ஆனால், ஒரு இடத்தில் மட்டும் எழுத்துக்கள் ஏதும் இல்லாமலேயே அந்த இடம் நீல நிறமாக இருக்கும். அப்படி ஆனால் அந்த இடத்தில் ஒற்று(SPY) இருக்கிறது என அறியலாம்.

மெயிலில் புகைப்படங்களை பகிர்வது உண்டு. ஆனால், அந்த புகைப்படங்கள் தரவிறக்கம் செய்யப்பட்டு, தவறாக உபயோகிக்கப்படலாம் என நினைத்தால், அந்த படங்களை வாட்டர் மார்க் செய்து அனுப்பலாம். வாட்டர் மார்க் செய்வதை பல இணைய தளங்கள் இலவசமாக செய்ய உதவுகின்றன.

ஆனால், அந்த வாட்டர்மார்க்கையும் உடைக்க சில மென்பொருட்கள் சந்தையில் உள்ளன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். சுலபத்தில் நம் புகைப்படங்கள தரவிறக்க்கம் செய்யப்படுவதை மட்டுமே நம்மால் தவிர்க்க முடிய்ம்.

5. மெயிலில் உள்ள தகவல்கள் யாருக்கு அனுப்பப்படுகிறதோ அவர் ஒரு முறை மட்டுமே அதை பார்க்க முடியும் அதன் பின் அந்த தகவல் காணாமல் போய்விடுவது போல அல்லது அந்த தகவல் குறிப்பிட்ட நேரம் வரைதான் காணக்கிடைக்கும் என்பது போல செட் செய்ய முடியும்.

இதை எப்படி தவறாகப் பயன்படுத்துகிறார்கள்..?

ஒரு முறை ஒரு தகவலைச் சொல்லிவிட்டு, பின் அதை மறுக்க இதைப் பயன்படுத்தலாம் அல்லவா?

இதற்கு, உங்களிடம் தகவல் சொல்பவர், தகவலை சொல்ல வெவ்வேறு மீடியாக்களைப் பயன்படுத்துகிறார் எனில் கவனம். அதாவது, முதலில் ஒன்றை மெயிலில் சொல்லிவிட்டு, அதன் பின் அதை மறுத்து மொபைலில் வேறொன்று சொல்கிறார் எனில், உடனேயே, ‘‘இன்ன தேதியில் நீங்கள் சொன்னபடி.. என்கிற மாதிரி உங்களுக்க்கு ஆதரவான சாட்சி ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

6. நீங்கள் தொடர்ந்து எந்த மாதிரியான தகவல் பக்கங்களைப் பார்வையிடுகிறீர்கள் என உங்கள் சர்ச் எஞ்சின் பட்டியலிட்டு வைத்திருக்கும். உதாரணமாக நீங்கள் வேலை வாய்ப்புச் செய்திகளை அதிகம் தேடுகிறீர்கள் எனில், அது குறித்த தகவல்களாக உங்களுக்கு அதிகம் அளிக்கவே இந்த ஏற்பாடு. சரி. இந்த ஏற்பாடு எப்படி தவறாக உபயோகிக்கப்படுகிறது?

‘‘உங்கள் துறையில் இதோ வேலை வாய்ப்பு என உங்கள் பேஜில் ஒரு லின்க் வந்து போகும். சரியென அதை பார்க்க க்ளிக் செய்வீர்கள். அத்தோடு, உங்கள் தகவல்கள் அனைத்தும் களவாகும்.

இதற்கு என்ன செய்யலாம்..? நம் பேஜில் அது போல ஒரு லின்க் வந்தால் அந்த லின்க்கை அப்படியே க்ளிக் செய்யாமல், அதை மறுபடி டைப் செய்து அந்த ஒரிஜினல் பக்கத்தில் போய் தகவல்களைப் பெறலாம்.

எனக்கு அடிக்கடி ஒரு டயலாக் பாப் அப் ஆகும். அதாவது, நிறுவனத்தின் செக்யுரிடியைப் பயன்படுத்துங்கள் என. தினம் ஒரு ஐந்தாறு முறையாவது வரும். அந்த நிறுவனப் பெயர் நம் மனதில் பதிந்து விடும்.

திடீரென ஒரு நாள் அவசர தகவல்; உங்கள் கம்ப்யூட்டரின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது. என மொட்டையாக ஒரு வாசகம் இடம் பெறும். யாரிடமிருந்து வருகிறது எனும் தகவல்கூட இல்லாமல். செக் செய்து பார்த்தால் நம் கம்யூட்டரில் பிரச்சினை ஏதும் வந்திருக்காது.

ஆனால், அதை செக் செய்யும் முன் சட்டென பயந்து என்ன செய்வோம். ? ..தினம் பார்க்க்கும் பழகிய அந்த செக்யுரிடி நிறுவனத்தின் இலவச பாதுகாப்பை கோருவோம். அதுதானே அந்த விளம்பரத்தின் நோக்கம்.? (சில சமயங்களில் இலவசமாக உள்ள அந்த மென்பொருள் அப்க்ரேட் எனும் பெயரில் சந்தா வசூலிக்கும்)

ஃபேஸ்புக் போன்ற தளங்களைப் பார்த்துக் கொண்டே உங்கள் மற்ற அலுவல்களைப் பார்க்கும் பழக்கம் இருந்தால் அதை முதலில் மாற்றிக் கொள்ளுங்கள். ஏனெனில், நான்கைந்து பக்க்கங்களைத் திறந்து வைத்திருக்கையில் அவற்றில் ஏதேனும் ஒன்று ஸ்பை சைட்டாக இருக்கக் கூடும்.



உதாரணமாக, நீங்கள் உங்கள் பேங்க் அகவுண்டை திறந்து வைத்திருக்கிறீர்கள். உங்கள் அலுவல் கோப்பையும்,. இத்தோடு ஃபேஸ்புக் போன்ற தளங்களையும் திறந்து வைத்திருக்கிறீர்கள்.

இடையில் உங்கள் அலுவலக்க கோப்பை பார்க்கிறீர்கள். அந்த நேரத்தில், பேஸ்புக் அகவுன்ட் இருக்கும் பக்கத்தின் தலைப்பு பேன்க் பேஜாக (க்லோனின் சைட்) மாறும்.

இப்போது நீங்கள் பேன்க் அகவுண்ட் பக்கத்தை பார்வையிட வருவீர்கள். வழக்கம் போல அந்த க்ளோனிங் பேஜில் உங்கள் ஐடி பாஸ்வேர்ட் கேட்கும். ஏற்கனவே நீங்கள் கொடுத்திருந்தாலும் இப்போது மறுபடி கொடுப்பீர்கள். (ஏனெனில் உங்கள் கவனம்தான் வேறு தளங்களில் இருக்கிறதே?)

பல பேஜ்களை ஒரே சமயத்தில் திறந்து வைக்காதீர்கள். ஒரு தளத்தில் ஐடி பாஸ்வேர்ட் கொடுத்தால், மறுபடி அந்த தளம் அவற்றைக் கேட்டால் அந்த பேஜையே க்ளோஸ் செய்துவிட்டு மறுபடி அந்த அட்ரசுக்குப் போய் ஐடி பாஸ்வேர்டு கொடுங்கள்.

ஃபேஸ்புக் போன்ற தளங்களில், உங்கள் படம் பெயரில் ஒரு அகவுண்ட் ஓபன் செய்துவிட்டு, நீங்கள் சொல்வது போல ஒரு கருத்தை தகவலை பரப்ப முடியும். அப்படி நடப்பது உங்களுக்குத் தெரியும் வரை இது தொடரும். ஆனால், அதுவரை..?

அப்படி உங்களுக்கு யாரேனும் செய்வதாகத் தெரிந்தால், அந்த பேஜின் லின்க் அட்ரசை காபி பேஸ்ட் செய்து கொள்ளவும்.(அப்படியே மறு முறை டைப் செய்யாமல், கட் அண்ட் பேஸ்ட் செய்யவும்). கட் அண்ட் பேஸ்ட் செய்தால், அதன் பின் காவல் துறையில் புகாரளித்தால் ஓரளவுக்கு கண்டு பிடிக்க முடியும்.

இன்று சந்தையில் பல ரிமோட் அட்மினிஸ்ட்ரேஷன் டுல்ஸ் கிடைக்கிறது. இதை உங்கள் லேப்டாப்/மொபைலில் இன்ஸ்டால் செய்வதன் மூலம், அதை இயக்கவோ, அதில் நடப்பவற்றை வேவு பார்க்கவோ முடியும்.

மேற்கூறிய தகவல்கள் அனைத்தும், பைக்கில் செல்கையில் ஹெல்மெட் அணிய வேண்டும் எனச் சொல்வது போலத்தான். ஒரு பாதுகாப்பு கவசம். பயப்படுத்தவோ, குறை சொல்லவோ அல்ல. ஏனெனில், இணையத்தின் பயன் அளப்பரியது.

**– ஹன்ஸா**

# தாய்மனம்!



மைதிலி... எங்க கம்பெனியில், திருச்சி கிளைக்கு, மேனேஜரா என்னை மாற்றியிருக்காங்க. மதுரையை விட்டு, 10 நாளில் கிளம்பணும், என்றான், குமரன்.

கணவனை முறைத்தவள், ‘ரொம்ப சந்தோஷம்... உங்கம்மாவை என்ன செய்யப் போறீங்க’

‘என்ன சொல்ற, மைதிலி?’

வெளியே எட்டிப் பார்த்தாள்.

பின்புறம் பாத்திரம் தேய்க்கும் மாமியார் காதில் விழாதபடி, கிசுகிசுப்பாக, ‘புரியாத மாதிரி நடிக்காதீங்க... இனியும் இவங்களை வச்சு காலம் தள்ள முடியாது... கல்யாணமாகி இரண்டு வருஷமாச்சு, இன்னும் குழந்தை பிறக்கலை... டாக்டர், சிகிச்சை, அது இதுன்னு நமக்கே நூறு செலவு காத்துக் கிடக்கு... இவங்களுக்கு மருந்து, மாத்திரை வாங்கிக் கொடுத்து சீராட்ட முடியாது’ என்றாள்.

‘என்ன செய்ய முடியும் மைதிலி... பெத்த தாயாகிட்டாளே... என்னை விட்டால் அவளுக்கு ஆதரவு யாருமில்லை’

‘எனக்கு அதெல்லாம் தெரியாது... முதியோர் இல்லத்தில் விட்டால், அதுக்கும் மாசா மாசம் தண்டம் அழணும்... திருச்சிக்கு போகும் போது, நாம் மட்டும் தான் போகணும்; உங்கம்மா வரக்கூடாது... எங்கேயாவது கண்காணாமல் கோவில் குளத்தில் விட்டுட்டு வாங்க, பிழைச்சுக்குவாங்க... பெத்த தாயை வச்சு சமாளிச்ச வரைக்கும் போதும்.’

மவுனமாக இருந்தான், குமரன்.

‘அப்ப சரி... இஷ்டமில்லைன்னா வேண்டாம்... நீங்க, உங்கம்மாவை கூட்டிக்கிட்டு திருச்சி கிளம்புங்க... நான், எங்கம்மா வீட்டுக்குப் போறேன்... நானா, அவங்களான்னு முடிவு பண்ணுங்க,’ என்றபடி, அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

இத்தனைக்கும், மாமியார் பார்வதியால், மைதிலிக்கு எந்த தொந்தரவும் இல்லை. அதிர்ந்து பேச மாட்டாள். அவள் சொல்லும் வேலைகளையும் முகம் சுழிக்காமல் செய்வாள்.

‘உன் மாமியார் கிழவி, இருமிகிட்டே இருக்கா... டி.பி., ஆக இருக்குமோ தெரியலை... நாளைக்கு பிள்ளை பிறந்தால், வியாதிக்காரியை வீட்டில் வச்சுக்க முடியாது... எங்கேயாவது, முதியோர் இல்லத்தில் சேர்த்து விடு...’ அவள் அம்மா, அன்று யோசனை சொன்னது முதல், பார்வதியை விரோதியாக பார்க்க ஆரம்பித்தாள், மைதிலி.

எது செய்தாலும், குற்றம் கண்டுபிடித்து திட்டுவாள். அப்போதும், பதில் பேசாமல் அமைதியாகத் தான் இருப்பாள், பார்வதி.

‘ஒரு சொத்து சுகம், பைசாவுக்கு பிரயோசனம் இல்லை... புருஷன் போனதும், பிள்ளையை மட்டும் வளர்த்து ஆளாக்கியிருக்கா... இவளை, காலமெல்லாம் வச்சு கஷ்டப்பட முடியாது..’ என்ற முடிவுக்கு வந்த பின், கொஞ்சம் கொஞ்சமாக குமரனை தன்வசம் இழுக்க ஆரம்பித்தாள்; அம்மாவிடம் பேச அனுமதிப்பதில்லை.

‘போதும், உங்கம்மாகிட்டே பேசினது... அவங்களுக்கு இருக்கிற இருமல், உங்களுக்கு ஒட்டிக்கிட்டா, நாளைக்கு நமக்கு பிறக்கப் போற பிள்ளையை பாதிக்கும்... எப்படா குழந்தை பிறக்கும்ன்னு தவம் இருக்கேன்... வியாதியை வரவழைச்சுடாதீங்க..’ என்று, எரிந்து விழுவாள்.

மைதிலிக்குப் பயந்து, அம்மாவிடமிருந்து ஒதுங்கினான்; அவளை பகைத்து, வாழ்க்கையின் சந்தோஷங்களை அவன் இழக்க விரும்பவில்லை.

பின்புற வாசலில் உட்கார்ந்திருந்த அம்மாவிடம், ‘என்னம்மா... இருட்டிப் போச்சு... கொல்லைப்புறம் உட்கார்ந்திருக்கே?’ என்றான்.

நிமிர்ந்து, மகனை பார்த்தாள், பார்வதி. நான்கு நாட்களுக்குப் பின், இன்று தான் பேசுகிறான். அதுவும், மைதிலி இல்லாத நேரம் தான், ஒன்றிரண்டு வார்த்தை பேசுவான்.

‘என்னப்பா பண்ண சொல்ற... பொழுது போகணும் இல்லையா... மைதிலி சொன்ன வேலையெல்லாம் முடிச்சுட்டு உட்கார்ந்திருக்கேன்’

‘எனக்கு திருச்சிக்கு மாறுதல் வந்திருக்கும்மா... இன்னும் நாலு நாளில் கிளம்பணும்’

‘சரிப்பா... சாமானெல்லா கட்டி வைக்க, ஏதாவது உதவி செய்யணும்ன்னா சொல்லு, செய்து தரேன்.’

‘இல்லம்மா... நீ ராமேஸ்வரம் போற பிரார்த்தனை இருக்குன்னு, என் கல்யாணத்துக்கு முன்னயே சொல்லிட்டு இருந்தியே... திருச்சி போறதுக்குள்ள, உன்னை கூட்டிட்டுப் போயிட்டு வந்துடலாம்ன்னு பார்க்கிறேன்.’

பார்வதியின் கண்கள் பளபளத்தன.

‘நிஜமாத்தான் சொல்றியா... மைதிலி போகலாம்ன்னு சொல்லிட்டாளா?’

‘ஆமாம்மா... ஆனா, குழந்தை பிறந்தால் தான் அவ வருவாளாம்... நம்ம இரண்டு பேரையும் போயிட்டு வரச் சொன்னா.’

‘கட்டாயம், அந்த ஸ்ரீராமனே வந்து பிறப்பாரு... நாம் போய், அந்த ஈஸ்வரனை கும்பிட்டு வருவோம்... உனக்கு தெரியுமா, ராமேஸ்வரம் போயிட்டு வந்த பிறகு தான், நீ எங்களுக்கு பிறந்தே...

‘சீதையால் உருவாக்கப்பட்ட லிங்கம். ராமர் பூஜை செய்த அந்த ராமலிங்கத்தை மனசார வேண்டிக்கிட்டால், கட்டாயம் குழந்தை பாக்கியம் கிடைக்கும், குமரா.’

‘சரிம்மா... நாளைக்கு போகலாம்!’

கோவிலில், 22 தீர்த்தங்களில் நீராடி, சுவாமியை தரிசனம் செய்தனர்.

‘இப்ப தான் மனசுக்கு திருப்தியா இருக்கு, குமரா... கல்லூரியில் படிக்கும்போது, உடம்பு முடியாமல், ஒரு மாசம் படுக்கையில் கிடந்தே... அப்ப, உனக்காக வேண்டிக்கிட்டது... நல்லபடியாக வேண்டுதல் முடிஞ்சுது... பாரேன், அடுத்த வருஷமே, எனக்கு பேரன் பிறப்பான்,’’ நம்பிக்கையோடு சொல்லும், அம்மாவை பார்த்தான்.

‘அம்மா... நீ ரொம்பவும் நடந்துட்டே, கால் வலிக்கும். பிரகார மண்டபத்தில் உட்காரு. சாமி படம், சங்கு எல்லாம் வாங்கிட்டு வரச் சொன்னா, மைதிலி... கடைக்கு போயிட்டு வந்து, உன்னை அழைச்சுட்டுப் போறேன், இங்கேயே இரு... ஒரு மணி நேரத்தில் வரேன்.’

‘சரிப்பா... போயிட்டு வா!’

உட்கார்ந்தாள். நான்காக மடித்த துண்டு பேப்பரை தந்தான்.

‘என்னப்பா இது?’

‘வச்சுக்கம்மா... நம் வீட்டு விலாசம், என் போன் நம்பர் இருக்கு... வயசானவங்க தனியா இருக்கும் போது, பாதுகாப்பாக இருப்பது நல்லது.’

‘எதுக்குப்பா இது... ஒரு மணி நேரத்தில் வரப்போற... நான் எங்கேயும் போகாமல், நீ வர்ற வரைக்கும் இங்கேயே இருக்கேன்... போயிட்டு வாப்பா!’

‘பசிக்குதாம்மா... ஏதாவது சாப்பிடறியா?’

‘இல்லப்பா... நீ வந்துடு, சேர்ந்தே சாப்பிடுவோம்!’

‘வரேன்மா.’

அம்மாவின் கையை பிடிக்க, ‘என்னப்பா இது... குழந்தை மாதிரி... அம்மா எங்கேயும் போயிட மாட்டேன்... நீ வரும் வரை, உனக்காக இங்கேயே காத்திருப்பேன்’

அம்மாவை விட்டு, வெகுதூரம் நடக்க ஆரம்பித்தான்.

நேரம் போய் கொண்டேயிருக்க, பார்வதிக்கு பசியுடன், தவிப்பும் ஆரம்பித்தது. ‘இருட்டி விட்டதே... குமரனுக்கு என்னாச்சுன்னு தெரியலையே... ஒரு மணி நேரத்தில் வரேன்னு சொன்ன பிள்ளைய இன்னும் காணுமே...’ மனம் பதைபதைத்தாள்.

அவன் கொடுத்து போன, துண்டு பேப்பர் ஞாபகம் வர, ‘இதில் போன் நம்பர் இருக்குன்னு சொன்னானே... யாரிடமாவது கொடுத்து பேச சொல்லலாமா?’

மெல்ல எழுந்து, கோவில் வாயிலுக்கு வந்தாள். அங்கே நின்ற போலீஸ்காரரை அணுகி, ‘ஐயா... என் பிள்ளை, கடை பக்கம் போயிட்டு, ஒரு மணி நேரத்தில் வரேன்னு போனான்... போயி ரொம்ப நேரமாகி, இருட்டிப் போச்சு... அவன் போன் நம்பர், இதில் இருக்கு... கொஞ்சம் கூப்பிட்டு, விபரம் சொல்றீங்களா?’

அவளிடமிருந்து பேப்பரை வாங்கினார்.

அதில்,‘இந்த பெண்மணி, மனநிலை பாதித்தவர்... எங்கள் தெருவில் சுற்றி திரிந்தவர்... மனிதாபிமானத்தின் அடிப்படையில் கோவிலில் விட்டுச் செல்கிறேன்... நல்ல மனம் படைத்தவர் யாராவது, இவளை எங்காவது ஆசிரமத்தில் சேர்த்து விடுங்கள்... நன்றி!’ என, எழுதப்பட்டிருந்தது.

‘என்ன ஐயா... அப்படி பார்க்கிறீங்க... என் பிள்ளைக்கு போன் பண்ணுங்க சாமி’ கண் கலங்கினாள்.

போலீஸ் ஸ்டேஷனில், இன்ஸ்பெக்டர் முன் உட்கார்ந்திருந்தாள், பார்வதி.

‘சொல்றதை புரிஞ்சுக்கம்மா... உன் பிள்ளை, ‘நீ மனநிலை சரியில்லாதவள், தெருவில் சுத்தினவ... கோவிலில் விட்டுட்டுப் போறேன்... எங்கேயாவது ஆசிரமத்தில் சேர்த்திடுங்க’ன்னு தான் இதில் எழுதி இருக்கான்.’

‘ஐயோ... அப்படியெல்லாம் இல்லைங்க... என் பிள்ளை, அப்படி விட்டுட்டுப் போக மாட்டான்... எங்கேயோ தப்பு நடந்திருக்கு,’’ தலையில் அடித்துச் சொன்னாள்.

‘சரி... மதுரை தானே உன் ஊரு... வீட்டு விலாசம் சொல்லு... பிள்ளையை இங்கே வரவழைக்கிறேன்.’

‘உங்கம்மாவை எங்கேயாவது தொலைச்சு தலை முழுகுங்க... அப்ப தான் எனக்கு நிம்மதி... நமக்கும் குழந்தை பிறக்கும்..’ வீட்டு விலக்கு குளித்த அன்று, கோபத்துடன், குமரனிடம், மைதிலி பேசியது ஞாபகம் வர...

‘அப்படியானால்... என்னை வேண்டுமென்று தான் கோவிலில் விட்டு விட்டு போயிருக்கிறான்...’ முந்தானையால் கண்ணீரைத் துடைத்தாள்.

‘என்னம்மா சொல்ற... விலாசம் தெரியுமா?’

‘தெரியாதுங்க... சரியான விபரம் புரியலை... திருச்சிக்கு போறதா சொன்னான்... எங்கே இருப்பான்னு தெரியலை... ஐயா, நீங்க ஒரு உதவி செய்ய முடியுமா?’

‘என்ன... எங்கேயாவது ஆசிரமத்தில் சேர்க்கணும், அவ்வளவுதானே... பெத்த பிள்ளை, நாடகமாடி, உன்னை அழைத்து வந்து விட்டுட்டுப் போயிட்டான்... பார்க்க பாவமாத்தான் இருக்கு... இரு ஏற்பாடு செய்யறேன்’

‘இல்லைங்க ஐயா’ என்றவள், இடுப்பில் செருகியிருந்த சுருக்கு பையிலிருந்து மாங்கல்யத்தை எடுத்தாள்.

‘இது, என் தாலிங்க... தங்கத்தில் செய்தது... இதை விற்று, எனக்கு பணம் வாங்கித் தாங்க... ஆசிரமத்துக்குப் போகலைங்க... கோவில் வாசலில், பூ வியாபாரம் செய்து பிழைச்சுக்கிறேன்.’

‘என்னம்மா சொல்ற... நல்ல இடத்தில் சேர்த்து விடறேன்... கவலைப்படாதே’

‘இல்லைங்க ஐயா... இங்கேயே இருக்கேன்... என் பிள்ளை, ‘இங்கேயே இரும்மா... வந்து கூட்டிட்டுப் போறே’ன்னு சொல்லித்தான் விட்டுட்டு போனான்... நானும், ‘காத்துக்கிட்டு இருப்பே’ன்னு சொன்னேன்... இப்ப ஏதோ ஒரு வேகத்தில் போயிருக்கலாம்...

‘நிச்சயம் ஒரு நாள் என்னை தேடி வருவான்... அப்ப இந்த அம்மாவை காணாமல் அவன் தவிச்சு போயிடக் கூடாது... அவன் திரும்ப வருவான்கிற நம்பிக்கையோடு, கோவில் வாசலில் பூ விற்று பிழைச்சுக்கிறேன், ஐயா... அதுக்கு மட்டும் வழி பண்ணுங்க!’

கைகூப்பி கண்ணீர் மல்க கெஞ்சும் அந்தத் தாயை, பரிதாபப் பார்வை பார்த்தனர், அங்கிருந்தோர்.

**பரிமளா ராஜேந்திரன்**



# முத்தத்துக்கு நோ!

**வி**ஜய் தேவரகொண்டாவின் டியர் காம்ரேட் படத்தில் நடிக்க வந்த வாய்ப்பை ஏற்க மறுத்தாராம் சாய் பல்லவி. விஜய் தேவரகொண்டா, ரஷ்மிகா மந்தனா நடித்துள்ள டியர் காம்ரேட் தெலுங்கு படம் வரும் 26ம் தேதி வெளியாக உள்ளது. விஜய் மற்றும் ரஷ்மிகா அந்த படத்தின் விளம்பர நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வருகின்றனர்.

டியர் காம்ரேட் ட்ரெய்லரில் விஜய் மற்றும் ரஷ்மிகா லிப் டூ லிப் முத்தம் கொடுத்திருந்தனர். அந்த காட்சியை பார்த்த ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். சிலரோ ரஷ்மிகாவை மட்டும் குறை கூறி திட்டினார்கள். விஜய்யுடன் இப்படி லிப் டூ லிப் முத்தம் கொடுத்து நடிக்கத் தான் திருமணத்தை நிறுத்தினீர்களா என்று ரஷ்மிகாவை கன்னட ரசிகர்கள் விளாசினார்கள். டியர் காம்ரேட் படத்தில் விஜய் ஜோடியாக நடிக்க முதலில் சாய் பல்லவியை தான் அணுகினார்களாம். ஆனால் படத்தில் லிப் டூ லிப் முத்தக் காட்சி இருப்பது குறித்து அறிந்த சாய் பல்லவி சாரி, என்னால் அது போன்ற காட்சியில் எல்லாம் நடிக்க முடியாது என்று தெரிவித்தாராம். அதன் பிறகே அந்த வாய்ப்பு ரஷ்மிகா மந்தனாவுக்கு சென்றுள்ளது.

ரஷ்மிகா ஏற்கனவே விஜய் தேவரகொண்டாவுடன் சேர்ந்து நடித்த கீத கோவிந்தம் படத்திலும் லிப் டூ லிப் முத்தக் காட்சியில் நடித்திருந்தார். அதனால் மீண்டும் அதே போன்ற காட்சியில் நடிக்க அவர் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. டியர் காம்ரேட் ட்ரெய்லர் வெளியானதில் இருந்து அந்த முத்தக் காட்சி குறித்து தான் பேசப்பட்டது.

இந்நிலையில் இது குறித்து விஜய் தேவரகொண்டாவிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் கூறியதாவது, அது லிப் லாக் இல்லை, முத்தம் மட்டுமே. கோபம் போன்று அதுவும் ஒரு உணர்ச்சி. அது என்ன லிப் லாக், எனக்கு அந்த வார்த்தையே பிடிக்கவில்லை. எனக்கு அது பிடிக்கவில்லை என்றார். முத்தக் காட்சியில் நடித்துவிட்டு அது பற்றி கேள்வி கேட்டால் மட்டும் விஜய் தேவர கொண்டா கோபப்படுகிறாரே என்று விமர்சனம் எழுந்துள்ளது.



# கபடிக்குழுவை தத்தெடுத்த ப

**செ**ல்வசேகரன் இயக்கத்தில் விக்ராந்த், அர்த்தனா, பசுபதி, சூரி ந
ணிலா கபடி குழு 2 படத்தின் நன்றி அறிவிப்பு நிகழ்ச்சி சென்னையில்
படக்குழுவினர் கலந்துகொண்டனர். அப்போது சூரி பேசுகையில், வெ
குழு படம்தான் எனது வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது.
அதற்கு நன்றிக்கடனாகத்தான் எனது மகளுக்கு வெண்ணிலா என்று
னேன் என்றார். இதையடுத்து வெண்ணிலா கபடி குழு 2 படக்குழுவி
கே.கே.நகரில் உள்ள ஒட்டகப்பாளையம் வ.உ.சி கபடி குழுவை தத்
தவணையாக ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது. அந்த கபடி குழுவினரு
ஆயிரம் வழங்குவதாக அறிவித்தார்.



# வதந்திகளை நம்ப வேண்டாம்

**வ**ட சென்னை 2 படம் டிராப் ஆனதாக வந்த தகவல்களை மறுத்துள்ளார் தனுஷ். வெற்றிமாறன் இயக்கத்தில் வடசென்னை படத்தில் தனுஷ் நடித்தார். இதன் இரண்டாம் பாகம் விரைவில் வெளியாகும் என அந்த படம் வெளியானபோது அறிவிக்கப்பட்டது. ஆனால் படத்தை துவங்கவில்லை. அதற்கு பதிலாக வெற்றிமாறன் இயக்கத்தில் அசுரன் என்ற படத்தில் தனுஷ் நடித்து வருகிறார்.

இது வெக்கை என்ற நாவலை தழுவி உருவாகி வரும் படமாகும். இதில் தனுஷ் ஜோடியாக மலையாள நடிகை மஞ்சு வாரியர் நடித்துள்ளார். இதையடுத்து வட சென்னை 2 வெளியாகாது என தகவல்கள் பரவியது. இது பற்றி தனுஷ் கூறும்போது, வடசென்னை 2 பற்றிய வதந்திகளை நம்ப வேண்டாம். அந்த படம் குறித்த தகவல் எதுவாக இருந்தாலும் டிவிட்டரில் நானே தெரிவிப்பேன். படத்தை கைவிடவில்லை என்றார்.





# தயாரிப்பாளர் ஆனார் ஆரி

**த**மிழில் பல படங்களில் நடித்துள்ள ஆரி, தற்போது நடித்துள்ள சுந்தர தாய் மொழி என்ற குறும்படத்தின் மூலம் தயாரிப்பாளராகி இருக்கிறார். எனது நிறுவனத்துக்கு ஆரிமுகம் என்று பெயரிட்டுள்ளேன். குறும்படத்தை தொடர்ந்து சினிமா படம் தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளேன். பொருத்தமான கதை அமைந்தால் மட்டுமே நான் நடிப்பேன். மற்ற ஹீரோக்களை வைத்தும் படம் தயாரிப்பேன் என்றார்.



# நிகிஷாவின் துணிச்சல்

**ந**டிகை ஓவியாவும், நடிகர் ஆரவும் காதலிப்பதாக கோலிவுட் வட்டாரம் முழுவதும் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. அதற்கேற்பே இருவரும் பிறந்த நாளில் ஜோடியாக கேக் வெட்டி கொண்டாடியது, வெளிநாடுகளில் ஜோடியாக டேட்டிங் செய்த புகைப் படங்களும் நெட்டில் வெளியாகின. ஓவியாவிடம் இதுபற்றி கேட்டபோது, நானும் ஆரவும் நல்ல நண்பர்கள். எங்களுக்குள் காதல் இல்லை. எனக்கு திருமணத்தில் நம்பிக்கை இல்லை. நான் திருமணமே செய்து கொள்ள மாட்டேன் என்று அதிரடியாக பதில் அளித்தார்.

ஆனால் இதே நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றபோது முத்தம் பகிர்ந்து கொண்டும், காதல் லீலைகள் செய்தும் பாப்புலராகினர். ஓவியாவின் காதலன் என்று சொல்லப்படும் ஆரவுக்கு தற்போது மற்றொரு கவர்ச்சி ஹீரோயின் லிப் டு லிப் கிஸ் கொடுத்து அசத்தியிருக்கும் தகவல் வெளியாகி உள்ளது. இது எங்கு நடந்தது என்று விசாரித்தபோது அதற்கொரு கதையை சொல்லியிருக்கிறார்கள்.

சரண் இயக்கும் மார்க்கெட் ராஜா எம்பிபிஎஸ் படத்தில் நடிக்கிறார் ஆரவ். இப்படத்தில் நிகிஷா படேல் ஹீரோயின். இவர் ஏற்கனவே பாஸ்கர் ஒரு ராஸ்கல், என்னமோ ஏதோ போன்ற படங்களில் நடித்திருக்கிறார். மார்க்கெட் ராஜா எம்பிபிஎஸ் ஷூட்டிங்கில் காட்சிப்படி ஆரவிற்கு லிப் டு லிப் கிஸ் தர வேண்டும் என்று இயக்குர் கூற, முடியாது என்று மறுத்தார். பிறகு காட்சிக்கு முக்கிய தேவை என்று இயக்குனர் தெரிவித்தபிறகு ஒப்புக்கொண்டு ஆரவ் உதட்டில் கிஸ்ஸடித்தார் நிகிஷா.



**ஆ**ண்மை தவறேல் துருவா, இந்துஜா நடித்துள்ள படம், சூப்பர் டூப்பர். இயக்கம், அருண் கார்த்திக். படம் குறித்து துருவா பேசும்போது, டைரக்டர், ஒன்மேன் ஷோவாக இருந்து படத்தில் பல புதுமைகளை செய்திருக்கிறார். 1990களில் சிம்ரன் நடித்தது போல் கவர்ச்சியாகவும், திறமையாகவும் நடித்துள்ளார் இந்துஜா. இது அவருக்கு மிகவும் வித்தியாசமான படமாக இருக்கும். ஷாரா, ஆதித்யா ஆகியோருக்கும் வலுவான கேரக்டர் கிடைத்துள்ளது. ஆண்மை தவறேல் படம் ரசிகர்களிடம் என்னை நன்றாக அடையாளப்படுத்தியது. அது போல், சூப்பர் டூப்பர் படம் என்னை வழி நடத்தி செல்ல உதவும் என்றார்.



# பேசுபவர்கள் பேசட்டும்!

**பு**கைப்பிடிக்கும் காட்சியில் நடித்துள்ள நடிகை ரகுல் பிரீத் சிங் மற்றவர்கள் பேசுவது குறித்த கவலையில்லை என தெரிவித்துள்ளார். சமீப காலமாக நடிகைகள் சிகரெட் பிடிப்பது, குடிப்பது போன்ற காட்சிகளில் சர்வ சாதாரணமாக நடித்து வருகின்றனர். ஆடை படத்தில் அமலா பால் தம்மு தண்ணி என சுற்றுவது படத்தின் ட்ரெயிலரில் தெரிந்தது. இந்நிலையில் நடிகை ரகுல் பிரீத் சிங்கும் படத்தில் தம் அடிக்கும் காட்சி வெளியாகியுள்ளது. ரகுல் பிரீத் சிங் உடை விஷயத்தில் கஞ்சத்தனம் கவர்ச்சியில் தாராளமும் காட்டி வருகிறார்.

இதற்கே நெட்டிசன்கள் அவரை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். இந்நிலையில் புகைப்பிடிக்கும் காட்சியில் நடித்துள்ள ரகுலை நெட்டிசன்கள் திட்டி தீரத்தனர்.

நாகார்ஜூனா நடித்துள்ள மன்மதடு 2 தெலுங்கு படத்தில் ஹீரோயினாக நடிக்கிறார் ரகுல். இதன் டீஸர் அண்மையில் வெளியானது. அதில் ரகுல் புகைப்பிடிக்கும் காட்சி இடம்பெற்றிருந்தது.

இதனை பார்த்த ரசிகர்கள் கடுப்பாகி அவரை சமூக வலைதளங்களில் விமர்சித்தனர். இந்நிலையில் இதுகுறித்து பேசிய ரகுல் பிரீத் சிங் இதுபோல் பேசுபவர்கள் எப்போதும் பேசிக்கொண்டுதான் இருப்பார்கள். ஏனென்றால் அவர்களுக்கு பேசுவது மட்டும்தான் வேலை.

மன்மதடு 2 படத்தில் நான் மாடர்ன் பெண்ணாக நடிக்கிறேன். அந்த கதாபாத்திரம் சிகரெட் புகைக்கும் என்பதால் நான் நடித்தேன். கதைப்படி என்ன தேவைப்படுகிறதோ அதை செய்வேன், என்று தடாலடியாக கூறினார் ரகுல்.



# இதற்கு கஷ்டப்

**க**ற்க கசடற படம் மூலம் நடிகையா
டுகள் ஆகிவிட்டாலும் இன்னும் அவ
பெற முடியவில்லை.
இருப்பினும் மனம் தளராமல் தொட
றார். பாலிவுட் படமான ஜூலி 2-ல் நடி
வைத்துக் கொள்வதில் கூடுதல் கவன
பிகினி அணிந்து கவர்ச்சியாக நடிக்க வ
வாக குறைத்தார். பிகினி அணிந்து நடி
டில் சாதாரண விஷயம். அதை தான் ரா
விட்டாலும் உடல்நலனில் அக்கறை செ
இந்நிலையில் அவர் ஊதா கலரு பி
ட்விட்டரில் வெளியிட்டுள்ளார். பிகினி
அவர் தெரிவித்துள்ளார். புது மனுஷி பே
பிடித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்
ஆடை படத்திற்காக உடல் எடைை
தனக்கு தனி தைரியமும், நம்பிக்கையு
துள்ளார். இந்நிலையில் ராய் லட்சுமியு
லைட்டா தொப்பை வைத்து பூசினாற்
ஃபிட்டாக மாறியதை பார்த்த சில ர
வெளியிட்டு எது அழகு என்று கேட்டுள

## ...டக்குழு

...டித்துள்ள வெண் ... நடந்தது. இதில் ...ண்ணிலா கபடி

... பெயர் சூட்டி ...னர், வடபழநி ...தெடுத்தனர். முதல் ...க்கு சூரி, ரூ.20



# சேட்டை பெண் காஜல் அகர்வால்

விஜய், அஜீத் என முன்னணி ஹீரோக்களுடன் ஜோடி போட்ட காஜல் அகர்வால் கமலுடன் இந்தியன் 2ம் பாகத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆனார். சில நாள் படப்பிடிப்பு நடந்தநிலையில் அப்படம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இயக்குனருக்கும், பட நிறுவனத்துக்கும் ஏற்பட்ட பிரச்னை காரணமாக படப் பிடிப்பு தொடராமல் இருக்கிறது. அப்படத்தின் படப்பிடிப்புக்காக காஜலும் ஆவலாக காத்திருக்கிறார்.

ஏற்கனவே பாரிஸ் பாரிஸ் படத்தில் காஜல் நடித்திருந் தாலும் அப்படம் ரிலீஸ் ஆகாமல் முடங்கிக்கிடக்கிறது. சமீபத்தில் அவர் நடித்த சிடா தெலுங்கு படம் எதிர்பார்த்த வெற்றி ஈட்டாததால் அவரது ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

படம் வெற்றியோ, தோல்வியோ என்னுடைய சேட்டை குறையாது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறார் காஜல். நீச்சல் தொட்டியில் தண்ணீரை குறைவாக நிரப்பி அதில் இறங்கி தண்ணீரை தட்டிவிட்டு ஸ்டைலாக நடப்பதுபோல் ஒரு படத்தை ரசிகர்களுக்காக வெளியிட்டு இது எப்படி இருக்கு என்று உற்சாக துள்ளளுடன் கேட்டு சேட்டை செய்திருக்கிறார் காஜல் அகர்வால்.

# மீண்டும் ராஜ்கிரன்



28 ஆண்டுகளுக்குப் பிறகு ராஜ்கிரணுக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார் நடிகை மீனா. நடிகை மீனா, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் ஏராளமான படங்களில் நடித்துள்ளார். குழந்தை நட்சத்திரமாக தமிழ்த்திரையுலகில் அறிமுகமான மீனா, 1990களில் சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக முன்னணி நடிகையாக திகழ்ந்தார். ரஜினி, கமல், விஜயகாந்த், சரத்குமார், அஜித், அர்ஜூன், சத்யராஜ் உள்ளிட்ட பல முன்னணி நடிகர்களுடன் ஏராளமான படங்களில் நடித்துள்ளார். இவர் 1991ஆம் ஆண்டு வெளியான என் ராசாவின் மனசிலே படத்தில் ராஜ்கிரண் ஜோடியாக நடித்திருந்தார்.

இந்த படம் பெரும் வெற்றி பெற்று வசூலை குவித்தது. இந்தப்படத்தில் இளையராஜா இசையில் உருவாக்கப்பட்ட அனைத்து பாடல்களும் பட்டி தொட்டியெங்கும் ஹிட்டானது.

இதைத்தொடர்ந்து ராஜ்கிரணுக்கு பட வாய்ப்புகள் குவிந்தன. தொடர்ந்து கதாநாயகனாகவும், தவமாய் தவமிருந்து, சண்டக்கோழி, காவலன், கொம்பன் உள்ளிட்ட பல படங்களில் குணசித்திர வேடங்களிலும் நடித்தார்.

கடைசியாக அவர் நடிப்பில் சண்டக்கோழி-2 படம் கடந்த வருடம் திரைக்கு வந்தது. இந்த நிலையில் மம்முட்டி நடிப்பில் ஷைலாக் என்ற படம் தமிழ் மற்றும் தெலுங்கில் உருவாகிறது. இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிகர் ராஜ்கிரண் நடிக்க உள்ளார்.

இந்த படத்தில் நடிகை மீனா ராஜ்கிரணுக்கு ஜோடியாக நடிக்க உள்ளார். என் ராசாவின் மனசிலே படம் வெளியாகி 28 ஆண்டுகளுக்கு பிறகு ராஜ்கிரணும் மீனாவும் இந்த படத்தில் இணைந்து நடிக்கவுள்ளனர். இதன் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது.



# அரசியல் கதையில் விஜய் ஆண்டனி

மெட்ரோ படத்தின் இயக்குனர் ஆனந்த கிருஷ்ணன் இயக்கும் படத்துக்கு இன்னும் டைட்டில் முடிவாகவில்லை.

அரசியல் கலந்த திரில்லர் படமான இதில் விஜய் ஆண்டனி நடிக்கிறார். என்.எஸ்.உதயகுமார் ஒளிப்பதிவு செய்ய, ஜோஹன் இசை அமைக்கிறார்.

மற்ற நடிகர்கள் தேர்வு நடந்து வருகிறது.

# காதோடு...காதாக...

நடிகை ஒருவரின் திருமணம் குறித்து தான் ஒரு மாதிரியாக கிசுகிசுக்கப்படுகிறது. தமிழகத்தில் பிறந்தவர் அந்த நடிகை. நன்றாக படித்துள்ளார். ஆனால் பெற்றோர் வழியில் செல்லாமல் நடிகையாகிவிட்டார். அதை அவரின் பெற்றோரும் எதிர்க்கவில்லை. கொஞ்சம் வளரத் துவங்கியபோதே காதலரை திருமணம் செய்து கொண்டார். நடித்தால் ஹீரோயினாக மட்டுமே நடிப்பேன் என்று எல்லாம் அடம்பிடிக்காதவர். மேலும் படுகவர்ச்சியாக உடை அணிவது, சக நடிகருடன் சேர்ந்து நெருக்கமான காட்சிகளில் நடிப்பது போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார். இயக்குநர் சொல்வது போன்று சமத்தாக நடித்துக் கொடுத்து விடுவார். நடிகை தனது காதலரை திருமணம் செய்த போதிலும் அவர்கள் ஒரே வீட்டில் சேர்ந்து வசிக்கவில்லை. கணவர் தனது வேலை காரணமாக வேறு இடத்தில் உள்ளார். நடிகை படங்களில் நடிக்க வசதியாக வேறு ஒரு இடத்தில் வசிக்கிறார். நேரம் கிடைக்கும் போது நடிகை கணவரை காண சென்று வருகிறார். இது தான் திரையுலகினருக்கு சந்தேகத்தை கிளப்பியுள்ளது. நடிகை திருமணமாகிவிட்டது என்று பொய் சொல்கிறார். அது எப்படி கணவனும், மனைவியும் சேர்ந்தே இருக்க மாட்டார்களாம், ஆனால் அதனால் பிரச்சனையே இல்லையாம். மேலும் நடிகை யாருடன் எங்கு சென்றாலும் கணவர் கண்டுகொள்வது இல்லை. கணவர் என்ன செய்தாலும் நடிகையும் கண்டுகொள்வது இல்லை. இதை எல்லாம் பார்த்தால் அந்த திருமணம் பொய் என்று தெரிகிறது என பேசுகிறார்கள். என் கணவர் எனக்குத் தான் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று நான் எதிர்பார்ப்பது இல்லை, அவரும் அப்படித் தான் என்கிறார் நடிகை. காதலிப்பவர்களே தூரத்தில் இருந்தால் அது ஒர்க்அவுட் ஆகவில்லை என்று கூறி பிரிந்துவிடுகிறார்கள். அப்படி இருக்கும்போது நடிகைக்கு மட்டும் திருமண வாழ்க்கை எப்படி ஒர்க் அவுட் ஆகிறது. அவர் எதையோ மறைக்கிறார் என்கிறார்கள் திரையுலகினர். நடிகை நடித்துள்ள சில காட்சிகளை பார்த்து ரசிகர்களே அதிர்ச்சி அடைந்துவிட்டனர். ஆனால் அந்த கணவர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. மனைவி என்ன செய்தாலும் எனக்கென்ன என்று ஒரு கணவர் இருக்கிறார் என்று நம்ப முடியவில்லை. நடிகை தான் திருமணமான பெண் என்று எதற்காகவோ நாடகமாடுகிறார் என்று திரையுலகினர் பேசிக் கொள்கிறார்கள்.

★★★★★

நடிகை ஒருவர் தனக்கு திருமணமானதை நினைத்து நொந்து கொண்டிருக்கிறாராம். தமிழ், தெலுங்கு, இந்தி படங்களில் நடித்து வருபவர் அந்த அழகும், திறமையும் ஒரு சேர அமைந்த நடிகை. அவர் இடுப்பழகை பார்க்கவே பலர் படம் பார்க்க சென்ற காலம் எல்லாம் உண்டு. அந்த இஞ்சி இடுப்பழகி தான் விரும்பிய நபரை பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார். திருமதி ஆன பிறகும் அவர் தொடர்ந்து படங்களில் நடித்து வருகிறார். திருமணத்திற்கு பிறகு அவர் பெரும் எதிர்பார்ப்புடன் ஹீரோயினாக நடித்த படம் அவருக்கு கை கொடுக்குமா, கொடுக்காதா என்ற நிலையில் உள்ளது. கணவரிடம் ஏகப்பட்ட சொத்து இருந்தாலும் உழைத்து சாப்பிட வேண்டும் என்று நினைக்கிறார் நடிகை. இந்நிலையில் அவரை தேடி ஹீரோயின் அல்ல மாறாக அக்கா, அண்ணி கதாபாத்திரங்கள் தான் வருகிறது. என்னங்க சார், நான் இன்னும் அப்படியே அழகாகவும், இளமையாகவும் இருக்கிறேன் நான் எப்படி அக்கா, அண்ணியாக நடிப்பது என்று கேட்கிறாராம் நடிகை. கல்யாணமாகிவிட்டால் இப்படி நடிக்கச் சொல்வதா என்று நடிகை குமுறுகிறாராம். அவர் இந்த அளவுக்கு கோபப்பட முக்கிய காரணம் உள்ளது. எந்த ஹீரோக்களுடன் சேர்ந்து டூயட் பாடினாரோ அவர்களுக்கே அக்கா, அண்ணியாக நடிக்கச் சொல்கிறார்களாம். இத்தனைக்கும் அதில் பல ஹீரோக்கள் அங்கிள்ஸ். அவர்கள் எல்லாம் பேரன், பேத்தி எடுத்தும் ஹீரோவாக நடிக்கும்போது நான் திருமதி ஆன பிறகு ஹீரோயினாக நடிக்கக் கூடாதா என்று கொந்தளிக்கிறாராம் நடிகை. அவர் கொந்தளிப்பதும் நியாயம் தான். ஆனால் நடிகைகளுக்கு திருமணம் ஆகிவிட்டாலே அவர்களை அக்கா, அண்ணி கதாபாத்திரத்திற்கு போடும் மனநிலை தான் தென்னிந்திய திரையுலகில் இன்னும் உள்ளது. திருமணத்திற்கு பிறகு எனக்கு அந்த அளவுக்கு பட வாய்ப்புகள் வருவது இல்லை என்று சமத்து நடிகையே தெரிவித்துள்ளார். இந்நிலையில் இந்த இடுப்பழகிக்கு வாய்ப்புகள் வராதது ஆச்சரியம் அளிக்கவில்லை.

# சிவா இயக்கத்தில் ரஜினி

ரஜினி நடிப்பில் சிறுத்தை சிவா இயக்கும் படம் கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளதாக தமிழ் திரை வட்டாரங்களில் இருந்து செய்திகள் வெளியாகியுள்ளன.



ரஜினி, அஜித்தின் ஆஸ்தான இயக்குனரான சிறுத்தை சிவாவோடு சில மாதங்களுக்கு முன்னர் தனது இல்லத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதனால் இருவரும் இணைந்து படம் பண்ணுவார்களா என்ற சந்தேகத்தை எழுப்பியது.

சிவா, அஜித்தை வைத்து வீரம், வேதாளம், விவேகம் மற்றும் விஸ்வாசம் ஆகியப் படங்களை இயக்கி தமிழ் சினிமாவின் முக்கிய இயக்குனர்கள் பட்டியலில் இடம்பிடித்துள்ளார். சிவா இயக்கும் அடுத்த படத்தில் சூர்யா, சிவகார்த்திகேயன் மற்றும் விஜய் ஆகியோர் நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகின. ஆனால் இப்போது ரஜினி படத்தை சிவா இயக்குவது உறுதியாகியுள்ளது.

ரஜினி தற்போது முருகதாஸ் இயக்கும் தர்பார் படத்தில் பிஸியாக நடித்து வருகிறார். இந்தப்படம் அடுத்த ஆண்டு பொங்கலுக்கு ரிலிஸாக உள்ளது. இந்தப்படத்தை முடித்ததும் சிறுத்தை சிவா இயக்கும் படத்தில் நடிக்க இருக்கிறார். அதற்காக திரைக்கதை அமைக்கும் பணிகளில் சிவா ஈடுபட்டு வருகிறார்.



வயதானாலும் ஸ்லிம் தோற்றம் காரணமாக இளமையாக இருப்பதுடன் இப்போது மாணவி வேடத்திலும் நடிக்கிறார் நயன்தாரா. விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கும் பிகிலு படத்தை அட்லி இயக்குகிறார். இதில் கால்பந்து வீரராக ஒரு விஜய் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கிறார்.

படத்தில் நயன்தாராவுக்கு பிசியோதெரபி மாணவி கேரக்டர் தரப்பட்டுள்ளது. கால்பந்து போட்டியில் காயம் அடையும் விஜய்க்கு சிகிச்சை தர உதவும் கேரக்டரில் நயன்தாரா நடிக்கிறாராம். இந்த படத்தில் நடித்தபடி ரஜினியுடன் தர்பார் படத்திலும் அவர் நடித்து வருகிறார்.



# தமிழில் அறிமுகமாகும் நடிகை

நடிகர் தனுஷ் தற்போது வெற்றிமாறன் இயக்கத்தில் அசுரன் படத்தில் பிசியாக நடித்து வருகிறார். அதுமட்டுமின்றி துரை செந்தில் குமார் இயக்கிவரும் படத்திலும் நடித்து வருகிறார். இதுதவிர மாரி செல்வராஜின் இயக்கத்திலும், ராம்குமார் இயக்க இருக்கும் படத்திலும் நடிக்கவுள்ளார். இதற்கிடையில் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் தனுஷ் ஒரு படத்தில் நடிக்க இருப்பதாகக் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்டது.

ஆனால் கார்த்திக் சுப்புராஜ் பேட்ட படத்தில் இணைந்ததால் இந்த படத்தின் பேச்சு வார்த்தை அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது இந்த படத்தின் வேலைகள் தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இதில் தனுஷுக்கு ஜோடியாகப் பிரபல மலையாள நடிகை ஐஸ்வர்யா விஜயலட்சுமி நடிக்க ஒப்பந்தமாகியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஒய் நாட் ஸ்டுடியோஸ் தயாரிக்கவுள்ள இந்த படத்தின் படப்பிடிப்பு வரும் ஆகஸ்ட் மாதம் லண்டனில் தொடங்க உள்ளது. மேலும் விரைவில் இந்தப் படத்தில் நடிக்கும் மற்ற நடிகர், நடிகைகள் குறித்த விவரங்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





...னவர் ராய் லட்சுமி. நடிக்க வந்து 14 ஆண் ...ரால் முன்னணி நடிகை என்ற அந்தஸ்தை

...டர்ந்து முயற்சி செய்து கொண்டே இருக்கி ...த்த பிறகு ராய் லட்சுமி உடலை சிக்கென்று ... செலுத்தி வருகிறார். ஜூலி 2 படத்தில் ...தியாக அவர் தனது உடல் எடையை வெகு ...க்க உடல் எடையை குறைப்பது பாலிவுட் ...ய் லட்சுமியும் செய்தார். அந்த படம் ஓடா ...லுத்துவதை அவர் நிறுத்தவில்லை.

...கினி அணிந்து புகைப்படம் எடுத்து அதை ... பாடியை பெற ரொம்ப கஷ்டப்பட்டதாக ...பான்று உணர்கிறேன். ஃபிட்டாக இருப்பது ...துள்ளார்.

...யை குறைத்து படுஃபிட்டாக மாறிய பிறகு ... ஏற்பட்டுள்ளதாக அமலா பால் தெரிவித் ...ம் அதையே கூறியுள்ளார். ஒரு காலத்தில் ... போன்று இருந்த ராய் லட்சுமி தற்போது ...சிகர்கள் அவரின் பழைய புகைப்படத்தை ...ளனர்.



நீண்ட நாட்களுக்கு பிறகு சஞ்சனா கல்ராணி புதுப்பொலிவுடன் வந்து இருக்கிறார். இத்தனை நாளா எங்க போயிருந்தீங்க சஞ்சனா என்றதற்கு பதில் அளித்தார். முதலில் ஒரு விஷயம். நான் தமிழில் அதிகாரப்பூர்வமாக அறிமுகமாகும் முதல் படம் பாக்ஸர். அருண் விஜய் ஹீரோவாக நடிக்கிறார். விவேக் கண்ணன் இயக்குகிறார். அருண் விஜய்க்கும் எனக்கும் இது சவாலான படம். ஏற்கனவே நான் குதிரை ஏற்றம் கற்றிருக்கிறேன்.

அதற்கேற்ப எனது உடலை கட்டுகோப்பாக்க யோகா பயிற்சி பெற்று அதில் எக்ஸ்பர்ட் ஆகியிருக்கிறேன். அரேபிய குதிரையாக இருந்தாலும் சரி அதற்கு மேல அட்டகாசம் செய்யும் குதிரையாக இருந்தாலும் சரி நான் சவாரி செய்வேன். பாக்ஸிங். கத்தி சண்டையும் கற்றிருப்பதால் எந்த கதாபாத்திரத்துக்கும் என்னை தகுதியாக்கிக் கொண்டிருக்கிறேன்.

இந்த தகுதிகள்தான் என்னை இப்போது பாக்ஸரில் சவாலான கதாபாத்திரம் ஏற்க வைத்திருக்கிறது. ஒரு விஷயம் மட்டும் சொல்கிறேன் என்னை நீங்கள் படத்தில் பார்க்கும்போது கண்டிப்பாக ஆச்சர்யப்பட்டுப்போவீர்கள். அந்தளவுக்கு பயிற்சிகளில் ஈடுபட்ட அதேவேளையில் கன்னடம், தெலுங்கு, மலையாள படங்களிலும் நடித்துக்கொண்டிருந்தேன் என்றார்.



# பழங்களை கழுவி உண்ணலாமா?

உணவின் தன்மையை பொருத்து தான் நாம் அவற்றை வகைப்படுத்த வேண்டும். சில உணவுகள் நமது ஆரோக்கியத்தை மேம் படுத்த உதவும். சில உணவுகள் நமது முழு உடல் அமைப்பையும் மாற்றம் பெறச் செய் யும். பெரும்பாலும் இந்த வகையை சேர்ந்தது தான் பழங்களும்.

நமக்கு பிடித்த பழங்களை எந்நேரமும் ச ாப்பிட்டு கொண்டே இருப்போம். பழங்க ளினால் கிடைக்கும் ஆரோக்கிய நலன்கள் ஏராளம். காய்கறிகளில் இருக்கும் சத்துக்கள் தான் பழங்களிலும் உள்ளன. சாப்பிடும் காய் கறி மற்றும் பழங்களை நீரில் அலசி சாப்பிடு வதால் பல நன்மைகள் உண்டாகும். குறிப்பாக பழங்களை சாப்பிடுவதற் குமுன் நீரில் ஊற வைத்து சாப்பிடுவதால் உடலுக்கு நிறைய நலன்கள் கிடைக் கும் என ஆய்வுகள் செ ால்கின்றன.

பழங்களின் மேல் தெளிக்கப்பட்டு இருக்கும் பூச்சி கொல்லிகள், உரங்கள் ஆகிய வற்றை நீக்க பழங்களை நீரில் ஊற வைப்பது சிறந்த வழியாகும். அவ்வாறு செய்தால் இத னால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில் இருந்து நம்மை காத்துக்கொள்ளலாம்.

கண் எரிச்சல், சரும பிரச்சினைகள், சுவாச கோளாறுகள் போன்ற பாதிப்புகள் உருவா வதற்கு முக்கிய காரணமே இந்த வகையான பூச்சி கொல்லிகள் தான். நீரில் அதிக நேரம் பழங்களை ஊற வைப்பதால் இந்த பிரச்சி னைகளை தவிர்த்து விடலாம். பொதுவாகவே பழங்களை வெறும் நீரினால் அலசுவது சிறந்த முறையல்ல. அதற்கு மாறாக 3 முதல் 4 மணி நேரம் நீரில் ஊற வைப்பது சிறந்தது. இவ் வாறு செய்வது உடல் ஆரோக்கியத்தை நல மாக வைத்து கொள்ளும்.

இதுபோன்று நீரில் ஊற வைப்பதால் பழங்களின் தட்பவெப்பம் சீராக இருக்கும். குறிப்பாக இவை வெப்ப நிலையை அதிக ரிக்காமல் பார்த்து கொள்ளலாம். பப்பாளி, மாம்பழம், தர்பூசணி போன்ற பழங்கள் அதிக அளவில் வெப்பத்தை உற்பத்தி செய்யும். இவ்வாறு நீரில் ஊற வைத்து சாப்பிடுவதால் நமது உடலில் இவை வெப்பத்தை உருவாக் காமல் பார்த்து கொள்ளலாம். இது போன்று பழங்களை நீரில் ஊற வைத்து சாப்பிடுவதால் செரிமான கோளாறுகளை தடுக்க முடியும். மேலும், வயிற்று போக்கு, நோய் தொற்றுகள் ஏற்படாமல் இருப்பதையும் இதனால் தடுக்க இயலும்.

# சிறுநீர் பிரச்சினைக்கு தீர்வு!



ஒற்றை மூலிகை, ஆனால் பல நோய்களுக்கு மருந்தாகும், அதுதான் மூக்கி ரட்டை. இந்த கீரையை எந்த முறையில் உணவில் சேர்த்து கொள்ளவேண்டும் என்று அறிந்து கொள்ளலாம்.

மூக்கிரட்டை கீரையை தனியாகவோ, மற்ற கீரைக ளுடன் சேர்த்தோ சமைத்து சாப்பிடலாம். காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை, புளி, உப்பு சேர்த்து வதக்கி, துவையலாக செய்தும் சாப்பி டலாம்.

இதயநோய், சைனஸ், ஆஸ்துமா, சளித் தொல்லை, ரத்த சோகையால் ஏற்படும் உடல்வீக்கம், தொப்பை, வாதக் கோளாறு, மஞ்சள் காமாலை, மலச்சிக்கல், மூலக்கோளாறு உள்ளிட்ட பல நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது.

மூக்கிரட்டை வேருடன் சிறிது பெருஞ்சீரகம் சேர்த் து, நீர்விட்டு காய்ச்ச வேண் டும். அதை தினமும் அருந் தினால், சிறுநீர் அடைப்பு விலகுவதுடன் சிறுநீரகக்கற் கள் கரைந்து வெளியேறும். கல்லீரல், சிறுநீரகம் உள் ளிட்ட முக்கிய உறுப்புகளின் கழிவுகளை முழுமையாக வெளியேற்றும் தன்மை கொண்டது. மூளைக்கு ஆற்றல் அளித்து மனதுக்கு உற்சாகத் தையும், உடலுக்கு சுறுசுறுப்பையும் தரக்கூடியது.

மூக்கிரட்டை இலை, பொன் னாங்கண்ணி மற் றும் கீழாநெல்லி இலைகளை சம அளவு எடுத்து நன்றாக அரைத்து, மோரில் கலந்து குடிக்க லாம். தொடர்ந்து இதை குடித்துவந்தால் மங்கலான பார்வை, வெள்ளெழுத்துக் குறைபாடுகள் நீங்கும். உண வால் ஏற்படும் அலர்ஜிக்கு, நன்றாக காய்ந்த மூக்கி ரட்டை வேரை இடித்து, ஒரு டம்ளர் நீர்விட்டு காய்ச்சி, சிறிது விளக்கெண்ணெய் கலந்து குடிக்கலாம். தின மும் இரண்டு வேளை குடித் தால் அலர்ஜி விலகி சருமம் புதுப்பொலிவு பெறும்.

மூக்கிரட்டை வேரை லேசாக இடித்து, விளக் கெண்ணெய் விட்டு காய்ச் சி, காலையில் வெறும் வயிற்றில் குடித்தால் மலம் இளகும். உடலில் தங்கி யிருக்கும் நச்சு நீர், கிரு மிகள் வெளியேறி சரும நோய்கள், வாத நோய்கள் விலகும். எடை குறைந்து அழகு மிளிரும். மூக்கிரட் டை, சிறுகுறிஞ்ச ான், சிறுநெருஞ்சில், மிளகு, சீரகம், திப்பிலி போன்ற வற்றை சம அளவு எடுத்து, தூளாக்க வேண்டும். இதை தினமும் இரண்டு வேளை தேனில் கலந்து சாப்பிட் டால் உடல் எடை குறைந்து அழகு மிளிரும்.

# மூளை சுருங்குதல் எப்படி நடக்கிறது?

வயதாவதை அறிய சிலபல அறிகுறிகள் இருப்பது போல் மூளை சுருங்குதலும் மூப்பின் அறிகுறியே. நாம் என்னதான் ஆரோக்கியமாக இருந்தாலும் நம் மூளையின் எடை ஆண்டுதோறும் 0.5 சதவீதம் குறைகிறது.

சாதாரணமாக வரும் வயது மூப்பினால் மூளையின் எடை 10 வருடத்தில் 1.5 சதவீதம் வரை குறைவதாக கண் டுள்ளனர். இந்த எடை குறைதல் ஒருவர் வாலிப வயதுக்கு வந்தது முதல் ஆரம்பித்து 60 வயதுக்குமேல் முக்கியமாக தெரிய ஆரம்பிக்கிறது. இதற்கு மூல காரணம் நம் மூளை யின் செல்கள் இயற்கையாகவே வயது ஆக ஆக குறைவ தால் ஏற்படுவதாகும்.

மூளை சுருங்குதல் இயற்கை எனக் கூறினாலும் வய தாவது மட்டுமே ஒரே காரணம் இல்லை. தூக்கமின்மை, பதட்டப்படுதல் போன்றவை மூளையின் கொள்ளளவை குறைக்கின்றது. ஆரோக்கியமுடன் கூடிய வயதானவர் களில் குறைவான தூக்கமுள்ளவருடன் நல்ல தூக்கம் உள்ளவரை ஒப்பிடும்போது குறைவான தூக்கமுள்ளவரின் மூளையின் அளவு கணிசமாக சிறியதாக இருக்கும் சாத்தி யக்கூறு அதிகமே.

ஒவ்வொரு மணி நேர தூக்கமின்மையும் ஒருவரது உடல் சுருக்கத்துடன் அவரது அறிவாற்றல் திறனில் 0.67 சதவீதம் அளவு குறைக்கின்றது.

வைட்டமின் பி-12 குறைபாடு கணிசமாக அறிவு செயல் நலிவை ஏற்படுத்தும். ஒரு ஆராய்ச்சியின்படி ஆரோக்கிய மான நபர்களில், ஆனால் சாதாரண அளவு வைட்டமின் பி-12 கொண்டவர் களின் மூளை அளவு, ஆரோக்கியத்து டன் அதிக அளவு வைட்டமின் பி-12 கொண்டவர்களின் மூளையின் அளவை விட குறைவாக இருப்பது கண்டுபி டிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையான செயல் நலிவு கொண்ட மூளை உருவாவதை நம்மால் தடுக்க முடியும், மீட்டெடுக்கவும் முடியும். எப்படி எனில் நம் உடலின் வைட்டமின் பி-12 அளவை மீட்டெடுப்பதன் மூலம்.

மூளையின் 'ஹிப்போகாம்பஸ்' தன் அளவில் இருந்து குறைவதால் ஒருவருக்கு மன அழுத்தம் ஏற்படுவது என் பதை ஏற்கனவே கண்டுபிடித்துள்ளனர். மூளையின் இப்ப குதி தான் நாம் கற்பதற்கும் நினைவு நிற்பதற்கும் மிகவும் பயன்படுகிறது. மற்றொரு ஆராய்ச்சியில், மன அழுத்தம் பாதிக்கப்பட்டவர்களின் மூளையில் அதன் நினைவக மையங்களில் குறைவான மூளை திசுக்கள் இருப்பதை கண்டுபிடித்துள்ளனர்.

அதிக வருடங்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட வர்களுக்கும், சிலர் குறைந்த வயதிலேயே இந்நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும், இவ்வகை மூளைத் திசுக்கள் குறைபாடு அதிகமாகவும் கடுமையாகவும் இருக்கிறது.

மூளை நலிவிற்கும், அல்சைமர் மற்றும் பக்கவாதம், பெருமூளை வாதம், மரபு சார்ந்த மூளை செல்கள் குறை பாடு மற்றும் சேதமடையும் டிமென்சியா போன்றவற்றுக் கும் பல மருத்துவ காரணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய நோய் கொண்டவர் களுக்கு மூளை செயல் நலிவு இருப்பின் நோய்களின் தாக்கம் வருவதுடன் உட லுக்கு பலத்த சேதத்தையும் தரும். அல்சைமர் மற்றும் சில வகை டிமென்சியா நோய்களில் மூளை செல்கள் படிப்படி யாக தங்கள் செயல்பாட்டை இழப்பதுடன் செல்கள் ஒன் றுக்கொன்று தகவல் பரிமாற்றம் செய்துகொள்வதும் இயலா மல் போகின்றது. புது நினைவுகள் உருவாக மற்றும் நாம் சிந்தித்து திட்டமிட்டு நினைவில் கொள்ள உதவும் மூளை யின் பாகங்கள் அல்சைமர் நோயில் தாக்கப்படுகின்றது. இருப்பினும் மூளையின் மற்ற பாகங்களும் சுருங்குகின்றன.

நீரிழிவு நோயும் மூளையின் செயல் நலிவுக்கு மற் றொரு காரணமாக உள்ளதை இன்னொரு ஆராய்ச்சி யில் கண்டுள்ளனர். இந்த ஆராய்ச்சியில் 614 நபர்களின் மூளையை காந்த அதிர்வு படமெடுத்தல் மூலம் பரிசோ தித்தனர். இதில் 10 வருட காலம் நீரிழிவு நோயால் பாதிக் கப்பட்டவர்களின் மூளையின் கொள்ளளவு குறைவாக இருந்தது. மேலும் அதிக காலம் நீரிழிவு நோய் இருந்தவர் களுக்கு அதிக சுருக்கமும் காணப்பட்டது.

மூளையிலுள்ள தசைக் கட்டுப்பாட்டுக்கு உதவும் கிரே மேட்டர் தான் அதிகமாக பாதிக்கப்படுகிறது. இவ்வகை கிரே மேட்டர் தான் நமக்கு பார்வை, கேட்கும் திறன், பேசுதல், ஞாபக சக்தி மற்றும் உணர்வு களுக்கு மூல கார ணமாக இருக்கிறது. மூளையின் செயல் நலிவுக்கு நம்மால் கட்டுப்படுத்த முடியாத சில காரணங்கள் உள்ளன. இது தவிர நம்முடைய வாழ்க்கை முறைகளாலும் மூளை பாதிக் கப்படுகின்றது. உடற்பயிற்சி குறைவாக இருந்தாலும் அது நம் மூளையை பெரிதும் பாதிக்கும். நம் உடலை சரிவர செயல்படுத்தாமல் இருந்தால் மூளையில் 'ஹிப்போகாம் பஸ்' உள்பட எட்டு பகுதிகளில் ரத்த ஓட்டம் குறைகின்ற து. பத்து வருடத்தில் நம்முடைய மூளையிலுள்ள நியூரான் களின் அடர்திறன் அதிகரிக்கப்படாமல் நம் மூளையின் கொள்ளளவு குறைவதை நம்மால் அறிய இயலும். இந்த சுருக்கத்தன்மை தான் நம் மூளையின் செயல் நலிவிற்கு மூல காரணம்.

உடற்பயிற்சியின்மை மூளைச் சிதைவு (குறிப்பாக அல் சைமர், பார்க்கின்சன் போன்ற) நோய்களை ஏற்படுத்தும் வாய்ப்பு மிக அதிகம் உள்ளது. எனவே உடற்பயிற்சியால் நாம் அடையும் உன்னத நன்மையை புரிந்து கொண்டு முறையாக உடற்பயிற்சி செய்துவந்தால், அதுவே மூளை சுருங்குதலைத் தடுக்க உதவும்.






# உடல் நலத்தைக் கெடுக்கும் தூக்கமின்மை

முறையான இரவு தூக்கம் நல்ல ஆரோக் கியத்திற்கு அவசியம். அவ்வாறு இல்லாத பொழுது உடல் ஆரோக்கியம் கெடுகின்றது. இவ்வாறு உடல் நலத்தை கெடுக்கும் தூக்கமின் மைக்கு என்ன காரணங்கள் இருக்க முடியும் என்பதனைப் பார்ப்போம்.

பலர் குறுகிய காலமாக தூக்கமின்மையால் அவதிப்படுவதாக கூறுவார்கள். சிலர் தூக்க மின்மை அறிகுறிகள் சமீப காலமாக ஏற்படு வதாகக் கூறுவார்கள். சிலர் நெடுங்காலமாக தூக்கமின்மை காரணமாக அவதிப்படுவதாகக் கூறுவர்.

நெருங்கிய உறவினை இழத்தல், வேலை செய்யும் இடத்தில் அதிக ஸ்ட்ரெஸ், உடலில் வலி, நீண்ட கால நோய், விடாத கவலை இவை அனைத்தும் ஒருவருக்கு தூக்கமின்மை யினை ஏற்படுத்த முடியும்.

செயற்கை விளக்குகளை அதிகம் உபயோ கித்தல் கூட தூக்கத்திற்கு தொந்தரவினைக் கொடுக்கும். அவ்வாறு அலுவலகத்தில் இருக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளவர்கள் காலை, மாலை சிறிது நேரம் சூரிய ஒளியில் இருக்க லாம். இது உங்கள் தூக்க நேரம், தரம் இரண்டி னையும் உயர்த்தும்.

அதிகமான நீலநிற ஒளியில் மாலையில், இரவில் இருக்க வேண்டாம். டி.வி. பெட்டி களை கூட இரவில் முழுமையாக அணைத்து விடுங்கள். நீலஒளி உடலினை பகல்நேரம் போல் உணர வைக்கும். எனவே மாலை, இர வில் நீல ஒளியினை தவிர்த்து விடுங்கள்.

★ பகல் 12 மணிக்கு பிறகு காப்பி, டீ இரண் டினையும் நிறுத்தி விடுங்கள். கேலின் தூக்க தரத்தினை வெகுவாய் பாதிக்கும்.

★ பகலில் நீண்ட நேரம் தூக்கம் வேண் டாம். இது இரவு தூக்கத்தினைக் கெடுக்கும்.

★ தூங்கும் நேரமும், விழிக்கும் நேரமும் எப்பொழுதும் முறையாக இருக்கட்டும்.

★ ஆல்கஹாலை நம் வாழ்வில் இருந்து அடியோடு ஒழித்து விடுவோம்.

★ படுக்கை அறை அமைதியாக, சுத்தமாக இருக்க வேண்டும்.

★ இரவு வெகு நேரம் சென்று உணவு அருந் தாதீர்கள்.

★ மாலையிலேயே மனது ரிலாக்ஸ் ஆகி விடட்டும்.

★ மாலையோ, இரவோ குளியுங்கள்.

★ உங்கள் படுக்கை, தலையணை இவை முறையாக இருக்க வேண்டும்.

★ உறங்கப் போவதற்கு முன்பு கடின உடற் பயிற்சி செய்யக்கூடாது.

நீண்ட ஆய்வுகள் கூறுவது முறையற்ற தூக் கம், குறைவான தூக்கம். இவை தவிர 89 சத வீதம் குழந்தைகளின் எடை கூட காரணமாய் இருக்கின்றன. இதே காரணம் தான் 55சதவீதம் பெரியோர்களின் எடை கூடவும் காரணமாய் இருக்கின்றன. அளவு குறைவான தூக்கம் ஹார் மோன் குறைபாடுகளை ஏற்படுத்துகின்றது. தேவையான அளவு தூக்கம் உடையவர்கள் தேவையான அளவே உண்கின்றனர். ஆரோக்கி யமாய் இருக்கின்றனர்.

கடந்த பல வருடங்களாக அநேகரும் குறைந்த அளவே தூங்குகின்றனர். இதன் கார ணமாகவே அதிக மக்கள் நோய் தாக்குதல்க ளுக்கு ஆளாகின்றனர். அதிக கவனக்குறைவு டன் இருக்கின்றனர். தூக்க குறைபாடு இருதய நோய், வாதம் பாதிப்பிற்கு காரணமாக இருக் கின்றது.

தூக்க குறைபாடு சர்க்கரை நோய் பாதிப் பினை ஏற்படுத்துகின்றது. தூக்க குறைபாடு மனச்சோர்வினை ஏற்படுத்துகின்றது. நோய் எதிர்ப்பு சக்தி குறைகின்றது. உடலில் வீக்கங் கள் ஏற்படுகின்றன. நாம் பழகும் முறையில் பண்பற்ற மாறுதல்கள் ஏற்படுகின்றன. நல்ல தூக்கம் 7-8 மணி நேரம் இருக்கும் பொழுது குறைபாடுகள் நீங்குகின்றன. எனவே முறை யாய் தூங்கும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டு நம் ஆரோக்கியத்தினை நாமே ஏற்ப டுத்திக் கொள்வோம்.



# வெறும் வயிற்றில் நல்லதா?

வாழைப்பழத்தில் பொட் டாஷியம், மக்னீஷியம், இரும் புச்சத்து, ட்ரிப்டோபான், வைட் டமின் பி6, கால்சியம், நார்ச்ச த்து போன்ற சத்துக்கள் அதிக மாக இருக்கிறது. 25 சதவிகிதம் சர்க்கரையும், 89 கலோரிகளும் உள்ளது.

காலை உணவு எப்போதுமே ஆரோக்கியமும் ஊட்டச்சத்தும் நிறைந்ததாக இருக்க வேண்டும். காலை நேரத்தில் வாழைப்பழம் சாப்பிடுவது உடலுக்கு மிகவும் நல்லது. இருதய ஆரோக்கி யத்தை மேம்படுத்தி, சோர்வு, மலச்சிக்கல், மன அழுத்தம், நெஞ்செரிச்சல், வயிற்றுப்புண் ஆகியவற்றை போக்குகிறது. வாழைப்பழத்தில் இரும்புச்சத்து அதிகமாக இருப்பதால் உடலில் ஹீமோக்ளோபின் அளவு அதிக ரித்து இரத்த சோகையை போக் குகிறது.

வாழைப்பழத்தில் சர்க்கரை இருப்பதால் உடலுக்கு உடனடி யாக ஆற்றலை கொடுக்கிறது. வெறும் வயிற்றில் வாழைப் பழம் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது. இதில் அமிலத்தன்மை இருப்பதால் குடல் இயக்கங்கள் பாதிக்கப்படும். காலை நேரத்தில் ஏதேனும் உணவை சாப்பிட்ட பின் வாழைப்பழம் சாப்பிடு வதே நல்லது. ட்ரை ஃப்ரூட்ஸ், ஆப்பிள் மற்றும் மற்ற பழங்களு டன் வாழைப்பழத்தை சாப்பிட லாம். மக்னீஷியம் மற்றும் கால் சியம் இருதய ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது.

பொதுவாகவே, வெறும் வயிற்றில் எந்த பழங்களையும் சாப்பிடுவது நல்லதல்ல. ஓட்ஸ், வாழைப்பழம், நட் பட்டர் மற் றும் மேப்பிள் சிரப் சேர்த்து ச ாப்பிடலாம். இதனை காலை உணவாக சாப்பிட ருசியாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்.

# பூண்டு சாப்பிட்ட பின்பு வாய் மணக்கிறதா?

பழங்காலம் முதலே நம் உண வுகளில் சுவைக்காக சேர்க்கப்படும் பொருட்களில் முக்கியமானவை பூண்டு மற்றும் வெங்காயம். இந்த இரண்டு பொருட்களும் சுவையை மட்டும் அதிகரிப்பதில்லை, அதிக அளவு ஆரோக்கியத்தையும் வழங் குகிறது. இவை எவ்வளவுதான் ஆரோக்கியமான பொருளாக இருந்தாலும் அவற்றை பச்சையாக உண்டால், வாயில் நாற்றம் ஏற்படும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆய்வுகளின்படி பூண்டு மற்றும் வெங்காயத்தில் உள்ள சில வேதிப் பொருட்கள்தான் வாயில் நாற்றத்தை உண்டாக்குகிறது என்று நிரூபிக்கப் பட்டுள்ளது. இதற்கு காரணம் இவற்றில் உள்ள அல்லிசின், மெதில் சல்பைட் மற்றும் சிஸ்டைன் சல்பாக் சைடு போன்ற வேதிப்பொருட்கள் ஆகும். மெதில் சல்பைட் பூண்டு மற் றும் வெங்காயத்தை வெட்டும்போது வெளியேறுகிறது.

இவற்றை சாப்பிடும்போது இதில் உள்ள வேதிப்பொருட்கள் ரத்தத்தில் கலந்து வாய் நாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஊட்டச்சத்து நிபுணர்களின் கருத்துப்படி பூண்டு மற்றும் வெங்காயத்தால் ஏற்படும் நாற்றத்தை பாலானது சரிசெய்யும் என்று கூறுகிறார்கள். சாப்பிட்டு முடித்த பின் கொழுப்பு நீக்கப் பட்ட பாலை குடிப்பது உங்கள் வாயில் ஏற்படும் துர்நாற்றத்தை உடனடியாக குறைக்கும். சாப்பிட்டு முடிப்பதற்கும், பால் குடிப்பதற்கும் இடையில் குறைந்தது 15 முதல் 20 நிமிடம் இடைவெளி இருக்க வேண் டியது அவசியம்.

பல் மருத்துவர்கள் பரிந்துரைப் பது என்னவெனில் ஒவ்வொரு முறை சாப்பிட்ட பிறகும் ஒரு ஆப் பிள் சாப்பிட வேண்டும். ஏனெனில் ஆப்பிளில் உள்ள இயற்கை என் சைம்கள், பூண்டு மற்றும் வெங்கா யத்தில் உள்ள சல்பரின் வீரியத்தை குறைக்கும். இதனால் உங்களுக்கு கிடைப்பது துர்நாற்றமில்லாத நறு மண வாசனையாகும். எனவே சாப் பிட்டு முடித்தபின் ஒரு ஆப்பிளோ அல்லது ஆப்பிள் ஜூசோ குடிப்பதை வழக்கமாக கொள்ளுங்கள். பூண்டு மற்றும் வெங்காயத்தால் ஏற்படும் வாசனையை போக்க இதுதான் மிகவும் எளிமையான அதே சமயம் உபயோகமான வழி ஆகும்.

வெதுவெதுப்பான நீரை, உணவு சாப்பிட்டப்பின் குடிப்பது உங்கள் வாயை புத்துணர்ச்சியாக வைத்திருப் பதுடன் உடலில் உள்ள நச்சுப்பொ ருட்களை வெளியேற்றவும் பயன்ப டுகிறது.

## அப்பிளின் புதிய எமோஜிகள்

அப்பிள் நிறுவனம் சர்வதேச எமோஜி தினத்தை கொண்டாடும் வகையில், 60-க்கும் அதிகமான எமோஜிக்களை அறிமுகம் செய்தது.



புதிய எமோஜிக்கள் அந்நிறுவனத்தின் ஐபோன், ஐபேட், அப்பிள் வாட்ச் மற்றும் மேக் சாதனங்களுக்கு இந்த ஆண்டு வழங்கப்படும் என தெரிகிறது.

புதிய எமோஜிக்கள் யுனிகோட் 12.0 சார்ந்து உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான அனுமதி இந்த ஆண்டு துவக்கத்தில் வழங்கப்பட்டது. புதிய எமோஜிக்களில் காது கேட்க செய்யும் கருவி, வீல்சேர், செயற்கை கை, செயற்கை கால் உள்ளிட்டவை பலரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இருக்கிறது.

உணவு, விலங்குகள், நடவடிக்கைகள் மற்றும் ஸ்மைலி ஃபேஸ் உள்ளிட்டவை புதிய எமோஜிக்களில் பிரபலமானவைகளாக இருக்கின்றன. கைகள் கோர்த்தப்படி இருக்கும் எமோஜி ஜோடிகள் மற்றும் உறவுமுறையை குறிக்கும் வகையில் இருந்தது.

இந்நிலையில், இனி சரும நிறம், பாலினம் உள்ளிட்டவை என மொத்தம் 75 விதங்களில் கிடைக்கும் எமோஜிக்களில் தேர்வு செய்து கொள்ளும் வசதி வழங்கப்படுகிறது.

இந்த பட்டியலில் புடவை, நீச்சல் உடை, புதிய உணவு வகைகள், விலங்குகள் போன்றவையும் சேர்க்கப்பட்டுள்ளன. 59 புதிய எமோஜிக்கள் இலவச மென்பொருள் அப்டேட் மூலம் விரைவில் வழங்கப்படும் என ஆப்பிள் அறிவித்துள்ளது.

ஐபோன், ஐபேட், மேக் மற்றும் அப்பிள் வாட்ச் பயனர்கள் தங்களின் மென்பொருளை அப்டேட் செய்து இவற்றை பயன்படுத்த துவங்கலாம்.

## பாதுகாப்பு குறைபாடுகளுடன் மென்பொருள்?



அப்பிள் நிறுவனத்தின் ஐ.ஒ.எஸ். 13, ஐபேட் ஒ.எஸ். மற்றும் மேக் ஒ.எஸ். கேட்டலினா உள்ளிட்ட இயங்குதளங்கள் கடந்த மாதம் நடைபெற்ற 2019 அப்பிள் சர்வதேச டெவலப்பர் நிகழ்வில் அறிமுகம் செய்யப்பட்டன.

அப்பிள் மென்பொருள்களில் புதிய அம்சங்கள் மற்றும் செயல்திறன் மேம்படுத்தப்பட்டதோடு ஆப்பிள் நிறுவனம் சைன் இன் வித் ஆப்பிள் (**Sign In with Apple**) எனும் பாதுகாப்பு சார்ந்த அம்சத்தை அறிமுகம் செய்தது. இந்த அம்சம் அதிக வரவேற்பை பெற்றிருக்கும் நிலையில், ஓபன் ஐ.டி. பவுன்டேஷன் இந்த அம்சம் செயல்படுத்தப்பட இருக்கும் வழிமுறையில் கேள்விகளை எழுப்பியுள்ளது.

அப்பிள் நிறுவனம் புதிய சைன் இன் வித் ஆப்பிள் அம்சம் வழக்கமான சைன் இன் வித் ட்விட்டர், கூகுள் மற்றும் ஃபேஸ்புக் சேவைகளை கொண்டு சைன் இன் செய்வதை போன்றே அதற்கு மாறாக அறிமுகம் செய்துள்ளது. இந்த அம்சம் பயனரின் தனிப்பட்ட விவரங்களை வலைதளம் அல்லது ஆப் டெவலப்பர்களுக்கு வழங்காது.

லாப நோக்கமின்றி செயல்படும் தொண்டு நிறுவனமான ஓபன் ஐ.டி. பவுன்டேஷன் ஆப்பிளின் சைன் இன் வித் ஆப்பிள் அம்சம் மீது கேள்விகளை எழுப்பியுள்ளது. புதிய ஆப்பிள் அம்சம் பல்வேறு சைன்-இன் தளங்களில் இருப்பதை போன்ற பொதுவான வழிமுறையை தான் பயன்படுத்துகிறது.

இது பயனர்கள் தனித்தனி பாஸ்வேர்டுகள் இன்றி அவர்களை உறுதிப்படுத்த டெவலப்பர்களுக்கு அனுமதி வழங்குகிறது. எனினும்,அப்பிள் புதிய அம்சத்திற்கும் ஓபன் ஐ.டி. கனெக்ட் அம்சத்திற்கும் வித்தியாசங்கள் இருக்கிறது. இவை பயனர் விவரங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் தன்மை கொண்டவை என கூறப்படுகிறது.

தற்சமயம் ஓபன் ஐ.டி. கனெக்ட் மற்றும் சைன் இன் வித் ஆப்பிள் சேவைகளுக்கு இடையேயான வித்தியாசம், இது பயனர்கள் எங்கெங்கு சைன் இன் வித் ஆப்பிள் சேவையை பயன்படுத்துவர் என்பதில் மட்டும் வேறுபடுகிறது. இதனால் பயனர்களின் விவரங்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

இதுதவிர இந்த அம்சம் ஓபன் ஐ.டி. கனெக்ட் மற்றும் சைன் இன் வித் ஆப்பிள் டெவலப்பர்களுக்கு தேவையற்ற தொல்லையை ஏற்படுத்தி வருகிறது. ஓபன் ஐ.டி. பவுன்டேஷன் பிரச்சனைகளை உடனடியாக சரி செய்து, ஓபன் ஐ.டி. டெஸ்ட் சூட் பயன்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என அப்பிளை கேட்டுக் கொண்டுள்ளது.

அப்பிள் நிறுவனம் மூன்றாம் தரப்பு ஐ.ஒ.எஸ். செயலிகள் சைன் இன் வித் அப்பிள் பட்டனில் எஸ்.எஸ்.ஒ. சேவைகளை ஒருங்கிணைக்க உத்தரவிட்டிருக்கிறது.

## ட்விட்டரில் ஏழு இந்திய மொழிகள்

கணினிகளுக்கான ட்விட்டர் வலைத்தளம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இனி பயனர்கள் ஏழு இந்திய மொழிகளில் தகவல்களை பகிர்ந்து கொள்ள முடியும். புதிய அம்சங்களுக்கான அப்டேட் வரும் வாரங்களில் வழங்கப்பட இருக்கிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ட்விட்டர் தளத்தில் மேற்கொள்ளப்படும் பெரிய அப்டேட்டாக இது பார்க்கப்படுகிறது. இதில் பயனர் அனுபவத்தை மொபைல் தளங்களில் இருப்பதை போன்று மாற்றப்படுகிறது. இனி டேட்டா வேகம் குறையும் போதும், தளத்தை சீராக இயக்க முடியும்.

இந்தியாவில் ட்விட்டர் தளத்தினை தமிழ், இந்தி, குஜராத்தி, மராத்தி, உருது, பெங்காலி மற்றும் கன்னடா உள்ளிட்ட மொழிகளில் கிடைக்கும். இத்துடன் புதிய தளத்தில் டிரான்ஸ்லேஷன் எனப்படும் மொழிமாற்றம் செய்யும் சேவை மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தளத்தில் பல்வேறு மொழிகளில் இயக்க முடியும்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் வலைத்தள அமைப்பிற்கான பணிகள் நடைபெற்று வந்தது. புதிய அம்சங்கள் பற்றி அறிந்து கொள்ள தளத்தின் இடதுபுறத்தில் நேவிகேஷன் பேனல் வழங்கப்படுகிறது. இதில் புதிதாக எக்ஸ்ப்ளோர், லிஸ்ட்ஸ் மற்றும் புக்மார்க்ஸ் போன்ற அம்சங்கள் காணப்படுகின்றன.

ட்விட்டர் மொபைல் செயலியில் ஏற்கனவே எக்ஸ்ப்ளோர் டேப் வழங்கப்பட்டிருந்த நிலையில், தற்சமயம் இந்த அம்சம் கணினிகளுக்கான டெஸ்க்டாப் பதிப்பிலும் வழங்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா அனுமதியின்றி லிப்ரா க்ரிப்டோ கரென்சியை வெளியிடும் திட்டமில்லை

ஃபேஸ்புக் நிறுவனம் தனது லிப்ரா க்ரிப்டோகரென்சிக்கு முறையான அனுமதி வழங்கும் வரை வெளியிடும் திட்டம் ஏதும் இல்லை என தெரிவித்துள்ளது.

லிப்ரா க்ரிப்டோகரென்சி வழக்கமான ரொக்க முறைகளுக்கு போட்டியாகவும், அதற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இயங்குமாறு செயல்படாது என ஃபேஸ்புக்கின் பிளாக்செயின் திட்டப்பரிவை சேர்ந்த டேவிட் மார்கஸ் தெரிவித்தார்.

ஒழுங்குமுறை ஆணையங்களின் கவலைகளுக்கு பதில் அளித்து, முறையான அனுமதி பெறும் வரை லிப்ரா டிஜிட்டல் கரென்சியை ஃபேஸ்புக் வெளியிடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான நுச்சின், அமெரிக்க நிதி முறையை இயக்கும் முன் அவர்கள் மிகவும் கடுமையான முறைகளை பின்பற்றுவதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டியிருக்கும். இதுபோன்ற கரென்சிக்கள் பெரும்பாலும் சட்ட விதிகளுக்கு எதிராகவே செயல்படுகின்றன, என அவர் தெரிவித்தார்.

லிப்ரா திட்டம் பற்றிய அறிவிப்பு வெளியானது முதல் ஃபேஸ்புக் நிறுவனம் பலதரப்பில் இருந்தும் கடும் விமர்சனங்களை சந்தித்து வருகிறது.

## வட்ஸ்அப்பின் புதிய வசதி




உலகம் முழுக்க பெரும்பாலானோர் பயன்படுத்தி வரும் வாட்ஸ்அப் செயலி இந்தியாவில் அதிக பிரபலமாக இருக்கிறது. இந்நிலையில் சேவையை மேலும் மேம்படுத்தும் வகையில் அதில் பல்வேறு புதிய அம்சங்கள் தொடர்ந்து சேர்க்கப்பட்டு வருகிறது. அவ்வாறான புதிய அம்சமாக க்விக் எடிட் மீடியா ஷார்ட்கட் என்ற பெயரில் உருவாகிறது.

வாட்ஸ்அப் ஆண்ட்ராய்டு மற்றும் ஐ.ஒ.எஸ். பதிப்புகளில் புதிய அம்சம் விரைவில் சேர்க்கப்பட இருக்கிறது.

தற்சமயம் வெளியாகியிருக்கும் தகவல்களில் வாட்ஸ்அப் சாட் விண்டோவில் இருந்தபடி வாட்ஸ்அப்பில் வரும் மீடியாக்களை எடிட் செய்யும் வசதி வழங்கப்பட இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இதனால் மீடியாக்களை எடிட் செய்ய தனியே வேறொரு செயலியை பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது.

புதிய அம்சம் பயனர்களின் நேரத்தை மிச்சப்படுக்கிறது. இத்துடன் மீடியா எடிட் செய்ய அவர்கள் பயன்படுத்தும் மூன்றாம் தரப்பு செயலிகளையும் பயனற்றதாக மாற்றும். புதிய அப்டேட் க்விக் எடிட் மீடியா ஷார்ட்கட் என அழைக்கப்படுகிறது.

புதிய அம்சம் சோதனை செய்யப்படுகிறது என்றும், விரைவில் இது வழங்கப்படலாம் என கூறப்படுகிறது. இதனை உறுதிப்படுத்தும் ஸ்கிரீன்ஷாட்களும் வெளியாகியுள்ளன. இதில் வாட்ஸ்அப் செயலியினுள் புகைப்படம் திறக்கப்பட்டதும் எடிட் பட்டன் காணப்படுகிறது. இதனை க்ளிக் செய்தால் டெக்ஸ்ட், டூடுள் அல்லது தலைப்பை சேர்க்கும் வசதி காணப்படுகிறது.

புதிய அம்சத்தின் மூலம் எடிட் செய்யப்படும் புகைப்படம் பயனர்களின் ஸ்மார்ட்போனில் சேமிக்கப்படுவதில்லை. இதனால் ஸ்மார்ட்போன் மெமரியும் பாதிக்கப்படாது.

ஏற்கனவே இதேபோன்ற அம்சம் டெலிகிராம் போன்ற தளங்களில் கிடைக்கிறது.

## வலையில் விழுந்த ராக்கெட்!

ஏவிய ராக்கெட்டின் பகுதிகளில், பெரும்பாலானவற்றை மறுபடியும் பயன்படுத்த வேண்டும். இதுதான் ஸ்பேஸ் எக்ஸ் அமைப்பின் நிறுவனர் எலான் மஸ்கின் குறிக்கோள்.

இதன்படி அண்மையில் ஒரு முதல் முயற்சியாக, பால்கன் ஹெவி என்ற ராக்கெட்டின் மூக்குப் பகுதிகளில் ஒன்றை, கடலில் விழுகையில் வலை விரித்துப் பிடித்து சாதனை படைத்திருக்கிறது ஸ்பேஸ் எக்ஸ்.

ராக்கெட் சீறிப் பாயும் போது, வளிமண்டல அழுத்தத்தை தாங்குவதற்காக, அதிக பலம் வாய்ந்த கூம்பு ஒன்றை இணைத்திருப்பர். இந்தக் கூம்பு, வளிமண்டலத்தை தாண்டி, விண்வெளிக்குப் போனதும், இரண்டாகப் பிரிந்து கடலில் விழும். இந்தக் கூம்பின் இரு

பகுதிகளின் மொத்த விலை, 83 கோடி ரூபாய்! இது கடலில் விழாமல் பிடித்தால், மறுபடியும் அப்படியே பயன்படுத்த முடியும்.

எனவே தான், ஸ்பேஸ் எக்ஸ், ஒரு மிஸ்டர் ஸ்டீ என்ற சிறு கப்பலில், பெரிய வலையை விரித்து அனுப்பியது. சில தோல்விகளுக்குப் பிறகு, முதல் முறையாக ராக்கெட் மூக்கின் ஒரு பகுதியை வலையில் பிடித்தது.

பால்கன் ஹெவியின் மூன்று ராக்கெட் பகுதிகளும், விண்ணில், 25 செயற்கைக்கோள்களை ஏவிய பிறகு மீண்டும், அமெரிக்காவிலுள்ள கேப் கனேவரல் ஏவு தளத்திற்கே திரும்ப வந்து தரையிறங்கின.

## கையடக்க மொழிபெயர்ப்பு கருவி



ஒரு மொழிக்காரர் பேசியதை ஒரே வினாடியில் மொழிபெயர்த்து, இன்னொரு மொழிக்காரருக்குப் புரியும் வகையில் பேசிக்காட்டும் கருவிகள் சில வந்துவிட்டன.

ஆனால், 'லாங்கோகோ தயாரித்துள்ள 'ஜெனிசிஸ்' என்ற கையடக்க மொழிபெயர்ப்புக் கருவி, வல்லுனர்களை கவர்ந்துள்ளது.

தமிழ், ஹிந்தி மற்றும் இந்திய ஆங்கிலம் உட்பட, 100 மொழிகளில், ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு மொழிபெயர்த்து, இனிய குரலில் பேசிக்காட்டுகிறது ஜெனிசிஸ்.

விமான நிலையத்துக்கு வழி கேட்பதிலிருந்து, அருகே நல்ல தங்கும் விடுதி, உணவகம் எங்கே இருக்கிறது என்பது வரை, சில வரிகள் முதல், பல பத்திகளுக்கு பேசி, அடுத்த மொழிக்காரருடன் எளிதில் கருத்துப் பரிமாற, லாங்கோகோ ஜெனிசிஸ் உதவுகிறது. 'வைபை' வசதி கொண்ட இந்தக் கருவிக்கு மூளையாக செயல்படுவது, ஒரு செயற்கை நுண்ணறிவு மென்பொருள்.

இதுவும், லாங்கோகோவின் மேகக் கணிய இணைப்பும் இந்தக் கருவியின் பன்மொழிப் புலமையை தொடர்ந்து மெருகேற்றியபடியே இருக்கும்.

சீன, கொரிய பேச்சு மொழிகளை சில பிழைகளுடனே மொழிபெயர்ப்பதாக விமர்சனம் இருந்தாலும், ஒருவர் தொடர்ந்து இந்தக் கருவியை பயன்படுத்தும்போது, அவரது பேச்சு நடைக்கு இக்கருவி பழகிக்கொள்ளும் என்பதால், மொழிபெயர்ப்பின் துல்லியமும் கூடும் என்கின்றனர் ஜெனிசிசை உருவாக்கியவர்கள்.

## ராக்கெட்டை ஏவும் போயிங் விமானம்



ராக்கெட் மூலம் செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவ, அதிக எரிபொருள் செலவும், நேரச் செலவும் ஏற்படுகின்றன. இவற்றைக் குறைக்க, இங்கிலாந்தைச் சேர்ந்த,'வர்ஜின் ஆர்பிட்' புதிய உத்தியை அண்மையில் சோதித்து வெற்றி கண்டுள்ளது.

சராசரி, 747 ரக போயிங் விமானத்தின் இறக்கைகளில் ராக்கெட்டை பொருத்தி, வளி மண்டலத்தின் விளிம்பு வரை பறந்து, ராக்கெட்டை பத்திரமாக கழற்றி விட்டுவிடுவது தான் அந்த உத்தி.

இந்த முறைப்படி ராக்கெட்டில் ஒரு ரொட்டித் துண்டு அளவிலிருந்து, ஒரு குளிர்பதனப் பெட்டி அளவு வரையுள்ள செயற்கைக் கோள்களை ஏவ முடியும் என, வர்ஜின் ஆர்பிட்டின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சாதாரண விமான நிலையத்திலிருந்தே போயிங் கிளம்பும். தனியாக ஏவுதளம் தேவையில்லை. எனவே, செயற்கைக் கோளை ஏவ, 24 மணி நேர முன் தயாரிப்பு இருந்தால் போதும். இப்போது, ஏவுதளங்களில் குறைந்தது, 24 மாதங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

அடுத்து, போயிங் வழக்கமான விமான எரிபொருளை பயன்படுத்துவதால், ராக்கெட் எரிபொருள் செலவு குறைகிறது.

அண்மையில், வர்ஜின் ஆர்பிட், தன்,'லாஞ்ச்சர் ஒன்' என்ற காலி ராக்கெட்டை'காஸ்மிக் கேர்ள்'என்ற போயிங்கின் இறக்கையில் பொருத்தி, அமெரிக்காவின் கலிபோர்னியா பாலைவன பகுதிக்கு மேலே, சில ஆயிரம் அடி உயரத்திலிருந்து கழற்றி விட்டு வெற்றிகரமாக சோதித்துள்ளது.

அடுத்து, 2021லிருந்து வர்த்தக ரீதியில் விமானம் மூலம் ராக்கெட்டை செலுத்தும் சேவையை, வர்ஜின் ஆர்பிட் துவங்க திட்டமிட்டுள்ளது.

## 'முத்திரை' மடிக்கணினி!

கடந்த ஆண்டு அமெரிக்காவின் எம்.ஐ.டி., பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில பொறியாளர்கள், மடிக்கணினிக்கு கூடுதல் திரையை ஒட்ட வைக்கும் வசதியை அறிமுகப்படுத்தினர். 'டூயோ' என்ற இந்த இரு திரை வசதிக்கு ஏகப்பட்ட வரவேற்பு, அதை வாங்கியவர்கள், இரண்டு போதாது, மூன்று திரைகள் வேண்டும் என்று கேட்டனர். எனவே, அண்மையில் ஒரு மடிக்கணினி திரையோடு, இரண்டு புதிய திரைகளை பொருத்தும் வசதியை, டிரையோ என்ற பெயரில் அறிமுகப்படுத்தினர்.

மடிக்கணினி திரையின் பின்புறம், ஒட்ட வைக்கக்கூடிய ஒரு சட்டகம், இடது - வலது புறங்களில் திரையை பொருத்தும் கிளிப்புகள் ஆகிய வசதிகள் கொண்ட டிரையோ, புரோகிராமர்கள், கணினி விளையாட்டு பிரியர்கள், அலுவலக கூட்டங்களுக்கு என்று பல இடங்களில் முத்திரை பயன்படும் என, டிரையோவின் தயாரிப்பாளர்கள் சொல்கின்றனர். டிரையோவின் விலை, 26 ஆயிரம் ரூபாயை தொடுகிறது.

# கூந்தல் வறட்சி நீங்க...




நம் முடிக்கால்களுக்கு இடையில் உள்ள கபாலத்தில் எண்ணெய் போன்ற ஒரு திரவம் சுரக்கும். அதற்குப் பெயர் சீபம். சீபம் சுரப்பது குறைவாக இருந்தால் முடி வறட்டுத்தன்மை அடையும். வெளியில் செல்லும் போது தலைமுடியை தூசிபடாதவாறு பாதுகாக்க வேண்டும். இல்லையெனில் முடி விரைவில் பாழாகி வறட்டுத் தன்மையை அடையும். அடிக்கடி சீப்பு கொண்டு தலை சீவுவதால் ஸ்கால்பில் சுரக்கும் சீபமும் சீப்பின் வழியாக முடி நுனிவரை பரவும்.

தலையில் ரத்த ஓட்டம் சீராகும்.சுருள் முடிக்காரர்களுக்கு முடி அடர்த்தியாக இருப்பதால் வறட்டுத் தன்மை இருக்காது. எளிதில் முடி சிக்கு பிடிக்கும். நீளமுடி உள்ளவர்களுக்கும் வறட்டுத் தன்மையினால் முடி செம்பட்டை நிறமாகத் தெரியும். அலை அலையான முடி உள்ளவர்களுக்கு தலைமுடி சீவாதது போல எப்போதும் அடங்காமல் இருக்கும்.

வறட்சித் தன்மை நீங்க, அவகடோ பழத்தின் சதைப்பகுதியினை தலையில் தடவினால் அது முடிக்கு நல்ல ஈரப்பதத்தைத் தரும். தயிரை தலையில் தடவினாலும் நல்லது. அதேபோல் பியரை ஒரு ஸ்ப்ரே பாட்டிலில் போட்டு முடியில் அடித்து பிறகு தலைக்கு குளித்தால் அதுவும் முடிக்கால்களுக்கு ஈரத்தன்மையை அளிக்கும். வாரத்திற்கு ஒரு முறை அல்லது முடிந்தால் இரண்டு முறை எண்ணெய் குளியல் செய்தால் முடியின் வறட்டுத்தன்மை நீங்கும்.

# பித்தவெடிப்புக்கு வீட்டு வைத்தியம்



பெண்கள் தங்களின் முகத்தை பராமரிக்க செலவிடும் நேரத்தில் சில நிமிடங்களைக் கூட தங்கள் பாதங்களை கவனிக்க செலவு செய்வதில்லை. பெரும்பான்மையான பெண்களுக்கு பாதங்களில் ஏற்படும் பிரச்சினை பித்த வெடிப்பு. என்ன மருந்து போட்டாலும் இந்த பித்த வெடிப்பு மட்டும் போகவே மாட்டேங்குது என்று அலுத்துக்கொள்பவர்கள் ஏராளம்.

விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை சம அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் சிறிது மஞ்சள் தூளை கலந்து பேஸ்ட் போல் செய்து அதை பாதத்தில் வெடிப்பு உள்ள இடங்களில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்வதால் பித்த வெடிப்பு முற்றிலும் குணமாகும்.

வேப்பிலை, மஞ்சள் ஆகியவற்றுடன் சிறிதளவு சுண்ணாம்பு சேர்த்து அரைக்க வேண்டும். இந்த கலவையில் விளக்கெண்ணெய் சேர்த்து பித்த வெடிப்பு உள்ள இடங்களில் பூசினால் பித்த வெடிப்பு முற்றிலும் நீங்கும்.

பப்பாளி பழத்தை நன்கு நைசாக அரைத்து அதை பாதங்களில் வெடிப்பு உள்ள பகுதிகளில் தேய்க்க வேண்டும். அவை உலர்ந்ததும் பாதத்தை தண்ணீரில் நனைத்து தேய்க்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் பித்த வெடிப்பு சரியாகும். இதேபோல் மருதாணி இலைகளை நன்றாக அரைத்து பித்த வெடிப்பு உள்ள இடங்களில் தேய்த்து உலர விட வேண்டும். பிறகு தண்ணீரால் கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் நாளடைவில் பித்த வெடிப்பு முழுவதும் குணமாகும்.


வேப்ப எண்ணெய்யில் சிறிதளவு மஞ்சள் பொடியை கலந்து பேஸ்ட் போல் செய்து பித்த வெடிப்பு உள்ள இடத்தில் தடவலாம். இரவு நேரத்தில் தூங்கப் போவதற்கு முன் காலை நன்றாக தேய்த்து கழுவி சிறிது தேங்காய் எண்ணெய் தடவி தூங்க போகலாம். இப்படி செய்தால் பித்த வெடிப்பு வராமல் நீங்கள் தடுக்கலாம்.

குளித்து முடித்ததும் பாதங்களை ஈரமில்லாதவாறு துணியால் துடைக்க வேண்டும். பின் பாதத்தில் சிறிது விளக்கெண்ணெய் தேய்த்து வந்தால் பித்த வெடிப்பு வராமல் தடுக்கலாம்.

# வறண்ட உதடுகளுக்கு குட்பை



குளிர்காலத்தில் நம்முடைய சருமம் வறண்டு காணப்படும். காரணம்... உடலிலுள்ள நீரின் அளவு குறைவது. குறிப்பாக உதடுகள் வறண்டு போக ஆரம்பிக்கும். அதைச் சரிசெய்யும் இயற்கை வழிமுறைகளை பார்க்கலாம்.




உதடுகளில் எண்ணெய் சுரப்பிகள் இல்லாததால் உதடுகளால் நீர்த்தரத்தைப் பற்றிக் கொள்ள முடியாது. இதனால்தான், உதடுகள் வறட்சியோடு சேர்த்து வெடிப்படையவும் செய்கின்றது. எனவே உதட்டுக்கு எண்ணெய் பசை தன்மையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தேங்காய் எண்ணெயை ஒரு ஸ்பூன் எடுத்துக்கொண்டு அதில் ஐந்து சொட்டு அளவுக்கு ஆலிவ் எண்ணெயை ஊற்ற வேண்டும். பின்னர், அதை லேசாகச் சூடுபடுத்தி காட்டன் துணியில் நனைத்து அதை உதட்டில் தேய்க்க வேண்டும். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, காட்டன் துணியால் அதிகப்படியாக இருக்கக்கூடிய எண்ணெய் பசையைத் துடைத்துக்கொள்ள வேண்டும். இதை வாரத்துக்கு இரு முறை செய்தால் உதடுகள் வெடிக்காமல் இருக்கும்.

கிரீன் டீ தற்போது பெரும்பாலானோர்களின் வீட்டிலும் பயன்படுத்துகிறார்கள். அந்த கிரீன் டீ பேக்கை எடுத்து சிறிது நேரம் பிரிட்ஜில் வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர், மெதுவாக அந்த டீ பேக்கால் உதட்டை தேய்த்துக்கொள்ள வேண்டும். ஒரு நிமிஷங்கள் வரை தேய்த்துக்கொள்ள வேண்டும். பின்னர், உலர்ந்த காட்டன் துணியால் உதடுகளைத் துடைக்கும்போது இயல்பான பிங்க் கலரில் உதடுகள் மாறிவிடும்.

பிங்க் நிற ரோஸ் இதழ்களை ஒரு நாள் இரவு முழுவதும் தேனில் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். அதை உதட்டின் மேல் தடவிக் கொண்டு மெதுவாக மசாஜ் போன்று செய்ய வேண்டும். அந்தக் கலவை வாயினுள் போனாலும் எந்தப் பிரச்சனையும் கிடையாது. அதனால், இரண்டு அல்லது மூன்று முறை மசாஜ் செய்ய வேண்டும். முதலில் கொஞ்சம், அடுத்து கொஞ்சம் என மேலே மேலே அந்தக் கலவைகளை தடவி மசாஜ் செய்ய வேண்டும். பின்னர், 10 நிமிடங்கள் ஊற வைத்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு உதடுகளைக் கழுவி விட்டுப் பார்க்கும் போது உதடுகள் மிகவும் மென்மையாகவும், பிங்க் நிறத்திலும் இருக்கும்.

கடைகளில் பாதாம் எண்ணெய் கிடைக்கும். அதில் ஸ்வீட் பாதாம் எண்ணெயை வாங்கிக் கொள்ள வேண்டும். அந்த எண்ணெய்யை ஒரு துளி அல்லது இரண்டு துளி இட்டு இரவு தூங்குவதற்கு முன்னர் உதடுகளில் அப்ளை செய்து கொள்ள வேண்டும். காலையில் பார்க்கும் பொழுது உதடுகள் ரொம்ப அழகாக இருக்கும்.

# அழகும் ஆரோக்கியமும் வழங்கும் வாதுமை



மருந்தாக மட்டுமின்றி உணவாகவும் பயன்படும் தோட்டத்து மூலிகை வாதுமை. வாதுமைப் பருப்பை சாப்பிட்டு வந்தால் உடல் அழகு பெறுவதோடு ஆரோக்கியமும் பெறுகிறது. வாதுமை உண்பதின் மூலமும், அதை உடலில் பூசி தேய்த்து வருவதன் மூலமும் அழகையும், இளமையையும், உடல் ஊட்டத்தையும் பாதுகாக்க முடியும். வாதுமைப் பருப்பில் வைட்டமின்கள், தாதுப் பொருட்களுடன் புரதம் அதிகமாக இருக்கின்றன. மாவுச்சத்து (ஸ்டார்ச்) இதில் இல்லை என்பதால் நீரிழிவு நோயாளிகளுக்கும் ஏற்றது.

நீரிழிவு நோயால் ஏற்படும் சத்துக் குறைவை இது போக்குகிறது. எல்லாவித இறைச்சிகளிலும் இருப்பதை விட பல மடங்கு புரதம் வாதாமில் உள்ளது. அதே போன்று எல்லா பருப்பு இனங்களை விட இதில் புரதம் அதிகம். மரக்கறி உண்பவர்களுக்கும், மரக்கறி பழக்கம் உடைய விளையாட்டு வீரர்களுக்கும் பயனுள்ள உணவு வாதாம் பருப்பு. இறைச்சி சாப்பிடவில்லையே என்ற ஏக்கம் விளையாட்டுப் போட்டியில் ஈடுபடும் வீரர்களுக்கு தேவையில்லை.

வாதாமே போதும். இறைச்சி ஜீரணமாகும் போது உடலில் கெட்ட கழிவுகளை உற்பத்தி செய்யும். வாதாமில் அந்தக் கெடுதல் இல்லை. சத்தோடு சுவையும் மிகுந்த உணவு வாதாம். இதில் உள்ள அதிகமான தைலச்சத்து 'ஒலியன்' என்பதாகும். மேலும் இதில் மிக முக்கியமான வழவழப்பான லீனோலிக் அமிலம் இருக்கிறது. அத்துடன் மேலும் சில வழவழப்பான சத்துக்களும் இதில் உள்ளன. இவை அனைத்தும் ஜீரணத்திற்கு ஏற்ற நெய் வகை ஆகும்.

# முகப்பருக்களை போக்கும் இயற்கை முறைகள்



சரும துளைகளில் இறந்த செல்கள் அடைத்துக்கொண்டால், வரக்கூடிய பிரச்சனை முகப்பரு. அழுக்கு, தூசு, எண்ணெய் பசை ஆகியவை சரும துளைகளில் அடைத்துக் கொண்டால் முகப்பரு வரும். இது மரபியலாக வரும் பிரச்சனையல்ல.

முகப்பரு உள்ளவர், ஜெல் வகை கிரீம்கள் மட்டும்தான் பயன்படுத்த வேண்டும். துரித உணவுகள், சாக்லேட், கேக், பிஸ்கெட் சாப்பிட்டால் முகப்பரு வரும்.

அடிக்கடி முகத்தில் கைவைத்துக்கொண்டே இருந்தாலும் பருக்கள் அதிகமாக வரும். பரவவும் செய்யும். ஒரு நாளைக்கு 2-3 முறை மிதமான ஃபேஸ் வாஷ் அல்லது ஃபேஸ் வாஷ் பவுடரால் முகத்தைக் கழுவுங்கள்.

தலையில் பொடுகு, தலைமுடி சுத்தமில்லாமல் இருந்தாலும் பரு வரும். வாரம் 3-4 முறையாவது மிதமான ஷாம்பு போட்டு தலைமுடி சுத்தப்படுத்துங்கள். முகத்துக்கு மட்டும் தனியாக துண்டு அல்லது டிஷ்யூ பயன்படுத்தலாம். தலை துவட்டும் துண்டிலே முகத்தைத் துடைக்க கூடாது.

★ கடையில் ஈஸ்டை வாங்குங்கள். ரோஸ் வாட்டரில் ஈஸ்ட் போட்டு 20 நிமிடம் ஊற வையுங்கள். பேஸ்டாக வரும். பேஸ்ட் பக்குவத்தில் இல்லையெனில் கொஞ்சமாக ரோஸ் வாட்டர் கூட சேர்க்கலாம். இதை முகத்தில் பூசி அரை மணி நேரம் கழித்துக் கழுவுங்கள். 15 நாட்களுக்கு ஒருமுறை செய்யுங்கள். வந்த பரு நீங்கும். இனி பருவோ ஆக்னியோ வராது.

★ துளசி இலை பவுடர் ஒரு ஸ்பூன், கஸ்தூரி மஞ்சள் ஒரு சிட்டிகை, முல்தானிமிட்டி ஒரு ஸ்பூன் நன்றாக கலந்து அதனுடன் ரோஸ் வாட்டர் கலந்து முகத்தில் பேக்காக போட்டு 20 நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும்.

★ வேப்பிலை பவுடரை ரோஸ் வாட்டர் கலந்து குழைத்துக் கொள்ளுங்கள். இரவில் முகம் முழுவதும் பூசிய பிறகு, படுத்து உறங்கி மறுநாள் கழுவி விடலாம். முகப்பரு குறைந்து இருப்பது தெரியும்.

★ பட்டைத்தூளை தேன் கலந்து குழைத்துக் கொள்ளவும். பரு உள்ள இடத்தில் மட்டும் தடவுங்கள். 15 நிமிடங்கள் கழித்துக் கழுவலாம். 2 மாதம் தொடர்ந்து செய்யலாம்.



# அடுப்பங்கரை இரகசியங்கள்

★முறுக்கு வெள்ளை வெளேரென்று இருக்க வேண்டும் என்றால் அரிசி ஒருபடி என்றால் கால் படி அளவு உளுத்தம் பருப்பு போட வேண்டும். உளுத்தம் பருப்பை வறுத்துப் போட வேண்டும்

★அத்திப்பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் ரத்தத்தைச் சுத்தப்படுத்துவதுடன் நுரையீரலையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளும்.

★முட்டைகளை வேகவைத்த பிறகும் உறிக்க கஷ்டமாக உள்ளதா? இதனை சமாளிக்க ஒரு கண்ணாடி டம்ளரில் முட்டையை போட்டு, நீரை நிரப்பி, கையால் மூடி, 10 வினாடிகள் நன்றாக குலுக்கவும், பிறகு முட்டையை எடுத்து உறித்தால் எளிதாக உறிக்க வரும்.

★வெயில் காலத்தில் முந்தின இரவே நீரிலோ அல்லது மோரிலோ ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை ஊறவைக்கவும். வெயிலில் ஏற்படும் உடல் சூட்டை வெந்தயம் குறைக்கும்.

★எலுமிச்சை பழச்சாற்றை காலையில் வெந்நீரிலும், மதியம் மோரிலும் மாலையில் சர்க்கரை சேர்த்து சர்பத்தாக சாப்பிட்டு வந்தால் மூளை பலம் பெறும்.

★அதிகாலையில் வெறும் வயிற்றில் தண்ணீர், தேன், பால் மூன்றில் ஏதேனும் ஒன்றில் நெருஞ்சி முள் பொடியை ஒரு டீஸ்பூன் கலந்து சாப்பிட்டு வந்தால், வெயில் காலத்தில் ஏற்படும் நீர் எரிச்சல், நீர்கட்டு போன்ற சிறுநீரகக் கோளாறு நீங்கும். இதே போல் பொன்னாங்கண்ணி இலைப் பொடியை சாப்பிட்டு வந்தால் உடல் சூடு தணியும்.

★சப்பாத்தியை சில்வர் பேப்பரில் சுற்றி வைத்தால் நீண்ட நேரம் சூடாக இருக்கும்.

★இறைச்சியை வேக வைக்கும் போது ஒரு கொட்டை பாக்கு சேர்த்து வேகவைத்தால் விரைவில் வெந்திடும், மிருதுவாகவும் இருக்கும்.

★கிழங்குகள் சீக்கிரம் வேக வேண்டும் என்றால் பத்து நிமிடம் உப்பு கலந்த நீரில் ஊற வைத்து வேக வைத்தால் எளிதில் வெந்திடும்.

★பூண்டில் தேங்காய் எண்ணை தடவி ஐந்து நிமிடம் வெயிலில் வைத்து விட்டு தோல் நீக்கினால் எளிதாக உரிந்திடும்.

# மஞ்சள் நிற நகங்களை சரி செய்யலாமா?



ஒரு சிலருக்கு நகங்கள் மஞ்சள் நிறத்தில் இருக்கும். இதற்கான காரணத்தையும், சரி செய்யும் முறையையும் அறிந்து கொள்ளலாம்.

பெரும்பாலும் நகங்களில் ஏற்படுகிற இன்ஃபெக்ஷனே மஞ்சள் நிறத்துக்குக் காரணம். ரொம்பவும் அதிகமான அடர் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டால் அது தைராய்டு, சோரியாசிஸ், நீரிழிவு, கல்லீரல் கோளாறு போன்றவற்றின் அறிகுறியாகக்கூட இருக்கலாம். டெஸ்ட் செய்து பாருங்கள். எப்போதும் பளீர் நிறங்களில் நெயில் பாலிஷ் போடும் பழக்கம் உள்ளவர்களுக்கு அந்த நெயில் பாலிஷ் சாயத்தின் விளைவாகவும் இப்படி நகங்கள் மஞ்சளாகலாம்.

நெயில் பாலிஷ் போடுவதற்கு முன் பேஸ் கோட் போட்டுவிட்டு பிறகு கலர் பாலிஷ் போடலாம். நெயில் பாலிஷை அகற்ற அசிட்டோன் கலந்த ரிமூவர்களை உபயோகிப்பதாலும் நகங்கள் மஞ்சளாகலாம். அசிட்டோன் இல்லாத ரிமூவரை உபயோகியுங்கள். வைட்டமின் ஈ ஆயிலில் டீ ட்ரீ ஆயில் கலந்து நகங்களுக்கு மென்மையாக மசாஜ் செய்தால் இன்ஃபெக்ஷனும் குறையும். நிறமும் மாறும். எலுமிச்சைச் சாற்றில் நகங்களை சிறிது நேரம் ஊற வைத்துக் கழுவினாலும் மஞ்சள் நிறம் மாறும்.

# அமேசான் மழைக்காடுகள்

## அறியப்படாத தகவல்கள்

அமேசான் மழைக்காடு என்பது தென் அமெரிக்காவின் அமேசான் ஆற்றுப் படுகையில் அமைந்துள்ள ஒரு பெரிய மழைக்காடு. அமேசானியா அல்லது அமேசான் படுகை என்றழைக்கப்படும் இதன் பரப்பளவு ஏழு மில்லியன் சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். இதில் காடு மட்டும் 5.5 மில்லியன் சதுர கி.மீ ஆகும்.

மேலும் இது ஒன்பது நாடுகளில் பரவியுள்ளது. அந்நாடுகள் பிரேசில் (ஏறத்தாழ 60 சதவீத மழைக்காட்டினை உள்ளடக்கியது), கொலம்பியா, பெரு, வெனிசுலா, ஈக்வெடார், கயானா, பொலிவியா, சுரிநாம், பிரெஞ்சு கயானா ஆகியனவாகும்.

இவற்றில் நான்கு நாடுகளில் உள்ள அமேசானாஸ் என்ற மாநிலங்கள் இக்காட்டின் காரணமாகவே ஏற்பட்டது.

★உலகின் மொத்த ஆக்சிஜன் தயாரிப்பில் 20% அமேசான் மழைக்காடுகளில் இருக்கும் மரங்களின் மூலமாக தான் வெளிவருகிறது.

★முன்னொரு காலத்தில், இப்போது ஓடிக் கொண்டிருக்கும் திசைக்கு நேர் மாறாக கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி ஓடிக் கொண்டிருந்ததாம் அமேசான் நதி.

★உலகில் உள்ள மழைக்காடுகளில் பாதி அளவுக்கு மேல் அமேசான் மழைக் காடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

★அமேசானிய வண்ணத்துப்பூச்சிகள் ஆமைகளின் கண்ணீரை குடிக்கின்ற பழக்கம் கொண்டிருக்கின்றன.

★பிரேசிலில் அமேசான் நதிக்கு கீழே ஒரு நதி நான்கு கிலோமீட்டர் தூரம் ஓடுகிறது. இதில் ஆச்சரியம் என்னவெனில், இது நூறுமடங்கு அகலமானது என கூறப்படுகிறது.

★கடந்த 2008-ம் ஆண்டு நார்வே ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்களை, அமேசான் மழைக் காடுகளை பாதுகாக்க கொடுத்தது.

★உலகின் மற்ற நதிகளை விட ஐந்து மடங்கு அதிகமான அளவு நீரை வெளியேற்றுகிறது அமேசான் நதி.

★பெருவில் இருக்கும் இக்விடோஸ் தான் உலகிலேயே பெரிய நகரம். சாலைகளால் இந்த நகரை தொடர்பு கொள்வது இயலாத காரியம். இது அடர்ந்த அமேசான் மழைக் காட்டுக்குள் இருக்கிறது. இங்கு நான்கு லட்சம் பேர் வாழ்ந்து வருகிறார்கள்.

★அமேசான் நதிக்கு இடையே ஒரு பாலம் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

★உலகில் வாழும் உயிரின வகைகளுள் பத்தில் ஒரு பங்கு அமேசான் மழைக்காடுகளில் வாழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

★2.5 மில்லியன் பூச்சியினங்கள், 10,000-க்கும் அதிகமான தாவர வகைகள், ஏறத்தாழ 2000-க்கும் மேற்பட்ட பறவை வகைகள் மற்றும் பாலூட்டிகளுக்கு அமேசான் மழைக் காடுகள் தான் தாயகமாக விளங்குகிறது.

★உலகில் உள்ள அனைத்துப் பறவைகளில் ஐந்தில் ஒன்று அமேசான் மழைக்காடுகளில் வசிக்கின்றன.



# கடல்வாழ் உயிரினம்

★ நீலத்திமிங்கலங்கள் அதிக அளவாக - ஏறத்தாழ ஒரு போயிங் 737 விமானத்தின் நீளத்திற்கு வளரும். 180 டன் வரை எடை கொண்டிருக்கும். வளர்ந்த திமிங்கலங்கள் நாள் ஒன்றுக்கு 3600 கிலோ எடையுள்ள கடல் நீரில் காணப்படும் க்ரில் என்னும் உயிரினங்களை உண்டு வாழ்கின்றன. சாதாரணமாக மணிக்கு 8 கி.மீ. வேகத்தில் நீந்துகின்ற இவை, தேவைப்பட்டால் 30 கி.மீ. வேகத்திலும் நீந்தும் ஆற்றல் படைத்தவை.



★ டால்பின்கள் சிறு திமிங்கல வகைகளில் ஒன்றாகும். டால்பின்கள் 9.5 மீட்டர் நீளம் வரை வளரும்.

★ கொம்பெலும்புத் திமிங்கலங்களுக்கு (Baleen whale) பற்கள் கிடையாது. கொம்பு எலும்பு இதன் சிறப்பு அடையாளம். இவை, மிதவை உயிரிகளை நீரிலிருந்து வடிகட்டும். பலீன் என்பது வாயின் மேற்கூரையில் இணைக்கப்பட்டுள்ள இரண்டு தட்டுகளால் ஆனது. ஒவ்வொரு தட்டிலும் விளிம்புகள் கொண்ட சிம்புகள் போன்ற அமைப்புகள் பல ஒன்றுக்கொன்று இணையாக அமைக்கப்பட்டுள்ளன.

★ ஸ்பெர்ம் திமிங்கலத்தின் (Sperm whale) தலை சதுர வடிவமுடையது. இவற்றின் நீண்ட மூக்குப் பகுதியில் காணப்படும் ஸ்பெர்மாஸெட்டி எனும் வெள்ளை மெழுகு போன்ற பொருளுக்காக இவை வேட்டையாடப்படுகின்றன. இவை 15 - 20 திமிங்கலங்கள் கொண்ட மந்தையாக வெப்ப மற்றும் மித வெப்பக் கடல் பகுதிகளில் ஆங்காங்கே வாழ்கின்றன.

★ திமில் முகுதுத் திமிங்கலங்களுக்கு (Humpback Whale) நீண்ட துடுப்புகள் உண்டு. இவை 12லிருந்து 16 மீட்டர் நீளமும் 40 டன் எடையும் கொண்டவை. இவ்விலங்கு அதிக ஒலி ஏற்படுத்தக் கூடிய திமிங்கலங்களில் ஒன்றாகும். இது 5லிருந்து 35 நிமிடங்களுக்கு இசையொலி எழுப்பும். இவை துள்ளுவது, குட்டிக் கரணமிடுவது போன்ற வித்தைகளைச் செய்யக் கூடியவை..

★ பார்பாய்ஸ் (Porpoises) எனப்படும் கடற் பன்றிகள் 1.5 மீட்டரிலிருந்து 2.3 மீட்டர் வரை நீளமிருக்கும். இவை 198 மீட்டர் ஆழம் வரை கடலிற்குள் சென்று மீன்களை உண்கின்றன. மீனவர்களால் 'சிறிய டால்பின்' என்றழைக்கப்படும் கடல் பன்றிகள் மணிக்கு 55 கி.மீ. வேகத்தில் நீந்தக்கூடியவை.

★ துடுப்புத் திமிங்கலம் (Fin Whale) 27.3 மீட்டர் நீளமும் 74 டன்கள் எடையும் கொண்டது. 243 மீட்டர் ஆழத்தில் மணிக்கு 37 கி.மீ. வேகத்தில் நீந்தும் ஆற்றல் படைத்தது. முதுகில் முகடு போன்ற அமைப்பு இருப்பதால் இப்பெயர் பெற்றது.

★ சே திமிங்கலம் (Sei Whale) 19 மீட்டர் நீளமும் 28 டன் எடையும் கொண்டது. ஆர்க்டிக் பெருங்கடல் முதல் அன்டார்க்டிக் கடல் வரை இது உலகின் அனைத்து கடல்களிலும் காணப்படுகிறது. இது நாள் ஒன்றுக்கு 900 கிலோ உணவை உட்கொள்கிறது.

★ ரைட் திமிங்கலம் (Right Whale) இவற்றின் மதிப்பு, மெதுவான இயக்கம், இறந்த பிறகு மிதக்கும் தன்மை ஆகிய காரணங்களால் வேட்டையாடப் பொருத்தமான திமிங்கலம் என்று கருதப்படுகிறது. இது சிறிய, ஓரளவு வளர்ந்த தலைப்பகுதியைக் கொண்டது. இதன் முகவாய்க் கட்டையின் மேல் வளர்ந்துள்ள கடுமையான தொப்பி போன்ற அமைப்பின் மேல் ஒட்டுண்ணிகள் அதிகமாகக் காணப்படும்.

★ அம்புத் தலை திமிங்கலத்தின் (Bow head Whale) தலை கருநீல நிறத்தில் காணப்படும். 14லிருந்து 18.2 மீட்டர் நீளமும் 75லிருந்து 100 டன்கள் எடையும் கொண்ட இது ஆர்க்டிக் பகுதியில் காணப்படுகிறது. இதனுடைய வாய்ப்பகுதியில் 3.6 மீட்டர் நீள உறுப்பு விசித்திரமாகக் காட்சி தரும்.

★ வெண் திமிங்கலம் (Beluga) வட்டமான முள் தலையுடன் முதுகுப்புற துடுப்புகளில்லாமல் வெண்மையாகக் காட்சி தரும். BIELO என்ற ரஷ்ய மொழிச் சொல்லுக்கு 'வெண்மை' என்பது பொருளாகும். இதிலிருந்தே இது Beluga என அழைக்கப்படுகிறது.

★ மூர்க்கத் திமிங்கலம் (Killer Whales) ஆர்கா எனவும் அழைக்கப்படுகிறது. சீல்களையும் பிற திமிங்கலங்களையும் கொன்று தள்ளக் கூடிய உக்கிரத் தன்மை கொண்ட இவை மனிதர்களைத் தாக்குவதில்லை. இவற்றைப் பிடித்து கடல்சார் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் சாகசம் புரிவதற்காகப் பயிற்சி அளிக்கின்றனர்.

★ புட்டிமூக்கு டால்ஃபின்கள் (Bottlenose Dolphin) 10லிருந்து 25 வரை ஒன்று சேர்ந்து குழுக்களாக நீந்தும். இவற்றின் வாய் வளைவாக அமைந்திருப்பதால் எப்போதும் சிரித்த முகமாகக் காட்சியளிக்கின்றன. புத்திக்கூர்மை படைத்தது என்பதாலும் ஓசை மூலமாகவும், மனிதர்களுடைய செவிப் புலனுக்கு எட்டாத ஒலிக் குறிப்புகள் மூலமாகவும் தம்முள் தொடர்பு கொள்வதால் அறிவியல் ஆய்வுகளில் இது பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.


★ சீல், நீரில் வாழும் ஊனுண்ணி உயிரினம். தோலால் பிணைக்கப்பட்ட துடுப்பு போன்ற பாதங்களும் நீண்ட உடலும் கொண்டவை. காதுகள் கிடையாது. நீரில் பின்னங்கால்களை இருபுறமும் அடித்து நீந்துகின்றன. நிலத்தில் வயிற்றைத் தரையில் அழுத்தி இழுத்து இழுத்து நடக்கின்றன. யானை சீல், துறைமுக சீல், ஹார்ப் சீல், சிறுத்தை சீல், கடல் நாய் (Fur Seal) என சீல்களில் 32 வகைகள் உண்டு.

★ கடல் சிங்கம், காதுள்ள சீல் போன்ற விலங்காகும். இது பசிபிக் கடலின் இரு பகுதிகளிலும் அலாஸ்காவிலிருந்து ஆஸ்திரேலியா வரை காணப்படுகிறது. கடல் சிங்கங்கள் குட்டையான, முரட்டுத்தனமுள்ள முடியினைக் கொண்டவை. அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள கடல் சிங்கங்களைத் தவிர மற்ற அனைத்து இடங்களைச் சேர்ந்த ஆண் கடல் சிங்கங்களுக்கும் பிடரி முடி உண்டு.

கடல் சிங்கங்கள் மணிக்கு 32லிருந்து 40 கி.மீ. வேகத்தில் 304 மீட்டர் ஆழம் வரை நீந்தும். தண்ணீருக்குள் 10லிருந்து 20 நிமிடங்கள் வரை மூச்சைப் பிடித்து இருக்கும் திறன் கொண்டவை. இவை மீன்களை உணவாக உண்கின்றன. பசிபிக் பெருங்கடலில் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள காலபகோஸ் தீவுகளில் (ஈக்வடார்) 50,000 கடல் சிங்கங்கள் உள்ளன. உலகிலேயே பெரிய கடல் சிங்கக் கூட்டம் இது!




# நம்பினால் நம்புங்கள்



★ எறும்புகளால் மைக்ரோவேவ் சாதனத்துக்குள் உயிர் பிழைத்து இருக்க முடியும். அக்கதிர்களை ஏமாற்றுகிற அளவு அவை சிறியதாக இருப்பதே காரணம்!

★ நாம் உறங்கும்போது கிட்டத்தட்ட 450 கிராம் அளவுக்கு நம் உடல் எடை குறைகிறது. மூச்சு விடுதல் காரணமாக!

★ சீனா மற்றும் ஆப்ரிக்காவின் சில பகுதிகளில் குரங்கு மூளையை விசேஷ உணவாக உட்கொள்கிறவர்கள் உண்டு!

★ மனிதகுலத்தை அழித்ததில் கொசுக்களுக்கு இணையான உயிரினம் வேறு ஒன்றும் கிடையாது!

★ ஹிட்லர் வதை முகாம்களில் இருந்து விடுதலையான சிலர், முதல் வாரத்திலேயே இறந்து போனார்கள். அளவுக்கு அதிகமான சாக்லெட் மற்றும் மிட்டாய்களை மகிழ்வின் மிகுதியில் தின்றதே காரணம்.

★ நாசா விண்வெளியாளர் பயிற்சிக்கு 2015ல் பெறப்பட்ட விண்ணப்பங்களில் 0.08 சதவீதம் மட்டுமே தகுதியுடையதாக இருந்தது.

★ காபி அருந்தும்போது, காஃபீன் ரத்தத்தில் கலப்பது போலவே, விந்தணுக்களோடும் சேர்கிறது.

★ 1891ம் ஆண்டில் அர்ஜென்டினா காவல் துறையில்தான் முதன்முதலில் கிரிமினல்களின் கைரேகை அடையாளம் பதிவுசெய்யப்பட்டது.

★ ஹாலிவுட் நடிகர் வின் டீசல் இதுவரை தன் தந்தையை சந்தித்ததே கிடையாது. தான் எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பதும் அவருக்குத் தெரியாது.

★ விவசாயத்துக்கும் கால்நடை வளர்ப்புக்கும் 70 சதவிகித நீர் செலவழிக்கப்படுகிறது.

# பொன்மொழிகள்

★ நம்முடைய ஆற்றல் அதற்கு எதிராகத் தோன்றும் தடைகளின் அளவைப் பொறுத்தது.

- ஹாசலிட்

★ மற்றவர்கள் செயலால் மகிழ்ச்சி அடையாத மனிதனால், நல்ல செயல்கள் எதையும் செய்யமுடியாது.

- ஜேம்ஸ் ஆலன்

★ ஒரு தவறைச் செய்தவன் அதைத் திருத்திக் கொள்ளாவிட்டால் அவன் மற்றொரு தவறைச் செய்தவன் ஆகிறான்.

- கன்பூசியஸ்

★ நீங்கள் இன்று எந்த நல்ல செயலைச் செய்கிறீர்களோ அதுதான் நாளைய வாழ்வுக்கு சேகரிக்கும் இன்சூரன்ஸ்.

- ப்ளட்சர்

★ நம்பிக்கை ஒன்றுதான் மனிதனுக்கு நேரும் சகல நோய்களுக்கும் ஒரே மலிவான மருந்து.

- கவுலி

★ யாராவது குறை கூறினால், அதில் உண்மையாய் இருப்பின் திருந்திவிடு; பொய்யாய் இருப்பின் நகைத்துவிடு.

- எபிக்டெட்டஸ்

# ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்

நவீன செவிலியர் முறையை உருவாக்கியவரும் செவிலியர்களுக்கானப் பயிற்சிப் பள்ளியை முதன் முதலாகத் தொடங்கியவருமான ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் பிறந்த தினம் மே 12. அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

இத்தாலியின் ஃப்ளாரன்ஸ் நகரில் பிரிட்டிஷ் செல்வக் குடும்பத்தில் பிறந்தார் (1820). வீட்டிலேயே ஜெர்மன், லத்தீன், ஃபிரெஞ்ச் ஆகிய மொழிகளைக் கற்றார். ஆழ்ந்த இறை நம்பிக்கை கொண்டிருந்த இந்த சிறுமிக்கு 16 வயதை நெருங்கும்போது, செவிலியராக சேவையாற்றுவதுதான் இறைவன் தனக்கு விதித்துள்ள பணி என்று உறுதியாக நம்பினார்.

17 வயதில் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற பெற்றோரின் விருப்பத்தை நிராகரித்து, செவிலியராக சேவையாற்றப் போகிறேன் என்ற தனது முடிவை அறிவித்தார். 1844-ம் ஆண்டு ஜெர்மனியில் உள்ள லூத்தரன் மருத்துவமனையில் செவிலியர் பயிற்சியில் சேர்ந்தார். 1850-ல் லண்டனில் ஒரு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்தார்.

இவரது பணிகளால் மிகவும் கவரப்பட்ட மருத்துவமனை தலைவர் ஒரே ஆண்டுக்குள் இவரை செவிலியர் கண்காணிப்பாளராக நியமித்தார். அந்த சந்தர்ப்பத்தில் வேகமாகப் பரவி வந்த காலரா நோய் அந்த மருத்துவமனையில் நிலவிய சுகாதாரமற்ற சூழல் ஆகியவற்றால் இவரது பணி மிகவும் சவாலாக இருந்தது.

கடுமையான உழைப்பு இவரது உடல்நலத்தை பாதித்தது. குணமாவதற்கு முன்னரே இவரது செவிலியர் வாழ்வில் மிகப் பெரிய சவாலான சூழலை இவர் எதிர்கொண்டார். ரஷ்யப் பேரரசுக்கும் பிரட்டிஷ் பேரரசுக்கும் இடையே, போர் மூண்டது. மிகவும் குறைவான வசதி கொண்ட க்ரிமியா என்ற இடத்தில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் ராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சுகாதாரச் சீர்கேடு நிலவியது. இதனால் நோய்களும் பரவின. பயிற்சி பெற்ற ஒரு செவிலியர் குழுவுடன் வருமாறு இவருக்கு அழைப்பு வந்தது. உடனடியாக, 34 செவிலியர்களைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு க்ரிமியா புறப்பட்டார்.

தனது செவிலியர் குழுவுடன், ஓரளவுக்கு பாதிக்கப்பட்ட நோயாளிகளின் உதவியுடன் அந்த மருத்துவமனை முழுவதையும் சுத்தம் செய்தார். தினமும் 20 மணிநேரம் நோயாளிகளுக்கு சேவையாற்றினார். இரவின் இருளில் கையில் விளக்கை ஏந்தியவாறு ஒவ்வொரு நோயாளியாகச் சென்று பார்த்தார்.

காயம்பட்ட போர் வீரர்கள் தங்களைக் காக்க வந்த தேவதையாக இவரைப் போற்றினர். 'த லேடி வித் தி லாம்ப்'என்றும் 'தி ஏஞ்சல் ஆஃப் தி க்ரிமியா' எனவும் பாசத்துடன் இவரைக் குறிப்பிட்டனர். இங்கு, தான் பெற்ற அனுபவங்களை மொத்தம் 830 பக்கம் கொண்ட குறிப்புகளாக எழுதிவைத்தார். அது நூலாக வெளிவந்தது.

1856-ல் சொந்த ஊர் திரும்பினார். ஹீரோவாகப் போற்றப்பட்டார். அவருக்குப் பரிசுகளும், ரொக்கமும் வழங்கப்பட்டன. அந்தத் தொகையை கொண்டு, செயின்ட தாமஸ் மருத்துவமனையைத் தொடங்கினார்.

அங்கு 'நைட்டிங்கேல் ட்ரெய்னிங் ஸ்கூல் ஃபார் நர்சஸ்' என்ற பயிற்சிப் பள்ளியைத் தொடங்கினார். இந்தியாவில் கிராமப்புறங்களின் சுகாதாரம் பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். ஓய்வு இல்லாத கடுமையான உழைப்பு காரணமாக நோய்வாய்ப்பட்டார். ஆனாலும் படுக்கையில் இருந்தபடியே சுகாதாரம், செவிலியர் பயிற்சியில் மேம்பாடு, சீரமைப்புகளில் கவனம் செலுத்தினார்.



நோயுடனும், அதீத சோர்வுடனும் போராடி வந்தாலும் இறுதிவரை மனிதகுல நலனுக்காக சேவையாற்றிய ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல், 1910-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 90-வது வயதில் காலமானார். இவரது நினைவைப் போற்றும் வகையில் இவர் பிறந்த தினம் உலக செவிலியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**- ராஜலட்சுமி சிவலிங்கம்**

# இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




இவ்வாரம் சப்தமத்தில் குரு, குஜன் அஷ்டமத்தில் ரவி, புதன், சனி, வெள்ளி சஞ்சரிப்பதால் தனலாபம், பொருள் வருவுண்டு. மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி அடையும். செய்தொழில் விருத்தியுண்டு. ஈடுபடும் கருமகாரியங்கள் யாவும் நிறைவு பெறும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோக செல்வாக்கு உயரும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் ஆதாய முன்னேற்றம் அடைவர்.




சப்தம பாவத்தில் ரவி, புதன், வெள்ளி சஞ்சரிப்பதால் களத்திர சுகம் உண்டு. இல்லறம் நல்லறம் ஆகும். கணவன், மனைவி ஒற்றுமை நிலவும். புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். குரு ஜீவன தொழிலால் தானத்தை நோக்குவதால் தொழில் உயர்வு கிட்டும். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளைப் பெருக்கலாம்.




ஜென்ம பாவத்தில் குரு நோக்குவதால் தேகம் புது வீரியம் பெறும். புது பொலிவடையும். தனம், பொருள் மனை, வாகன , குடும்பம் விருத்திகள் உண்டாகும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, நிதி வசதிகள் , வங்கி இருப்புக்கள் மன நிறைவைக் கொடுக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். விவசாயப் பண்ணைகளில் இலாப முன்னேற்றம் உண்டாகும்.




மாதுரு பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் மாதா நலம், கல்வி விருத்தி, மனை நலம், வாகன சுகம், குடும்பம் சேமம் முதலியன உண்டாகும். உத்தியோகத்தர் தம் பணிகளில் புது உத்வேகம் அடைந்து ஏற்றம் காண்பர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் இலாப முன்னேற்றத்தை கொடுக்கும். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பயிர் பாதுகாப்புகளை மேற்கொள்ளலாம். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் புத்திரர் அனுகூலமுடன் நன்கு நடைபெறும்.




இலாப பாவத்தைக் குரு நோக்குவதால் தன பாவாதிபதி புதன், வெள்ளி சஞ்சரிப்பதாலும் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன , குடும்பம் அபிவிருத்தி அடையும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் வெற்றியளித்துத் திருமண சம்பந்தமான பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை குறையும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் அடைவர்.




தன பாவத்தில் குரு சஞ்சரிப்பதால் வெளிநாட்டு நிதி உதவி உண்டு. வெளிநாட்டு நற்செய்திகள் நன்மை தரும். வியாபாரிகள் இவ்வாரம் கூட்டு வாணிபம் , புதிய முதலீடுகளை தொடங்கலாம். விவசாயிகளுக்கு பண்ணைகளால் மேலதிக உதவி, ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். விளைப் பொருட்களின் சந்தைப்படுத்தலினால் நல்ல இலாபம் கிட்டும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடி திருமண சம்பந்தம் நிறைவு நிறைவு பெறும்.




இவ்வாரம் ஜென்மத்து வியாழன் தோஷம் ஏழரைச் சனி கடைக்கூறு , கண்டக ராகுநகேது தோஷம் நடைபெறுவதனால் கிரக தோஷநிவர்த்தி செய்ய வேண்டும். தன ஸ்தானத்தில் ரவி, புதன், வெள்ளி சஞ்சரிப்பதால் தனல-டபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்பம் விருத்திகள் உண்டாகும். உத்தியோகப் பெண்கள் தம் பணிகளில் புது உத்வேகம் கொண்டு ஏற்றம் காண்பர். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ப இலாபமடைவர்.




ஜென்ம ரவி ஏழரை நடுக்கூறு , விரய வியாழ தோஷம் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை பயக்கும். உத்தியோகத்தர்களுக்கு கணிசமான அளவு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிட்டும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் வேண்டும். விவசாயிகளுக்கு அரச மாணியம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் சிரமத்தின் மத்தியில் நடைபெறும்.




இவ்வாரம் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன , குடும்பம் அபிவிருத்தி அடையும். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர்களின் உதவி, அனுகூலம் உண்டு. விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு ச்சி புழுக்களின் தொல்லைகளில் இருந்து பயிர் பாதுகாப்புகளை மேற்கொள்ளலாம். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயம் அளித்து திருமணப் பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு நடைபெறும்.




இவ்வாரம் சொய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு வங்கி வசதிகள் ஏற்படும். வெளிநாட்டு பணவரவுகள் கிட்டும். ஈடுபடும் கருமகாரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர் தம் பணிகளில் உத்வேகம் அடைந்து ஏற்றம் காண்பர். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.




இவ்வாரம் தர்ம , புண்ணிய ஸ்தானத்தில் சுபர், வெள்ளி , குரு சஞ்சரிப்பதால் தர்ம காரியங்களில் ஈடுபாடு, நோன்பு, விரதம் அனுஷ்டித்தல், ஆலய தரிசனம் முதலியன கிட்டும். பிதாவழி உதவி, சொத்து சேர்க்கை உண்டு. உத்தியோகத்தர் அதிகாரிகளின் ஊக்குவிப்பையும், பாராட்டையும் பெறுவர். வியாபாரிகள், விவசாயிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றமடைவர். பெண்கள் இவ்வாரம் சௌபாக்கியம் பெறுவர்.




இவ்வாரம் அஷ்டம ஸ்தானத்தில் குரு சுக்கிரன் சஞ்சரிப்பதால் ஆயுட் பலம் உண்டாகும். செய்யும் தொழிலால் விருத்தி, சேமிப்பு, , வங்கி வசதிகள் ஏற்படும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள், விவசாயிகள் புதிய முதலீடுகளையும் , கொள்முதல்களையும் தொடங்கலாம். விவசாயிகள் விவசாயப் பண்ணைகளாலும் , விளைப் பொருட்களின் சந்தைப்படுத்தலினாலும் நல்ல ஆதாயத்தை ஈட்டிக் கொள்ளலாம்.

# ஆடியின் சிறப்புகள்



ஆடி மாதம் விரதம் இருந்து அம்மனை வழிபடுவதற்கு மிகவும் உகந்தது. அம்மன் வழிபாடு, ஆடி மாத விரதத்தின் சிறப்புகள் பற்றிய விவரம்:-

★ ஆடி மாதம் பிறந்ததும் தட்சணாயனம் ஆரம்பமாகிறது. இது மார்கழி மாதம் வரை நீடிக்கும். இந்த புண்ணிய கால கட்டங்களில் புனித நதிகளில் நீராடுவது மிகவும் விசேஷமானது.

★ ஆடி மாதத்தைக் கணக்கிட்டுத்தான் பண்டிகைகளின் தொடக்கம் அமைகிறது.

★ ஆடி மாதம் முழுவதும் கிராமப்புறத்தில் காவல் தெய்வமாக விளங்கும் மாரியம்மன், அய்யனாரப்பன், மதுரை வீரன், மாடசாமி,கருப்பண்ணசாமி போன்ற கிராம தேவதைகளுக்கு பூஜைகளும், விழாக்களும் நடைபெறும்.

★ ஆடி மாதத்தில் நெல்லை மாவட்டம் சங்கரன்கோவிலில் 12 நாட்கள் அம்மனின் ஆடி தபசு திருநாள் (ஆகஸ்டு 6) கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. அரியும் சிவனும் ஒன்றே என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்த இந்த விழா நடத்தப்படுகிறது.

★ ஆறு, மக்களின் ஜீவ நாடியாதலால், அதில் ஆடி மாதம் புதுநீர் வருவதைக் கொண்டாடுவது பல நூற்றாண்டுகளாக தமிழர் மரபாக பின்பற்றப் படுகிறது.

★ ஆடி மாதத்தில் சிவனின் சக்தியை விட பார்வதியின் சக்தி அதிகமாக இருக்கும் என்பது ஐதீகம்.

★ தமிழ் மாதங்களில் ஆடி மாதத்தில் தான் அதிக பட்சமாக அம்மன் கோவில்களில் திருவிழா நடக்கிறது. எனவே ஆடி மாதம் அம்மன் பக்தர்களுக்கு விசேஷமான காலமாக விளங்குகிறது.

★ கேரளாவில் ஆடி மாதத்தை கஷ்டமான மாதமாக அம்மாநில மக்கள் கருதுகிறார்கள்.

★ ஆடி அமாவாசை அன்று மறைந்த முன்னோர்களுக்கு பிதுர் கடமைகளை செய்தால், ஆண்டு முழுவதும் பித்ருக்களுக்கு கடன் கொடுத்த பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

★ ஆடி பவுர்ணமி தினத்தன்று தான் ஹயக்ரீவர் அவதாரம் நிகழ்ந்தது. எனவே ஆடி பவுர்ணமி தினத்தன்று வைணவ தலங்களில் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

★ தமிழ்நாட்டின் பல பகுதிகளில் அம்மனுக்கு பலவித காய்கறிகளை கொண்டு தயாரான கதம்ப சாதத்தை படைத்து வழிபடும் நடைமுறை பின்பற்றப்படுகிறது.

★ ஆடி மாதம் சுக்ல தசமியில் திக் தேவதா விரதம் இருக்க வேண்டும். அன்று திக் தேவதைகளை அந்தந்த திக்குகளில் வணங்கி பூஜித்தால் நினைத்தது நடக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

★ ஆடி மாதம் சுக்லபட்ச ஏகாதசி முதல் கார்த்திகை மாத சுக்லபட்ச ஏகாதசி வரை மாச உப வாசம் இருப்பது குடும்பத்தில் அமைதி ஏற்படுத்தும்.

★ ஆடி மாதம் கிராம தேவதை கோவில்கள் உள்பட திறக்கப்படாமல் இருக்கும் எல்லா கோவில்களும் திறக்கப்பட்டு பூஜைகள் நடைபெறும்.

★ ஆடி செவ்வாய்க்கிழமைகளில் விரதம் இருந்து கோவிலில் எலுமிச்சம் பழ விளக்கு ஏற்றினால் கூடுதல் பலன்கள் கிடைக்கும். ஆனால் எலுமிச்சம் பழ விளக்குகளை ஒரு போதும் வீட்டில் ஏற்றக் கூடாது.

★ ஆடி மாதம் வளர்பிறை துவாதசி நாளில் தொடங்கி கார்த்திகை மாதம் வளர்பிறை துவாதசி நாள் வரை பெண்கள் துளசி பூஜை செய்து வந்தால், நினைத்தது நடைபெறும். வீட்டில் சகல செல்வங்களும் குவியும்.

★ ஆடி மாதம் விரதம் இருந்து முத்து மாரியம்மனை மனம் உருக வழிபட்டால் திருஷ்டிகள் விலகி விடும்.

# திருக்குர்ஆன் வாசிப்பது



திருக்குர்ஆன் வாசிப்பது நாவு சார்ந்த இறைநம்பிக்கை. திருக்குர்ஆன் வாசிப்பது, ஒருவர் வாசிக்கும் போது மற்றவர் கேட்பது, தொழுகையில் வாசிக்கப்படும் போது செவி தாழ்த்தி கேட்பது யாவும் இறைநம்பிக்கையை பலப்படுத்தும்.

மேலும் வாசிப்பவருக்கும், கேட்பவருக்கும் நன்மை கிடைக்கும். திருக்குர்ஆனை பொருள் விளங்கி ஓதினாலும் நன்மை உண்டு. பொருள் விளங்காமல் ஓதினாலும் நன்மை உண்டு. சரளமாக ஓதினாலும், திக்கித் திணறி ஓதினாலும் நன்மை உண்டு.

எவர் ஒருவர் இந்த இறைவேதத்திலிருந்து ஒரு எழுத்தை வாசிக்கிறாரோ அவருக்கு அதனால் ஒரு நன்மை கிடைக்கும். ஒரு நன்மைக்கு அதுபோன்று பத்து மடங்கு நன்மை கிடைக்கும். அலிப், லாம், மீம் ஒரு எழுத்து என்று கூறமாட்டேன். இதில் அலிப் ஒரு எழுத்து, லாம் ஒரு எழுத்து, மீம் ஒரு எழுத்து ஆகும். (இதை வாசிக்கும் போது முப்பது நன்மைகள் கிடைக்கும்) இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: இப்னு மஸ்ஊத் (ரலி), நூல்: திர்மிதி)

குர்ஆன் ஓதப்படும் போது அதைச் செவிமடுங்கள், வாய் மூடுங்கள், நீங்கள் அருள் செய்யப்படுவீர்கள். (திருக்குர்ஆன் 7:204)

எவர் இறைவேதமாகிய திருக்குர் ஆனிலிருந்து ஒரு வசனத்தை செவி மடுக்கிறாரோ அவருக்கு பன்மடங்கு நன்மை எழுதப்படுகிறது. எவர் திருக்குர்ஆனை வாசிக்கிறாரோ அது அவருக்கு மறுமையில் ஒளிமயமாக ஆகிவிடுகிறது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபூஹூரைரா (ரலி), நூல்: அஹ்மது)

ஒருவர் குர்ஆனை வாசித்தாலோ, அல்லது ஒருவர் வாசிப்பதை பிறர் செவிமடுத்தாலோ அத்தகைய இருவருக்கும் இறைநம்பிக்கை மென்மேலும் அதிகரிக்கும்.

நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் ஆரம்பத்தில் இஸ்லாமிய கொள்கையை போதிக்கும் போது ஆரம்பமாக இறைவேதமான திருக்குர்ஆனைத்தான் வாசித்துக் காட்டுவார்கள். அதன் ஒலி வடிவம் கேட்டு, அதன் அழகிய, ஆழமான, கவர்ச்சியான கருத்துருவாக்கத்தால் ஈர்க்கப்பட்டு, இசைந்து இதயப்பூர்வமாக பலர் இஸ்லாத்தில் இணைந்தனர். இறைநம்பிக்கையை ஏற்றனர். மற்றும் சிலர் அதன் ஒலி வடிவத்தை கேட்டு, இஸ்லாத்தில் இணைந்து விடக் கூடாது என்பதற்காக தமது காதுகளில் பஞ்சை அடைத்து திரிந்தனர். அதையும் தாண்டி அதன் ஒலி அவர்களின் உள்ளத்தில் ஊடுருவி அவர்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்த்தது.

# ஆணவத்தை சிலுவையில் அறைவோம்



ஆண்டவர் ஏசு தன்னை பின்பற்ற விரும்புகிறவர்களுக்கு ஒரு நிபந்தனையை வைக்கிறார். சீடராய் வாழ விரும்புகிறவர் தன்னலாம் துறக்க வேண்டும். சிலுவையை சுமக்க வேண்டும். அவர் அனைவரையும் நோக்கி என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கி கொண்டு என்னை பின்பற்றட்டும் (லூக் 9:23).

இன்று சிலுவை என்பது நமக்கு மீட்பின் சின்னம். வாழ்வின் பாதை. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆண்டவர் ஏசு கூறியபொழுது அது அவமானத்தின் சின்னம். சிலுவை என்று அவர் கூறியவுடன் அவர்கள் எண்ணத்தில் மரண வலிகளுடன் கூடிய சாவு. பொது வெளியில் நிர்வாணமாக்கப்பட்டு நடத்தப்படுதல் மற்றும் அவமானங்களும் தான் நினைவுக்கு வந்திருக்க முடியும்.

யாரும் விரும்பக்கூடிய ஒரு அடையாளம் அல்ல. அவர்களால் நம்மை போல் ஒரு ஆன்மிக பார்வையில் சிலுவையை பார்த்திருக்க முடியாது. அவர்களை பொறுத்வரை சிலுவை உரோமானியர்கள் அடிமைப்படுத்திய நாட்டுமக்களை அடக்க பயன்படுத்திய ஒரு அடக்குமுறை கருவி. ஆதிக்க சமூகத்தின் ஆணவத்தை காட்டும் கருவி. ஒரு கொடுரனின் கையில் இருந்த கொடிய ஆயுதம். சிலுவை என்றாலே சாட்டையடி, சுத்தியல், ஆணி மற்றும் தொங்கவிடப்படுகின்ற மரம்தான் நினைவுக்கு வந்திருக்க முடியும்.

அதைத்தான் ஆண்டவர் தன்னுடைய சீடர்களுக்கு நிபந்தனையாய் வைக்கிறார். அது ஒரு பயங்கரமான நிபந்தனை. ஆணவத்தை, கயமையை, அநியாயத்தை, சுயநலத்தை வெளிப்படுத்தும் கருவியாக இருந்த அந்த சிலுவையில் அவற்றை எல்லாம் அறைந்து விட்டு தாழ்ச்சியுடன் என்னை பின்பற்றுங்கள் என்கிறார்.

இன்று நம்முடைய வாழ்க்கை நம்முடைய ஆணவம், நம்முடைய தேவைகள், நம்முடைய திட்டம் மற்றும் நம்முடைய விருப்பு வெறுப்புகளை சுற்றியே சுழன்று கொண்டுள்ளது. அவைகளை சிலுவையில் அறைய வேண்டும். ஆண்டவர் ஏசுவின் வழியில் உலக மீட்புக்கான சிலுவையை சுமக்க வேண்டும். அங்கு பிறர் அன்பு, மன்னிப்பு, அமைதி மற்றும் தாழ்ச்சி நம்முடன் நடைபோட வேண்டும். அதுதான் ஏசுவின் சீடராய் இருப்பதன் பெருமை.

# விஷ்ணு விரத வழிபாடு



விஷ்ணு வழிபாடு செய்ய நினைப்பவர்கள் தங்கள் உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றிலும் தூய்மை காத்து வழிபாடு செய்வதால் விரும்பிய பலன்களை அடைய முடியும். மேலும் பெருமாள் கோயில்களில் பெருமாளுக்கு துளசி மாலை சாற்றுவது, திருமஞ்சணம் செய்தல், வஸ்திரம் சாற்றுதல் போன்ற பரிகார வழிபாடுகள் செய்வதால் நமது வாழ்வில் மங்களங்கள் அனைத்தும் உண்டாகும்.

வருடத்தில் எல்லா தினங்களும் விஷ்ணுவை விரதம் இருந்து வழிபாட்டிற்குரிய தினங்களாக இருக்கிறது. ஆனபோதிலும் வாரந்தோறும் வருகின்ற புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் விரதம் இருந்து வீட்டில் பெருமாளுக்கு வாசமிக்க மலர்கள் சாற்றி ஏதேனும் இனிப்பு உணவுகளை நைவேத்தியம் வைத்து, பெருமாள் மந்திரங்கள் துதித்து வழிபடுவது பலன்களை விரைவாக கொடுக்க வல்லதாகும். பௌர்ணமி தினங்களில் பெருமாளுக்கு அர்ச்சனை செய்து வழிபடுவது சிறப்பானதாகும்.

பெருமாளுக்கு விரதம் மற்றும் வழிபாடு செய்வதற்கு உகந்த மாதமாக புரட்டாசி மாதம் இருக்கிறது. இந்த புரட்டாசி மாதத்தில் பெருமாளுக்கு விரதமிருந்து வழிபாடு செய்பவர்களின் வாழ்வில் மேன்மையான பலன்கள் ஏற்படுவதை காணலாம். பொதுவாக பெருமாளுக்கு விரதமிருக்கும் போதும், பூஜைகள், வழிபாடுகள் செய்யும் போதும், பூஜை செய்பவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்கள் புலால் உணவு, போதை வஸ்துக்களை அறவே தவிர்த்து விரதம் மேற்கொள்வது நல்லது.

விஷ்ணு செல்வத்திற்குரிய சுக்கிர பகவானின் அம்சம் நிறைந்தவர் என்பதால் பெருமாளுக்கு விரதங்கள் பூஜைகள் வழிபாடுகள் செய்பவர்களுக்கும், விஷ்ணு காயத்ரிமந்திரம் துதிப்பவர்களுக்கும் செல்வ சேர்க்கை உண்டாகும். தொழில், வியாபாரம் ஆகியவற்றில் நஷ்ட நிலை நீங்கி, லாபங்கள் பெருகும். சொந்த வீடு, வாகனம் போன்ற யோகங்கள் அமையும். வறுமை நிலையை நீங்கும். வாங்கிய கடன்களை திருப்பி செலுத்தும் அமைப்பு உருவாகும்.

# முழுமையான கற்றலுக்கு நேர் வகுப்பறை முகாமைத்துவம் அவசியமானதா?



பாடசாலைகளில் ஆற்றுகின்ற ஆசிரியர் பணி மிகவும் முக்கியத்துவமிக்கதாகும். பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து பாடசாலைக்குள் வருகின்ற மாணவர்களை வழிநடாத்துகின்ற மிகப்பெரும் பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்ததாகும். காலத்தி;ற்கேற்ற வகையிலும், மாணவர்களின் விருத்திச் செயற்பாடுகளிலும், நற்பண்புடைய நாளைய சமூகத்திற்குப் பொறுத்தப்பாடுடையவனாக மாற்றம் காணச்செய்கின்ற தந்திரோபாயத்தை அறிந்தவர்கள் ஆசிரியர்கள். இவ்வாறான ஆசிரியர் சமூகம் சிறப்பான மாணவ சமூகத்தைக் கட்டியெழுப்ப விளைகின்றபோது ஏற்படுகின்ற முரண்பாடுகள் மாணவர்களை வேறொரு திசைக்கு இட்டுச் செல்ல முயல்வதாக அண்மையக் காலங்களில் நிகழ்வுகளின் பின்னணயில் இருந்து கூறுவோரும் உண்டு. இருப்பினும் பிள்ளைநேயத்தை உள்வாங்கி, சிறுவர் உரிமைகள் மீது கவனம் கொள்ளச் செய்து, தண்டனையற்ற நிலைமையை தோற்றுவிக்கும் நோக்கில் நேர் மனப்பாங்குடைய வகுப்பறையில் சிறந்த மாணவர்களை உருவாக்குவதன் மூலம் பேறுடைய நற்பிரஜைகளை உருவாக்க முடியும். அந்த வகையில் கடந்தவாரம் கிழக்கிலிருந்து கிழக்கின் கல்வியதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவினர் வடக்குக்குச் சென்று நேர் வகுப்பறை முகாமைத்துவத்தை மேற்கொள்கின்ற பல பாடசாலைகளை பார்வையிட்டுள்ளனர் அதனை கிழக்கிலும் நடைமுறைப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபடவிருக்கின்றனர். இந்தச் செயற்பாடுகளில் கிழக்கின் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் மனோபாவம், மாணவர்களின் வெளிப்படுத்துதல் சிந்தனைகள் எவ்வாறு அமையும் என்பதைப் பற்றியதாக இக்கட்டுரை அமைகிறது.

உண்மையில், வகுப்பறைச் செயற்பாடுகளை சிறந்த முறையில் திட்டமிட்டு செயற்படுத்துவதன் மூலம் சிறந்த பலனைப் பெறலாம் என்பது அனைவரினதும் எண்ணமாகும். ஆனால் அவை நடைபெறுவதில் பல்வேறு சிக்கல்கள் நிறைந்து காணப்படுவதையும் நாம் அவதானிக்கலாம். வகுப்பறைகள் மகிழ்ச்சிகரமானதாக காணப்படுதல் வேண்டும். கற்றல் உபகரணங்கள் கொண்டு மாணவர்கள் விரும்புகின்ற வகையில் அவை அமைக்கப்பட்டு நேர் சிந்தனைகளுடன் அவர்கள் கையாளப்படுகின்றபோது மாணவர்களும் தாம் எதிர்பார்த்த கற்றல் கற்பித்தலை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இவையனைத்துமே இல்லாத மொட்டையான வெறும் நான்கு சுவர்களை மாத்திரம் கொண்ட வகுப்பறைகளுக்குள் மாணவர்களை ஒருமுகப்படுத்தி குறிப்பாக ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு சிறந்த கற்றலை வழங்க முடியுமா? என்பது கேள்விக்குறியே.

இது ஒரு ஆரம்பப் பாடசாலை. இந்தப் பாடசாலையில் ஐந்து வகுப்புக்கள் ஐந்து ஆசிரியர்கள் குறைந்த எண்ணிக்கை கொண்ட மாணவர்களுக்கு கற்பிக்கின்றனர். நகரத்திலிருந்து

**வடமாகாணப் பாடசாலைகளை தரிசித்தமை பற்றிய அனுபவப் பகிர்வு தொடர்பான பயணக் கட்டுரை**

தூரப்பிரதேசப் பாடசாலை என்பதால் மிகவும் சோர்வுற்ற, கற்பிக்க முடியாத, கற்பித்தலை திறம்பட செய்ய முடியாத, ஆசிரியர் தொழிலில் உள்ள நுட்பங்களை அறிந்து கொள்ள முயற்சிக்காத, ஆசிரியராக இருப்பதற்கே தகுதியற்ற அந்த ஆசிரியர்கள் இப்பாடசாலையில் கற்பிக்கின்றனர். இவர்களில் ஒரிருவர் தமக்குத் தெரிந்த சிலவற்றை ஓரளவுக்காவது கற்பித்தபோதிலும் மாணவர்களிடம் எவ்விதமான கற்றல் நிலைகளில் மாற்றம் ஏற்படுவதாக இல்லை. கிராமியச் சூழல், பின்தங்கிய வறுமை நிலைகொண்டுள்ள பெற்றோர், தினக் கூலிக்காக ஏங்கும் விவசாயம் செய்கின்ற அந்த பிரதேசத்தில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை மாணவர்;களில் எவருமே திருத்தமாக வாசிக்கவோ, எழுதவோ, கிரகிக்கவோ, கூடிய புள்ளிகள் பெறுவதற்கு முயற்சிக்கவோ தன்மையற்றவர்களாக இருக்கின்றனர். இவர்களிடம் நேர் மறை சிந்தனைகளை உள்வாங்கி, மேற்கூறப்பட்ட நிலைமையிலுள்ள ஆசிரியர்கள் கற்பிக்கின்றபோது முதலாவது வசனமே இவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. இவர்களுடைய பெற்றோர்களுக்கு அக்கரையில்லை. என்றுகூறி தடியினால் தண்டனை வழங்குகின்;ற போக்கு காணப்படுகின்றது. இது கிழக்கிலுள்ள சில பாடசாலைகளின் நிலைமை.

இதற்கு நேர் மாற்றமாக வடக்கிலுள்ள குறிப்பாக நாம் சென்றிருந்த வரணிப் பிரதேசத்தில் அதுவும் மிகவும் பின்தங்கிய, தூரப்பிரதேசப் பாடசாலையான வடக்கு சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலையைத் தரிசித்தபோது அந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அந்தப் பாடசாலையின் அதிபரின் தலைமையில் மிகவும் ஒருகிணைக்கப்பட்டு, சிறந்த முறையில் நெறிப்படுத்தப்பட்டு, திட்டமிட்ட வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுவதைப் பார்க்கின்றபோது அந்தக் குழந்தைகளின் மனதில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவோம் என்கிற எண்ணங்களை அவர்கள் பெறுகின்றனர். நீர்வசதி, பௌதீக வசதிகள் போன்ற பல்வேறு வசதியீனங்கள் பற்றாக்குறையாக இருந்த போதிலும் உள்ளதை மேம்படுத்தி கற்றல் சூழ்நிலையை அந்தப் பாடசாலையினுள் அதன் அதிபர் மிகவும் பொறுப்புடன் செயலாற்றுவதைப் பார்க்கின்றபோது சகல வசதிகளும் உள்ள நாம் மேலே கூறிய அந்தப் பாடசாலையின் நிலைக்கும் இந்தப் பாடசாலையின் நிலைக்கும் உள்ள வித்தியாசம்

அட்டாளைச்சேனை
எஸ்.எல். மன்சூர்

ஆசிரியர்கள், அதிபரின் மனோநிலையைப் பொறுத்தே கற்றலும் அமைகின்றது என்பதை யாழ் பாடசாலைகளைப் பார்வையிட்ட கல்வியதிகாரிகளின் உள்ளத்தில் உறுத்திய ஒரு நிகழ்வாக இதனை எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இத்தகைய நேர் வகுப்பறை முகாமைத்துவத்தைக் கொண்டுள்ள இப்பாடசாலையின் ஒழுக்க மேம்பாடு ஒழுக்க விழுமியயங்கள் அதிகூடிய நிலையில் பின்பற்றப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஏனெனில் மாணவர் ஆசிரியர் முரண்பாடுகள் காரணமாக கற்றலுக்குத் தடையேற்படுவதாக கல்வியாளர்களாலும், உளவியல் மேதைகளாலும் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுக்களாகும். மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற வகுப்பறைத் தண்டனையே இதன் முக்கிய அம்சமாகும். இந்த நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டுக் கொள்வதற்கு ஆசிரியர்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றனர்.அந்த ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நடைமுறைகள் பின்வருமாறு காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

அதாவது, நேரமுகாமைத்துவத்தைப் பேணலும் கடமையில் ஈடுபடலும், எண்ணம், சொல் செயல் என்பவற்றில் நேர்மையுடையவராக இருத்தல், கல்வி கற்பதற்கான பிள்ளைகளின் உரிமைகளை ஏற்றுக் கொள்ளுதலும் எவ்விதமான வேறுபாடுகளுமின்றி ஆளுமை விருத்திக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதும், ஊக்கமளித்தலும், மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள், சுய கௌரவம் ஆகியவற்றுக்கு மதிப்பளித்;து கடமையாற்றுதல், மாணவர்கள் தவறான வழியில் செல்லக் கூடிய எவ்விதமான செயற்பாடுகளிலும் ஈடுபடாதிருத்தல், மாறிவரும் உலகிற்கேற்ற மனிதவள அபிவிருத்திக்குப் பங்காற்றும் அதேவேளை அதி சிறந்த தனித்துவமான அம்சங்களை அங்கீகரித்துப் பேணும் நபராக செயலாற்றுதல், வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்குப் பொருத்தப்பாடுடைய அம்சங்களில் கவனமெடுத்து அதனை தயாரித்து பராமரித்தல், மாணவர்களுக்கு உடல் உளரீதியான பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய தண்டனைகளை வழங்காதிருத்தல், மென்போக்குச் செயற்பாடுகள் மூலம் அதனைக் கட்டியெழுப்புதல், முழு நேரத்தையும் மாணவரின் கற்றலுக்காகச் செலவு செய்தல், காலத்திற்குக்காலம் கல்வியமைச்சினால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கு அமை செயற்பாட்டுக் கோலங்களில் மாற்றதையும் புதுப்புது நுட்பங்களையும் கையாண்டு சிறந்த முறையில் கற்றல். அதனை இடையூறின்றி தொடர்ச்சியாக இடம்பெறச்செய்தல், தியாக உணர்வுடன் பணியாற்றல் என்கிற விடயங்களில் இவர்களுடைய முழுக்கவனமும் காணப்படுகின்றமை சிறப்பான அம்சமாகும்.

இந்த ஒழுக்கக் கோலங்கள் ஒவ்வொரு ஆசிரியரிடமும் காணப்பட வேண்டிய பொதுவான அம்சமாகும். இந்த விடயங்களை இந்தப் பாடசாலை ஒவ்வொரு ஆசிரியரிடமும் வழங்கியிருக்கிறது. இதன் பிரகாரம் அவர்கள் செயற்படுகின்றார்கள். இதற்கென ஒழுக்காற்றுச்சபை ஒன்றும் இயங்குகிறது. இதன் பலனை அந்தப் பாடசாலை முழுமையாக அடைந்திருக்கிறது. ஆசிரியர்கள் சிறந்த முறையில் என்ன விடயங்களில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமோ அத்தனை விடயங்களிலும் அவர்கள் கவனம் செலுத்தி தமது கற்றலை மேற்கொள்கின்றார்கள். உதாரணமாக பாடத்திட்டம், பாடக்குறிப்பு, பாடங்களை பதிவுசெய்தல், ஆசிரியருக்கான வகுப்பறை பதிவேடுகள், மாணவர்களின் பயிற்சிக் கொப்பி திருத்தங்கள், மாணவர்களுக்கான பின்னூட்டல் செயற்பாடுகள், பரிகாரக் கற்றல் செயற்பாடுகள், விசேட மாணவர்களுக்கான திட்டமிட்ட அடிப்படையில் வேலைத்திட்டங்கள், மாணவர்களுக்கும் ஆசிரியருக்குமான நெருக்கமான உறவு, பெற்றோர் ஆசிரியர் உறவு, ஆசிரியர் அதிபர் உறவு, பாடசாலைக்கும் சமூகத்திற்குமான உறவுகள் மிகவும் சீர்பெற்றுக் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஒரு பிள்ளை பாடசாலைக்கு வரவில்லை என்றால் அது சம்பந்தமாக உடன் அதிபர் ஆசிரியர்களால் விசாரிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

மாணவர்கள் விரும்பி வரக்கூடிய சூழ்நிலை இந்த பாடசாலையில் காண்படுகின்றது. மாணவர்கள் விருப்புடன் வருகை தருகின்றனர். விருப்புடன் கற்கின்றனர். தண்டனையற்ற முறையில் மாணவர்களோடு சிறந்த உறவாடலைப் பேணுகின்றனர். வகுப்பறைக் காட்சிப்படுத்தல், உபகரணப் பயன்பாடுகள் மிகவும் பேணுதலான முறையில் அவ்வப்போது தேவைக்கேற்றவாறு அதனை மேற்கொள்கின்றனர். வருட ஆரம்பத்தில் காட்சிப்படுத்திய அட்டைகளோ, புழுதி படிந்து அழுக்கான, தேவையற்ற ஒட்டுக்கள் அங்கு இல்லை. வகுப்பறை சுவர்கள் அழகாகக் காணப்படுகின்றன. மாணவர்களுக்குரிய கற்றல் உபகரணங்களில் அதிகமானவை மேசையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதனை மாணவர்கள் இலகுவாப் பெற்று கையாண்டு பார்த்துக் கொள்கின்றனர். ஒரு ஆரம்பக்கல்வி வகுப்பறையில் என்னென்னவை காணப்படவேண்டுமோ அத்தனையும் அங்கு காணப்படுகின்றமை சிறப்பானதாகும். அதிபர் ஒரு சிறந்த நிருவாகி என்பதை அந்தப் பாடசாலையின் அதிபரின் செயற்பாடுகளைக் காண்கின்றபோது எம் மனதில் ஏற்பட்டது. அந்தப் பாடசாலையின் அத்தனை விடயங்களையும், அவ்வப்போது இடம்பெறுகின்ற நிகழ்வுகளையும் ஒன்றுபடுத்தி கணனிமயப்படுத்தியிருந்தார். அதனை எமக்கு காண்பித்தார். சமூகத்தின் உதவியுடன் சுத்தமான குடிநீர் வசதி அதற்கான சுத்திகரிப்பு இயந்திரம், திறன் வகுப்பறைக்கான வசதிகள், அவ்வப்போது இடம்பெறுகின்ற பாடசாலையின் நிகழ்வுகளுக்கு உதவிசெய்கின்ற சமூகத்தை இந்தப்பாடசாலையின் அதிபர்; ஆசிரியர் பெற்றோர் குழாம் தமக்குள் வைத்திருக்கின்றமை மேலும் ஒரு படிதாண்டியிருக்கிறது.

யுத்தத்தினாலும், வறுமையினாலும் அல்லலுற்ற வடமாகாணத்தின் கல்விச் சிறப்பினை இது போன்ற பின்தங்கிய நிலையிலிருந்து மாணவர்களை மேலும் வலுப்படுத்தி நாளைய உலகினை வெற்றிகொள்ள தம்மை தயார்ப்படுத்தி வருகின்றார்கள். இந்த ஆசிரியர்களுக்குரிய அத்தனை சலுகைககள், உரிமைகளையும் வழங்கியிருக்கிறது. இதில் முக்கியமான ஒருவிடயம் ஆசிரியர் ஒருவர் தனது சேவையின் இறுதி நாளன்று அந்த பென்ஷன் செல்கின்ற ஆசிரியரைக் கௌரவப்படுத்துகின்ற முறையைப் பார்க்கின்றபோது உள்ளம் பூரிப்படைந்தது. சில வலயங்களில் வருடக்கணக்கில் கோவைகள் பூரணப்படுத்தாத நிலை காண்படுகின்ற வேளையில் இந்த பாடசாலை அமைந்துள்ள வலயத்தின் உயர் அதிகாரிகள் சகிதம் அந்த ஆசிரியரை வழியனுப்புகின்ற ஒரு சம்பிரதாயம் மிகவும் உன்னதமானது. அதன் முழுவடிவத்தையும் இன்னும் எமது பயணத்தின் அடுத்த கட்டதையும் அடுத்தவாரம் வரை பொறுத்திருங்கள்..

அடுத்த வாரம் தொடரும்

# அழியும் ஆமைகள்

பெருங்கடல்கள் எங்கும் நீந்தி, அவற்றின் நீள அகலங்களை அளக்கும் ஏழு வகை கடல்வாழ் ஆமைகள் இந்தப் பூவுலகில் வாழ்கின்றன. கடும் குளிர் பிரதேசங்களைத் தவிர, உலகின் எல்லாக் கடல்களையும் அவை சுற்றி வருகின்றன! நம் கடல்களில் நெடுங்காலமாக வாழ்ந்துகொண்டிருக்கும் உயிரினங்கள் என்று ஆமைகளைச் சொல்லலாம்.

தங்கள் வாழ்க்கையின் பெரும்பாலான காலம் பெருங்கடல்களிலேயே சுற்றிக்கொண்டிருக்கும் இந்த ஆமைகள், குறிப்பிட்ட கால இடைவெளியில் கடற்கரையோரங்களுக்கு வருவது உண்டு. ஜனவரி முதல் ஏப்ரல் மாதங்களுக்கு இடையே இந்தியக் கடற்கரைகளுக்குப் பெண் ஆமைகள் முட்டையிட வருகின்றன.

## பங்குனி ஆமைகள்

இப்படி இந்தியக் கடற்கரைகளுக்கு, குறிப்பாகத் தமிழகக் கடற்கரைகளுக்கு அதிகம் வரும் ஆமையினம் ஆலிவ் ரிட்லி; இதய வடிவம் கொண்ட இந்த ஆமைகள் ஆலிவ் பச்சை நிறத்தில் இருப்பதால் இந்தப் பெயர். பங்குனி மாதத்தில் தமிழகக் கடற்கரைகளுக்கு அதிகம் வருவதால், தமிழில் இவை பங்குனி ஆமைகள் எனப்படுகின்றன.

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாத இறுதியில் இனச் சேர்க்கைக்காக இந்த ஆமைகள் கடல் ஓரங்களுக்குச் செல்கின்றன. பிறகு பெண் ஆமைகள் முட்டையிடுவதற்காக இரவில் கடற்கரைகளுக்கு வருகின்றன. ஒவ்வொரு பெண் ஆமையும் வருடத்துக்கு இரண்டு முறை முட்டை இடும். ஒரு முறைக்கு 50 முதல் 190 முட்டைகள்வரை இடலாம். முட்டையிட்ட 45 முதல் 60 நாட்களுக்குள் குஞ்சு பொரிந்துவிடும்.

## அழிவின் விளிம்பில்

கடல் சுற்றுச்சூழல் சமன்பாட்டில் கடல் ஆமைகள் முக்கியப் பங்காற்றுவதால், இந்த ஆமைகளைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

15-ம் நூற்றாண்டில் 10 லட்சம் ஆமைகள் பூமியில் வாழ்ந்துள்ளன. இன்றைக்கு அவை 90 சதவீதம் அழிந்துவிட்டன. அதனால் பங்குனி ஆமைகளை அழித்துவரும் உயிரினமாகச் சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியம் (ஐ.யு.சி.என்.) வகைப்படுத்தியுள்ளது.

அது மட்டுமல்லாமல் இயற்கையிலேயே இடப்படும் 1,000 முட்டைகளில், ஒன்று மட்டும் வளர்ந்த ஆமைப் பருவத்தை அடைகிறது.

## அச்சுறுத்தும் அம்சங்கள்

பங்குனி ஆமைகளின் வாழ்க்கையை இரண்டு முக்கிய விஷயங்கள் அச்சுறுத்துகின்றன:

முதலாவது, மீன்பிடி கருவிகள். ஆமைகள் விற்பனைக்குப் பயன்படுவதில்லை என்றாலும், மீன்பிடி வலைகளில் சிக்குகின்றன அல்லது வளர்ந்த ஆமைகள் மீன்பிடி படகுகளின் முன் சுழல்விசிறிகளில் சிக்கிக் காயமடைகின்றன, இறக்கின்றன.

இரண்டாவது, கடற்கரை ஓரங்களில் எரியும் நியான் விளக்குகளும், கடற்கரையில் திரியும் நாய்கள், காகங்கள், முட்டைகளைத் திருடும் மனிதர்களாலும் இந்த இனம் அழிகிறது.

## திசைமாற்றும் வெளிச்சம்

ஆமைக் குஞ்சுகள் முட்டையிலிருந்து பொரிந்து வெளிவரும்போது, கடலின் தொடுவானத்துக்கு மேலே பிரதிபலிக்கும் நிலவு, நட்சத்திரங்களின் வெளிச்சத்தை நோக்கி - அதாவது கடலை நோக்கி நகரும் வகையில் இயல்பூக்கமாக அதன் மரபணுவில் பதிந்துள்ளது.

ஆனால், இப்போது கடற்கரை சாலையிலும், அங்குள்ள கடைகளிலும் எரியும் பிரகாசமான விளக்கு வெளிச்சத்தால் ஆமைக் குஞ்சுகள் கடலை நோக்கிச் செல்லாமல் நிலத்தை நோக்கித் திரும்பி விடுகின்றன. ஆமைக் குஞ்சுகள் பிறந்த 24 மணி நேரத்துக்கு எந்த உணவும் தேவையில்லை. இருந்தாலும் கடலுக்கு எதிர்ப்புறமாக நகரும்போது, ஈரப்பதத்தையும் உடல் சக்தியையும் வேகமாக இழந்துவிடுகின்றன. நாய், காக்கைகளால் உண்ணப்படுகின்றன. சாலைகளில் செல்லும் வாகனங்களிலும் சிக்கி நசுங்கிவிடுகின்றன.

## எஞ்சியுள்ளது தப்புமா?

இந்த உலகில் 12 கோடி ஆண்டுகளாக வாழ்ந்து உலகின் பெருங்கடல்களுக்கெல்லாம் பயணித்து வந்த ஓர் உயிரினத்தை அழிவின் விளிம்புக்குத் தள்ளியதற்கு மனிதர்களே காரணம்.

பங்குனி ஆமைகள், முதுகெலும் பில்லாத கடல் உயிரினங்களை உண்டு வாழ்கின்றன. அதன் மூலம் கடல் உணவுச் சங்கிலியில் அவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. கடற்கரையோரச் சூழலிலும் திறந்த கடல் பகுதிகளிலும் இவை முக்கிய உயிரினங்களாகத் திகழ்கின்றன.

பங்குனி ஆமைகள் அழிந்தால், மேற்கண்ட எல்லாமே சீர்குலையும். கடல் உணவையும் கடற்கரையையும் நம்பி வாழும் நாமும் இதனால் பல பாதிப்புகளைச் சந்திக்கத்தான் போகிறோம்.

இப்போதும்கூட பங்குனி ஆமைகள் முற்றிலும் அற்றுப்போகும் நிலைக்குச் செல்லவில்லை. சென்னை கடற்கரைக்குக் குறைந்த எண்ணிக்கையிலாவது வந்துகொண்டுதான் இருக்கின்றன. எஞ்சியுள்ள ஆமைகளைக் காப்பது, நம் கையில்தான் இருக்கிறது.

## பிறந்த கடற்கரைக்கே திரும்பும் ஆமைகள்

பங்குனி ஆமைகள் முட்டையிடுவதில் பல்வேறு வியக்கத்தக்க அம்சங்கள் பொதிந்துள்ளன:

முட்டையிடுவதற்காகப் பெண் ஆமைகள் கூட்டமாகக் கரைக்கு வருவதற்கு ‘அரிபடா’ என்று பெயர். இதற்கு ஸ்பானிய மொழியில் ‘கரைக்கு வருதல்’என்று அர்த்தம். இப்படி உலகிலேயே அதிகமான ஆமைகள் முட்டையிடும் மூன்று இடங்களில் ஒடிஷா கடற்கரையும் ஒன்று.

இன்னொரு விஷயம், தட்பவெப்ப நிலை மாற்றமே கடல் ஆமை முட்டைகளில் பாலினத்தை நிர்ணயிக்கிறது. பொதுவாக வெப்பமான சூழலில் பெண் ஆமைக் குஞ்சுகளும், வெப்பம் குறைந்த சூழலில் ஆண் ஆமைக் குஞ்சுகளும் உருவாகின்றன. புவி வெப்பமயமாவதால் ஆண் ஆமைகளின் எண்ணிக்கை குறைந்து, பாலினச் சமநிலை குலைந்து இந்த அரிய இனம் அழிந்துபோகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

# ஆடிப்பிறப்பு: தமிழர்களின் பண்பாட்டுத் திருநாள்

ஆடிப்பிறப்பு. தமிழரின் பண்பாட்டுத் திரு நாள்களிலே ஆடிப்பிறப்பிற்கென்று தனியானதோர் இடமுண்டு சூரியன் வட திசை நோக்கிச் செல்லுதல் உத்தராயணம். இக்காலம் தைமாதம் முதல் ஆனி வரையுள்ள ஆறு மாத காலமாகும். சூரியன் தெற்கு நோக்கிய காலத்தினை தெட்சணாயணம் என்று கூறுவர். இது ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலமாகும்.

இந்துக்கள் இக்காலத்தினை தேவர்களுக்குரிய ஒரு நாளின் இராப் பொழுது என்று கூறுவர். ஆடி மாத தொடக்க காலம் மிகுந்த வெப்பம் மிகுந்ததாகவும் கடும் காற்று வீசுகின்ற காலப் பகுதியாவும் அமைந்திருக்கும். இதனாலேயே ஆடி காலத்தில் அம்மியும் பறக்கும் என்று எம் முன்னோர்கள் சொல்லி விட்டுச் சென்றுள்ளார்கள்.

இந்த ஆடிக்காற்றை கச்சான் காற்று என்றும் கிராம மக்கள் கூறுவர். விவசாயிகள் இக்காற்றின் நகர்வினை (வீசும் காலத்தை) கணக்கிட்டு எதிர் வரும் நவம்பர், டிசம்பர் ஜனவரி மாதங்களில் மழை வீழ்ச்சி எவ்வாறு அமையும் என துல்லியமாக கூறுவர். இக்காற்றினை மழைக்கு கருக்கட்டுவதாகவும் சொல்வார்கள்.



இந்த கச்சான் காற்று மிகுந்த வெப்பமானதாக உள்ளதனாலேயே காட்டுப் பழங்களான வீரை, பாலை, காட்டுப் பேரீச்சை, கடுபுளியம் பழம், நாவல், விளா போன்றவை கனிகின்றன. இப்பழங்களை மக்கள் நன்கு விரும்பி சுவைப்பதுடன் அப்பழங்கள் மிகுந்த ஊட்டச்சத்தும் மிக்கவையாகும். உத்தராயண புண்ணிய கால உதயத்திற்கு தைப்பொங்கலையும், தெடசணாயண கால ஆரம்பத்திற்கு ஆடிப்பிறப்பையும் கொண்டாடுவது எமது முன்னோர்களின் மரபாக இருந்துள்ளது. இதில் ஆடிப்பிறப்பை நாம் மறந்து விட்டோம். இதற்கு முருகப் பெருமான் குடிகொண்டிருக்கும் ஆலயங்களில் திருவிழா உற்சவங்களில் மக்கள் அதிக ஈடுபாடு கொண்டிருப்பதும் ஒரு காரணம் எனச் சொல்லமுடியும்.

இந்த ஆடிமாத காலத்தில் முக்கனிகளும் குறைவின்றி கிடைப்பதுடன் பறவையினங்களின் ஓசைகளுக்கும் குறைவே இருக்காது. வசந்த காலத்திற்கு ஒப்பான ஆட்டம் பாட்டம் போன்று இயற்கை நிகழ்வுகளும் இடம்பெறும். ஆடிக் காற்றில் மரம் செடி இலை தழைகள் ஆடுவதும் குயில்கள் கனியுண்டு கூடிப்பாடுவதும் கிராமங்களில் இன்றும் காணக் கூடிய காட்சியாகும். இந்த அற்புதமான காலத்தினை அனுபவிப்பதற்காக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்த கலமாகவும் ஆடிமாதம் அமைந்துள்ளது. அதேபோலட ஆடி மாதத்தின் முதல் நாள் ஆடிப் பிறப்பு என்று கூறப்படுகின்றது ஆடிப்பிறப்பு என்றால் என்ன?

சைவ மக்கள் தை மாதத்து முதல் நாளை சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும்வகையில் தைப்பொங்கள் பொங்கி வழிப்பாடு செய்வார்கள்.

தைத்திங்கள் முதல் மார்கழி வரையான பன்னிரு மாதங்களுக்குரிய விரதங்கள், திருவிழாக்கள் முதலியவற்றை இவர்கள் முறையாக மேற்கொண்டு வழிபட்டு ஆன்மீக ஒளியில் அமைதியாக வாழ்வர்.

அந்த நிலையில் ஆடி மாதத்தின் முதல் நாளை ஆடிப்பிறப்பு என்று போற்றி பெறுமையுடன் வரவேற்பர்.

தை மாதம் முதல் ஆனி வரையான காலப்பகுதியை உத்திராயணம் என்றும்ஆடி முதல் மார்கழி வரையானதை தட்சிணாயம் என்றும் கூறுவர்.

மாரி காலத்தின் ஆரம்பம் ஆடியிலாகும். பச்சையரிசியில் தைப்பொங்கள் பொங்கிய மக்கள், ஆடிப் பிறப்பில் இனிப்பு கூழ் காய்ச்சி முக்கனிகளான மா, பலா, வாழைப்பழங்களுடன் இல்லுறை தெய்வங்களுக்கு படைத்து வழிப்பாடு செய்து கொண்டாடுவார்கள்.

**சி.திவியா**

ஆறு மாதமாய் வாட்டி வதக்கி உலர்த்திய வெப்பம் காலநிலை படிப்படியாக குறைந்து மாரி காலத்தில் வாசலை அடைகிறது.

உழவர்கள் நெற்பயிர் செய்கைக்காக வயலை உழுது பயன்படுத்த ஆரம்பமாகும்.ஸலதச

பல ஆலயங்களில் வருடாந்த மாகோற்சவங்கள் இம் மாதத்திலும் அடுத்து வரும் மாதங்களிலும் சிறப்பாக இடம்பெறும். இதை தொடர்ந்து இந்துக்கள் பல புனித ஸ்தலங்களுக்கு சென்று வழிபாடு செய்வார்கள்.

கூழை குடித்தேனும் கூலி தொழில் புரிந்தேனும் கூட்டுக் குடும்பமாய் குதூகலமாய் இயற்கையுடன் இணைந்த வாழ்வு வாழ்ந்தார்கள் எம் முன்னோர்கள்.

ஆடி பிறப்பானது இயற்கை எமக்களிக்கும் ஓர் இனிய திருநாளாகும். ஆடி பிறப்பென்றதும் எம்மனதில் இயல்பாய் தோன்றும் பெரியார் நவாலியூர் சோமசுந்தர புலவராவார்.ஆடிப்பிறப்பு பற்றி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடிய ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை... என்ற குழந்தைகள் பாடல் மிகப் பிரபல்யம் மிக்கதாகும். ஈழத்தில் இந்தப் பாடலை உச்சரிக்காத வாய்களே இல்லை எனலாம். ஆடிப் பிறப்பு என்றால் என்ன என்பதை அப்படியே அச்சொட்டாக இந்தப் பாடலில் புலவர் வெளிப்படுத்தினார்.

ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தந் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!
பாசிப்பயறு வறுத்துக் குற்றிச் செந்நெற்
பச்சையரிசி இடித்துத் தெள்ளி
வாசப் பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து
வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரிற் சர்க்கரை யுங்கலந்து
தோண்டியில் நீர்விட்டு மாவை யதிற்கொட்டிச்
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு
வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி
வெல்லக் கலவையை உள்ளேயிட்டுப்
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே
பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டுமா வுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்கவா யூறிடுமே
குங்குமப் பொட்டிட்டுப் பூமாலை சூடியே
குத்துவிளக்குக் கொழுத்தி வைத்து
அங்கிள நீர்பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே
வன்னப் பலாவிலை ஒடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டே
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளிவார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே
வாழைப் பழத்தை உரித்துத் தின்போம்நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே
ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தந் தோழர்களே!
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

அத்தோடு அவரின் பாடலாகிய ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை என்பதுமே இன்று பாசிப் பயறு சேர்ந்த ஆடி கூழின், கொழுகட்டையின் இனிமையை மட்டு மல்லாதது புலவரின் பாடலின் இனிமையையும் சேர்த்து சுவைக்கலாம்.

புலவரது பாடலொன்றில் அன்றைய நீர் இறைக்கும் முறை பற்றி குறிப்பிட்டுள்ளது. அன்று நால்வர் ஒற்றுமையாய் ஒன்றாய் இணைந்து தோட்டத்திற்குள் நீர் பாய்ச்சி பயிர் வளர்த்தனர். இதனூடு மனித ஒற்றுமையை கூட்டுறவையும் காண முடிகின்றது.

மேலும் ஆடி மாதத்தில் ஆடி அம்மாவாசை விரதமும் ஆடி செவ்வாய் விரதமும் முக்கிய இடம் வகிக்கின்றன.

தந்தையின் இறந்த திதியை தவற விட்டவர்கள் ஆடி அமாவாசை தினத்ததில் விரதமிருந்து சிரார்த்தம், தர்ப்பணம் என்பவற்றை செய்வார்கள்.

அடுத்து ஆடி மாதத்து செவ்வாய் தோறும் விஷேசமாக பெண்கள் விரதமிருந்து வழிப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் எத்தனை வீடுகளில் இந்த ஆடிப் பிறப்பு கொண்டாடப்படுகின்றது என்பது கேள்விக்குறியே

தொலைந்துகொண்டிருக்கின்ற தமிழர் தனித்துவங்களில் தொலைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்ப்பண்டிகையாக ஆடிப்பிறப்பை இன்று கருத வேண்டியுள்ளது.

இலங்கையில் வடகிழக்கு மாகாணங்களில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வெகுவாக கொண்டாடப்பட்டாலும் தென்பகுதி மக்கள் பலருக்கு இன்று ஆடிப்பிறப்பென்றே தெரியாததுதான் யதார்த்தம். தமிழ்நாட்டு மக்கள் தொலைக்காட்சி மோகங்களால் இதனை மறந்து மறுத்து போகின்றனர் என்றுதான் சொல்லமுடியும். புலம்பெயர் தமிழர்மத்தியிலும் இக்குறைபாடு காணப்பட்டாலும் ஆங்காங்கே கடைப்பிடிக்கப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது.

எது எப்படியோ இன்று சமூக மாற்றம் என்ற பெயரில் எமது தனித்துவங்களை நாமே இழந்து வருவது கண்கூடு. சமூகங்களின் தனித்துவங்களை இழந்துதான் சமூகமாற்றம் காணுதல் இல்லை. ஆதித்தமிழர்கள் கடவுள் என்ற கருப்பொருளுக்கு கொடுத்த முக்கியத்துவத்தைவிட இயற்கைக்கு கொடுத்த முக்கியத்துவத்தினையே அதிகமெனக்கூறலாம். இந்தவகையில் வவுனியாவில் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் மிகவும் சிறப்கொண்டாப்பட்டதை உதாரணமாக சொல்லலாம்

வவுனியாவில் தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப்புலவர் நினைவுச்சிலையடியில் (17.07.2019) காலை 8.30 மணியளவில் வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் அனுசரணையில் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் ஆரம்பமாகி

சோமசுந்தரப்புலவரின் நினைவுரையினை தமிழருவி சிவகுமார் நிகழ்த்தியதுடன் வவுனியா விபுலானந்தக்கல்லூரி மாணவர்கள் ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்னும் சோமசுந்தரப்புலவரின் பாடலைப்பாடியதுடன் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர்கள், வவுனியா நகரசபை செயலாளர் தயாபரன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் , பிரதேச கலாச்சார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், செயலாளர் மாணிக்கம் ஜெகன், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தலைவர் ரவீந்திரன் , வர்த்தக சங்க உறுப்பினர்கள், நகரசபை ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள், வர்த்தகர்கள் விபுலானந்தாக்கல்லூரி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.



# இயற்கையை பாதுகாப்போம்!

ஆதிகாலத்தில் வேதங்களில் சூத்திரங்களாகச் சொல்லப்பட்டதே இயற்கை விவசாயம். கால்நடைக் கழிவுகள், மூலிகைகள் ஆகியன மட்டுமே இடு பொருள்கள். கழிவுகள் உரமாகவும், மூலிகைகள் பூச்சி விரட்டியாகவும், வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவும் இருக்கிறது.

வேதகாலத்து ரிஷிகள் மோர், பால், தயிர், பசுவின் கோமியம் ஆகியவற்றை பயிர்களின் வளர்ச்சி ஊக்குவிப்பானாகப் பிரயோகித்துள்ளனர். இதனை வன்முறை இல்லாத விவசாயம் எனலாம். மனித உழைப்பு இதற்கு அதிகம் தேவையில்லை. மத்தியப் பிரதேசம், பஞ்சாப், மகாராஷ்டிரம், ஆந்திரம், தமிழகத்தில் இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது.

மண், நீர், காற்று, செடிகொடிகள், பூச்சிகள், நுண்ணுயிரிகள் மற்றும் விலங்கினம் ஆகியவையும் சேர்ந்து கொண்டு ஒருவிதமான இணக்கமான இசையை மேற்கொள்வதாகத்தான் தோன்றுகிறது இயற்கை விவசாயத்தில்.

இந்த இயற்கை விவசாயம் பெருமளவில் இயற்கையையே ஒத்ததாய், மனிதரின் இடு பொருள்களை மறுதலிப்பதாய் உள்ளது. உள்ளூர் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு செய்யப் படும் விவசாயம் இது.

எண்ணற்றோர் அருந்தொண்டு ஆற்றியே நம் சுற்றுச்சூழலைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஒவ்வொருவரும் தனித்துவமாய், அவரவர் காலத்திற்கு ஏற்றவிதத்தில்.

வங்கரி முட்டா மாத்தாய் என்ற கென்யாவைச் சேர்ந்த சூழலியல்வாதியை நாம் நிச்சயம் நினைவு கூற வேண்டும். க்ரீன் பெல்ட் இயக்கம் என்ற அமைப்பின் மூலம் ஆப்பிரிக்கப் பெண்களை ஒன்றுதிரட்டி காடுகளை அழிப்பதற்கு எதிராகப் போராடியவர் அவர். இந்த க்ரீன் பெல்ட் இயக்கத்தவர் 30 மில்லியன் மரங்களுக்கு அதிகமாக நட்டு வளர்த்துள்ளனர்.

சுற்றுச்சூழலுக்காக அவர் ஆற்றிய பணியை நினைவுகூறும் விதமாக சிவப்பு மேப்பிள் மரங்கள் இரண்டை வளர்த்து பூந்தோட்டம் ஒன்றையும் நிறுவி உள்ளது பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகம். இவர் 2004-இல் நோபல் பரிசு பெற்றுள்ளார்.

இவர் பெயரில் ஒரு பரிசு நிறுவப்பட்ட ஆண்டிலேயே இதை வென்றவர் நேபாளத்தைச் சேர்ந்த நாராயண் காஜிசிரேஷ்தா - நேபாளத்தின் சமூகக் காடுகள் இயக்கத்திற்கு அயராத தொண்டாற்றி உள்ளார். தனி மனிதர்கள் மட்டுமன்றி, பொதுமக்களே முன்நின்று சூழலைக் காப்பாற்றப் போராடிய சம்பவங்கள் நம் நாட்டில் ஏராளம். 80-களில் சிப்கோ போராட்டம் அதில் குறிப்பிடத் தகுந்தது.

சான்டி பிரசாத் பட் மற்றும் சுந்தர் லால் பஹுகுணா தலைமையில் அதிகம் படிக்காத மலை ஜாதிப் பெண்கள் நடத்திய போராட்டம் அது. வெட்டவரும் மரத்தினைக் கட்டிப்பிடித்துக் கொண்டு எத்தனை நேரமானாலும் நின்றார்கள் இப் பெண்கள்.



அண்டை மாநிலமான கேரளத்தில் சைலண்ட் வேலி நீர்மின் திட்டத்திற்காக குந்தி புழா ஆற்றின் குறுக்கே அணைகட்டி, 4 மில்லியன் வருடங்களான மழைக் காடுகளையும் உயிர்க்கோளக் காப்பகத்தையும் (ரிசர்வையும்) அழிக்க முற்பட்டதையும் மக்கள் சக்தி வென்றது.

80-களில் பிகாரின் சிங்பம் மாவட்டத்தில் இயற்கையான சால் மரங்களை வெட்டிவிட்டு தேக்கு மரங்களை நடப்போனபோது எதிர்த்து நடைபெற்ற இயக்கம் ஜங்கிள் பச்சாவோ அந்தோலன். இது பிறகு ஜார்க்கண்ட், ஒரிசா என பிற மாநிலங்களுக்கும் பரவியது.

வந்தனா சிவா கரிம வேளாண்மைக்காக நவதான்யா என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி பல இயற்கை விவசாயிகள் உருவாக, தரமான உணவு நுகர்வோராக நாம் மாற உதவியுள்ளார்.

இந்தியாவின் ராஜேந்திர சிங், ஸ்டாக்ஹோம் நீர் பரிசினை வென்றது நினைவில் இருக்கும். இவர் இந்தியாவின் நீர் மனிதர் என்றே அழைக்கப்படுகிறார். பல ஆறுகள் அவரால் காப்பாற்றப்பட்டன. பல ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டி நீர் மேலாண்மை செய்துள்ளார். மழை நீர் சேமிக்கும் தொட்டிகள் ஜோஹத்கள் என்பன சுமார் 8,600 இவரால் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அர்வாரி ஆறு சுமார் 60 ஆண்டுகளாக ஓடவே இல்லை. 1986-இல் நீர்த் தேக்கம் கட்டி, 375 தடுப்பு அணைகளை ஏற்படுத்தி 95-இல் அழகாக ஓட ஆரம்பித்தது இந்த ஆறு. இவருக்குப் பரிசு கிடைத்தபோது ஸ்டாக் ஹோம் சர்வதேச நீர் கழகத்தின் செயல் இயக்குநர் சொன்னார்: சிங் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். அவர் தன் செயல்பாட்டால் கிராமங்களை உயிர்த்தெழச் செய்திருக்கிறார் என்றார். மிகச் சரியாகத்தான் சொல்லியுள்ளார் என்று தோன்றுகிறது.

மகேஷ் சந்திர மேத்தா பொதுநல வழக்கறிஞர். இவர் 96-இல் கோல்டு மேன் சுற்றுச்சூழல் பரிசு வாங்கினார். தொடர்ந்து, இந்திய நீதிமன்றங்களில் மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்கு எதிராகப் போராடி வந்துள்ளார். 1997-இல் ராமன் மகசேசே விருது கிடைத்தது; 2016-இல் பத்மஸ்ரீ விருது கொடுத்து கௌரவித்துள்ளது மோடி அரசு.

சத்தீஸ்கரைச் சேர்ந்த ரமேஷ் அகர்வாலுக்கு வழக்குத் தொடுப்பதில் முன்னவர் போல் பயிற்சி எதுவும் இல்லை. இருந்தும் ஜிண்டால் ஸ்டீல்ஸ் கம்பெனி இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தினை அவரது கிராமத்து அருகில் திறக்க நினைத்தபோது சத்தீஸ்கர் மாநில கிராமத்து மக்களைத் திரட்டி நில அபகரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுதலுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கினார்.

அவரது கால்களில் துப்பாக்கி குண்டுகளைப் பாய்ச்சினர் சமூக விரோதிகள். சான்ஃபிரான்சிஸ்கோ நகரில் பசுமை நோபல் பரிசு அறிவித்து 1,75,000 (ரூ. 1.13 கோடி) அமெரிக்க டாலர்களுடன் பரிசளித்தது அமெரிக்கா. இப்படி பல்வேறு மக்கள் தொடர்ந்து பல வகைகளில் இயற்கை வேளாண்மை, புவி வெப்பமயமாதலுக்கு எதிராக பணி, நீர் நிலைகளை ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாத்தல், தடுப்பணைகள் மூலம் கிராமத்து மக்களுக்கு வாழ்வாதாரத்தினை மேம்படுத்தல் எனப் பலவகைகளில் பங்களிப்பினைச் செய்துள்ளனர்.

அவர்களை நினைவுகூர்ந்து அவர்களின் செயல்பாடுகளைப் போற்றி, அவர்கள் வழி நடப்பதே நம் ஒவ்வொருவரின் கடமை.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 21.07.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.